# சீனத் தலைவர்

# சியாங் கே-ஷேக்

ஆசிரியர்

ப. ராமஸ்வாமி

கலைமகள்

பதிப்புரிமை] கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை [ விலை ரூ. 3/-

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

[illegible] ...... 26 · [illegible]



முதற் பதிப்பு
செப்டம்பர், 1945

PRINTED AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS,
TIRUBHUVANAM, TDR.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | iv |
| | சமர்ப்பணம் ... | 1 |
| I | முன்வாயில் ... | 4 |
| II | சீனாவின் புராதன நாகரிகம் ... | 9 |
| III | சீனாவும் வல்லரசுகளும் ... | 29 |
| IV | ஸன் யாட்-ஸென் ... | 64 |
| V | நவஜீவன் இயக்கம் ... | 89 |
| VI | பிறப்பும் வளர்ப்பும் ... | 102 |
| VII | குண விசேஷங்கள் ... | 117 |
| VIII | மெய்லிங் தேவி ... | 128 |
| IX | வெற்றியும் தோல்வியும் ... | 138 |
| X | வாம்போவா ராணுவக் கலாசாலை ... | 154 |
| XI | வெற்றிமேல் வெற்றி ... | 171 |
| XII | 1928 — 1936 ... | 183 |
| XIII | சேனாபதி சிறைப்பட்டார்! ... | 194 |
| XIV | மகாயுத்தம் ... | 214 |
| XV | முடிவுரை ... | 242 |

# முன்னுரை

ஏட்டு வருஷங்களாகச் சீன தேசம் தியாக அக்கினியில் மூழ்கி வெற்றியுடன் வெளிவந்திருக்கிறது.

இந்த வெற்றியைப் படாடோபமாகக் கொண்டாடி மூழ்கிக்கொண்டிருக்க அதற்கு நேரமில்லை. இதுவரையில் அது உயிருக்கு மல்லாடிக்கொண்டிருந்தது; இப்பொழுது உயிர் நிலைத்துவிட்டது. இனிமேல் வாழ் வகை செய்து கொள்ள வேண்டும்.

சீனக் குடியரசின் தலைவராக விளங்கும் சேனாபதி சியாங் கே-ஷேக் போரில் தலைமை தாங்கி வெற்றிக்கு வழி கண்டார். அதே போல் எதிர்காலச் சீரமைப்பிலும் அவர் வெற்றி காண வேண்டும். இதையே உலகம் எதிர் பார்க்கிறது.

நம் நாட்டைப் போலவே, சீனாவிலும் பல சிக்கல்கள் இருக்கின்றன. உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் செய்யவேண்டிய வேலைகள் ஏராளமாகக் காத்திருக்கின்றன.

சீனாவைப் பற்றிய பல நூல்கள் நம் தாய்மொழியில் வெளிவர வேண்டும் என்பது என் ஆவல். சீனப் புரட்சியின் சரித்திரம், ஸன் யாட்-ஸென்னுடைய சரித்திரம், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு, சீனாவின் சமீப காலத்துச் சரித்திரத்திலிருந்து இந்தியா கற்றுக் கொள்ளவேண்டிய பாடங்கள் ஆகிய விஷயங்களைப்பற்றிய நூல்கள் அவசியம் வரவேண்டும். சீனாவின் புராதன சரித்திரம், கலைகள், கைத்தொழில்கள், வெளிநாட்டுத் தொடர்புகளைப் பற்றியோ ஏராளமான நூல்களை எழுதிக் குவித்தாலும் தகும். இம்மாதிரியான ஆசையின் காரணமாக எழுந்ததுதான் இந்த நூல்.

பல புத்தகங்களையும் பத்திரிகைகளையும் ஆதாரமாகக் கொண்டு இதை எழுதியிருக்கிறேன். யுத்த காலத்திலேயே இதை எழுதி அச்சிட ஆரம்பித்ததால் இதில் சில குறைகள் இருக்கலாம். அன்பர்கள் அவைகளைப் பொருட்படுத்த மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

இந்நூலை எழுதும்படி தூண்டி, எனக்குப் பேருதவி செய்து, இதை அழகான முறையில் வெளியிட்டுள்ள கலைமகள் காரியாலயத்திற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆசிரியன்.

[illegible]

தாயார் * [illegible]

[illegible]

அதிசய[illegible]

[illegible]

[illegible] நான் *

[illegible]

[illegible]

[illegible]



க. அந்தோனி
K. Antony. Book.

# சமர்ப்பணம்

அமெரிக்காவில் முக்கியமான நகரம் ஒவ்வொன்றிலும் சீனர் குடியேறித் தொழில் புரிந்து வருகின்றனர். செல்வம் மிகுந்த ஒரு சீனர் ஸான்பிரான்ஸிஸ்கோ நகரில் ஒரு பெரிய ஹோட்டல் நடத்தி வருகிறார். 1937-ஆம் ௵ ஜப்பான் சீனாவின்மேல் படையெடுத்து வந்தவுடன் சீனா பணிந்துவிடாமல் எதிர்க்க ஆரம்பித்தது. வலிமை மிகுந்த ஜப்பான் சீனாவை ஆறு வாரத்தில் ஜயித்துவிடப் போவதாக எக்களிப்புடன் கூறிவந்தது. உலகிலுள்ள ராணுவ நிபுணர்கள் பலரும், ஆறு வாரத்தில் இல்லாவிட்டாலும் ஆறு மாதத்திலாவது, சீனா வீழ்ந்துவிடும் என்று ஜோசியம் சொன்னார்கள். இதே அபிப்பிராயமுள்ள ஒரு பிரெஞ்சுக்காரர் மேற்கூறிய சீன ஹோட்டலில் சாப்பிடப் போயிருந்தார். ஹோட்டல் முதலாளியிடம் அவர் சீனா—ஜப்பான் யுத்தத்தைப் பற்றிப் பேசினார்...

சீனர்கள் நம்மைப் போல் உணவைக் கையால் எடுத்துச் சாப்பிடுவதில்லை. வெள்ளைக்காரரைப் போல் கரண்டியையும் முள்ளையும் உபயோகிப்பதும் இல்லை. மெல்லிய சிறு மூங்கில் குச்சிகளால் அவர்கள் ஆகாரத்தை எடுத்து வாயில் போட்டுக் கொள்வார்கள். பணக்காரர்கள் இக்குச்சிகளைப் போல் தந்தத்தாலும் வெள்ளியாலுங்கூடச் செய்து உபயோகிப்பார்கள். உண்பதற்கு உதவியாகச் சீனர்கள்

குச்சிகளை உபயோகிப்பது, ஹோட்டலில் சீன முதலாளியிடம் பேசிக்கொண்டிருந்த பிரெஞ்சுக் காரருக்கு நன்ருகத் தெரியும்.

அவர்களுக்குள் நடந்த சம்பாஷணையைக் கவனிப்போம் :

**பிரெஞ்சுக்காரர்** - ஜப்பான் ஏராளமான யந்திர சாதனங்களுடன் போராடும் பொழுது, ஆயுதமே இல்லாத சீனர்கள் எப்படி எதிர்த்து நிற்க முடியும் ?

**சீனர்** - சீனர்கள் கடைசிவரை எதிர்த்து நிற்பார்கள்.

**பிரெஞ்.** — எதைக் கொண்டு எதிர்ப்பார்கள் ? உணவு உண்ணும் மூங்கில் குச்சிகளாலா ?

சீனர் பதில் சொல்லவில்லை.

* * * *

1940ஆ செப்டம்பர்மீ பிரான்ஸ் தேசம் ஹிட்லரின் ஜெர்மானியப் படைகளை எதிர்க்க முடியாமல் தோற்றுச் சரணுகதி அடைந்தது. அதன் பிறகு ஒரு நாள், பிரெஞ்சு நண்பர் பழைய சீன ஹோட்டலுக்குச் சென்றிருந்தார். அவர் சாப்பிட்டுத் திரும்பும் பொழுது, சீன முதலாளி அவரைப் பேச்சுக்கு இழுத்தார். மூன்று வருஷங் களுக்கு முன்னுல் பிரெஞ்சுக்காரர் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்ல இவ்வளவு காலம் வாய்தா போட்டிருந்தார் போலும் !

**சீனர்** — என்ன, பிரான்ஸின் நிலைமை இப்படி மோசமாகப் போய்விட்டது ?

**பிரெஞ்.** — எங்கள் தேசத்தில் ஜனங்களுக்குள் ஒற்றுமை இல்லாமற் போய்விட்டது. ஹிட்லருடைய 'பிளிட்ஸ்கிரீக்' என்ற மின்னல் தாக்குதலை எங்கள் படைகளால் சமாளிக்க முடியவில்லை !

**சீனர்** — அடாடா ! எங்களுடைய மூங்கில் குச்சிகளில் சிலவற்றைப் பிரான்ஸ் இரவல் வாங்கிக்கொண்டு

போராடியிருந்தால், இப்படிச் சரணுகதி அடைந்திருக்காதே! இன்றுவரை, சீனர்கள் அந்தக் குச்சிகளை வைத்துக்கொண்டு ஜப்பானியரை விரட்டியடிக்கிருர்களே!

இப்பொழுது பிரெஞ்சுக்காரர் பதில் சொல்லவில்லை.

*　　　*　　　*　　　*

இவ்வளவு மகிமை பொருந்திய சீனர்களுடைய மெல்லிய மூங்கில் குச்சிகளுக்குப் பாராட்டாக இந்த நூலை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறேன்.

ப. ரா.

# சீனத் தலைவர்

# சியாங் கே-ஷேக்

## I

### முன் வாயில்

**அந்நியர்க்கு இடம் கொடோம்,**
**அரசை யார்க்கும் இனிவிடோம்!**
**மன்னராகி ஆளுவோம்,**
**மாநிலத்தில் வாழுவோம்!'**

**—வெ. ராமலிங்கம் பிள்ளை.**

---

ஒரு கையால் செங்கல் அடுக்கிச் சாந்து பூசி, மற்றொரு கையால் வாளேந்திப் போர் செய்யும் கொற்றர்கள் எவ்வளவு சாமர்த்தியசாலிகளாக இருப்பார்கள்! அவர்களே பாக்கியசாலிகள்! மாளிகை முழுவதும் கட்டி முடிந்துவிட்டால், அதன் மாட்சியையும் காவலையும் கண்டே பகைவர் ஓடுவார்கள். ஆகவே வெகு வேகமாக மாளிகையைக் கட்டி முடித்து, சுதந்தர தேவியை அதில் பிரதிஷ்டை செய்துவிட வேண்டும் என்று கோடிக்கணக்கான கொற்றர்கள், மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது வேலை செய்துவருகிறார்கள். கோடிக் கணக்கான சிற்றாள்கள் கல் அள்ளிக் கொடுத்தும், சுண்ணும்பு சுமந்தும், ஓடியும் சாடியும் வேலை செய்கிறார்கள். பல கோடி மக்களின் உழைப்பால் நிர்மாணிக்கப்படும் அந்த மாளிகைதான் சீனவின் குடியரசு.

மாளிகைக்கு வானம் தோண்டும் பொழுதே தேசபக்தி மிகுந்த ஆயிரக் கணக்கான சீன வீரர்கள்

தங்கள் எலும்புகளையும் சதைகளையும் அதில் அஸ்தி வாரமாகச் சொரிந்தார்கள். எல்லாவற்றையும் மேலே இருந்து கண்காணித்து, தலைமை மேஸ்திரியாக நின்று நடத்தி வந்தவர் ஸன் யாட்-ஸென் என்ற அறிஞர். புரட்சிக்கு அவரே தந்தை. புதிய குடியரசு மாளிகை முதலில் அவர் உள்ளத்தில்தான் தோன்றியது. கட்டடம் மேலெழுந்துவந்தது. 1912-ஆம், ஜனவரி மீ 1உ. குடியரசுத் தலைவர் ஸன் யாட்-ஸென்னும் புரட்சி மந்திரிகளும் அதில் குடிபுகுந்தார்கள். கட்டடத்திற்கு மேல் மாடங்கள் இல்லை; காவலர்களை நியமிக்கவில்லை; சுற்றிலும் கோட்டை இல்லை; அகழும் இல்லை. இத்தகைய வேலைகளை எல்லாம் விரைவில் முடித்து விடுவதற்காக மந்திரிகள் ஆவேசத்துடன் வேலை செய்துவந்தார்கள். இடையில் தலைவர் ஸன் நோய்வாய்ப்பட்டு இறந்து போனார். தேசமக்கள் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டு மடிவதை நிறுத்தாமல் நடத்தி வந்தார்கள். கொள்கை ஒன்றும் இல்லாத யுத்த வெறியுள்ள பிரமுகர்கள் பலர், குடியரசுக் கோயில் கட்டி முடிந்துவிட்டால் தங்கள் சுயநலமெல்லாம் பலிக்காது என்பதை அறிந்து, அந்தக் கோயிலையே அழித்துவிட முயன்றார்கள். ஆனால், தலைவர் ஸன் மண்ணுலகை விட்டுப் போகுமுன்னால், புரட்சி விழலில் பாய்ந்து விடாதபடி பாதுகாப்பதற்காக, வீர பராக்கிரமமுள்ள ஓர் இளைஞரைத் தயாரித்து வைத்திருந்தார். அந்த இளைஞர்தாம் சியாங் கே-ஷேக்.

சியாங் இயற்கையிலேயே போர்வீரர். அதனுடன் தம் குருநாதருடன் இன்பத்திலும் துன்பத்திலும் சேர்ந்து வாழ்ந்திருந்தவர். ஸன் யாட்-ஸென் கனவில் கண்டவை இவர் நினைவாயின; அவருடைய தத்துவங்கள் இவருடைய செயல்களாயின. இந்நிலையில் ஏகாதிபத்திய வெறி கொண்ட பக்கத்து நாடாகிய ஜப்பான், சியாங் தலைமையில் சீனா வளர்ச்சி

யும் வலிமையும் பெற்றுவிட்டால், தன் ஆசை எல்லாம் அதோகதியாகிவிடும் என்று கண்டு, ஆயிரக் கணக்கான பட்டாளங்களுடன் சீனுவின்மேல் படையெடுத்து வந்தது. ஜப்பான் முதல்தரமான வல்லரசு. உலகத்தில் மூன்ருவதாகக் கருதப்படும் பெரிய கடற்படையை உடையது. லட்சக் கணக்கான பயிற்சி பெற்ற துருப்புக்களை உடையது. யுத்தத்திற்காக மிக நவீனமான யந்திர சாதனங்களையெல்லாம் அது முன்னுலேயே தயாரித்து வைத்துக்கொண்டிருந்தது. இவ்வளவுக்கும் நேர் எதிரான நிலையில் சீனு தத்தளித்துக்கொண்டிருந்தது. சீன மக்கள், போதிய உணர்ச்சி இல்லாமல், நெல்லிக்காய் மூட்டை அவிழ்ந்து கிடப்பதுபோல் சிதறிக் கிடந்தனர். 'கடற்படை' என்று சொல்லத்தக்க ஒரு படையே சீனுவுக்கு இல்லை. நவீன யந்திர சாதனப் படைகளை அது பார்த்தது கூட இல்லை. மொத்தம் அதனிடம் இருப்பு விமானங்கள் 300! இப்படி இருந்தபோதிலும், சியாங் சேனுபதி சியாங் கே-ஷேக் காகத் தேசத் தலைமை பூண்டு, உள் நாட்டுக் கலகங்களைமுதலில் அடக்கிவிட்டு, ஜப்பானை எதிர்க்க முன்வந்தார். இதிகாசங்கள் சொல்லுவதுபோல், தருமமும் தாமுமாகத் தனியே நின்ருர்.

தலைவர் ஸன் அரைகுறையாக நிறுத்திவிட்டுப் போன குடியரசு மாளிகையைத் தொடர்ந்து கட்ட அவர் தீர்மானித்தார். அதே சமயத்தில் தாய்நாட்டின் மேல் மூர்க்கமாகப் படையெடுத்து வந்த வலிமை மிகுந்த பகைவர்களை எதிர்க்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். பெரிய போர் வந்துவிட்டதால், உள்நாட்டுச் சிறிய சண்டைகள் ஒழிந்தன. பகைவர் உதவியால், சிதறிக் கிடந்த சீனர்கள் ஒன்று சேர்ந்து விட்டார்கள். இதனுல், புரட்சி பெரும் போராகத் தேசம் முழுவதும் கொழுந்து விட்டு எரிகிறது. புழுக்களாகக் கருதப்பட்டவர்கள் பாம்புகளாகிச் சீறிப்

படமெடுத்துப் பாய்கின்றனர். கோழைகளாகத் தோன்றியவர்கள் வீரர்களாகி வருகிறார்கள். கோடி கோடிக் குரல்களிலிருந்து யுத்த கோஷங்கள் ஒலிக்கின்றன. ஏர் பிடித்த கைகள் சுழல் துப்பாக்கிகளைத் தாங்கி யிருக்கின்றன. குழந்தைகளைத் தாலாட்டிய கைகள் காயம் பட்ட வீரர்களைத் தாலாட்டுகின்றன. சீனாவை எந்தப் பகைவரும் இனிச் சாய்த்துவிட முடியாது. ஆணும் பெண்ணுமாகச் சீனா அடங்கலுமே போர்க்கோலம் பூண்டு நிற்கிறது!

ஆனால்......ஆனால்......இன்றுள்ள சீனாவுக்குப் போதிய யுத்த சாதனங்கள் இல்லை. ரஷ்யா ஆரம்பம் முதல் கொஞ்சம் உதவி செய்து வருகிறது. இங்கிலாந்தும் அமெரிக்காவும் சமீப காலத்தில் சீனாவின் நேசநாடுகளாக இருக்கின்றன. நவீனப் போர்க் கருவிகள் போதிய அளவில் இல்லாவிட்டாலும், சீன மக்கள் உணர்ச்சியும் உறுதியும் கொண்டிருக்கிறார்கள்.

**'எங்களுக்குத் துப்பாக்கி இல்லை, பீரங்கிகள் இல்லை; எதிரிகள் இவைகளைக் கொணர்ந்து தருவார்கள்!'**

என்ற கருத்தமைந்த பாடலை வடமேற்குச் சீனாவில் கொரில்லாப் படைகள் தினம் பாடுகின்றன. சீனாவுக்கு வேண்டிய ஆயுதக் கிடங்குகள் ஜப்பானில் இருக்கின்றனவாம்! இது வெறும் பாட்டன்று - ஒவ்வொரு போர்க்களத்திலும் நடக்கிற விஷயம். சீனர்கள் ஜப்பானியருடைய ஆயுதங்களைப் பிடுங்கி, அவைகளைக் கொண்டே அவர்களை எதிர்க்கிறார்கள்!

2,150 வருஷங்களுக்கு முன்னால் சீனாவின் வடபாகத்தில் 1,400 மைல் நீளமுள்ள ஒரு பெரிய மதில் சீனச் சக்கரவர்த்தியால் கட்டப்பெற்றிருக்கிறது. மலைகளின் மீதும் பள்ளத்தாக்குகளிலுமாக இந்த மதில் மேற்கே யிருந்து கிழக்குக் கடற்கரை வரை பரவியிருக்கிறது. வடபாகத்திலிருந்து சீனாவுக்குள்

அந்நியர் படையெடுத்து வராமல் தடுப்பதற்காக இது அமைக்கப் பட்டிருக்கிறது. இதற்கு மேலான அதிசயமாகக் கூறத்தக்க பொருள் இதுவரை உலகில் எதுவும் இல்லை. ஆனால் இப்பொழுது இதையும் வென்றுவிடக்கூடிய ஒரு மாபெரும் மதிலைச் சீனர் களே மறுபடி சிருஷ்டித்திருக்கிறார்கள். சீனாவிலுள்ள மஞ்சூரியப் படைவீரர்கள் அணிவகுத்து நடக்கும் பொழுது பாடும் பாட்டு இந்த மதிலைப் பற்றி விவரிக்கிறது:

'அடிமையாக வாழும் ஆசை
அற்ற மக்கள் யாவரும்
படிமிசைப் புதுச் சுவர்
படைத்திடுவோம் வாருங்கள் !
உடற்சதையும் உதிரமும்
ஒன்று சேர்த்துப் பொழிந்துநாம்
உலகிலேயே பெரியமதில்
ஒன்றினை எழுப்புவோம் !'

உண்மையிலேயே மனித உடல்களால் பாது காப்புச் சுவர் கட்டும் விந்தைதான் புதிய சீனாவில் - விழித்தெழுந்து வீறு கொண்ட சீனாவில் - நடை பெற்று வருகிறது! குடியரசு மாளிகை கட்டி முடிவ தற்குள் பகைவர்கள் வந்துவிட்டால் என்ன? ஒரு கையால் கட்டடம் கட்டி ஒரு கையால் பகையை விரட்ட வேண்டும் என்றே சேனாபதி சியாங் பணித் திருக்கிறார். இரண்டு வேலைகளும் ஏக காலத்தில் இடைவிடாது நடைபெற்று வருகின்றன. கட்டிய பாகங்களை எதிரிகள் குலைத்துக் கொண்டே வருகிறார்கள். இந்த மகோன்னத மாளிகை கட்டி முடிந்த பிறகு உலகம் முழுவதும் இதைக் கண்டு ஆச்சரியப்படும் என்பதில் சந்தேகமில்லை. நீருக்குப் பதிலாக மக்கள் தங்கள் உதிரத்தைக் கொட்டி அமைக்கும் இம் மாளிகையே சீனாவின் கௌரவச் சின்னமாகவும், சீனர்களுடைய வீரத்தின் நிலைக் களனாகவும் விளங்கும்.

இந்த மாளிகையின் நிர்மாண வரலாறே சியாங் கே-ஷேக்கின் சரித்திரமும் ஆகும். அவர் வேறு, சீனப் புரட்சி வேறு என்று பிரிக்க முடியாது; அவர் வேறு, புரட்சியின் சிகரமான குடியரசு வேறு என்று பிரிக்க முடியாது.

முறத்தைக் கொண்டு புலியை விரட்டுவது போல் ஜப்பானை எதிர்த்து நிற்கும் இந்த வீரச் சேனாபதி எங்கிருந்தோ திடீரென்று தோன்றிய அவதார புருஷர் அல்லர். நாலாயிரம் ஐயாயிரம் வருஷங்களாக வளர்ந்து வந்த சீனாவின் கலைப்பண்பும் நாகரிகமுமே இப்பொழுது இத்தகைய வீரரை அளித்திருக்கின்றன. கால நிலையும் உலக நிலையும் சீனாவைப் பெரிதும் பாதித்து நிற்பதால், அவை இத்தகைய மகா புருஷரைத் தலைவராகத் தோற்றுவித்திருக்கின்றன. சேனாபதி சியாங், தம் பரிசுத்த வாழ்க்கையாலும், தேச பக்தியாலும், உலையாத உறுதியாலும், புதிய சீனாவின் லட்சியங்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் ஏற்ற பாத்திரமாகவும், உறைவிடமாகவும் தம்மைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்.

சியாங் கே-ஷேக்கின் வாழ்க்கைக்குப் பின்னணியில், தொலையில் சீனா-ஜப்பான் சரித்திரங்களும், சமீபமாக ஸன் யாட்-ஸென் அவர்களுடைய வாழ்க்கையும் ஜனநாயகப் புரட்சியும் விளங்குகின்றன. அவைகளைப்பற்றி முதலில் சிறிதளவாவது குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.

## II

## சீனாவின் புராதன நாகரிகம்

'ஒப்பிலாத சமுதாயம்—இது
உலகத்திற்குஒரு புதுமை!' —பாரதியார்

அழகான புஷ்பங்கள் ஆயிரக்கணக்கில் மலர்ந்திருக்கும் நந்தனவனத்தைப் பார்த்துக்கொண்டே

இருப்பது எல்லா மக்களுக்கும் ஆனந்தம் அளிக்கும் விஷயம். நறுமணம் வீசும் பல நிற மலர்கள் பூமகளின் புன்னகை போலவே விளங்கும். இக்காட்சியை ஒரு சீனச் சக்கரவர்த்தி மிகவும் ரஸிகத்தன்மையோடு அநுபவித்ததாகச் சரித்திரம் கூறுகின்றது. காலையில் இளஞ்சூரியனின் ஒளி பரவு முன்பு, அரண்மனை இசைவாணர்கள் முகை விரியும் மலர்களுக்கு இசை பாட வேண்டும் என்று அவர் ஏற்பாடு செய்திருந்தாராம். முல்லைக்கொடி படர்வதற்காகத் தம்முடைய தேரைக் கொடுத்த நமது தமிழ் மன்னரை இவருக்கு ஒப்பிடலாம். இவர்களுடைய இருதய பாவத்தின் மென்மையையும், ரஸிகத் தன்மையையும் கவிகள் தாம் பாராட்டிப் புகழ முடியும். இந்த உள்ளப் பண்பாட்டின் பெருமை இதற்கு நேர் விரோதமான ஒரு குணத்தைப் பார்த்தால் நன்கு விளங்கும். மேல் நாட்டு ரோமாபுரியின் சக்கரவர்த்தியான நீரோ என்பவர் தம்முடைய தலைநகர் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த பொழுது அரண்மனையில் ஆனந்த மாகப் பிடில் வாசித்துக்கொண்டிருந்தாராம்!

வெடி மருந்தை முதலில் கண்டுபிடித்த தேசம் சீனுதான். இதை மற்ற நாடுகளை அழிப்பதற்காக உடனே உபயோகித்திருந்தால் சீனு உலகம் முழு வதையுமே ஜயித்திருக்கலாம். ஆனுல் அது அந்தக் கொலைபாதகத் தொழிலுக்கு வெடி மருந்தை உபயோகிக்காமல் விட்டுவிட்டது. அது மட்டுமல்ல. சீனர்கள், அந்த மருந்தை வாணங்களாகவும், வெடி களாகவும் செய்து, நெருப்புப் பற்ற வைத்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். இன் றைக்கும் சீன வெடிகள் கோடிக்கணக்கான குழந்தை களுக்கும் மக்களுக்கும் ஆனந்தமளிக்கும் பொருள் களாக இருக்கின்றன. வெகு காலத்திற்குப் பிறகே வெளி நாடுகளில் வெடி மருந்து, நாசக் கருவியாக உபயோகப்பட ஆரம்பித்தது.

இன்னொரு விஷயம்: சீனர்கள் ஞானிகளுக்கு முதல் ஸ்தானம் கொடுத்து வணங்குகிறார்கள். அதே சமயத்தில் சிப்பாயிகளை - போர் வீரர்களை - மிகவும் மட்டமானவர்களாகக் கருதி, சமூகத்தின் கடைசிப் படியில் வைத்து எண்ணுகிறார்கள். தேசத்தையும், தேசமக்களையும் பாதுகாத்துப் போர் புரிந்தவர்கள் எவ்வளவு பெரிய வீரர்களாயினும், அவர்களுடைய தொழில் கொலைத் தொழில்தான் என்று சீனர்கள் இழிவாக எண்ணுகிறார்கள். சமீப காலத்தில், குடியரசு நிறுவிய பிறகே, ஜனங்கள் அரசாங்கப் படைகளை மதித்துப் பாராட்டி உத்ஸாகப்படுத்த முன் வந்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் சீன நாகரிகத்திற்கும், கலைப்பண்புக்கும் சின்னங்களாகக் கொள்ளலாம். சீனு தன்னிலே தான் நிறைவு பெற்ற நாடு. பல்லாயிரம் வருஷங்களாக அது வெளி நாடுகளின் தொடர்பில்லாமல் தனித்திருந்து, தன் அறத்தையும், கலைகளையும், நாகரிகத்தையும் வளர்த்து வந்திருக்கிறது.

சீனுவில் அறம் வளர்த்த ஆசாரியர்கள் அநேகர் உண்டு. வாழ்க்கையின் லட்சியங்களையும் முறைகளையும் குடும்பம், ஊர், சமூகம் முதலியவற்றோடு தனி மனிதர்கள் கொண்டுள்ள சம்பந்தங்களையும், அரசர்களின் ஆட்சி முறைகளையும் பற்றி அவரவர்கள் விரிவான நூல்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். இவைகளில் பெரும்பாலானவை இன்று வரை சீனர்களால் பாதுகாக்கப் பட்டிருக்கின்றன. இந்த உபதேசங்கள் எல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காய்களாக இல்லாமல் சீனர்களுடைய வாழ்க்கையில் ஊடுருவி நிலைபெற்றிருக்கின்றன. அவர்களுடைய எழுத்திலும் பேச்சிலும் அடிக்கடி இவைகளைக் குறிப்பிடுகிறார்கள். பல காலங்களில் பல ஆசாரியர்கள் தோன்றி யிருந்த போதிலும் இவர்களில் மிகவும் முக்கியமானவராக இருவரைக் குறிப்பிடலாம். இவ்

விருவரும் 25—நூற்றுண்டுகளுக்கு முன் சீன பூமியில் அவதரித்தவர்கள். முதலாமவர் லா ஓட்ஸி; இவர் டாஓ என்ற பெயரால் ஒரு மதத்தை ஸ்தாபித்தார். இரண்டாமவர் கன்பூஷியஸ்; இவர் பெயராலும் ஒரு மதம் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த இரண்டு மதங்களோடு, இந்தியாவில் தோன்றிய புத்த மதத்தையும் பின்னுல் சீனு ஏற்றுக்கொண்டது. அங்கே பெரும்பாலும் இம் மூன்று மதங்களும் நிலவி வருகின்றன. நம் தேசத்தைப் போல், பல மதத்தினரும் ஒன்று சேர முடியாதபடி தனித் தனியாகப் பிரிந்து வாழ்வது சீனுவில் வழக்கமில்லை. பெரும்பாலான சீனர்கள் இம்மூன்று மதங்களேயும் ஒன்றுசேர்த்து அனுஷ்டிக்கிருர்கள். அவர்களுடைய சமரசப்பான்மை மிக அதிகம். மேலும் டாஓ மதமும் கன்பூஷியஸ் மதமும் மானிட வாழ்க்கைக்கு அவசியமான பல சித்தாந்தங்களேக் கொண்டிருக்கின்றனவே அல்லாமல், தனி மதங்கள் என்று கருதவேண்டியவை அல்ல. சமய சமரசம் கொண்டிருப்பதால், சீனர்களிற் பலர் சமய சம்பந்தமான கிரியைகள் நடத்தும்பொழுது, தாங்கள் பின்பற்றும் எல்லாச் சமயங்களின் குருமார்களேயும் அழைத்துக் கொள்வது வழக்கமாயிருக்கிறது.

லா ஓட்ஸியும் கன்பூஷியஸும் நம் அருந்தவ முனிவர் திருவள்ளுவரைப் போன்றவர்கள். அவர்களுடைய உபதேசங்களில் சில பழங்காலப் போக்காயிருந்தாலும், பெரும்பாலானவை மக்களே மேல் நிலேக்கு உயர்த்தக்கூடிய உயர்ந்த கருத்துக்களாயும், என்றைக்கும் பயன்படக்கூடிய முறையில் சாகா வரம் பெற்றவைகளாயும் இருக்கின்றன.

ஒவ்வொரு மதத்திலும் உலகப் படைப்பைப் பற்றிய கதைகள் உண்டு. சீனுவிலும் இவை பரவியிருக்கின்றன. சீனர்கள், 'பான்-கு' என்ற தெய்வம் உலகத்தைப் படைத்ததாயும், அதற்கு ஏழு கைகளும்

எட்டுக் கால்களும் இருந்ததாயும், பதினெண்ணுயிரம் வருஷமாக அது இருந்து வருவதாயும் நம்பி வந்தார்கள். இத்தகைய கதைகள் எல்லாம் பொது ஜனப் பேச்சோடும் கதைகளோடும் நின்றுவிட்டன. ஆனால் உயர்ந்த சாஸ்திரங்களில் இவைகள் இடம் பெறவில்லை. லா ஓட்ஸி தோன்றிய பின் அவர், சுவர்க்கலோகம் பூமி என்பவைகளை எல்லாம் வணங்கக் கூடாது என்றும், அவை மக்களை மடையர்களாக்குகின்றன என்றும், அவை ஒன்றையொன்று விழுங்கி அழிந்து தொலையட்டும் என்றும் உபதேசிக்க ஆரம்பித்தார். தத்துவஞான ஆராய்ச்சியுடன், அவர் இயற்கையையும் ஆராய்ந்தார். மானிட வாழ்க்கை இயற்கையைப் பின்பற்றி அதனுடன் ஒன்றியிருக்க வேண்டும் என்று அவர் உபதேசித்தார். ‘சுவர்க்கமும் பூமியும் தோன்று முன்பு வேறு ஏதோ ஒன்று இருந்திருக்கிறது; அது உருவற்றதாக, மகா ரகசியமாக, சுதந்தரமுள்ளதாக, மாறுதலற்றதாக, களைப்பற்ற வல்லமை யுள்ளதாக இருக்கிறது; அதுவே உலகத்தின் தனி முதல் தாயாக இருக்கலாம்; அதற்கு என்ன பெயரிடலாம் என்று தெரியாமல், அதை “டா ஓ” அல்லது மகா இயக்கம் என்று அழைக்கிறேன்’ என்று அவர் ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அவர் கருத்துப்படி, மக்களின் சக்திக்கும், சுவர்க்கம் அல்லது கடவுளின் சக்திக்கும் அப்பாற்பட்ட இயற்கையான ஒரு மகா இயக்கம் அல்லது பரிணாம சக்தியிலிருந்தே உலகமும் சகல ஜீவன்களும் தோன்றியிருக்க வேண்டும்.

லா ஓட்ஸியின் உபதேசங்கள் சிலவற்றைப் பார்ப்போம் :

‘நான் மதிப்பு மிகுந்த மூன்று அருமையான விஷயங்களை உறுதியாக வைத்துக்கொண்டிருக்கிறேன். முதலாவது கண்யம், இரண்டாவது செட்டு, மூன்ருவது அடக்கம். கண்யமாயிரு, நீ தீரமாக இருக்க முடியும்;

செட்டாயிரு, நீ தாராளமா யிருக்க முடியும்; மற்றவர்களைத் தள்ளிக்கொண்டு முன்னால் போய் நிற்காமல் இரு, நீ மக்களின் தலைவனாக வர முடியும்.'

'மிகவும் புராதனமான காலத்தில், மக்கள் தங்களுக்கு அரசர்கள் இருந்தார்கள் என்பதையே அறியாமல் இருந்தார்கள். அடுத்த சகாப்தத்தில் அவர்கள் அரசர்களை நேசித்துப் புகழ்ந்தார்கள். அடுத்தாற் போல் அவர்கள் அரசர்களுக்குப் பயந்தார்கள். பிறகு அவர்கள் அரசர்களை வெறுத்தார்கள்.'

'ஓர் உயர்ந்த ஜனசமூகத்தை ஆளுவதில் சிறு மீனைக் கறி சமைப்பது போல் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.'

'அறிந்தவர்கள் பேசுவதில்லை; பேசுகிறவர்கள் அறிவதில்லை.'

'நல்லோர்க்கு நான் நல்லவனாக இருப்பேன்; அல்லாதவரையும் நல்லவராக்க அவர்களுக்கும் நான் நல்லவனாகவே இருப்பேன்.'

கன்பூஷியஸ் பெரும்பாலும் மானிடத்தைப் பற்றியே—மனித வாழ்க்கையைப் பற்றியே-சிந்தித்து ஆராய்ச்சி செய்திருக்கிறார். வானுலகம், பூமி, இயற்கை, தெய்வங்கள், தேவதைகளைப்பற்றி அவர் அதிகம் சிந்திக்கவுமில்லை, பேசவுமில்லை. "தெய்வங்களுக்கு எப்படித் தொண்டு செய்யவேண்டும்?" என்று அவருடைய சீடர் சீ-லூ என்பவர் கேட்டபொழுது, "மனிதனுக்குத் தொண்டு செய்யவே இன்னும் உனக்குத் தெரியாதே! நீ தெய்வங்களுக்குத் தொண்டு செய்வதைப் பற்றி எப்படிக் கேட்கலாம்?" என்று அவர் கூறிய பதிலே அவருடைய உபதேசங்களுக்கெல்லாம் வித்தாக விளங்குகிறது. "வாழ்வைப் பற்றி உனக்கு அதிகம் தெரியாதிருக்கையில், மரணத்தைப்பற்றி நீ எப்படி அறிய முடியும்?" என்று அதே சீடருக்குக் கூறியிருக்கிறார். தெய்வங்கள், ஆவிகள், இயற்கை ஆகியவைகளை எல்லாம் அவர் மறுத்து ஒழித்துவிட்டதாகக் கருதுவதற்கில்லை. அவருடைய தத்துவ உபதேசத்தின் சாரம்,

வையகமும் அதிலுள்ள உயிர்களும் இடைவிடாமல் மாறிக்கொண்டே வருவதால், மானிட வாழ்க்கைக்கு நிகழ்காலத்தில் கண்முன்பு காணும் இயற்கையே முக்கியமாக இருக்கும் என்பதே. நிகழ்காலத்தின் மூலமே பழங்காலத்தை அறிந்து எதிர்காலத்தைக் காணும் நம்பிக்கையுடன் இருக்க முடியும். மானிட சம்பந்தமான பொருள்களைக் கொண்டே ஒருவன் சுவர்க்கம், பூமி, தெய்வங்கள் முதலியவைகளை ஊகித்து அறிய முடியும் என்பது அவர் துணிபு.

கீழே இருப்பவை அந்த மகானுடைய வாக்கியங்களிலிருந்து எடுக்கப் பெற்றவை :

'மக்களின் இயற்கை ஒன்று போலவே இருக்கிறது; ஆனுல் அவர்களுடைய பழக்கங்களே அவர்களை வெகு தூரம் பிரித்து வைத்துவிடுகின்றன.'

'பயிற்சி இல்லாத ஜனக் கும்பலை யுத்தத்திற்கு அழைத்துச் செல்வது அவர்களைத் தூர எறிந்து விடுவதற்குச் சமானமே ஆகும்.'

'அகங்காரம் இல்லாமல் செல்வராய் வாழ்வதைப் பார்க்கிலும், முணுமுணுக்காமல் ஏழையாய் வாழ்வது கஷ்டம்.'

'தன்னடக்கம் இல்லாத பொழுது நாம் காட்டும் மரியாதை மற்றவரை வருத்தப்படுத்துவதாயும், நம்முடைய ஆராய்ச்சி அறிவு கோழைத்தனமாயும், வீரம் வெறும் பலாத்காரமாயும், உண்மையை உரைப்பது முரட்டுத்தனமாயும் ஆகிவிடுகின்றன.'

'நற்குணம் தனிமையில் வாழ முடியாது; அதைச்சுற்றி அன்பர்கள் தோன்றிக் கூடிவிடுவது திண்ணம்.'

'சிந்தனை இல்லாத படிப்பு பயனற்றது; படிப்பில்லாத சிந்தனை அபாயகரமானது.'

கன்பூஷியஸ் முனிவரின் ஜயந்தியைக் கொண்டாடுவதற்காகச் சீனக் குடியரசு ஒவ்வொரு வருஷமும் ஆகஸ்ட் 27-ஆம் தேதியைத் தேசிய விடுமுறை நாளாக ஏற்படுத்தியிருக்கிறது. அவருடைய

வாக்கியங்கள், தேசத்தின் மாபெருந்தலைவர்கள் முதல் சாதாரண ஜனங்கள் வரை, எல்லோருடைய உள்ளங்களிலும் இடம் பெற்றிருக்கின்றன.

விஷயங்களைப் பாகுபடுத்தி ஆராய்ந்து பார்த்து, அறிவைப் பெருக்கி, அதன் மூலம் அந்தரங்க விசுவாசத்துடன் நல்ல நோக்கங்களை அமைத்துக் கொண்டு, உள்ளத்தை ஒழுங்குபடுத்தி, அதன் மூலம் உடலை ஒழுக்கமுடையதாக்கி, தன் குடும்பத்தை ஆண்டு, பிறகு நாட்டை ஆட்சி செய்து, அதன் பின்பே ஒருவன் உலகத்திற்குச் சன்மார்க்கத்தைப் பிரசாரம் செய்ய முடியும் என்பதைப்பற்றி அவர் கூறியுள்ள விஷயங்கள் சேனுபதி சியாங் கே-ஷேக்கின் ஆப்த வாக்கியங்களாக விளங்குகின்றன. சேனுபதி பொதுக் கூட்டங்களிலும் கன்பூஷியஸின் வாக்கியங்களை எடுத்துக் கூறுவது வழக்கமாயிருக்கிறது.

கிறிஸ்தவ மதமும் சீனுவில் கொஞ்சம் பரவியிருக்கிறது. கிறிஸ்து நாதர் சிலுவையேறிய பிறகு சிறிது காலத்திலேயே சீனுவுக்குள் அம்மதம் நுழைந்திருக்கிறது. சீனர்கள் அதைச் 'சின் சியாஞ' என்று கூறுகிருர்கள். இடைக்காலத்தில் கிறிஸ்தவ மதம் வளர்ச்சி யில்லாதிருந்தும், சென்ற சில நூற்ருண்டுகளாக ஐரோப்பிய அமெரிக்க மிஷனரிகளின் முயற்சியால் அது பெருகி வருகிறது. சீனக் குடியரசின் தந்தையான ஸன் யாட்-ஸென்னும், சேனுபதி சியாங் கே-ஷேக்கும் கிறிஸ்தவர்கள் என்பதும் இங்குக் கவனிக்கத் தக்கது. கிறிஸ்தவ மதத்தைப் போலவே இஸ்லாமும் ஆதியிலேயே சீனுவில் பிரசாரம் செய்யப் பட்டிருக்கிறது. நவீன சரித்திரத்தில் சீன முஸ்லிம்கள் முக்கியமான ஸ்தானத்தை வகிப்பவர்களா யிருக்கிருர்கள்.

எத்தனையோ குருமார்களின் உபதேசங்களைச் சீனர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிருர்கள். ஆயினும்

நம் ஞானிகளைப்போல், வாழ்வு மாயம் என்றும், இது மண்ணாவது திண்ணம் என்றும் வாழ்க்கையைத் தள்ளிவிட்டு அதற்கு அப்பாலுள்ள விஷயங்களையே அவர்கள் எண்ணிக் கொண்டிருப்பதில்லை. ஆத்மிக விஷயங்களின் சிகரங்களில் அவர்கள் எல்லை கடந்து ஏறுவதில்லை. 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்பது அவர்கள் சித்தாந்தம். இதனால் வாழ்வை அவர்கள் இன்பமாகவே அநுபவித்திருக்கிறார்கள். வாழ்வு முழுவதும் பரலோகத்தையே எண்ணிக்கொண்டிருந் தால், இகலோகம் இருந்தும் இல்லாதுபோல் ஆகிவிடு கிறது. இவ்விஷயத்தில் சீனர்கள் புத்திசாலிகளாக இருந்திருக்கிறார்கள். ஆயினும் பழங்காலத்துப் பெரியவர்களுடைய உபதேசங்களுக்கு அளவுக்கு மிஞ்சிய ஒரு ஸ்தானத்தையே அவர்கள் அளித்து வருகிறார்கள் என்பதும் உண்மை. இதனால் புதிய கருத்துக்களுக்கும் மாறுதல்களுக்கும் பெரிய தடை ஏற்படுகின்றது. மக்களின் வாழ்க்கையில் மாண்டு போன பழங்காலத்தவர்களே ஆதிக்கம் செலுத்தி வந்தால், செத்தவர்களே இப்பொழுது வாழ்கிறவர்க ளாகவும், இருப்பவர்கள் இறந்தவர்களாகவும் மாறு கிறார்கள் என்று பிரெஞ்சு நாட்டு மேதாவியான அனடோல் பிரான்ஸ் என்பவர் கூறியிருக்கும் உண்மையையும் சீன மக்கள் நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்து வருகிறார்கள்.

மத விஷயங்களிலும் ஒழுக்க முறைகளிலும் சீன வாலிபர்களும் பெண்களும் காலத்திற்கு ஏற்ற மாறுதல்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். பழைய தலைமுறையைச் சேர்ந்தவர்களுடைய எதிர்ப்பும் நாளடைவில் தகர்ந்து வருகிறது. கலா சாலைகளிலும் பள்ளிகளிலும் உள்ள மாணவர்களும் ஆசிரியர்களும் புதுக் கருத்துக்களை நாடெங்கும் பரப்பி வருகிறார்கள். இதுவரை சீன சமூகம் உருக் குலையாமல் இருந்து வந்ததற்கு ஒரு மூல காரணம்

மக்கள் பெரிய குடும்பங்களாக வாழ்ந்து வந்ததாகும். ஒரு குடும்பத்தில் நூற்றுக் கணக்கான மக்கள் இருப்பார்கள்; ஆயினும் எல்லோரும் ஒரே வீட்டில் ஒன்ருகவே குடியிருப்பார்கள். இந்த முறை 3,000 வருஷத்திற்கு மேலாக நின்று நிலவி வந்திருக்கிறது. ஆனுல் சமீப காலத்தில் மேல்நாட்டு நாகரிகமும், ஜன நாயகக் கருத்துக்களும், அமெரிக்கக் கல்வியும் சீனுவில் நுழைந்து இந்த முறையை மாற்றி வருகின்றன. சீனர்கள் எளிதாக மாற்றத்தை ஏற்றுக் கொள்பவர்கள் அல்லர். மாறவேண்டும் அல்லது மாளவேண்டும் என்று ஏற்பட்ட பொழுது அவர்கள் மூன்னதையே ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள். கல்வி கற்பதற்காக அமெரிக்காவுக்குப் பல சீன வாலிபர்கள் போயிருந்தார்கள். அவர்களில் அநேகர் கல்வியை முடித்துக் கொண்டதோடு கடிமணத்தையும் முடித்துக்கொண்டு தாய் நாட்டுக்குத் திரும்பி வந்தார்கள். ஒவ்வொருவருடைய சாமான்களுடன் அமெரிக்கப் பெண் ஒருத்தியும் அழைத்து வரப்பட்டிருந்தாள். வெள்ளைக்காரிகளை மணந்த சீனர்கள் பழைய குடும்பங்களோடு வாழ முடியாத நிலைமை ஏற்பட்டது. புதிய தனிக் குடும்பங்கள் தோன்றின. மேலும், பொருளாதார நெருக்கடி முதலிய பல காரணங்களால் புராதனச் சீனக் குடும்பங்கள் குலைந்து வருகின்றன. முன்னுல் குடும்பத் தலைவர்கள் பார்த்துவந்த வேலைகளில் பலவற்றை இப்பொழுது அரசாங்கமே செய்ய முற்பட்டிருக்கிறது. 45 கோடி ஜனங்கள் சீனுவில் இருந்தபோதிலும், இவர்களுடைய குடும்பங்களை மட்டும் கருதினுல், இவர்கள் எல்லோரும் 100, 200 குடும்பங்களுக்குள் அடங்கி விடுவார்கள். மக்களின் பெயர்களைக் கவனித்தாலும், ஒரு நகரத்தில் ஒரே பெயருள்ள மக்கள் நூற்றுக் கணக்காக இருப்பார்கள். நூற்றுக் கணக்கான ஜனங்கள் ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்ததில்

முற்காலத்தில் எவ்வளவு நன்மை இருந்தபோதிலும், அதனுல் ஜன நெருக்கமும் வேறு பல சங்கடங்களும் ஏற்பட்டதால், அது மாறி வருவது சீனுவுக்கு நன்மையேயாகும்.

சீன சமூக அமைப்பில் ஜாதி வேற்றுமைகள் கிடையா. தொழில்களை வைத்து ஜனங்களுக்குள் ஷீ, நுங், குங், ஷாங் என நான்கு பிரிவுகள் உண்டு. ஷீ படித்த அறிஞர்களுடைய பிரிவு, நுங் விவசாயிகள் பிரிவு, குங் தச்சர் கொல்லர் முதலிய விசுவகர்மர்கள் பிரிவு, ஷாங் வைசியர்கள் பிரிவு. பிறப்பினுல் பிரிவுகள் இல்லை. தொழில்களைக் கொண்டே பாகுபாடுகள் உண்டு. இந்தப் பிரிவினரில் ஒருவரோடு ஒருவர் மணம் முதலியவை செய்து கொள்வது சர்வ சாதாரணம். இவர்களில், அறிவாளர்கள் சமூகத்தில் முதல் ஸ்தானம் வகித்திருப்பதுடன், எங்கும் மரியாதைக்குப் பாத்திரராகவும் விளங்குகிறுர்கள். சீன சமூகப் பாகுபாட்டில் கடைசிப் படியில் இருப்பவர்கள் விவசாயிகள் அல்லர்; ஆனுல் வைசியர்கள். வர்த்தகர்கள் எவ்வளவு செல்வம் மிகுந்திருந்தாலும் தங்கள் சொந்த உழைப்பால் எதையும் உற்பத்தி செய்வதில்லை. ஆதலால், அவர்கள் சமூகத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் சிலைப் பேன்களாகக் கருதப்படுகிறுர்கள்.

சீனுவில் பெண்களுக்கு உயர்ந்த அந்தஸ்து கொடுக்கப்படுகிறது. முன் ஒரு காலத்தில் அவர்கள் ஆடவர்களுக்கும் மேலான பதவியில் இருந்ததாகச் சரித்திரம் கூறும். ஆயினும், பிற்காலத்தில் பொது வாழ்க்கையில் ஆடவர்களுக்கே முதல் இடமாக மாறிவிட்டது. விவாகமான ஸ்திரீகள் உண்மையிலேயே வீட்டு ராணிகளாக வாழ்கிறுர்கள். வீட்டு விஷயங்களை எல்லாம் அவர்களே கவனித்து நடத்துகிறுர்கள்; ஆடவர்கள் அவைகளில் தலையிடக் கூடாது. ஆடவர்களுடைய அதிகாரம் வீட்டுக்கு

மனைவியைப் போற்றுகிறான். சில வருஷங்களுக்கு முன்னால் இந்தியாவுக்கு வந்திருந்த சீனப் பேராசிரியர் டாக்டர் டான் யுன்-ஷான், 'சீனுவில் நாங்கள் எல்லோரும் மனைவிமார் வரை பதுமைகளாகவே இருக்கிறோம்!' என்று கூறினார். எனினும், பொது வாழ்க்கையிலும் அரசியலிலும் ஸ்திரீகளுக்கு இருந்த தடைகள் சமீபத்தில் குடியரசால்தான் நீக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது சீன மாதர்கள் எல்லாத் துறைகளிலும் ஆடவருக்கு இணையாக முன்னேறி வருகிறார்கள். ஒழுக்க சம்பந்தமாகப் பெண்களுக்கு நாலு குணங்கள் இருக்கவேண்டும் என்றும், சிறு வயதில் அவர்கள் தந்தையருக்கும், பிறகு கணவர்களுக்கும், கணவர்களை இழந்தால் தநயர்களுக்கும் அடங்கி யிருக்கவேண்டும் என்றும் நம் நாட்டு விதிகள் கூறுவதுபோல், சீனுவிலும் இருக்கின்றன. நம் நாட்டைப் போலவே அங்கும் மேல் நாட்டு நாகரிகத்தில் வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆணும் பெண்ணும் கையைக் கோத்துக் கொண்டும், கழுத்தைக் கட்டிக்கொண்டும் தெருக்களில் நடமாடுவதை அங்கும் ஜனங்கள் விரும்புவதில்லை.

சீனக் கலைகளைப் பற்றிச் சிறிது கவனிப்போம். இலக்கியத்தில் மிகப் புராதனமான நூல்கள் பல இன்றுவரை அங்கே பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றன. சில பழைய நூல்கள் காணப்படாமற் போயினும், 4,000 வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட 'ஷாங்-ஸு', அதற்கும் முந்திய 'யீ-சின்' என்ற கிரந்தங்கள் அப்படியே இருக்கின்றன. கி. மு. 1500-500 வருஷங்களுக்கு இடையில் வழங்கிவந்த பாடல்களை 'ஷீ-சின்' என்ற கவிதை நூலாகக் கன்பூஷியஸ் தொகுத்து வைத்திருக்கிறார். இவ்வளவு பழமையான நூல்கள் நம்முடைய வேதங்களைத் தவிர உலகில் வேறில்லை. உலகம் முழுதும் அந்தகாரத்தில் ஆழ்ந்திருந்த காலத்திலே கீழ்த் திசையில் அறிவுச் சூரியன்

இந்தியாவிலும் சீனுவிலும் பிரகாசித்துக் கொண் டிருந்ததற்கு இந்த நூல்களே சான்று கூறும். சீனர்கள் வெறும் பழம் பெருமைக்கு மட்டுமே அருகர் என்று ஆகிவிடாமல், இன்று வரை, தங்கள் அறிவு நூல்களையும் கலைச் செல்வங்களையும் பெருக்கிக் கொண்டே வந்திருக்கிறார்கள். அவர்களே அச்சிடும் முறையை முதலில் கண்டுபிடித்தவர்கள். இதன் பயனுக உலகில் கோடிக் கணக்கான குருடர்களுக்குக் கண் திறந்திருக்கிறது என்பதை யார் மறுக்க முடியும்? அச்சு யந்திரம் இல்லாவிட்டால் ஒவ்வொரு தேசத் திலும் பெரும்பாலான மக்கள் இதுவரை எழுத்து வாசனை அற்றவர்களாகவே இருந்திருப்பார்கள். பிறகு ஜனங்களுடைய சொந்த ஆட்சியாகிய ஜன நாயகம் நிலைத்திருக்க முடியுமா? சீன பாஷையும் புராதன காலத்திலேயே செம்மையான முறையில் அமைக்கப் பட்டிருக்கிறது. பாஷையே நாகரிக ஆராய்ச்சிக்கு உற்ற துணையா யிருப்பது. சீன எழுத் துக்கள் பூஹ்ஸி என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டு, மஞ்சள் சக்கரவர்த்தி (கி. மு. 2697 - 2598) என்ப வரால் பூர்த்தி செய்யப்பட்டதாகச் சொல்லப் படுகிறது. இவர்கள் புராதன எழுத்துக்களை முறைப் படுத்தி யிருந்தார்களே தவிர, இவர்களுக்கும் முன்னுல் சீன லிபி வழக்கில் இருந்திருக்கிறது. சீன லிபி எழுதுவதற்கு மிகவும் கடினம் என்றும், சித்திரம் வரைவது போல் மிகவும் சிரமப்பட்டே அதை எழுத முடியும் என்றும் அநேகர் எண்ணு கிறார்கள். ஆனுல் சீன அறிஞர்கள் இது உண்மை யில்லை என்றும், உலகின் மற்ற மொழிகள் யாவற்றைக் காட்டிலும் சீன லிபியே எழுத எளிதானது என்றும் கூறுகிறார்கள். தங்கள் லிபியில் வடிவம், ஒலி, பொருள் மூன்றும் ஒன்றுபோல் இயைந்திருப்பதாயும், எழுத் துக்களின் அமைப்பிலும் உபயோகத்திலும் ஆறு முறைகள் வகுக்கப் பட்டிருப்பதாயும், இந்த முறை

களில் ஒன்றுதான் சித்திரம் வரைவது போல் அந்நியர்க்குக் காணப்படுவதாயும் அவர்கள் சொல்லு கிறார்கள். இவை எப்படியேனும் இருக்கட்டும். ஐரோப்பா கண்டத்தைவிடப் பெரிதாய், மாபெருங் கண்டம் போல் விளங்கும் சீன தேசம் முழுமைக்கும் ஒரே விதமான மொழியும் ஒரே விதமான எழுத்தும் இருப்பதே பெரிய வியப்பாகும். இவை சீனாவின் ஒற்றுமைக்குப் பெரிதும் உதவியாக நிற்கின்றன. சில மாகாணங்களில் பேசுகின்ற மொழியில் வேறுபாடுகள் இருக்கின்றன. ஆயினும் சீனா முழுதும் ஒரேவித எழுத்தே நிலவி வருகிறது.

கவிதையில் இந்தியாவைப் போலவே சீனாவும் என்றுமே தலைசிறந்து நிற்கிறது. சீனக் கல்விமான்கள் எல்லோருமே கவிவாணர் என்று வேடிக்கையாகச் சொல்லுவது உண்டு. படித்தவர்க்கே முதல் மரியாதை என்ற விதியைக் கடைப்பிடிக்கும் நாட்டில், பல நூற்றாண்டுகளாக அமைதியில் திளைத்து, 'சாந்தி, சாந்தி' என்று ஜபித்துக்கொண் டிருக்கும் நாட்டில் கவிவாணர் பெருகுவதற்குத் தடை ஏது? வீரத்தைப் புகழும் கவிவாணர், வீரத்தோடு காதலைச் சேர்த்துக் காவியங்கள் கட்டும் புலவர்கள், இயற்கையோடு இரண்டறக் கலந்து இசைபாடும் கவிகள், கண்ணுக்குப் புலப்படும் பொருள்களின் உட்கருத்தை அறிந்து பாடும் கவிவாணர், மக்கள் சமுதாயத்தி லுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் கண்டு உள்ளம் துடிக்கும் கருணைக் கவிகள், கற்பனா சக்தியுடன் உயரே பறந்து வானமண்டலத்தில் வட்டமிடும் கவிவாணர் - இப்படிப் பலதிறப்பட்ட கவிவாணர்கள் சீன தேசத்தில் கவி பாடி வந்திருக்கிறார்கள். 'தெய்விக வாளேந்தி, நெடுங்கடலுள் நீந்திவரும் திமிங் கிலத்தை வீசேனோ?' என்று லீ-போ என்ற ஒரு கவி கூறியிருக்கிறார். இவர் மது அருந்தி, ஓர் ஓடத்தில் சென்று கொண்டிருக்கும் பொழுது, தெளிந்த நீரில்

சந்திர விம்பத்தைக் கண்டு, அதைப் பிடிப்பதற்காகப் பாய்ந்து உயிரையே மாய்த்துக் கொண்டாராம்! 'ஒரு ஜாடி மது அருந்தி, ஒரு நூறு கீதம் பாடுவார்!' என்று பின் வந்த கவிகள் இவரைப் புகழ்வதுண்டு.

ஏழைகளுடைய பசிப்பிணியைக் கண்டு வருந்தி,

'மாளிகைகளினுள்ளே மதுவும் மாமிசமும்
அழுகிக் கிடக்கின்றன;
மாளிகைகளுக்கு வெளியே மானிட எலும்புகள்
அழுகிக் கொண்டிருக்கின்றன'

என்று டூ-பு என்ற கவி பாடியிருக்கிறார்.

'சித்திரத்திலுள்ள மலைகளை
முதலில் பார்க்கிறோம்,
மலைகளிலுள்ள சித்திரத்தைப்
பிறகே பார்க்கிறோம்'

என்று 17-ம் நூற்றாண்டுக் கவி ஒருவர் இயற்கையையும் சித்திரக் கலையையும் ஒன்றாகப் பிணைத்துக் கூறியிருக்கிறார்.

செந்தாமரை மலரை ஒரு கன்னிகையாகக் கருதி இயற்கை வெறி தலைக்கேறிய புலவர் ஒருவர் பாடியிருக்கிறார்:

'மெல்லிய தென்றல் வீசும் பொழுது அவள் தன் பசுமையான முகத்திரையுடன் நீரில் மூழ்கி எழுகிறாள். பக்கத்தில் யாருமில்லை என்ற தெம்பினால், அவள் செக்கச் செவேலென்ற தன் மேனி முழுவதையும் காட்டுகிறாள்'

என்பது அவர் கூற்று.

கம்பர் சீதையைச் 'செஞ்சொற் கவி இன்பம்' என்று வருணித்திருப்பதைப் போல், ஒரு சீனக் கவி, 'இவள் இடை, தென் சீனப் பாட்டைப் போல் மென்மையானது' என்று கூறியிருக்கிறார்.

பொதுவாகச் சீனக் கவிகள் சீனர்களுடைய வாழ்வையும் தத்துவங்களையும் பிரதிபலித்துக் காட்டு

கின்றன. கவிகள் உணர்ச்சிகளின் பலநிற ஒளிக ளோடு ஜொலிக்கின்றன என்று படித்து அநுப விக்கும் சீனர்கள் வாயாரப் புகழ்கிருர்கள். மேலும், மேல் நாடுகளைப் பார்க்கிலும் அதிகமாகச் சீனுவில் கவிகள் மக்களின் வாழ்க்கையோடு கலந்து பரிமளிக் கின்றன. இதில் நமக்கு அதிக வியப்பு இராது. நம் மிடையே எந்த விஷயத்திற்கும் ஒரு கவி பாடிக் காட்டக் கூடியவர்கள் இன்றும் இருக்கிருர்கள். பழங்காலத்தில் சீனுவில் நல்ல கவி எழுதக்கூடிய வாலிபர்களைப் பார்த்தே பல பெண்கள் மணம்புரிந்து கொள்வார்களாம். சுருங்கச் சொன்னுல், அங்கே கவிதை ஒருவகை மதமாகவே பாவிக்கப்படுகிறது என்னலாம்.

சீனக் கலைகளுக்கும் மற்றக் கீழ் நாட்டுக் கலைகளுக்கும் ஒற்றுமை அதிகம் இருக்கும். ஆனுல் மேல் நாட்டுக் கலைகளோடு ஒப்பிட்டால் மிகுந்த வேற்றுமையையே காணலாம். அநேக ஐரோப்பியக் கலைவாணர்கள் சீனக் கலைகளைப் பற்றி விரிவாக ஆராய்ந்து உயர்ந்த நூல்கள் எழுதியிருக்கிருர்கள். இந்தியாவிலும் சீனுவிலும் பொதுவாக மக்கள் அணியும் உடைகளைக் கவனித்தாலே மேல் நாடு களுக்கும் கீழ் நாடுகளுக்கும் உள்ள வேற்றுமை விளங்கும். நம்முடைய உடைகளை, அங்கங்களின் அமைப்பு வெளியே தெரியாதபடி, அங்கங்களோடு ஒட்டிக் கொண்டிராமல் வெளியே தொங்கும்படி அணிகிருேம். வேஷ்டிகளோ, கால்சட்டைகளோ, சட்டைகளோ எல்லாம் இந்த முறையிலேயே இருக் கின்றன. சீனுவிலும் இப்படித்தான். வெள்ளைக் காரர்களுடைய உடைகள் நேர்மாருக இருக்கும். வெள்ளைக்காரிகளுடைய ஆடைகளைப் பற்றியோ, சொல்லத் தேவையில்லை. அவயவங்களின் அளவு தெரியும்படி கீழ் நாடுகளின் சைத்திரிகர்கள்கூடப் படம் எழுதமாட்டார்கள். மேற்கே உடல் அமைப்

புக்களை அப்படி அப்படியே சித்திரிக்கிருர்கள். கிழக்கே உடற் கூறுகளை உள்ளபடி காட்டுவதில்லை. சித்திரகாரரின் கற்பனையில் அவை எப்படியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறதோ அப்படியே எழுதுவர். சூயஸ் கால்வாய்க்கு இப்பால் கீழ்த் திசைக்கு வந்து விட்டாலே, மரங்களெல்லாம் கற்பக மாயும், மனைகள் எல்லாம் கனகமாயும் காட்சி யளிக்கும் போலும்!

கவிதையில் கூறியபடி மலைகளில் சித்திரத்தையும் சித்திரத்தில் மலைகளையும் காணக் கூடியவர்கள் சீனக் கலைஞர்கள். சித்திரம் ஒவ்வொன்றிலும், அதனுடைய பல பாகங்களும் சரியான அளவில் இருத்தல், ஒன்றை இரண்டு மூன்று சமபாகங்களாகப் பிரிக்கக்கூடிய முறையில் அமைத்தல் ஆகியவை மேல் நாட்டு முறை. இவைகளின்படி ஒரு மரத்திற்கு வலது புறத்தில் ஒரு கிளை வரைந்தால் இடது புறத்திலும் அதற்கு ஈடான ஒரு கிளை வரும். இந்த முறையை 'ஸிமெட்ரி' என்று ஒரு வார்த்தையில் கூறுகிருர்கள். சீனுவில் இந்த முறையை அலட்சியம் செய்துவிடுவார்கள். இயற்கை யிலுள்ள மரம், இடது புறமும் வலதுபுறமும், மேலும் கீழும், 'ஸிமெட்ரி' தத்துவப்படியா வளர்ந்திருக்கிறது? அப்படி இல்லாவிட்டாலும் மரம் நன்ருகவே நிலைத்து நின்று காட்சியளிக்கிறது. மரம் முழுவதையும் ஒருங்கே கவனித்தால் அழகு தென்படுகிறது. ஓங்கி வளர்ந்து நாலு பக்கத்திலும் கிளைகள் ஓடியிருந் தாலும், மரம் நிலைத்து நிற்கின்றது. சமநிலை என்று இதைச் சொல்லுகிருேம். சித்திரம் முதலிய சீனக் கலைகளில் சமநிலையே அதிகமாய்க் கவனிக்கப் படுகிறது. மேற்கே கலைகளில் உத்வேகமும் வர்ண விசித்திரங்களும் அதிகம்; சீனுவில் சாந்தி, அடக்கம், கற்பனை, நிதானத்துடன் கூடிய ஒரு லயம் ஆகியவை காணப்படும். இவைகளிலிருந்து சீனர்கள் வாழ்க் கையில் கொண்டுள்ள லயிப்பும் ஒருவாறு புலனுகும்.

ஒவ்வொரு மனிதனும் உணர்வதை எடுத்துக் காட்டி விடுவதே உயர்ந்த கலைஞரின் திறமை. இத்தகைய கலைஞர் பலர் சீனாவில் இருந்திருக்கிறார்கள். 'மிக உயர்ந்த உண்மைகளின் உறைவிடங்களாக இருப்பவைதாம் கலையின் சிகரங்கள்' என்று ஜெர்மானியக் கவி கதே கூறியிருக்கிறார். அந்தக் கலைச் சிகரங்களைச் சீனா ஏராளமாகப் பெற்றிருக்கிறது.

உயர்ந்த உண்மைகளைக் கண்டுபிடிப்பதில் இரண்டு வழிகள் இருக்கின்றன. ஸ்தூலமாகக் காணப்படுவதை அப்படியே கலைக்கு உபயோகிப்பது மேல் நாட்டு முறை. சிந்தனையில் ஆழ்ந்து சூட்சும மான உட்பொருளைக் காண்பது கீழ் நாட்டு முறை. வெளிப் பயிற்சியைக் காட்டிலும் நம்மவர் உட்பயிற் சியையே அதிகமாக வற்புறுத்துவர். சீனச் சக்கர வர்த்தி ஒருவர் இயற்கைக் காட்சி ஒன்றைப் படமாக எழுதி வரும்படி டா ஓட்ஸி என்ற சைத்திரிகரை அனுப்பியிருந்தார். சைத்திரிகர் படம் ஒன்றும் இல்லாமல் வெறுங் கையுடன் திரும்பிவந்தார். மன்னர் வியப்புடன் கேட்ட கேள்விக்கு, 'நான் என் இதயத்தில் **இயற்கையையே** கொண்டு வந்திருக்கி றேன்!' என்றாராம்.

கலைகளிலும் கவிதையிலும் சீனர்கள் கருத்தைச் செலுத்துவதற்கு அவர்களுக்குப் போதிய அவகாசம் இருந்திருக்கிறது. பூமி தேவி விவசாயத்தின் மூலம் அவர்களை உண்பித்து வந்தாள். பதினாயிரம் வருஷத் திற்கு முன்பே சீனாவில் விவசாயம் நன்கு வியாபித் திருந்ததாகப் பழைய ஆதாரங்களிலிருந்து சொல்லப் படுகிறது. இன்றும் சீனாவின் முக்கியமான முதல் தொழில் விவசாயமாகவே இருக்கிறது.

விஞ்ஞானத்திலும் சீனா முன்னணியில் நின்று வந்தது. வீடுகட்டுதல், வேட்டையாடுதல், சமைத்தல், இசைபாடுதல், இசைக் கருவிகள் அமைத்தல், விதிகள்

அமைத்துக்கொண்டு விவாகம் நடத்துதல், காலத்தை அளந்து கணக்குப் படுத்திப் பஞ்சாங்கம் ஏற்படுத்தல் ஆகியவை எல்லாம் பதினுயிரம் வருஷங்களுக்கு முன்பே இருந்ததாகச் சீன சரித்திரங்கள் விவரிக்கின்றன. கி. மு. 2,700-ஆம் வருஷத்தில் ஆண்டு வந்த 'மஞ்சள் மன்னர்' என்று அழைக்கப்படும் ஹூவாங்-டீ என்பவர் தலைக்கு அணியும் குல்லாவையும், உடைகளையும், வண்டி ஓடம் ஆகிய வாகனங்களையும், வில் அம்புகளையும், உலோக நாணயம் போன்ற பல பொருள்களையும் புதிதாக அமைத்துக் கொடுத்ததற்காகச் சீனர்கள் அவரை மறவாமல் பாராட்டி வருகிறுர்கள். இவ்வாறு உணவு, குடியிருப்பு உடை முதலிய வசதிகளை முதலில் பெற்று, போக்குவரத்துச் சாதனங்கள், வைத்தியம், வான சாஸ்திரம், எழுத்து, இலக்கியம் முதலியவைகளையும் சீனர்கள் முறையாக அமைத்துக் கொண்டிருந்தார்கள். பின்பு ஒழுக்க முறைகளும், விதி-விலக்குகளும், மதமும், தத்துவ ஞானமும் வளர்ந்தன. இவை ஸியா, ஷாங், சௌ என்ற மூன்று வம்சத்து மன்னர்களின் ஆட்சியில், கி. மு. 2000—1000 வருஷங்களுக்கு இடையில் உச்ச நிலையை அடைந்திருந்தன. சீன சரித்திரத்தில் இதை மகோன்னதமான காலமாகக் குறிப்பிடுகிறுர்கள்.

விஞ்ஞானத்தின் பிறப்பகம் சீனு. சிற்பம், உலோக ஆராய்ச்சி, கட்டடக் கலை, தச்சுத் தொழில், மிருக வர்க்க ஆராய்ச்சி, தாவர வர்க்க நூல் முதலியவை பற்றி, 3,000 வருஷங்களுக்கு முன்பாக அங்கே பாடங்கள் கற்பிக்கப்பட்டு வந்தன. அரசியல் தத்துவங்களும், சமூக சாஸ்திரமும், போர் முறைகளும் தொன்று தொட்டே ஆராயப்பட் டிருக்கின்றன. இவைகளையெல்லாம் முறைப்படுத்தியும் வைத்திருந்தனர். மேலும், திசை காட்டும் கருவி, எழுதும் தாள், அச்சு, வெடிமருந்து ஆகிய உலகத்திற்கு இன்றியமை

யாத நான்கு பொருள்களையும் முதலில் கண்டு பிடித்துக் கொடுத்தது சீன நாடேயாகும்.

முற்காலத்தில் உன்னதமான நிலைமையிலிருந்த சீனாவும் இந்தியாவும், இடைக்காலத்தில் - மிகச் சொற்பகாலத்தில் - மேற்கே ஏற்பட்ட விஞ்ஞான மாறுதல்களையும், புதிதாய்ப் படைக்கப்பட்ட யந்திரங்களையும் கவனிக்காமல் அலட்சியமாக இருந்து விட்டன. அந்த அலட்சியத்திற்கு ஏற்பட்ட தண்டனையை இரு நாடுகளுமே நன்றாக அநுபவித்தும் வருகின்றன. அவை தங்கள் பழம் பெரும் நாகரிகத்தைக் கைவிட மனமில்லாமல் ஊசலாடுகின்றன.

எனினும், சீன நாகரிகம் சம்பந்தப்பட்ட மட்டில் அது கருணை நிறைந்தது என்பதையும், அந்த நாகரிகம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகாமல் சீனாவிலேயே விளைந்த செம்மையான சரக்கு என்பதையும், ஐரோப்பாவைவிடப் பெரிதான அந்தத் தேசம் முழுதிலும் அது பல்லாயிரம் வருஷம் நிலவி வந்தது என்பதையும், இந்திய நாகரிகத்தைப்போல் அது இன்றுவரை தழைத்தோங்கியிருக்கிறது என்பதையும் நாம் மறக்க முடியாது.

கீழ் நாடுகள் தங்களுடைய பழைய தத்துவ விசாரங்களைச் சிறிது ஒத்திப்போடவேண்டிய காலம் வந்திருக்கிறது. முன்பு எக்காலத்திலும் இவை தத்துவ விசாரத்திலேயே பொழுதைப் போக்கி வந்திருக்கின்றன. இதற்கு உதாரணமாக முன்னால் நடந்த ஓர் ஆராய்ச்சியைப் பார்ப்போம். இது மூன்று துறவிகளிடையே நடந்த சம்பாஷணை :

முதல் துறவி : அந்தக் கொடி காற்றில் எப்படி ஆடுகிறது, பார்த்தாயா?

இரண்டாவது துறவி : கொடி ஆடுவதாக நீ எப்படிக் கூறலாம்? அசைந்தாடுவது காற்றுத்தான்.

மூன்றும் துறவி (இவர் சீனவின் ஆறுவது பௌத்த குரு) : காற்றும் ஆடவில்லை, கொடியும் ஆடவில்லை. ஆடியது உங்கள் மனமேதான் !

இந்த முடிவைக்கூடப் பின்னல் வந்த ஜப்பானிய ஞானி ஒருவர் ஒப்புக்கொள்ளவில்லை. அவர் சொன்னதாவது :

'காற்றோ, கொடியோ, மனமோ எதுவும் அசையவே இல்லை !'

அசைதலும், நிற்றலும், போதலும், வருதலும் இல்லாத மூலமான ஒரு நிலையை அவர் குறிப்பிட்டார். நித்தியமான காலத்தை வருஷமாகவும், மாதமாகவும், நாளாகவும், நிமிஷமாகவும் நாம் பிரித்துக்கொண்டால், தத்துவ ஞானிகளும் அதை ஏற்றுக்கொள்வார்களா ?

இவ்வண்ணம் நடந்துவந்த ஆராய்ச்சியெல்லாம் தற்காலத்தில் தடைப்பட்டு நிற்கிறது. கொடிய பீரங்கிகள் 'பூம் ! பூம் !' என்று முழங்குகின்றன. வெடிகுண்டு விமானங்கள் வானத்தை மறைத்துக் கொண்டு பறக்கின்றன. டாங்கிகள் பீரங்கிகளின் வாயை அடைக்கவேண்டும். பருந்துப் பாய்ச்சல் விமானங்கள் வெடிகுண்டு விமானங்களை எதிர்த்துத் தாக்கப் புறப்படவேண்டும். இந்த நிலையில் செய்ய வேண்டிய ஆராய்ச்சியெல்லாம், எந்த ஆயுதங்களால் - எவ்வளவு சீக்கிரத்தில் - எத்தனை உயிர்களை வதைக்கலாம் என்பதாக முடிந்திருக்கிறது. சீனவும், துணைக்கு இந்தியாவும், திடுக்கிட்டு எழுந்து திகைப்புடன் பார்க்கின்றன.

## III

### சீனவும் வல்லரசுகளும்

'வெள்ளைக்காரரல்லாத (கறுப்பு, மஞ்சள்) நிறமுள்ள மக்களுடைய பொறுமை ஒரு முடிவுக்கு வந்து

விட்டது. வெள்ளை அமெரிக்கர்களும் பிரிட்டிஷாரும் பெற்றுள்ள சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் தாமும் பெற்றே தீரவேண்டும் என்ற உறுதி அவர்களிடையே எங்கும் பரவியிருக்கிறது. அந்த உறுதி தீவிரமானது. ஏனெனில், அது வெள்ளையர் ஆட்சியையும், கொள்ளையையும், வெள்ளையர் நிறத்துவேஷத்தையும் ஒழித்துக் கட்டுவதென்ற தீர்மானத்துடன் கூடியது. இந்த உறுதியை எதுவும் அசைக்க முடியாது.'

—பேர்ல் பக்

---

ஆசியா கண்டத்தின் தென்கிழக்கில் உலகத்திலே மிகப் பெரிய நாடாகிய சீனு இருக்கிறது. சீனுவுக்குக் கிழக்கே தொலையில் அமெரிக்கா இருக்கிறது. இரண்டுக்கும் இடையேயுள்ள கடல் பஸிபிக் மகா சமுத்திரம். அமெரிக்க ஐக்கிய மாகாணத்திலிருந்து சீனுவுக்கு வரும் வழியிலுள்ள தீவுகள் சில 1940-ஆம் வருஷம் வரை ஐக்கிய மாகாணத்திற்குச் சொந்தமாயிருந்தன. ஐக்கிய மாகாணத்திலுள்ள ஸான் பிரான்ஸிஸ்கோ நகரிலிருந்து பேர்ல் ஹார்பர் தீவுக்கு 2091-மைல், அங்கிருந்து வேக் தீவின் வழியாக குவாம் தீவுக்கு 3330-மைல், அங்கிருந்து பிலிப்பைன் தீவின் வழியாக அமெரிக்கக் கப்பல்கள் சீனத் துறைமுகங்களுக்குச் சென்று வருவது வழக்கம். இந்தத் தீவுகளையெல்லாம் ஐக்கிய மாகாணம் தன் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டிருந்ததால், பல வருஷங்களாக அது கவலையில்லாமல் சீனுவுடன் கடல் மார்க்கமாக வர்த்தகம் செய்து வந்தது. சீனுவின் வடகிழக்குப் பாகமாகிய மஞ்சூரியாவை அடுத்து ஜப்பான் இருக்கிறது. சீனுவுக்கு வடக்கே ஸோவியத் ரஷ்யாவும், தென்மேற்கில் இந்தியாவும் இருக்கின்றன. சீனு கிழக்கிலும் தென்கிழக்கிலும் மட்டிலுமே கடலால் சூழப்பட்டிருக்கிறது; மற்ற எல்லாப் பக்கங்களிலும் சுற்றிலும் நிலப் பரப்புத்தான்.

'சின்' என்பது ஒரு மாகாணத்தின் பெயர். அந்த மாகாணம் நாளடைவில் சுற்றிலும் பல இடங்களைப்

பிடித்துத் தன்னோடு சேர்த்துக்கொண்டு பெரிய ராஜ்யமாக அமைந்தது. அதன் பெயரே பின்னால் தேசம் முழுவதற்கும் ஏற்பட்டு விட்டது. ஆங்கிலத்தில் சீனாவைச் 'சைனா' என்று சொல்லு கிறார்கள். நாம் 'சீனம்' 'சீனா' என்று அழைக்கி றோம். ஆனால் சீனர்கள் தங்கள் தேசத்தைச் 'சுங்-ஹுவா மின்-குவோ' என்று அழைக்கிறார்கள். இதன் பொருள் 'சீனக் குடியரசு' என்பதாம்.

சீனா ஐந்து பெரிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது. இவை மத்திய சீனா, மஞ்சூரியா மங்கோலியா, ஸிங்கியாங் (சீனத் துருக்கிஸ்தானம்), திபேத்து என்று அழைக்கப் படுகின்றன. சமீப காலத்தில் இவைகளின் எல்லைகளெல்லாம் மிகவும் மாறுதல் அடைந்திருக்கின்றன. இப்பொழுது சீனாவில் 28-மாகாணங்கள் இருக்கின்றன. இவை களோடு சுதந்திர அரசியலுள்ள திபேத்தும் வெளிமங் கோலியாவும் சேர்ந்திருக்கின்றன. சீன மாகாணங் களில் இரண்டு மட்டும் இங்கிலாந்தைவிடச் சிறியவை. மற்றவை எல்லாம் அதைவிடப் பெரியவை. இதைக்கொண்டு தேசத்தின் அளவை யூகித்துக் கொள்ளலாம். சீனாவின் மொத்த விஸ்தீரணம் 43,14,097—சதுரமைல்.

சீனாவில் சுமார் 45—கோடி ஜனங்கள் உண்டு என்று 1931—ஆம் ௵ கணக்கு எடுக்கப்பட்டிருந்தது. ஆயினும் சரியான கணக்கு விவரம் இல்லாததால், ஜனத்தொகையைத் துல்லியமாகக் கூறுவது கஷ்டம். வருஷந் தோறும் ஜனத்தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. இப்பொழுது 45-கோடிக்கு மேல் 49—கோடி வரையும் ஜனங்கள் பெருகி யிருப்பதாக வைத்துக் கொள்ளலாம் - உலக ஜனத் தொகையில் ஐந்தில் ஒரு பாகத்தினர் சீனாவில் வாழ்கின்றனர். சீனா, இந்தியா, ரஷ்யா மூன்றையும்

சேர்த்துப் பார்த்தால், உலக ஜனத்தொகையில் பாதியாகும்.

சீன மக்கள் ஆறு பிரிவினர்: ஹானர்கள், மியா ஓ வகுப்பினர், மஞ்சூரியர், மங்கோலியர், ஹுயீ அல்லது முஸ்லிம்கள், திபேத்தியர். இவர்களில் ஹானர்களே மிகவும் முக்கியமானவர்கள். இவர்கள் தேசம் முழுவதிலும் பரவியிருக்கின்றனர்; முக்கியமாக மத்திய சீனுவில் நெருக்கமாய்க் குழுமியிருக்கின்றனர்; இவர்கள் தாம் சீன நாகரிகத்திற்கும் சரித்திரத்திற்கும் காரணமாக விளங்கியவர்கள். ஹுயீ பிரிவினரான முஸ்லிம்கள் பெரும்பாலும் சீனத் துருக்கிஸ்தானம் என்று சொல்லப்படும் ஸிங்கியாங் மாகாணத்தில் இருக்கின்றனர். மக்களின் ஆறு பிரிவினருக்குள்ளும் நாளடைவில் வேற்றுமைகள் மறைந்து, எல்லோரும் அநேகமாக ஒன்ருகி விட்டனர். இவர்கள் எல்லோரும் சேர்ந்து இப்பொழுது சீனுவின் ஏக சமூகமாக விளங்குகிருர்கள்.

பெரும்பாலான சீனர்கள் (100-க்கு 88-பேர்கள்) கிராமங்களிலேயே வசிக்கிருர்கள். 100-க்கு 80-பேர் விவசாயிகள். இந்தியாவைப்போல் சீனுவும் விவசாய நாடு. இந்தியாவில் ஏழரை லட்சம் கிராமங்கள் இருப்பது போல், சீனுவில் பெரிய கிராமங்கள் ஒரு லட்சமும், பட்டிகள் பத்து லட்சமும் இருக்கின்றன. நம் கிராமங்களில் பஞ்சாயத்துகள் மூலம் குடி ஆட்சி நடந்ததுபோல், சீனக் கிராமங்கள் எல்லாம் சிறு சிறு குடியரசுகளாக விளங்கி வந்தன. கிராம ஜனங்களுக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் அங்கேயே தயாராகி வந்தன. ஜனங்கள் சுபிட்சமாக வாழ்ந்து வந்ததால் வெளி உலகமே அவர்களுக்குத் தெரியாமலிருந்தது. இப்பொழுதுகூட ஊருக்கு ஐந்து மைல்களுக்கு அப்பால் சென்றிராத ஜனங்கள் சீனுவில்

ஏராளமாக இருக்கிருர்கள். முற்காலத்துக் கிராம வாழ்க்கையைப் பற்றி லா ஒட்ஸி என்ற ஞானி பின் கண்ட முறையில் வருணித்திருக்கிருர் :

'உணவு இனிமையா யிருக்கிறது, உடைகள் அழகா யிருக்கின்றன ; வீடுகள் காப்புடையவை, வாழ்க்கையோ ஆனந்தம். கிராமங்கள் அடுத்தடுத்து இருக்கின்றன ; நாய்கள் குரைப்பதையும், கோழிகள் கூவுவதையும் பக்கத்துக் கிராமங்களிலிருந்தே கேட்கலாம். ஜனங்கள் தங்களுடைய கிராமத்துப் புலன்களிலிருந்து வெளியே வருவதே இல்லை.'

இவ்வாறு ஒவ்வொரு கிராமமும் ஒரு குட்டிச் சீனுவாகத் தன்னிலே தான் நிறைவு பெற்றிருந்தது. எந்த ராஜா எப்படி ஆண்டாலும், ஆட்சியின் மாறுதல்கள் கிராமங்களைப் பாதிப்பதில்லை. பாஷை, நாகரிகம், கல்வி, கலைகள், பழக்கங்கள் எல்லாம் லட்சக் கணக்கான கிராமங்கள் அனைத்திற்கும் பொதுவா யிருந்தன. 'விஸ்தாரமான அந்த நிலப் பரப்பின் ஒவ்வொரு மூலையிலும் சீனு முழுதுமே தென்படுகிறது. அதன் சரித்திரத்தின் ஒவ்வொரு கணத்திலும் அகில சீனுவையும் காண்கிறோம்' என்று எமிலி ஹோவ்லக் புகழ்ந்து கூறியிருக்கிருர். சீனு பெரிய 'குடியானவர் சாம்ராஜ்ய'மாகவே திகழ்ந்து வந்திருக்கிறது.

சீனர்கள் முற்காலத்தில் பக்கத்து நாடுகளில் குடியேறி வாழ்ந்திருந்த போதிலும், இடையில் வெளியேறும் பழக்கமே நின்றுபோய் விட்டது. சமீபத்தில் குடியரசு ஏற்பட்ட பிறகு, சீனர்கள் லட்சக் கணக்காக மஞ்சூரியா முதலான இடங்களுக்குப் போய், அங்கிருந்த புல் வெளிகளையும் காடுகளையும் வெட்டித் திருத்தி விளைநிலமாக்கி யிருக்கிருர்கள். 1931-32-இல் ஜப்பான் மஞ்சூரியாவைப் பிடித்துக்கொண்ட போதிலும், அங்குள்ள பெரும்

பாலான ஜனங்கள் சீனர்களாகவே இருக்கிறார்கள். வடக்கேயுள்ள பெரிய மதில் சீனாவையும் வெளி நாட்டையும் பிரித்து நின்றபோதிலும், சீனக் குடியானவர்கள் இப்பொழுது அந்த மதிலுக்கும் அப்பால் மங்கோலியச் சமவெளிக்குச் சென்று பயிரிட்டு வருகிறார்கள்.

சீனாவின் கலைச் செல்வங்களாயும் வர்த்தக ஸ்தலங்களாயும் விளங்கும் பெரிய நகரங்கள் தேசத்தின் நாலு பக்கத்திலும் சிதறிக் கிடக்கின்றன. பெய்ப்பிங் வடகோடியில் ஹோப்பெய் மாகாணத்திலும், நான்கிங், ஷாங்காய் இரண்டும் கிழக்குக் கடலை ஒட்டிய கியாங்ஸூ மாகாணத்திலும், ஹாங்கோ மத்தியில் ஹூப்பே மாகாணத்திலும், செங்டு மேற்கே ஷெக்வான் மாகாணத்திலும், கான்டன் தென் கோடியில் குவாங்டுங் மாகாணத்திலும் இருக்கின்றன. சீனாவின் தற்காலத் தலைநகரான சுங்கிங் *

* சுங்கிங்-மத்தியிலுள்ள தலைநகர் என்று பொருள் படும். சீனப் பெயர்கள் அநேகமாய்க் கருத்தை வைத்து அமைக்கப்படுகின்றன. கீழ்க்கண்ட சொற்களின் பொருளை வைத்துக்கொண்டு இடங்களின் தன்மையை அறிந்து கொள்ளலாம்.

பெய், பே - வடக்கு; நான் - தெற்கு; டுங்-கிழக்கு; ஸி-மேற்கு; சுங்-மத்தி; ஷான், லிங் - மலைகள்; ஹூ-ஏரி; ஹோ, கியாங் - நதி; ஹை-கடல்; கிங்-தலைநகர்.

ஹோப்பெய்-நதியின் வடக்கே என்று பொருள்படும்
ஹோனான் - நதியின் தெற்கே ,, ,,
ஹூப்பே - ஏரியின் வடக்கே ,, ,,
ஹூனன் - ஏரியின் தெற்கே ,, ,,
ஷான்டுங் - மலைகளின் கிழக்கே ,, ,,
ஷான்ஸி - மலைகளின் மேற்கே ,, ,,

சுங் - ஹூவா - மலர்களைப்போல் உன்னதமான வாழ்க்கையுள்ள மத்திய நாடு என்ற கருத்தில் சீனாவின் பெயராக விளங்குகிறது. (சுங் - மத்தி; ஹூவா-மலர் அல்லது உன்னத வாழ்க்கை.)

மத்திய மாகாணமாகிய ஷெக்வானிலும், சீனா-ஜப்பான் சண்டையில் முக்கிய ஸ்தானமாகப் புகழ் பெற்றுள்ள சாங்ஷா நகர் ஹூனான் மாகாணத்திலும் இருக்கின்றன. ஜப்பானை ஒட்டி, கடற்கரை ஓரமாக உள்ள மாகாணங்கள் ஹோப்பெய், ஷான்டுங், கியாங்ஸூ, செகியாங், பூகியன், குவாங்டுங். இந்தியாவுக்குச் சமீபமாக, பர்மாவுக்கு அடுத்தாற்போலுள்ள மாகாணம் யுன்னான். யுத்தகாலத்தில் பர்மாவிலிருந்து சீனாவுக்குப் போடப் பெற்ற பெரிய பர்மா ரஸ்தா, இந்த யுன்னான் மாகாணத்திலுள்ள குன்மிங் நகரில் போய் முடிந்திருந்தது. 1842-இல் பிரிட்டிஷாருக்குச் சொந்தமாகி, யுத்தத்தில் ஜப்பானால் அபகரித்துக் கொள்ளப்பட்ட ஹாங்காங் தீவு குவாங்டுங் மாகாணத்திற்குத் தெற்கில் உள்ளது. இத்தீவின் விஸ்தீரணம் 32-சதுர மைல்.

சீனா மிகப் பெரிய நாடாக இருந்தும், அதில் ஆங்காங்கே சீனர்களுக்குச் சொந்தமில்லாத சில பிரதேசங்களும் இருந்தன என்றால், அதுவே மிகவும் ஆச்சரியப்படத்தக்க விஷயம். சர்வ தேசீயத் துறைமுகங்கள், அந்நியர்க்கு அளிக்கப்பட்ட இடங்கள், குத்தகைக்கு விடப்பட்ட ஸ்தலங்கள் - என்று மூன்று பிரிவாக இவை சீனாவிடமிருந்து பறிக்கப்பட்டவை. வெள்ளைக்காரரும் ஜப்பானியரும் சீனாவுடன் வர்த்தகம் செய்துவந்த வைபவத்திற்கு இவையே அத்தாட்சிகளாக விளங்கி வந்தன. இவை சீனாவின் உடலில் புரையோடியிருந்த புண்கள் என்று சொல்லலாம். வெளி நாட்டார் இவைகளை உடன்படிக்கைகளின் பேரிலேயே பெற்றுக்கொண்டதாகத் தஸ்தவேஜுகள் உண்டு. எனினும், அவை பெயரளவிலேயே உடன்படிக்கைகள். அவைகளால் சீனாவின் முக்கியமான வியாபார ஸ்தலங்களில் 100-க்கு 70 விகிதம் அந்நியர் வசம் போய்விட்டன. துறைமுகங்களில் 20-க்கு மேற்பட்டவைகளில் அந்

நியர்களுக்குச் சொந்தமான ஆட்சி முறைகளும் அமைக்கப்பட்டிருந்தன. இவைகளில் நீதி விசாரணை முதலியவையும் அந்நியருடைய உரிமைகளாயிருந்தன. குற்றம் செய்த அந்நியரைச் சீன அரசாங்கம் பிடிக்கவும் முடியாது, பிடித்துச் சீனச் சட்டங்களின்படி விசாரித்துத் தண்டிக்கவும் முடியாது. இந்த முறை உலகத்தில் வேறெங்கும் இல்லாத புதுமையாகச் சீனாவின் மேல் சுமத்தப்பட்டிருந்தது. குத்தகைக்கு விடப்பட்ட ஸ்தலங்களும் பலாத்காரத்திற்குப் பயந்தே விடப்பட்டவை. குத்தகைக் காலம் அநேகமாய் 99-வருஷத்திற்குக் குறைவில்லை. வாங்கியவர்கள், குத்தகைக் காலம் முடிந்த பிறகும், இடங்களைத் திரும்பக் கொடுப்பதில்லை. ஆர்தர் துறைமுகம், தரியன் வளைகுடா-இரண்டையும் ஜப்பான் குத்தகைக்குப் பெற்றிருந்து, காலம் முடிந்த பிறகும், திருப்பிக் கொடுக்காமலே இருந்துவிட்டது. வெளிநாட்டார் கையில் அகப்பட்டுக்கொண்ட இடங்களில் நடந்துவந்த விபசாரம், சூதாட்டம், மதுபானம் முதலிய அக்கிரமங்களுக்கு எல்லையே கிடையாது. எங்கும் வல்லான் வகுத்ததே வாய்க்காலாக இருந்தது. 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி' என்பதுபோல, உலகத்திற்கு இளைத்தது சீன நாடாக இருந்ததால், அது கோடிக் கணக்கான பொருள் நஷ்டத்தோடு இத்தகைய மானபங்கங்களையெல்லாம் ஏற்கவேண்டியிருந்தது. கையாலாகாத சீனர்கள் மனக் கசப்பும் கோபமும் கொண்டு கொதித்துக் கொண்டிருந்தார்கள். கால மாறுதலால் சீனாவுக்கு இந்த நிலைமை ஏற்பட்டது. இதன் வரலாற்றைக் கவனிப்போம்.

பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியிலே, ஆசியாவின் மணி முடியாகத் திகழ்ந்த நம்முடைய பாரத தேசம் சுதந்திரத்தை இழந்துவிட்டது. 2,000-மைல் நீளமும் 2,000-மைல் அகலமும் கொண்ட

இந்தியா அடிமைப்பட்ட பிறகு பக்கத்து நாடுகளைப் பற்றிக் கேட்பானேன்? பின்னர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கீழ்த்திசையிலுள்ள நாடுகளுக்கு இரண்டே வழிகள்தாம் இருந்தன. ஒன்று, அவை மேல்நாட்டு நாகரிகத்தை ஏற்றுக்கொண்டு, பெரிய யந்திரத் தொழில்களையும் நவீன யுத்த சாதனங்களையும் பெருக்கிக் கொள்ளவேண்டும்; அல்லது, மேல்நாட்டாருக்கு அடிபணிந்து விட வேண்டும். கீழ் நாடுகளில் மிகச் சிறிதாக இருந்த ஜப்பான் முதல் வழியைக் கைக்கொண்டது. மேல்நாட்டு முறைகளைப் பின்பற்றுவதில் அது தன் குருமார்களையே வென்றுவிட்டது. சீன, மேல்நாட்டு முறைகளை ஏற்கவும், தன் புராதன நாகரிகத்தைக் கைவிடவும் மறுத்தது. காலநிலை சீனவுக்கு விபரீதமாக மாறியது.

இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய மேல்நாடுகளிலும், கிழக்கே அமெரிக்காவிலும் பெரிய யந்திரத் தொழில்கள் அப்பொழுது வளர்ந்தோங்கி வந்தன. அவைகளுடைய உற்பத்திப் பொருள்களை விற்று லாபம் அடையவும், மூலப் பொருள்களைப் பெறவும் நாடுகள் தேவையா யிருந்தன. நாடு பிடிக்கும் வேட்டை மும்முரமாக நடந்துவந்தது. உலகத்தோடு ஒட்டாமல், கிழக்கே தனியாக ஒதுங்கி யிருந்த நாடுகளிலும் இந்த வேட்டையின் அதிர்ச்சி ஏற்பட்டது. முதல் அதிர்ச்சியிலேயே ஜப்பான் மேல்நாட்டு உற்பத்தி முறைகளைப் படித்துப் பயன் படுத்திக் கொண்டுவிட்டது. இதனால் சீனவுக்கு இடையூறு மேலும் அதிகமாயிற்று. மேல்நாடுகள், அமெரிக்கா ஆகியவைகளை எதிர்த்து அது சமாளித்துக் கொள்ள முடியாதபடி, ஜப்பானும் அதைச் சூழ்ந்துகொண்டது. கிழட்டு மாட்டைக் கழுகுகள் கொத்துவதுபோல், வல்லரசுகள் சீனவைக் கொத்தித் தின்ன ஆரம்பித்தன.

சீனாவின் வெளிநாட்டு வர்த்தகத் தொடர்பு அபினியை ஒட்டி ஏற்பட்டதாகும். இந்த லாகிரி வஸ்துவைச் சீனர்கள் மருந்துகளுக்காக வாங்கி வந்தார்கள். இதை மிகவும் குறைந்த அளவிலேயே வாங்கவேண்டும் என்று சீன அரசர் விதி செய்திருந்தார். இந்தியாவில் நிலைபெற்றிருந்த ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் வங்காளத்தில் அபினை உற்பத்தி செய்து, சீனாவில் கொண்டுபோய் விற்பதற்காக 1773-இல் ஒரு விசேஷ அநுமதியைப் பெற்றார்கள். சீனாவின் தெற்குத் துறைமுகமாகிய காண்டனில் அவர்கள் அபினை ஏராளமாகக் கொண்டு போய்க் குவிக்கத் தொடங்கினார்கள். ஆங்கிலேயருடைய அரிய முயற்சியால் 16-வருஷத்திற்குள் சீனாவில் சந்தைகள் கடைகளிலெல்லாம் அபினி தாராளமாய்க் கிடைத்து வந்தது. இதனால் லட்சக் கணக்கில் சீனாவை விட்டுப் பணம் வெளியேறியது. லட்சக் கணக்கான சீனர்கள் அபினியைத் தின்றும், புகைத்தும், அதற்கு அடிமைப்பட்டு, ஒழுக்கம் கெட்டு, உடலும் தளர்ந்து போனார்கள். தேசம் முழுதும் அபினி மயமாயிற்று. 'என் தேசத்தின் நீண்ட காலச் சரித்திரத்தில், என் தேசமும், என் ஜனங்களும் எத்தனையோ விதமான தீமைகளுக்கும் அபாயங்களுக்கும் உள்ளாகி யிருக்கிறார்கள். ஆனால், இந்த அபினி வழக்கந்தான், அவை எல்லாவற்றிலும் மிகவும் அபாயகரமானதாக இருந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை' என்று சீனப் பேராசிரியர் டான் யுன்-ஷான் சொல்லுகிறார். அபினி சீன சமூகத்தையே உருக்குலைத்துவிட்டது.

இதனால் சீன அரசாங்கம் சாமர்த்தியசாலியான ஒரு புது கவர்னரைக் காண்டன் துறைமுகத்திற்கு நியமித்து, அபினி இறக்குமதியைத் தடுக்க ஏற்பாடு செய்தது. கவர்னர் உடனே நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டார். வெளிநாட்டு வியாபாரிகளிடம்

அபினி விற்பதில்லை என்று உறுதிமொழி வாங்கினர். துறைமுகத்திற்கு வரும் கப்பல்களைச் சோதித்து, அபினி கொண்டுவந்த கப்பல்களையே பறிமுதல் செய்துவிடவேண்டும் என்றும், சட்டம் மீறுகிறவர்களுக்கு மரண தண்டனை என்றும் விதிகள் செய்தார். கடைசியாக அவர் பிரிட்டிஷ் வர்த்தகர்கள் சேமித்து வைத்திருந்த 20,291 பெட்டி அபினையும் பிடுங்கி நடுத்தெருவில் கொட்டிக் கொளுத்தி விட்டார். இதனுல் 1840-இல் பிரிட்டிஷாருக்கும் சீனுவுக்கும் பெரிய யுத்தம் ஏற்பட்டு, மூன்று வருஷம் நடந்து வந்தது. சீனுவில் அப்பொழுது திறமையான அரசாங்கம் இல்லை. அதனுல் சீனு தோல்வியுற்றது. 1842, ஆகஸ்ட் 29உ நான்கிங் நகருக்கு அருகே ஒரு கப்பலில் இருநாட்டுப் பிரதிநிதிகளும் கூடி, முதல் சமாதான உடன்படிக்கையைச் செய்துகொண்டார்கள். அதன்படி, அபினி வர்த்தக நஷ்டத்திற்காகச் சீனு பிரிட்டனுக்கு 90-லட்சம் டாலர்களும், ராணுவ நஷ்டத்திற்காக 120-லட்சம் டாலர்களும் நஷ்ட ஈடாகக் கொடுத்தது. மேலும் ஹாங்காங் தீவையும் சீனு இழந்துவிட்டது; முக்கியமான ஐந்து வர்த்தக நகர்களையும் உடன்படிக்கைத் துறைமுகங்களாக ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டது. இப்படி முடிந்த யுத்தத்திற்கு 'அபினி யுத்தம்' என்று பெயர். சீனச் சக்கரவர்த்தியும் சீனர்களும் அந்நியர்கள் வெறும் 'அநாகரிகர்கள்' என்று கருதி இதுவரை அலட்சியமாயிருந்தனர். இப்பொழுது அந்த 'அநாகரிகர்க'ளிடம் வெடிகுண்டு என்ற அதிசயமான ஒரு பொருள் இருப்பதை நேரில் ருசி பார்த்துக் கொண்டார்கள்.

1784-இல்தான் முதலாவது அமெரிக்கக் கப்பலாகிய 'சீன ராணி' கான்டன் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தது. 18-ஆம் நூற்ருண்டின் இறுதியில் அமெரிக்க வர்த்தகர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியோடு

அபினி விற்பதில்லை என்று உறுதிமொழி வாங்கினுர். துறைமுகத்திற்கு வரும் கப்பல்களைச் சோதித்து, அபினி கொண்டுவந்த கப்பல்களையே பறிமுதல் செய்துவிடவேண்டும் என்றும், சட்டம் மீறுகிறவர்களுக்கு மரண தண்டனை என்றும் விதிகள் செய்தார். கடைசியாக அவர் பிரிட்டிஷ் வர்த்தகர்கள் சேமித்து வைத்திருந்த 20,291 பெட்டி அபினையும் பிடுங்கி நடுத்தெருவில் கொட்டிக் கொளுத்தி விட்டார். இதனுல் 1840-இல் பிரிட்டிஷாருக்கும் சீனுவுக்கும் பெரிய யுத்தம் ஏற்பட்டு, மூன்று வருஷம் நடந்து வந்தது. சீனுவில் அப்பொழுது திறமையான அரசாங்கம் இல்லை. அதனுல் சீனு தோல்வியுற்றது. 1842, ஆகஸ்ட் 29உ நான்கிங் நகருக்கு அருகே ஒரு கப்பலில் இருநாட்டுப் பிரதிநிதிகளும் கூடி, முதல் சமாதான உடன்படிக்கையைச் செய்துகொண்டார்கள். அதன்படி, அபினி வர்த்தக நஷ்டத்திற்காகச் சீனு பிரிட்டனுக்கு 90-லட்சம் டாலர்களும், ராணுவ நஷ்டத்திற்காக 120-லட்சம் டாலர்களும் நஷ்ட ஈடாகக் கொடுத்தது. மேலும் ஹாங்காங் தீவையும் சீனு இழந்துவிட்டது; முக்கியமான ஐந்து வர்த்தக நகர்களையும் உடன்படிக்கைத் துறைமுகங்களாக ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டது. இப்படி முடிந்த யுத்தத்திற்கு 'அபினி யுத்தம்' என்று பெயர். சீனச் சக்கரவர்த்தியும் சீனர்களும் அந்நியர்கள் வெறும் 'அநாகரிகர்கள்' என்று கருதி இதுவரை அலட்சியமாயிருந்தனர். இப்பொழுது அந்த 'அநாகரிகர்க'ளிடம் வெடிகுண்டு என்ற அதிசயமான ஒரு பொருள் இருப்பதை நேரில் ருசி பார்த்துக் கொண்டார்கள்.

1784-இல்தான் முதலாவது அமெரிக்கக் கப்பலாகிய 'சீன ராணி' கான்டன் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தது. 18-ஆம் நூற்ருண்டின் இறுதியில் அமெரிக்க வர்த்தகர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியோடு

போட்டியிட்டுச் சீனவில் வர்த்தகம் செய்யும் நிலைக்கு வந்துவிட்டார்கள். அவர்கள் சீனர்களோடு நெருங்கிப் பழகி, வர்த்தகத்திலும் தக்க லாபமடைந்து வந்தார்கள். வியாபாரிகளைப் பின்பற்றி கிறிஸ்தவ மதப் பிரசாரகர்களான மிஷனரிகள் சென்றார்கள். இவ்வாறு ஆதியில் வர்த்தகமும் கிறிஸ்தவ மதப் பிரசாரமுமே சீனவில் அமெரிக்காவின் அபிலாஷை களாக இருந்தன. வர்த்தகத்தைத் தொடர்ந்து மதப் பிரசாரமும் ஆதிக்கமும் பரவும்படி செய்வதே வெள்ளைக்காரர்கள் கீழ் நாடுகளில் தொன்றுதொட்டுக் கையாண்டு வந்த முறையாகும். 'வேதப் புத்த கத்தைத் தொடர்ந்து வெடிகுண்டுக் கப்பலும் வரும்' என்று சீனர்கள் சொல்வது வழக்கம்.

இடையில் அமெரிக்க அரசாங்கத்திற்குச் சீன வர்த்தகத்தில் மிகுந்த அக்கறை ஏற்பட்டது. சீனவுடன் உடன்படிக்கை செய்துகொண்டு வருமாறு 1843-இல் ஒரு கமிஷன் அனுப்பப் பெற்றது. மறு வருஷம் ஜூலை 3வ சீன — அமெரிக்க உடன்படிக்கை ஏற்பட்டது. அமெரிக்கர்களுக்கும் பிரிட்டிஷாரைப் போல் வர்த்தகம் செய்யும் உரிமைகள் அளிக்கப் பட்டன. கான்டன் துறைமுகத்தில் கண்டபடி யெல்லாம் வசூலிக்கப்பட்டுவந்த சுங்கத் தீர்வைகள் முறைப்படுத்தி அமைக்கப்பட்டன. மதப் பிரசாரத் திற்கும் வசதிகள் அளிக்கப்பட்டன. வர்த்தகர்களும், மிஷனரிகளும் சீன அரசாங்கச் சட்டங்களுக்கு உட்பட வேண்டியதில்லை என்ற விசேஷ உரிமையும் அளிக்கப்பட்டது. பின்னல் நாளடைவில் சீனவில் அமெரிக்க அபிலாஷைகள் அதிகமாகவே, சீன அரசியலைப் பற்றியும் அந்த நாடு கவலைகொள்ள ஆரம்பித்தது. 1858, 1868, 1903-ஆகிய வருஷங் களில் அமெரிக்கா மேலும் சில உடன்படிக்கைகளைச் செய்துகொண்டது. கடைசியான உடன்படிக்கை 1903-ல் செய்துகொள்ளப் பட்டதுதான். முதலில்

பெற்ற உரிமைகள் இவைகளால் மேலும் உறுதி செய்யப்பட்டன. இவைகளால் ஏற்பட்ட முக்கிய நன்மைகள் : அமெரிக்கர் சீனச் சட்டங்களுக்கு உட்படாமல் இருக்கும் உரிமை, வர்த்தகத்திற்குத் திறந்துவிட்ட துறைமுகங்களில் தங்கியிருக்கவும் வர்த்தகம் செய்யவும் உரிமை, உள் நாட்டில் பிரயாணம் செய்யும் உரிமை, சீனுவிலுள்ள தங்கள் இனத்தவர்களையும் சொத்துக்களையும் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை, உள் நாட்டில் கப்பல் போக்கு வரத்திற்கு உரிமை.

ஐரோப்பாவில் அரசாங்கங்கள் சீனுவோடு வர்த்தகம் செய்யும் உரிமையைப் பல கம்பெனிகளுக்கு விற்று ஏராளமான லாபமடைந்து வந்தன. சீனச் சக்கரவர்த்தியும் அந்நியரோடு வர்த்தகம் செய்யும் உரிமையை உள்நாட்டு வியாபாரிகளுக்கு விற்று வந்தார். இதனுல் அவர்களிலும் அநேகர் பெருஞ் செல்வர்களாயினர். ஐரோப்பிய வர்த்தகர்கள் 100-க்கு 500, 600-விகிதம் லாபமடைந்து வந்தனர். 1842-இல் பிரிட்டிஷ் உடன்படிக்கையாலேயே சீனுவின் பாதுகாப்புச் சுவர் தகர்ந்துவிட்டது. அதனுல் பின்பு வெளிநாட்டு வர்த்தகம் தழைத்து வளர்ந்ததில் வியப்பில்லை.

1856-இல் பிரிட்டனும் பிரான்ஸும் சேர்ந்து மீண்டும் சீனுவோடு யுத்தம்செய்து, யாங்ட்ஸி நதிக் கரையில் புகுவதற்கும், புதிதாக ஏழு துறைமுகங்களில் வியாபாரம் செய்வதற்கும் உரிமை பெற்றன. 1870-இல் ஆங்கில ராஜதந்திரி ஒருவர் சீனுவில் கொலையுண்டதற்காக மேலும் ஐந்து துறைமுகங்கள் திறந்துவிடப் பட்டன. புதிய வல்லரசான ஜப்பான், ஏகாதிபத்திய வெறியுடன், 1894-இல் சீனுவுடன் போர்தொடுத்து, கொரியாவையும், போர்மோஸா தீவையும் பிடுங்கிக்கொண்டது. பிறகு

ரஷ்யாவும் மஞ்சூரியாவில் விசேஷ உரிமைகள் பெற்றது. உலைந்து உதிரும் தருணத்திலிருந்த சீன அரசாங்கத்திற்குத் தலைமை வகித்திருந்த சக்கரவர்த்தி வந்தவர்க்கெல்லாம் உரிமை வழங்கும் வள்ளலாக விளங்கினார்! 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சீன சாம்ராஜ்யம் உருக்குலைந்து நின்றது.

வெளி நாட்டார்களுக்கு விசேஷ உரிமைகள் கொடுத்ததால் சீனாவுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் அனந்தம். வெளி நாட்டார் சீனர்களைப் பலவந்தமாகப் பிடித்துக் கப்பல்களில் ஏற்றி, மேற்கு இந்தியத் தீவுகளுக்கும், அமெரிக்க ஐக்கிய மாகாணத்திற்கும் தொழிலாளராக அனுப்புவது சாதாரணமாக நடந்து வந்தது. அதாவது, சீனப் பெருள்களோடு சீனர் உடல்களும் வாணிபப் பொருள்களாயின. அந்நியர்களுக்கு எதிராகச் சீனர்கள் சிறு கலகம் செய்து விட்டாலும் அதற்கு நஷ்ட ஈடாக அதிகத் துறை முகங்களும், அதிக உரிமைகளும் வெளியார்களுக்குக் கிடைத்து வந்தன. கப்பல் கப்பலாகச் சீனர்களைக் கூலிகளாகப் பிடித்து அனுப்புதலும் உடனே நடை பெற்றது. 1857-ல் இரண்டாவது அபினி யுத்தம் நடந்தது. பிரிட்டிஷார் காண்டனைப் பிடித்துக் கொண்டனர். மூன்று வருஷங்களுக்குப் பின் பிரிட்டிஷ்-பிரெஞ்சுத் துருப்புகள் பெகிங்* நகரைப் பிடித்துக் கொண்டன. அந்நகரின் புராதன அரண்மனையைச் சூறையிடும்படி பிரிட்டிஷ் சிப்பாய்கள் ஏவப்பட்டனர். ஏராளமான செல்வங்கள் கொள்ளையிடப்பட்டன. இதன் பலனாகவும் மேற்கொண்டு உடன்படிக்கைகள் ஏற்பட்டன. ரஷ்யா அமெரிக்காவைப் போலவே ஜெர்மனியும் சம உரிமைகளைப் பெற்றது. 1861-ல் நிங்போ என்ற இடமும், அதைப்

*பெகிங் என்பது பெய்ப்பிங் நகரின் பழைய பெயர்.

பின்பற்றி வேறிடங்களும் சீன ஆட்சியை விட்டு அந்நியர்க்கே உரிமையாகப் போய்விட்டன.)

அபினி யுத்தங்களாலும் நியாயமற்ற உடன்படிக்கைகளாலும் சீனவின் இடுப்பு முறிந்து போய் விட்டது. அந்நியர்களுக்கு அபராதத் தொகைகள் (நஷ்ட ஈடுகள்) கட்டுவதற்குக்கூட அரசாங்க வருமானம் காணவில்லை. சுங்கவரி வசூல் உரிமையும் வெளி நாட்டார் ஆதிக்கத்திற்குப் போய்விட்டது. அதிகவரிகளால் ஜனங்கள் அலறிக்கொண்டிருந்தனர். ஜனங்கள் தமக்கு எதிராகக் கிளம்பிவிடக் கூடாதே என்று தம்முடைய பிரஜைகளை அடக்குவதற்கே சக்கரவர்த்தி வெளிநாட்டார் உதவியை நாடவேண்டியிருந்தது. அரசாங்க உத்தியோகங்கள் பணத்திற்கு ஏலம் போடப் பட்டன. வெளி நாட்டாரிடம் ஏராளமான கடன்கள் வாங்கப்பட்டு, விஷம் ஏறுவது போல் அவைகளுக்கு வட்டி ஏறிக்கொண்டிருந்தது. பஞ்சமும், நோயும், வெள்ளமும் நாட்டைப் பீடிக்க ஆரம்பித்தன. 1877-8இல் மாரிக் காலத்தில் ஷென்ஸி மாகாணத்தில் மட்டும் ஐம்பது லட்சம் ஜனங்கள் மடிந்து போயினர். விவசாய வசதிகள் பல வருஷங்களாகக் கவனிக்கப் படாமல் பாழடைந்து போயின. இவ்வளவுக்கும் இடையில், ஜப்பான், ரஷ்யா, பிரான்ஸ் முதலிய தேசங்களில் ஒன்று மாற்றி ஒன்று சீனவோடு பொருது கொண்டேயிருந்தது. 1900-இல் சீன 5,45,00,000-பவுன் கடனைக் கொடுக்க வேண்டியிருந்தது. இந்தத் தொகை முக்கியமாக ஆங்கில ஜெர்மன் பாங்கிகளுக்கே செலுத்த வேண்டியிருந்தது. இதற்கு வருஷந்தோறும் முப்பது லட்சம் பவுன் வட்டி முதலிய செலவுகளுக்காகக் கொடுக்க வேண்டியிருந்தது. சர்க்கார் வருமானம் ஒரு கோடிப் பவுன்; கட்ட வேண்டிய வட்டி முப்பது லட்சம் பவுன்! பின்னல் வருமானத்தில் சுமார் பாதியையே வட்டியாகவும்

நஷ்டஈடாகவும் அந்நியர்களுக்குக் கட்டிவர நேர்ந்தது. 'சக்கரவர்த்தி அந்நியக் கடன்காரர்களுக்கு வட்டி வசூலிக்கும் ஏஜண்டாக அமர்ந்திருந்தார்!' என்று சொல்லவேண்டிய நிலைக்கு வந்து விட்டார். பெரும்பாலான சீனத் துறைமுகங்கள் பறிக்கப் பட்டுப் போயின. உள்நாடு எங்கணும் வர்த்தகம் செய்யும் உரிமைகள் வெளி நாட்டார்களுக்கு நல்ல வசதி அளித்தன. பலத்தவர் கையில் இளைத்திருந்த சீனு ஒரு துரும்பாக அல்லாடிக் கொண்டிருந்தது. இத்துடன் வெளிநாடுகள் சீனுவில் வர்த்தகம் செய்ய முற்பட்ட ஒரு சகாப்தம் முடிவாயிற்று.

இதன் பிறகு வல்லரசுகள் தங்கள் மூல தனங்களைப் பெருவாரியாகச் சீனுவில் கொண்டுவந்து முடக்கி, அதன் மூலம் லாபமடைய வழிதேட ஆரம்பித்தன. நாடுகளை ஆயுதம் தாங்கி எதிர்த்து ஜயிக்கும் பழைய முறையைக் காட்டிலும் இது அதிக ஆழமாகப் பாயும் முறை. இது நெடு நாள் நிலைத்தும் நிற்கும். திடீரென்று வல்லரசுகள் சீனுவில் பல இடங் களிலும் ரயில் பாதைகள் போடவேண்டும் என்று ஆரம்பித்தன. 1894-இல் ஜப்பான் சீனுவின்மேல் போர்தொடுத்து வெற்றி பெற்றதும், சில தீவுகளையும் நஷ்டஈட்டையும் பெற்றுக் கொண்டதோடு, சீனுவில் பெரிய தொழிற்சாலைகள் அமைத்துக் கொள்ளவும் அநுமதி பெற்றது. உடனே ஜெர்மனியும், பிரிட் டனும், பிரான்ஸும் சில பிரதேசங்களைப் பிடித்துக் கொண்டு, ஒவ்வொன்றும் வெவ்வேறு மாகாணங்களில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது. ரயில் பாதைகள் அமைக்கவும், சுரங்கங்களைத் தோண்டவும் அவைகள் உரிமை பெற்று ஒன்றோடொன்று போட்டிபோட் டன. அந்நியர்களுக்கு எதிராகச் சீனர்கள் மூச்சுவிட் டாலும் குற்றம். அவர்கள் வயிற்றெரிச்சலுடன் சிறு கிளர்ச்சியோ கலகமோ செய்தால், உடனே அதற்கு நஷ்ட ஈடாக வர்த்தக ஸ்தலங்கள், அபராதங்கள்,

வட்டி, ரயில் பாதைகள் அமைக்கும் உரிமைகள், தொழிற்சாலைகள் அமைக்கும் உரிமைகள் முதலியவைகளை வல்லரசுகள் பெற்றுவந்தன. 1937-இல் ஜப்பான் சீனாவின்மேல் முழு வல்லமையுடன் பெரும் போர் ஆரம்பிப்பதற்கு முற்பட்ட சீனாவின் நூறு வருஷச் சரித்திரத்தை ஒரே வாக்கியமாகக் கூறிவிடலாம். அந்நியர்களுடைய கொடுமைகளைச் சகிக்காமல் சீனர்கள் விடுதலை ஆசையுடன் கிளம்புவதும், உடனே வல்லரசுகளும் அவைகளுக்கு வால் பிடிக்கும் நாடுகளும், அவர்களை அடக்கி, நீதி, நியமம், கணக்கு வழக்கு ஒன்றுக்கும் கட்டுப்படாத முறையில் ஏராளமான நஷ்ட ஈடுகளை வசூலிப்பதுமே வழக்கம். மீண்டும் மீண்டும் சங்கிலித்தொடர்போல் நடந்த இத்தகைய சம்பவங்களின் தொகுதியே அந்தச் சரித்திரம். வல்லரசுக் குதிரைகள், சீனர்களைத் தூக்கிப்போட்டது மல்லாமல், தினந்தோறும் அவர்களுக்குக் குழியும் பறித்துக் கொண்டிருந்தன. 'தினந்தோறும்' என்ற சொல் கவனிக்கத் தக்கது. சுங்க வசூலுக்காகச் சீனாவில் நியமிக்கப் பட்டிருந்த இரண்டாவது பிரிட்டிஷ் அதிகாரியான ஸர் ராபர்ட் ஹார்ட், 'அவர்களைக் கொள்ளையடித்து நசுக்குங்கள், தினந்தோறும் நசுக்குங்கள்!' என்றே தம் இனத்தவருக்கு உபதேசித்து வந்தார்.

இக்காலத்தில் ரஷ்யா வெளிப் போக்குக்கு வழியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது. கப்பல்கள் மூலம் பிற நாடுகளுடன் தொடர்பு வைத்துக் கொள்வதற்கு அதற்கு ஒரு துறைமுகம் தவிர வேறு வழியில்லை. கருங்கடல் வழியாக மத்தியதரைக் கடலுக்குச் செல்லும் வழியைத் தன் ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ள அது செய்த முயற்சியை ஐரோப்பிய வல்லரசுகள் கூடித் தடுத்துவிட்டன. எனவே, அது பஸிபிக் மஹா சமுத்திர மார்க்கமாகவே தனக்கு விமோசனம் வரவேண்டும் என்று

தீர்மானித்தது. ரஷ்யாவின் ஜார் சக்கரவர்த்தியைச் சூழ்ந்து நின்ற அதிகாரிகள், கிழக்கே ரஷ்யாவுக்கு ஒரு சாம்ராஜ்யத்தையே படைத்துக் கொள்ளலாம் என்று கனவு கண்டார்கள். 1891-இலேயே ஸைபீரிய ரயில் வேயை அமைக்க ஆரம்பித்து, அவர்கள் கொரியா தேசத்தின் நட்பைப் பெறவும் வேலை செய்து வந்தார்கள். தக்க துறைமுகம் தேடி ரஷ்யக் கப்பல்கள் சீனக் கடற்கரையைச் சுற்றி வட்ட மிட்டன., பிரான்ஸ் ரஷ்யாவுக்கு உதவியா யிருந்த துடன், இந்தோ-சீனாவில் தன் அதிகாரத்தையும் நிலைநாட்டிக் கொண்டு, சீனாவின் தென் மாகாணங் களில் மூலப் பொருள்களைத் தேடி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தது.

ஜெர்மனியும் தன் சக்தியைப் பெருக்கிக்கொள்ள முன் வந்தது. ஏகாதிபத்திய வேட்டையில் அது கடைசியாகக் கலந்துகொண்டிருப்பினும், ஜெர்மன் ராஜதந்திரிகளின் கண் சீனாவின்மேல் பதிந்திருந்தது. ஜெர்மானியரின் உரிமைகளைப் பாதுகாக்க ஜெர்மன் கப்பல்களும் சீனக் கடலில் வட்டமிட்டு வந்தன.

கொரியா சம்பந்தமாகச் சீனா, ரஷ்யா, ஜப்பான் மூன்றுக்கும் போட்டி ஏற்பட்டது. இதன் காரண மாகத்தான் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் 1894-இல் யுத்தம் மூண்டது. அதில் ஜப்பான் வெற்றி பெற்றதால், முதல் முதலாக ஆசிய நிலப் பரப்பில் அதற்கு இடம் கிடைத்தது. அதுவும் ஒரு வல்லர சாகப் பரிணமிக்க வழி பிறந்தது. 1895—இல் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி ஜப்பான் மஞ்சூரியாவில் லியாஓடுங் தீபகற்பத்தைப் பெற்றுக் கொண்டது. திடீரென்று ஜப்பான் வல்லமை பெற்று வளர்வது, மற்ற வல்லரசுகளுக்குச் சகிக்க வில்லை. ரஷ்யா, பிரான்ஸ், ஜெர்மனி மூன்றும் சேர்ந்து, லியாஓடுங்குக்குப் பதிலாக வேறு நஷ்ட ஈடு வாங்கிக்கொண்டு ஒதுங்கிவிட வேண்டும் என்று

ஜப்பானை வற்புறுத்திவிட்டன. பல சாக்குப் போக்குகளைச் சொல்லிக்கொண்டு, அவை சீன சர்க்காரை வற்புறுத்தி, குறிப்பிட்ட சீனப் பிரதேசங்களைத் தங்கள் இஷ்டம்போல் சுரண்டி லாபமடையும் உரிமைகளைப் பெற்றுக்கொண்டன. ஜெர்மனி ஷான்டுங் மாகாணத்தையும், ரஷ்யா ஜப்பானிடமிருந்து பறித்த தீபகற்பத்தையும், பிரான்ஸ் தென் சீனத்தையும், ஜப்பான் பூகியன் மாகாணத்தையும் பொறுக்கி யெடுத்துக் கொண்டன. இப்படியே தேசம் முழுவதையும் பங்குபோடும் முறையும், ஆதிக்கம் செலுத்தும் முறையும் நடந்து வந்திருந்தால், சீனு முழுதுமே அந்நியர்களுக்குச் சொந்தமாகியிருக்கும். ஆபிரிகா கண்டம், கண்டம் கண்டமாக வெட்டப்பட்டு அடிமையானது போலவே அதன் கதையும் முடிந்திருக்கும். சீனு சீனர்களைத் தவிர மற்றெல்லோருக்கும் சொந்தமாகும் நிலையில் வந்து நின்றது. பாம்புகள் தம் பசியை நினைத்தன; தேரை தன் விதியை எண்ணி நொந்துகொண்டிருந்தது!

அமெரிக்கா சீனுவின் நிலைமையை உணர்ந்துகொண்டது. ஆயினும், அது சீனுவுக்கு அருகேயுள்ள பிலிப்பைன் தீவை ஸ்பெயினிடமிருந்து பறித்துக் கொள்வதற்காக 1898-ஆம் வருஷம் முழுதும் போர் செய்துகொண்டிருந்தது. அந்தத் தீவு சீனுவின் முன் வாயில் போல் விளங்கி வந்ததால், அமெரிக்கா அது தனக்கு மிகவும் அவசியம் என்று கருதியது. ஸ்பெயின் தோல்வியுற்றது. உடனே 1899-இல் அமெரிக்கா, மேற்கொண்டு சீனுவில் பிரதேசங்களை யாரும் பறித்துக்கொள்ளக் கூடாது என்றும், வல்லரசுகள் ஆங்காங்கே பிரதேசங்களில் தம் செல்வாக்கை உபயோகித்துக் கொள்வதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும், மற்ற நாடுகளின் உடன்படிக்கைகளைப் பாதிக்கும் முறையில் விசேஷ உரிமைகளை யாரும் பெறக்கூடாது என்றும், தன்னுடைய புதுக்

கொள்கையை விளம்பரப் படுத்திற்று. மேற்கொண்டு சீனு பங்கு போடப்பட்டால் ஏற்கனவே சீனுவில் தனக்குக் கிடைத்திருந்த முதன்மையான செல்வாக்கு ஒழிந்துவிடும் என்று கருதி, பிரிட்டனும் அமெரிக்காவின் கொள்கையை அப்படியே ஆதரித்தது.

இங்கிலையில் அந்நியர்களுக்கு எதிராகச் சீனுவில் பயங்கரமான ஒரு சண்டை ஆரம்பமாயிற்று. சீனர்கள் துயரத்தாலும் கோபத்தாலும் குமுறிக் கொண்டிருந்தனர். தலைநோய்க்குத் தலையணையைத் திருப்பிப் போட்டால் போதாது என்று கருதிக் கலகம் செய்ய முற்பட்டனர். செல்வம் மிகுந்த சீனப் பிரபுக்கள் அந்நியரை அடக்கினுலொழியத் தங்கள் நிலைமை சீர்ப்படாது என்று கண்டனர். ஆங்காங்கே ரகசியமான சங்கங்கள் ஏற்பட்டுக் கலகத்திற்குத் தயாரித்து வந்தன. அரசாங்கமும் இவைகளுக்கு உதவியாக இருந்தது. 1900–ஸு கலகம் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. ‘பாக்ஸர் கலகம்’ என்று சரித்திரத்தில் பெயர் பெற்ற இந்தக் கலகமே சமீப காலத்தில் சீனர்கள் செய்த முதல் சுதந்திரப் போர். இது சீன தேசீய எழுச்சியேயாகும். முதலில் ஜெர்மானியரை எதிர்த்து ஆரம்பிக்கப்பட்டு, இது பின்னுல் எல்லா அந்நிய நாட்டாரையும் பாதித்தது. கலகத்திற்குத் தலைவனுக விளங்கிய யூ டங்-சென் என்பவன் கலகத்தின் காரணங்களை ஓர் அறிக்கையில் வெட்ட வெளிச்சமாகக் கூறியிருக்கிறுன் :

‘இந்த அந்நியர்கள் வியாபாரம் செய்வதாயும், கிறிஸ்தவ மதப்பிரசாரம் செய்வதாயும் பாவனை செய்து விட்டு, உண்மையில் ஜனங்களுடைய நிலத்தையும், உணவையும், உடையையும் அபகரித்துக்கொண்டு போகிறுர்கள் ; நம் ஞானிகளுடைய உபதேசங்களை உல்லங்கனம் செய்வதோடு, இவர்கள் அபினைக் கொடுத்து நமக்கு விஷமிட்டு, விபசாரத்தால் நம்மை

அதோகதியாக்குகிறார்கள். வெள்ளரிப் பழத்தைத் துண்டு போடுவது போல் சீனவைத் துண்டுபோட முனைந்துவிட்டார்கள்!'

சருகைக் கண்டு தணல் அஞ்சுமா? கலகத்தைக் கண்டு வல்லரசுகள் அஞ்சுமா? கலகம் கடுமையாக அடக்கப்பட்டது. இதைக் காரணமாக வைத்துக் கொண்டு ஒரு ஜெர்மன் தளகர்த்தரின் கீழ் அந்நிய வல்லரசுகளின் படைகள் சீனவின் வடபாகத்தை ஆக்கிரமித்துக் கொண்டன. பெகிங் நகரம் சூறையிடப்பட்டது. இதுவரை செலுத்திய நஷ்ட ஈடுகளுக்கெல்லாம் அதிகமாகச் சீன 6,75,00,000—பவுன் அபராதமாகக் கட்டவேண்டுமென்று விதிக்கப்பட்டது. மேலும் பெகிங் தலை நகரிலும், அதற்கும் டீன்ட்ஸினுக்கும் இடையேயுள்ள ரயில் பாதையிலும் அந்நியர்கள் படைகளை வைத்துக்கொள்ளவும் உரிமை வழங்கப்பட்டது.

பிறகு 1904-இல் பிரிட்டன் திபேத்தின் மேல் படை யெடுத்தது. 1904-5-இல் ரஷ்ய — ஜப்பான் யுத்தம் நடந்தது. அதில் முதல் முறையாக, ஆசிய நாடான ஜப்பான் ஐரோப்பிய நாட்டைத் தோற்கடித்து விட்டது. இதனுல் கொரியாவிலும், தெற்கு மஞ்சூரியாவிலும் அது விசேஷ ஆதிக்கம் பெற்றது. இதன் பிறகு 1909—10-இல் ஜெர்மனி, பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளின் பாங்கிகள் ஒன்றுசேர்ந்து சீனவில் பணம் முடக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டன. 1910-இல் ஜப்பான் கடைசியாகக் கொரியா முழுவதையுமே அபகரித்துக் கொண்டது.

அறிவாளிகளான சீனர்கள், இனிச் சீன பிழைத்து மீளவேண்டுமானல், ஒரு பெரும் புரட்சியின் மூலம் அடிப்படையான மாறுதலை உண்டாக்குவதைத் தவிர வேறு வழியில்லை என்று கண்டனர். சீன புதிய ஜன

நாயக முறையில் நல்லரசாட்சியை அமைத்துக் கொண்டாலன்றி அது வல்லரசுகளின் நடுவே வாழ முடியாது என்றும் கண்டனர். அவ்வாறே 1911–12–இல் புரட்சி மூலம் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது. புரட்சியை வெற்றியுடன் நடத்தி வைத்த உத்தம வீரர் ஸன் யாட்–ஸென். அவர் பின்னல் குடியரசுத் தலைமைப் பதவியைச் சுயநலங் கொண்ட மூர்க்கரான யுவான் ஷி–கேய் என்பவரிடம் ஒப்படைக்க நேர்ந்தது. இது பெருந் தவருகவும் சீனுவின் துரதிருஷ்டமாகவும் முடிந்தது. இதனல் மேற்கொண்டும் வல்லரசுகளின் தொந்தரவு ஓயாதலிருந்தது. சீனுவின் பலக்குறைவே தனக்கு உதவி என்றும், வேகிற வீட்டில் பிடுங்கினது ஆதாயம் என்றும் கருதி, ஜப்பான் மளமளவென்று சீனுவில் முன்னேற ஆரம்பித்தது.

சீன முழுதும் இந்தியாவைப் போல் அடிமைப் படாமற் போனதற்கு, அதன் ஆற்றல் காரணம் இல்லை; வல்லரசுகளிடையே இருந்து வந்த போட்டிதான் அதற்குக் காரணம். 1914-18-இல் ஏற்பட்ட முதல் உலக யுத்தத்திஞல் சீனுவின் நிலைமை விசேஷ மாறுதலை அடைந்தது. யுத்தத்தில் தோற்ற ஜெர்மனி சீனுவில் தான் பெற்றிருந்த லாபங்களை யெல்லாம் இழந்தது. பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு ஐரோப்பாவில் மிகுந்த வேலைகள் இருந்தன. ஐப்பானும் அவைகளோடு சேர்ந்த நேச தேசம். அது சமயம் பார்த்து, ஜெர்மனியின் ஆதிக்கத்திலிருந்த ஷான்டுங் மாகாணத்தை யுத்த காலத்திலேயே பற்றிக்கொண்டது. 1915-ஆ அது 21-நிபந்தனைகளைத் தயாரித்து, சீன அவைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்திற்று. சீன அரசாங்கம் வலிமையற்றுக் கிடந்தது. ஜப்பானிய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால், சீன அதற்கு அடிமையாய்ப் போகவேண்டிய நிலையிலிருந்தது. அமெரிக்கா தலையிட்டு, அப்படி நேராமல் கவனித்துக்

கொண்டது. நிபந்தனைகளில் சிலவற்றைச் சீனு ஏற்க மறுத்து, சிலவற்றையே ஏற்றுக்கொண்டது.

1917-18-இல் ஜப்பான் தன்னிடமிருந்து சீனு ஏராளமான பணத்தைக் கடனுக வாங்கவேண்டுமென்று வற்புறுத்தி, ஸோவியத் ரஷ்யாவை அடக்குவதாகப் பாவனை செய்துகொண்டு, மஞ்சூரியாவையும் உள் மங்கோலியாவையும் தன் அதிகாரத்திற்குக் கொண்டு வந்தது. சீனுவும் ஒரு 'நேச தேச'மாயிருந்தும், யுத்த முடிவில் எல்லோரும் அதை அதோகதியாகக் கைவிட்டு விட்டனர். வெர்ஸேல்ஸ் சமாதான மகாநாட்டில், ஜப்பான் சீனுவில் பெற்றிருந்த ஆதிக்க அதிகாரங்கள் நிராகரிக்கப்படாமல், அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டன. வல்லரசுகள் முன்னதாகவே ஜப்பானுக்கு அநுகூலமாக அந்தரங்க உடன்படிக்கைகள் செய்துகொண் டிருந்ததால், சீனுவின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. மகாநாட்டில் சீனுவின் பிரதிநிதிகள் மிக நன்ருக வாதாடியும் பயனில்லாமற் போயிற்று. சீனுவில் மூலை முடுக்குகளிலெல்லாம் தேசீய எழுச்சி ஏற்படுவதற்கு இந்த அவமானம் மிக்க உதவியாயிருந்தது.

1921-இல் வல்லரசுகள் தேசீய விழிப்படைந்த சீனுவுடன் தங்கள் சம்பந்தங்களை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்தன. அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் ஒன்பது வல்லரசுகளின் மகாநாடு நடந்தது. அமெரிக்கா (ஐக்கிய மாகாணம்), பெல்ஜியம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், ஹாலந்து, போர்ச்சுகல், சீனு ஆகிய ஒன்பது நாடுகளின் பிரதிநிதிகளும் கூடி விவாதித்து, 'ஒன்பது வல்லரசுகளின் உடன்படிக்கை'யைச் செய்துகொண்டனர். பின்னுல் வேறு சில நாடுகளும் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டன. ஜெர்மனி முதலில் அதில் கையெழுத்

திட்டாலும், பின்னல் உறுதி செய்யாமல் இருந்து விட்டது. எல்லா வல்லரசுகளும், சீனவின் சுதந்திரத்தையும், அது தன்னைத் தானே ஆண்டுகொள்ளும் உரிமையையும் மதித்து நடக்கவேண்டும் என்றும், சீனவில் வர்த்தகம் செய்ய அந்த நாடுகள் எல்லாவற்றிற்கும் சம உரிமை உண்டு என்றும் சீன பூமியில் எந்த நாடும் எங்கும் தனக்கென்று விசேஷ ஆதிக்கம் செலுத்தக்கூடிய இடத்தை அமைத்துக் கொள்ள முயற்சிக்கக் கூடாது என்றும் இந்த உடன்படிக்கையால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஜப்பான், உடன்படிக்கை நாடுகளில் ஒன்ருயிருந்த போதிலும், சமயோசிதம் போல் அதைப் புறக்கணித்து வந்தது. 1931-இல் அது சீனவின்மேல் படையெடுத்ததும், பின் 1937-இல் மீண்டும் போர் தொடுத்ததும், சீனவை மட்டும் தாக்கியதல்ல, மற்ற எட்டு வல்லரசுகளையும் உதறித் தள்ளியதாகும். ஆனல் வல்லரசுகள் எல்லாம், தங்களை ஜப்பான் நேரில் தாக்க ஆரம்பிக்கிற வரையில், பேசாதிருந்து விட்டன. சர்வ தேச சங்கம் கூடச் சீனவுக்கு அணுவளவுகூட உதவி செய்ய முடியாமற் போய்விட்டது. எல்லாம் மறைமுகமாகச் சீனவுக்கு நன்மையாகவே முடிந்தன. ஏனெனில், இந்தத் துரோகங்களாலும், அவமானங்களாலுமே, சீன 'தன் கையே தனக்கு உதவி' என்ற தத்துவத்தைக் கற்றுக்கொள்ள முடிந்தது.

வெளி நாடுகள் சீனவோடு வர்த்தகம் செய்து வந்த முறை சீனவின் கழுத்தில் கயிறுகளை மாட்டிச் சுருக்கிட்ட கதையேயாகும். இவைகளில் கடைசியில் ஜப்பான் மட்டுமே தனிப் பகை நாடாக முன் வந்தது. ஜப்பான் அளவில் மிகச் சிறிய நாடாக இருந்த போதிலும், உலகப் போராட்டத்தில் அது மிக முக்கியமான ஸ்தானம் வகிக்கிறது. உண்மையில் இரண்டாவது உலக யுத்தத்தை ஆரம்பித்து வைத்ததே ஜப்பான்தான், ஜெர்மனி அன்று

1937-இலேயே ஜப்பான் சீனவின்மேல் படை யெடுத்து விட்டது. இந்த உண்மையை மற்ற வல்லரசுகள் இரண்டு வருஷ காலமாக ஒப்புக் கொள்ளாமல் மழுப்பிவந்தன. பின் அவைகளின் தலைகளிலேயே அடி விழுந்ததும், சீன-ஜப்பான் யுத்தம் உலக யுத்தத்தோடு ஒன்றிவிட்டது. யுத்தத் திற்கு முன்பே ஜப்பான், ஜெர்மனி இத்தாலி ஆகிய 'அச்சுநாடுக'ளில் ஒன்ருகக் கூடிவிட்டது. பின்னல் சீன நேச தேசங்களில் ஒன்ருகச் சேர்ந்தது. ஐரோப்பாவில் என்னென்ன நேர்ந்தாலும், கிழக்கே ஜப்பானுக்குப் பதில் சொல்லாமல் இந்த மகாயுத்தம் முடிவடைய முடியாது. இவ்வளவு முக்கிய ஸ்தா னத்தை ஜப்பான் அடைந்துவிட்ட காரணத்தைக் கவனிப்போம்.

ஜப்பான் மேல்நாட்டு யந்திரத் தொழில்களை யும் நாகரிகத்தையும் அப்படியே 'காப்பியடித்த' விவரம் முன்னல் குறிப்பிடப் பட்டிருக்கிறது. மேல் நாட்டு ஏகாதிபத்திய மோகமும் அதைப் பற்றிக் கொண்டது. யந்திரத் தொழில்களின் பெருக்கமும் ஏகாதிபத்தியமும் ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகள். ஒன்று இருந்தால், மற்றதும் அவசியமாகிவிடும். ஆலைத் தொழில்களால் சரக்குகள் பெருவாரியாக உற்பத்தியானல், அவைகளை விற்பதற்குத் தேசங் களைப் பிடிக்கவேண்டும். பிடித்த தேசங்களைச் சுரண்டி, மூலப் பொருள்களை அபகரித்துச் சென்று, ஆலைத் தொழில்களுக்கு இரை போடவேண்டும். இல்லாவிட்டால் உற்பத்தியுமில்லை, விற்பனையு மில்லை, லாபமுமில்லை. ஆகவே ஜப்பான் யந்திரத் தொழில்களை ஆரம்பித்ததும், ஏகாதிபத்தியத்திற்கு அடிகோலவும் முற்பட்டது. ஜப்பானின் ஜன நெருக்கமும் இதற்கு ஒரு காரணமாக அமைந்தது.

சீனவைப் போலவே, ஜப்பானிலும் வெள்ளைக் காரர்கள் வர்த்தகம், வேதப் புத்தகம், வெடிகுண்டு

சகிதம் போய்ச் சேர்ந்தனர். சீனவில் நடந்த சுரண்டல்களில் ஒன்று பாக்கியில்லாமல் ஜப்பானிலும் நடந்தன. ஆனல், ஜப்பான் உடனே விழித்துக் கொண்டது. நாட்டின் அரசு வல்லரசாக அமையாதிருந்தால், அந்நியரை எதிர்க்க முடியாது என்று கண்ட ஜப்பானியப் பிரபுக்களும், பாங்கர்களும், வியாபாரிகளும் ராணுவத்தின் உதவியைக் கொண்டு, பழைய சக்கரவர்த்தியின் ஆட்சியைக் கவிழ்த்து விட்டனர். புதிய மெய்ஜி சக்கரவர்த்தியின் ஆட்சி ஆரம்பமாயிற்று. இது முதல் ஜப்பான் அதிவேகமாக எல்லாத் துறைகளிலும் முன்னேற ஆரம்பித்தது. உலகத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சிகள் எல்லாவற்றிலும் இந்த ஜப்பானிய மறுமலர்ச்சியே முதன்மையானது என்று கூறலாம். அந்நியர்களுடைய ஆதிக்கத்தை எதிர்த்துத் தேசிய விடுதலைக்காக ஜப்பான் எழுந்தது. அது வெகு சீக்கிரத்தில் விடுதலையடைந்ததோடு நில்லாது, தானே அந்நிய நாடுகளை அடிமைப் படுத்தவும் முற்பட்டு விட்டது. பெர்ட்ரான்ட் ரஸ்ஸல் என்ற ஆங்கில அறிஞர் சொல்வது போல், ஜப்பான் மேல்நாட்டாருடைய தவறுகளையெல்லாம் கற்றுக்கொண்டதோடு, தன்னுடைய பழைய தவறுகளையும் கைவிடாமல் வைத்துக் கொண்டுவிட்டது.

ஜப்பானிய சக்கரவர்த்தி தெய்வாம்சமானவர் என்பதே அந்நாட்டு ஜனங்களின் நம்பிக்கை. தம் நாடே தேவ பூமி என்று அவர்கள் சொல்லுவார்கள். ஜப்பானியச் சக்கரவர்த்தியை மிகாடோ என்று அழைப்பது வழக்கம். மறுமலர்ச்சிக்குப் பிறகு, ஜப்பானில் வல்லமையும் செல்வமும் மிகுந்திருந்த கூட்டத்தார் எல்லோரும் ஒன்று சேர்ந்து, மிகாடோவின் பெயரால் ராஜ்யத்தை ஆண்டு வந்தனர். ஆட்சியில் பின்னல் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்ட போதிலும், அதிகாரம் மட்டும் இவர்கள்

கையிலேயே இருந்து வந்தது. ஜப்பானியச் சட்ட சபைக்கு 'டையெட்' என்று பெயர். அது மேல் சபை, கீழ்ச் சபை என்று இரு பிரிவாக உள்ளது. மேல் சபையே பிரபுக்கள் சபை. அதன் அங்கீகாரம் இல்லாமல் எந்த மசோதாவும் சட்டமாக முடியாது. அதன் 190-அங்கத்தினரில் 125-பேர் சக்கரவர்த்தியால் நியமிக்கப்படுவர். 65-பேரே பணக்காரர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். மந்திரிப் பதவி போன்ற முக்கியமான பதவிகளுக்குச் சக்கரவர்த்தியே தக்கவர்களைப் பொறுக்கி நியமித்துவிடுவார். ஜப்பானுக்குத் தனியாக ஓர் அரசியல் சட்டமும் இருக்கிறது. எனினும் முடிவாகப் பார்த்தால், சக்கரவர்த்தி பெயரளவில் இருந்த போதிலும், ஆட்சி பிரபுக்கள் கூட்டத்தினரின் கையிலேயே இருப்பது புலப்படும். இவர்கள் பெரிய தொழில் முதலாளிகளும், வர்த்தகர்களும், ஜமீன்தார்களும், ராணுவ அதிகாரிகளும் நிறைந்த ஒரு கூட்டத்தினர். பழைய ராணுவத் தலைவர்கள் 'ஸாமுராய்' வகுப்பினர் என்ற பெயருடன் விளங்கி வந்தனர். பின்னல் சம்பளம் காணுதென்று வாதாடியதற்காக அவர்கள் அநேகமாய் நீக்கப்பட்டுப் போயினர். லட்சக்கணக்கான குடியானவர்களைப் பயிற்சிசெய்து புதிய படைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நில-அடிமை முறையால் குடியானவர்கள் நிலச்சுவான்களிடம் அடைக்கலமா யிருந்தது ஒழிக்கப் பட்டது. இதனுல் நகரங்களில் பல யந்திரத் தொழிற்சாலைகளுக்கும் தேவையான கூலி வேலைக்காரர்கள் ஏராளமாய்க் கிடைத்து வந்தார்கள். ஜமீன்தாரி முறையும் பெரும்பகுதி ஒழிக்கப்பட்டு, ஜமீன்தார்களுக்கு நஷ்டஈடாக லட்சக்கணக்கான பொருள் அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்பட்டது. இதில் வேடிக்கை என்னவெனில், முக்கியமான ஜமீன்தார்கள் தாமாகவே ஜமீன்களைக் கொடுத்ததுதான். அவர்கள் எல்லோரும்

ஆதாயமில்லாமல் இப்படிச் செய்யவில்லை. நஷ்ட ஈடாகக் கிடைத்த பெரும் பொருள்களைக் கொண்டு, பின்னால் அவர்கள் தொழில்கள் செய்து, கோடி கோடியாகப் பணம் திரட்டியிருக்கிறார்கள். புதிய யுத்தங்களில் தோற்ற நாடுகளிடமிருந்து நஷ்டஈடாக வாங்கப்பட்ட பெருந் தொகைகளும், யுத்தங்களுக்குச் சாமான்கள் உற்பத்தி செய்து கொடுக்கும் ஒப்பந்தங்களினால் கிடைத்த லாபங்களும் அவர்களுடைய செல்வப் பெருக்குக்கு உதவி செய்தன. சீனாவிடமிருந்து முப்பது கோடி யென்னும்* ரஷ்யாவிடமிருந்து இருபது கோடி யென்னும் யுத்த நஷ்ட ஈடாக வாங்கப்பட்டன. யுத்தங்களால் பிரபுக்களுக்கு ஏராளமான பண லாபம் கிடைத்ததோடு, புது நாடுகளும், அவைகளின் மூலப் பொருள்களும் கிடைத்து வந்தன. இவைகளால் ஜப்பானியப் பிரபுக்களுடைய பெரிய தொழில் ஸ்தாபனங்களான மிட்ஸூயி, மிட்ஸூபிஷி, ஸூமிடோமோ, யஸூதா, ஒகுரா, புருகாவா, குஹாரா முதலியவை கோடிக் கணக்கில் லாபம் பெற்றுக் கொழுத்து வளர்ந்தன. இவையெல்லாம் ஜப்பானியப் பிரபுக்களின் குடும்பப் பெயர்களை வைத்து நடந்து வரும் ஸ்தாபனங்கள். மொத்தத்தில் ஜப்பானை ஆண்டுவரும் பிரபுக்கள் ஐந்தே குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அமெரிக்காவை அறுபது குடும்பங்கள் ஆண்டு வருகின்றன; முதலாளித்துவ முறையில் அதைப் பின்பற்றும் ஜப்பான் ஐந்து குடும்பங்களின் சொத்தாக அமைந்து விட்டது அதிசயமான விஷயமாகவே இருக்கிறது!

1914-ஆம் வருஷத்திற்கு முன்பே ஜப்பான், அமெரிக்கா இங்கிலாந்து முதலிய நாடுகளைப்போல்,

---

*யென் – சுமார் ரூ 1-8-0 மதிப்புள்ள ஜப்பானிய நாணயம்; 1939-இல் அதன் மதிப்பு சுமார் 14 அணாவாக இருந்தது.

பொருள்களை உற்பத்திசெய்து குவித்து வந்ததோடு, பொருளாதாரத்தை உயர்ந்த நிலையில் ஒழுங்கு படுத்தி, பெரும் மூலதனங்களைக் கொண்ட பாங்கிகளை ஏற்படுத்தி, ஏற்றுமதி இறக்குமதிகளைப் பல மடங்கு பெருக்கிக் கொண்டிருந்தது. அமெரிக்காவும் இங்கிலாந்தும் விற்பனைக்கு அனுப்பி வந்த சாமான்களைப் போலவே, ஜப்பானும் ஏராளமாய்த் தயாரித்து அனுப்பி வந்தது. மேலும் ஜப்பானின் சாமான்கள் மிகவும் குறைந்த விலைக்கு விற்கப்பட்டன. இந்தியா, தென் அமெரிக்கா முதலிய பல இடங்களிலும் ஜப்பானிய சாமான்கள் ஏராளமாக விற்கப்பட்டு வந்தன. ஐரோப்பிய நாடுகள் மகாயுத்தத்தில் சிக்கிக்கொண்டிருக்கும் பொழுதே, ஜப்பான் தன் பொருளாதார நிலையை உறுதியாகச் செம்மைப் படுத்திக்கொண்டு விட்டது.

ஜப்பானில் பொது ஜனங்களுக்கு வாக்குரிமை மட்டும் இருந்தபோதிலும், அரசாங்க நடவடிக்கைகள் யாவும் பிரபுக்களின் மனம் போலவே நடந்து வருகின்றன. அரசியல் முழுதுமே ஆளும் முதலாளி வர்க்கத்தின் கையில் இருக்கும்படி அமைந்திருக்கிறது. உதாரணமாக, யுத்த மந்திரிகளை நியமிப்பதற்குச் சக்கரவர்த்தி ராணுவ தளகர்த்தர்களின் சம்மதம் பெற்றே நியமிக்கவேண்டும் என்று ஓர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதன்படி யுத்த வெறியர்களைத் தவிர வேறு யாரும் யுத்த மந்திரியாக வர முடியாதல்லவா? ஆளும் வர்க்கத்திற்கும் ராணுவத்திற்கும் பிடிக்காத மந்திரிகள் எவரேனும் வந்து விட்டால், அந்த மந்திரிகளை ஒழித்துவிடத் தேசம் முழுதும் ரகசியச் சங்கங்கள் பரவி யிருக்கின்றன. மந்திரி டானகா என்பவர் ஜப்பான் பக்கத்து நாடுகளைப் பிடிக்கத் திட்டம் போட்டுப் பிரசாரம் செய்ததால், 1930-இல் உடனே ஜப்பான் யுத்தத்தில்

இறங்க வேண்டும் என்று ராணுவத்தார் துடித்துக் கொண்டிருந்தனர். உடனே ஹோமாகுசி என்ற பிரதம மந்திரி கொலை செய்யப்பட்டார். இவர் ராணுவ வகுப்பைச் சேர்ந்தவரல்லர். இந்தக் கொலை முடிந்ததும், ஜப்பானிய ராணுவம் மஞ்சூரியாவின் மேல் படையெடுத்துப் பாய்ந்தது. 1922-இல் டோக்கியோவில் ராணுவத்தார் கலகம் செய்து எல்லா மந்திரிகளையுமே கொலை செய்துவிட்டார்கள். இத்தகைய கொலைகளால், அரசாங்கத்தின் தன்மையைச் சர்வாதிகாரமாக மாற்றி, ஜனங்களையும் உள் நாட்டில் பெருகி வந்த தொழிலாளரையும் கலகம் செய்யாமல் அடக்கி வைத்து, ஜனநாயக உணர்ச்சி பரவாமல் தடுத்து, வெளி வல்லரசுகளையும் சீனு போன்ற பக்கத்து நாடுகளையும் எதிர்த்துப் போரிட வேண்டிய வலிமையைப் பெறுவதற்கு வழி தேடப்பட்டது. இடையில் ஜெர்மனியிலும் இத்தாலியிலும் ஹிட்லரும் முஸோலினியும் பரீட்சை பார்த்து வந்த பாஸிஸ்ட் தத்துவங்களையும் ஜப்பான் ஊன்றிப் படித்து ஏற்றுக்கொண்டது. 1933-இலிருந்து ஜப்பான் தீவிர பாஸிஸ மயமாகி வந்தது. 'பொது ஜனங்களும் தொழிலாளரும் சங்கங்களின் மூலம் வளர்ந்து வலிமை பெற்றுவிடக் கூடாது; அதிகாரம் பிரபுக்களின் வர்க்கத்தை விட்டு வெளியே போய் விடக் கூடாது; விரைவில் ஜப்பானும் பெரிய ஏகாதிபத்தியத்தைப் பெற்றுவிட வேண்டும் – இவையே ஜப்பானின் லட்சியங்களாயின.

பெரிய ஏகாதிபத்தியம் அமைப்பதற்கு வாய்ப்பாகப் பக்கத்தில் எத்தனையோ நாடுகள் இருந்தன. சீனுவிடமிருந்து கொரியாவையும் மஞ்சூரியாவையும் பிடுங்கிக் கொண்டது போல், இன்னும் பல பகுதிகளையும் பறித்துக் கொள்ளலாம். அத்துடன் சீனுவையே அடிமைப்படுத்தித் தன் கைப் பதுமையாக வைத்துக் கொள்ளலாம். சீனு வழியாக வேறு நாடு

களையும் பிடிக்கலாம். ஹாலந்துக்குச் சொந்தமான கிழக்கிந்தியத் தீவுகள் அமெரிக்காவுக்குச் சொந்தமான பிலிப்பைன் தீவு, சீனாவிடமிருந்து முன்னால் பிரான்ஸ் அபகரித்துக்கொண்ட இந்தோ—சீனா, பிரிட்டனுக்குத் தலையாட்டிக் கொண்டிருந்த ஸயாம் (தாய்லாந்து), பிரிட்டனின் அடிமை நாடுகளான இலங்கை, இந்தியா, பர்மா, மலேயா-இவையெல்லாம் ஜப்பானிய ஆசையின் கனிகளாக விளங்கின. அப்பால் ஆபிரிகா கண்டம் வேறு! பிறகு ஐரோப்பா! ஒவ்வொன்றாக ஜயித்து, பின்னால் உலகத்தையே ஜயித்து விடலாம் என்றுகூட ஜப்பானிய மந்திரிகள் அடிக்கடி கூறி வந்திருக்கிறார்கள். 'இதுவரை ஜப்பானும் வெளி நாடுகளும் என்று இருந்தது; இனி ஜப்பான் மட்டுமே இருக்கும்!' என்று ஒரு மந்திரி கூறியிருக்கிறார். எல்லா நாடுகளும் ஜப்பானுடைய ஆதிக்கத்தில் இரண்டறக் கலந்து விடுமாம்! இத்தகைய திட்டங்களை ஜப்பான் மூடுமந்திரமாக வைத்திருக்க வில்லை. ஜப்பானிய மந்திரிகளான டானகா, கோனோய், மட்ஸுஓகா, டோஜோ முதலியோர் ஜப்பானின் திட்டங்களைப் பற்றி அவ்வப்போது விளம்பரம் செய்து வந்திருக்கிறார்கள்.

ஜப்பானின் ஆசைகளுக்குத் தக்கபடி திட்டங்கள் வகுத்துத் தேசம் முழுதும் அவை நிறைவேற்றப்படு கின்றன. புதிய ஜப்பானிய ராணுவம் ஏற்பட்டு 70—வருஷமே ஆகிறது. 1893—இல் ஜப்பான் முதலில் சீனாவுடன் போர்புரிந்த பொழுது வருஷத்திற்கு 120-லட்சம் யென் மட்டுமே ராணுவச் செலவாக இருந்தது. இப்பொழுது அது தினசரி இவ்வளவு தொகையைச் செலவிட்டு வருகிறது. தொழிற் சாலைகள் எல்லாம் பெரும்பாலும் யுத்த தளவாடங் களையே தயாரிக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக் கிறது. தளவாட உற்பத்தியைக் கவனிப்பதற்கு அநேகம் தளகர்த்தர்களே நியமிக்கப்பட்டிருக்கி

ருர்கள். கப்பல் கட்டும் தொழில் உள்பட எல்லாத் தொழில்களும் யுத்தத்தைக் கருதியே நடைபெறு கின்றன. வரிகள் 100-க்கு 70 கூட்டப்பட்டிருக் கின்றன. முன்னுல் ராணுவத்தில் பத்து லட்சம் படைவீரர் இருந்தனர். குடியானவர்களில் இருபது லட்சம் பேர் புதிதாக ராணுவத்தில் சேர்க்கப்பட் டிருக்கின்றனர். நகரங்களில் தொழிலாளர் தினம் 16-மணி நேரம் வேலை செய்தாக வேண்டும். வேலை நிறுத்தங்களும் குடியானவர் கலகங்களும் உடனுக் குடன் ராணுவத்தால் கடுமையாக அடக்கப்படு கின்றன. யுத்தகளத்தில் ஜப்பானியர் காட்டும் திறமைக்கெல்லாம் உள்நாட்டில் நடந்து வரும் இந்த ஏற்பாடுகளே அடிப்படையாக விளங்குகின்றன.

இத்தனை ஏற்பாடுகளுடன் ஜப்பான் 1937-இல் யுத்தப் பிரகடனம் செய்யாமலே, சீனவின்மேல் போர் தொடுத்தது. உள் நாட்டில் அது எவ்வளவு முயற்சி செய்தபோதிலும், சீனவைப் போன்ற பெரிய நாட்டைப் படையெடுத்து வெல்வது எளிதன்று. அதற்கு வெளி நாடுகளுடைய தயவும் தேவை. அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய வல்லரசு களில், ஜப்பான் ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொன் றுடன் சேர்ந்து உதவி பெறுவது வழக்கம். இந்த நாடுகள் எல்லாம் ஏகாதிபத்திய மோகம் கொண் டிருப்பினும், ஒன்ருெடொன்று கொண்டிருந்த பகையினுலும், போட்டியினுலும் ஜப்பானுக்கு உதவி கிடைத்து வந்தது. 1937-ஆம் ஆண்டு யுத்தத்தில் ஜப்பான் சீனவுக்கு எதிராக உபயோகிப்பதற்கு வேண்டிய யுத்த தளவாடங்களில் சுமார் முக்கால் பங்கு இங்கி லாந்து அமெரிக்கா மூலம் பெற்று வந்ததாகச் சொல் லப்படுகிறது. வல்லரசுகள் சீனவுக்கு உதவி செய்ய மறுத்துவிட்டன; ஜப்பானைத் தடுத்து நிறுத்தாமல் விட்டதோடு அதற்கு உதவியும் செய்தன. பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லின், யுத்தத்திற்குப் பிறகு

(ஜப்பான் சீனவில் ஆதிக்கம் பெற்ற பிறகு!) சீனவில் தொழில்களை வளர்ப்பதற்கு ஜப்பானிய மூல தனம் மட்டும் போதாது என்றும், ஆங்கில மூல தனத்தையும் அனுப்பி லாபமடைய வழி பிறக்கும் என்றும் வெளிப்படையாகக் கூறி வந்தார். இந்த மந்திரி மேலும் சிறிது காலம் உயிரோடிருந்து ஜப்பானுடைய பிந்திய திருவிளையாடல்களைப் பாராமல் அநியாயமாகப் போய்விட்டார்! மற்ருேர் ஆங்கில மந்திரியான ஏமெரி, ஜப்பானுடைய அக்கிரமங்களைக் கண்டிக்க ஆங்கிலேயருக்கு வாயில்லை என்றும், கண்டித்தால், இந்தியா பர்மா முதலான இடங்கள் சம்பந்தமாக ஆங்கிலேயருடைய பழைய சரித்திரத்தை ஜப்பான் அவிழ்த்துவிடும் என்றும் பயமுறுத்தினர். முந்திய நூற்றுண்டில் பிரிட்டன் செய்ததைத் தான் இந்த நூற்றுண்டில் ஜப்பான் செய்து வருவதாக அவர் கருதுகிருர். அமெரிக்காவும் ஏறத்தாழப் பிரிட்டிஷ் முறையையே அனுஷ்டித்தது. 1940-ஆம் வருஷக் கடைசியில்தான் அமெரிக்க வெளி நாட்டுக் கொள்கையில் மாறுதல் தோன்றி, ஜப்பானை எதிர்க்கும் உறுதி பிறந்தது. ஜப்பானை லட்சியடம் செய்யாமல் ஆரம்பம் முதல் சீனவுக்கு உதவிசெய்து வந்த நாடு ஸோவியத் ரஷ்யா ஒன்றுதான். ஸோவியத் ரஷ்யா ஒன்றுதான், யுத்தம் தோன்ருமலிருக்க, ஜனநாயக நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து நிற்க வேண்டும் என்று பல வருஷங்களாக உலகறியக் கூவி வந்தது. அதன் கூற்றுக்குச் செவி சாய்ப்போர் இல்லை. ஏனெனில், யுத்தக் கொடுமையைக் காட்டிலும், வல்லரசுகளுக்கு ஸோவியத் ரஷ்யா என்ற பெயர்தான் அதிகப் பயங்கரமாயிருந்தது. அதனலேயே அவைகள் ஐரோப்பாவில், அவமானகரமான மூனிக் ஒப்பந்தம் செய்துகொண்டு, ஹிட்லரைச் சமாதானப்படுத்த முயன்றன. அதனலேயே, கிழக்கே ஜப்பான் சீனவைப் படுகொலை

செய்வதைச் சகித்துக் கொண்டு ஜப்பானுக்கு யுத்த தளவாடங்களை அனுப்பித் திருப்தி செய்ய முயன்றன. ஜெர்மனியும், ஜப்பானும் விரும்பத் தகாத நாடுகளாயினும், அவை ஸோவியத் ரஷ்யாவின் பொது உடைமைப் பூதத்தை வதைத்து உலகத்தை ரட்சிக்கும் என்று அவைகள் நம்பிக்கொண்டிருந்தன.

சீனா, உதவிக்கு யாருமில்லாமல், தன்னந் தனியே நிற்க நேர்ந்தது. அது யுத்தத்திற்குத் தயாராகவே இல்லை. உள்நாட்டுக் கலகங்களை அடக்கி அப்பொழுது தான் அரசாங்கம் முறையாக வேலைசெய்ய ஆரம்பித் திருந்தது. ஆயுதங்கள் இல்லாமல், தளவாட உற்பத்தி இல்லாமல், கப்பற் படை இல்லாமல், தக்க பயிற்சி பெற்ற படைகள் இல்லாமல், விமானங்கள், டாங்கிகள், கவசம் பூண்ட கார்கள் முதலிய புதிய யந்திர சாதனங்கள் ஒன்றும் இல்லாமல், மக்களுக் குள் ஒற்றுமையும் இல்லாமல், சீனா திண்டாடிக் கொண்டிருந்ததால் அது சில வாரங்களிலேயே சரணா கதி அடைந்துவிடும் என்று ஜப்பான் கருதியது. ஆனால், சீனா பணியாமல் நிமிர்ந்து நின்று எதிர்க்க ஆரம்பித்தது.

சீனாவுக்கும் ஜப்பானுக்கும் போராட்டம் இன்று நேற்று ஏற்பட்டதன்று. 1,300 வருஷங்களாகவே அவைகளுக்குள் தகராறு உண்டு; போர்களும் நடந் திருக்கின்றன. ஆனால் கடைசியாக நேர்ந்துள்ள இந்தப் போர் ஏதோ இரு நாடுகளுக்குள் ஏற்பட்ட சண்டையாகக் கருதக் கூடியதில்லை. இது உலக மகா யுத்தத்தின் ஒரு பகுதியாகும். ஜனநாயகத்தை நிலை நிறுத்தச் சீனா புரியும் போர் இது. வருஷந்தோறும் சீனாவைத் துண்டு துண்டாக வெட்டிவந்த வல்லரசு களின் கொடுமைகளை யெல்லாம் ஒரேயடியாக ஒழித்துத் தொலைப்பதற்காக நடக்கும் தேசியப் போர் இது. இந்தப் போருக்கு முன்னால், சீனத் துறை

இத்தகைய தலைவர்களில் மாபெருந் தலைவர் என்று போற்றக் கூடியவராக விளங்கியவர் ஸன் யாட்-ஸென்.* இவரே சீனப் புரட்சியைத் தலைமை வகித்து நடத்தியவர். இவர் முதலில் ஸ்தாபித்த புரட்சிச் சங்கத்தில் 18-அங்கத்தினரே இருந்தனர். இவர்களில் 17-பேர் மரண தண்டனை அடைந்தனர். எஞ்சியவர் ஸன் ஒருவரே. இவர் பத்து முறை புரட்சிசெய்து தோல்வியுற்று, ஓடி ஓடி ஒளிந்து கொண்டார். ஆனால் மனம் ஒடிந்து சோர்ந்து விடவில்லை. ஒவ்வொரு தோல்வியையும் வெற்றிப் படியாக அமைத்துக் கொண்டார். கடைசியில் இவரே மிகப் பெரிய நாடான சீனாவின் குடியரசுத் தலைவராக வந்தார். இவரே புத்துயிர் பெற்ற புதிய சீனாவின் தந்தை என்று கோடிக் கணக்கான சீனர்கள் கொண்டாடுகிறார்கள். நம்முடைய ஈடும் எடுப்புமில்லாத தலைவர் மகாத்மா காந்தியைப் பற்றி,

'உள்ளம் உருகுது கள்ளம் கருகுது
உத்தமன் காந்தியை நினைத்துவிட்டால்
வெள்ளம் பெருகிடக் கண்ணீர் வருகுது
வேர்க்குது இன்பம் தேக்குதடா...'

என்று நாம் போற்றுவது போலவே, சீன மக்கள் ஸன் யாட்-ஸென்னைப் போற்றுகிறார்கள்.

சுமார் 59-வருஷம் உலகில் வாழ்ந்து, வாழ்க்கை முழுதும் கோடி கோடியாய்ப் பணம் சேகரித்துப் புரட்சிசெய்து, கடைசியில் சக்கரவர்த்திகளும் கண்டு பொறாமைப் படத்தக்க குடியரசுத் தலைமைப் பதவியை வகித்த இந்த அறிஞர், 1925-இல் மரிக்கும்

* ஸன் யாட்-ஸென்—இவருக்கு நான்கு பெயர்கள் உண்டு: சிறு வயதில் டெய்சியோங்; விவாகமான பின் டக்-மங்; பிறகு ஸன் யாட்-ஸென்; கடைசியில் இவர் கையெழுத்துப் போட்டு வந்தது ஸன் வென்.

பொழுது, தம்முடைய குடும்பத்தாருக்கு வைத்து விட்டுப் போகும் செல்வத்தைப்பற்றி ஒரு குறிப்பு எழுதிவைத்திருந்தார். இவருடைய சரீரத்தை அப் புறப்படுத்தும் பொழுது கசங்கிக் கிடந்த அந்தக் குறிப்பு அகப்பட்டது. அதில் எழுதியிருந்த விஷயம் இதுதான்:

'என்னுடைய மனைவியும் தோழியுமான சிங்-லிங் என் புத்தகங்களையும், பழைய துணி களையும், ஷாங்காயிலுள்ள வீட்டையும் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். நான் சேர்த்து வைத்த அற்பமான இந்தப் பொருள் களை ஆஸ்தி என்று கூற முடியாது. இவைகளை என் ஞாபகார்த்தப் பொருள்களாகப் பெற்றுக் கொள்ளட்டும்.'

இத் தலைவருடைய புனிதமான தியாக வாழ்க் கைக்கு இதைவிடச் சிறந்த அத்தாட்சி வேறு வேண்டியதில்லை.

ஸன் யாட்-ஸென் குவாங்டுங் மாகாணத்தில் சாய் ஹங் என்ற கிராமத்தில், 1866-ஆம் ஆடு நவம்பர்மீ 12உ பிறந்தவர். அவர் பிறந்த நாளைப் பற்றிக் கூடப் பின்னால் சந்தேகங்கள் வந்துவிட்டன. ஏனெனில், தம்முடைய புரட்சிக் காரியங்களுக்காக யாத்திரை செய்கையில், வேறோரிடத்தில் வேறு வருஷத்தில் பிறந்ததாக அவரே பதிவுசெய்ய நேர்ந்தது. சிறு வயது முதலே அவர் புரட்சிக்காரரா யிருந்தார். ஒரு சமயம் அவரும் அவருடைய நண்பன் ஹோ டுங் என்பவனும் பேசிக்கொண் டிருந்தார்கள். ஹோ டுங் அப்பொழுதுதான் ஒரு சீனப் பட்டாளத்தைப் பார்த்துவிட்டு வந்திருந்தான். சிப்பாய்களின் சாமர்த்தி யத்தை அவன் ஏளனம்செய்து, அத்தகைய சோதாக் கும்பலைச் சரியாகப் பயிற்சிபெற்ற ஆயுதம் தாங்கிய ஐம்பது வீரர் விரட்டியடித்து விடலாம் என்று

கூறினன். யாராவது ஒருவர் தக்க சேனை ஒன்றைத் தயாரிக்கவேண்டும் என்றும், அதைக் கொண்டு அந்நியர்களை எதிர்த்து, மஞ்சு வம்சத்தார் ஆட்சியை ஒழித்துச் சீனவைப் பாதுகாக்க வேண்டும் என்றும் ஸன் சொன்னர். உடனே நண்பன், 'நீதான் சீனவின் புதிய நெப்போலியனுகப் பிறந்திருக்கிருயோ என்னவோ, யார் கண்டது?' என்றுன். பல்லாயிரம் வருஷம் பண்புடன் வாழ்ந்த சீன தேசத்தில், கொலை வெறியில் மகிழும் ஒரு நெப்போலியன் தோன்ற முடியாது என்பதையும், நெப்போலியன் பிறந்த மேல் நாட்டில் சீன முனிவர் கன்பூஷியஸைப் போன்ற மகான் பிறக்க முடியாது என்பதையும் இளமைப் பருவத்தில் ஹோ டுங் தெரிந்துகொண்டிருக்க முடியாது. மற்றப்படி அவர்கள் பேசிக்கொண்டபடியே பின்னல் நிகழ்ந்தது. ஹோ டுங் 1895-இல் புரட்சிக்கு முதல் பலியாகத் தன் உயிரையே கொடுத்து விட்டான்.

சில பெரியவர்களைக் 'கருவிலே திருவுடையார்' என்று சொல்லுவது உண்டு. ஸன் கருவிலே புரட்சியுடையார். வாலிபப் பருவத்திலேயே அவருக்கு விக்கிரக வணக்கம் பிடிக்கவில்லை. ஒரு நாள் சில நண்பர்களுடன் உள்ளூர்க் கோயிலுக்குச் சென்று, அங்கிருந்த ஒரு விக்கிரகத்தைச் சேதப்படுத்த முற்பட்டார். அந்தச் சிலையின் ஒரு கையில் வாள் இருந்தது. மறு கையின் விரல் ஒன்று மேலே நீட்டப்பட்டிருந்தது. நீட்டியிருந்த விரலை ஸன் உடைத்துத் தள்ளிவிட்டுச் சிலையின் கழுத்தையும் திருகிவிடப் பார்த்தார். தலையை வேருகப் பிரிக்க முடியவில்லை; ஆனல் அவருடைய முயற்சிக்கு அடையாளமாகத் தலை வேறொரு பக்கமாகத் திரும்பிவிட்டது. மகா வைதீகமான ஜனங்கள் வசித்து வந்த கிராமத்தில் இப்படி அக்கிரமம் நடந்தால் விடுவார்களா? ஸன் ஊரைவிட்டே ஓடும்படி நேர்ந்தது.

ஸன் யாட்-ஸென் சிறு வயதில் கிராமப் பள்ளிக்கூடத்தில் படித்திருந்தார். பிறகு ஹவாய் தீவுக்குச் சென்று, அங்கு வியாபாரம் செய்து கொண்டிருந்த தம்முடைய சகோதரரின் உதவியால் ஆங்கிலக் கல்லூரியில் சேர்ந்து படித்து வந்தார். ஹவாயில் எங்கும் ஆங்கில மயந்தான். உபாத்தியாயர்கள் எல்லோரும் ஆங்கிலேயர்கள். ஸன் வெகு சீக்கிரத்தில் ஆங்கில பாஷையைக் கற்றுக்கொண்டு பரிசுகளும் பெற்றார். பள்ளிக்கூடத்தில் இருக்கும் பொழுதே கிறிஸ்தவ மதத்தில் சேரவேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. அதுமுதல் சிந்தனையில் அவர் கிறிஸ்தவராகவே மாறி விட்டார். அவருடைய தந்தையும் தமையனும் கன்பூஷியஸ் மதத்தைச் சேர்ந்தவர்கள். சீனர்களுக்குள் தமையனார் தகப்பனாருக்குச் சமமானவர். ஸன் அண்ணனிடம் சென்று அநுமதி கேட்டார். அண்ணன் பலமாகக் கோபித்துக் கண்டித்தார். தந்தையாரும் உடனே பையனைச் சீனாவுக்கு அனுப்பும்படி எழுதினார். ஸன் ஊருக்குத் திரும்பியிருந்த சமயத்தில்தான் விக்கிரகத்தை உடைத்த சம்பவம் நடந்தது. அதனால் அவர் மீண்டும் வெளியேற நேர்ந்தது.

அவர் கான்டன் நகருக்குச் சென்றார். அங்கே ஓர் ஆங்கிலோ அமெரிக்க ஆஸ்பத்திரியில் சுமார் ஒரு வருஷம் 'ஆர்டர்லி'யாக வேலை பார்த்தார். ஆஸ்பத்திரியில் இருந்த டாக்டர் கெர் என்பவருக்கு அவரிடம் மிகுந்த பிரியம் ஏற்பட்டது. அப்பொழுது சீனர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதற்காக ஹாங்காங்கில் ஒரு வைத்தியக் கல்லூரி அமைக்க ஏற்பாடு நடந்து வந்தது. ஸன் அதில் சேர்ந்து படிக்க விரும்பினார். இடையில் அவருக்கு விவாகம் செய்துவைக்க வேண்டுமென்று கருதி அவருடைய தந்தை லூ-ஷு என்ற மாதை அவருக்கு விவாகம் செய்துவைத்தார். பிறகு

ஸன் ஹாங்காங் தீவுக்குச் சென்றார். அங்கே கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துகொண்டார். விரைவில் வைத்தியக் கல்லூரியும் ஆரம்பமாயிற்று. ஸன் அதில் சேர்ந்து படித்து நல்ல பெயர் வாங்கினார். கல்லூரித் தலைவர் டாக்டர் ஜேம்ஸ் கான்ட்லீ ஸன்னை மிகுந்த அன்புடன் கவனித்து வந்தார். பிற்காலத்தில் ஸன் சீமையில் இருக்கும் பொழுது ஒரு சமயம் அவர் உயிருக்கே அபாயம் நேர இருந்தது. அப்பொழுது இந்த டாக்டர் கான்ட்லீதாம் அவர் உயிரைக் காப்பாற்றினார். ஸன் பள்ளியில் கண்ணும் கருத்துமாய்ப் படித்து, 1892-இல் வைத்தியப் பட்டமும் பெற்றார். பிறகு ஹாங்காங் தீவுக்குப் பக்கத்தில் நாற்பது மைல் தூரத்திலிருந்த மாக்கோ என்ற இடத்தில் வைத்தியத் தொழில் செய்யலாம் என்று அவர் தீர்மானித்தார். அக்காலத்தில் சீனாவில் அந்நியர்கள் செய்து வந்த அட்டூழியங்களைப் பற்றி எண்ணி எண்ணி அவர் நெஞ்சம் புண்ணாகி யிருந்தார். பிரெஞ்சுக்காரர் சீனாவிடமிருந்து இந்தோ-சீனாவைப் பிடித்துக்கொண்ட சமயத்தில் அவர் கோபத்தால் கொதித்தார்.

மாக்கோ நகரின் ஆஸ்பத்திரியில் டாக்டர் ஸன் சஸ்திர சிகிச்சை செய்து வந்தார். பெரிய சிகிச்சைகள் செய்ய நேர்ந்த பொழுது அவருடைய குருவான டாக்டர் கான்ட்லீயும் உதவிக்கு வருவது வழக்கம். இந்தச் சமயத்தில்தான் ஸன்னுடைய வாழ்க்கையின் போக்கே புதிய திசையில் திரும்ப ஆரம்பித்தது. மாக்கோ நகரிலிருந்த சீனர்கள் தங்கள் நாட்டில் ஆட்சிமுறை க்ஷீணமடைந்து, எங்கே பார்த்தாலும் லஞ்சப் பேயும் அக்கிரமங்களும் தாண்டவமாடுவதைப்பற்றி அடிக்கடி பேசுவது உண்டு. சொந்த நாட்டில் அவர்கள் பேசுவதற்கே பயப்படுவார்கள். வெளிநாடாதலால் அங்கே துணிந்து பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது. எப்படியாவது சக்கரவர்த்திக்கு மனுச் செய்து, பிரார்த்தித்து, கிளர்ச்சி செய்து கல்வியைப்

பெருக்கி, அமைதியான முறையில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று அவர்கள் தீர்மானிப்பார்கள். ஸன் நண்பர்களை ஒன்ருகக் கூட்டிவைத்து 'இளம் சீன' என்று ஒரு சங்கத்தை ஸ்தாபித்து நடத்தி வந்தார். பின்னல், கான்டன் நகருக்குச் சென்று, அங்குள்ள சங்கங்களின் மூலம் தேசத்தில் கல்வியைப் பரப்பும் வேலையையும், அரசாங்கத்தைச் சீர்திருத்துவதையும் கவனித்து வரவேண்டும் என்று புறப்பட்டார். அக்காலத்தில் சீனர்களிடையே பற்பல ரகசியச் சங்கங்கள் ஏற்பட்டிருந்தன. அவைகளை உபயோகித்துக்கொள்ளலாம் என்பது ஸன்னுடைய நம்பிக்கை. தனி மனிதர்களுக்குச் சஸ்திர சிகிச்சை செய்து குணப்படுத்தும் தொழிலில் பெய்ரளவில் அவர் ஈடுபட்டிருந்தாரே அன்றி, அவருடைய சிந்தனையெல்லாம், சீன தேசத்திற்கே பெரிய 'ஆபரேஷன்' செய்து அதன் நோய்கள் அனைத்தையும் குணப்படுத்த வேண்டும் என்பதில் சென்றுகொண்டிருந்தது.

கான்டனில் 'கல்விச் சங்கம்' என்ற சங்கம் ஆரம்பிக்கப் பெற்றது. ஸன் அதற்குத் தலைவராக விளங்கினர். அப்பொழுது தலைவரான ஸன் அவர் ஆயுள் வரை சீனவின் தலைவராகவே விளங்கினர். சங்கத்தின் மூலம் நான்கிங் தலைமை அரசாங்கத்திற்கு மனு அனுப்பப்பட்டது. காலஞ் சென்ற பழைய மஞ்சு மன்னரின் மகா ராணியே அப்பொழுது அரசாங்கக் காரியங்களை எல்லாம் கவனித்து வந்தார். அவர் அந்த மனுவை நிராகரித்துப் பதில் அனுப்பும்படி ஏற்பாடு செய்து விட்டார். பழைய கல்வியே சீனவை உன்னத நிலையில் வைத்திருந்தது என்றும், தேசத்திற்குக் கேடு விளைவிக்கக் கூடிய அநாகரிக அந்நியர்களுடைய முறையைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை என்றும் அந்தப் பதிலில் கண்டிருந்தது. வேறு வேண்டுகோள்கள் அனுப்பியும் பயனில்லாது போயின. கடைசியில், சமாதான முறையில் பெகிங்

அரசாங்கத்திடம் எத்தகைய முன்னேற்றத்தையோ சீர்திருத்தத்தையோ எதிர் பார்க்க முடியாது என்று ஏற்பட்டது. ஒரு பெரும் புரட்சியின் மூலம் தேசம் மறுபிறப்பு எடுத்தாக வேண்டும் என்பதைச் சங்கத்தார் உணர்ந்து கொண்டனர். ஆனால், அவர்களுக்கு ஜனங்களிடம் செல்வாக்கு இல்லை. அவர்கள் எண்ணிக்கையும் சுருக்கம். ஜனங்களோ, 'மூடத்தனத்தின் முடை நாற்றம் வீசுகின்ற' பழைய பழக்க வழக்கங்களை எளிதாக விடமாட்டார்கள். தீவிர வேலைகளில் இறங்கினால், ஒரு பக்கம் அரசாங்கத்தின் அடக்குமுறைகளும், மறு பக்கம் ஜனங்களின் வெறுப்பும் ஹிம்சையும் ஏற்படும். எனினும் சங்கத்து இளைஞர்கள் மனம் தளரவில்லை. ஜனங்களை எப்படியும் உத்ஸாகப்படுத்தி எழுப்பிவிடலாம் என்று அவர்கள் நம்பினார்கள். மெலிந்து நலிந்து ஆடிக் கொண்டிருந்த ஆட்சி முறையைத் தாக்கிப் பிரசாரம் செய்யவேண்டும் என்று ஆரம்பித்தார்கள்.

அப்பொழுது சீனாவை ஆண்டு வந்த மஞ்சு ராஜ வம்சத்தினர் சீனர் அல்லர். அவர்கள் சீனாவுக்கு வடகிழக்கிலிருந்து வந்த அந்நியர்கள். 1644-இல் அவர்களுடைய தலைவன் ஷிட்ஸு செங், பெகிங் நகரத்தைப் பிடித்துக்கொண்டு அரசனாகி மஞ்சு வம்சத்தை ஸ்தாபித்தான். அது முதல் 1911-இல் புரட்சி தோன்றிய வரையில் அவன் வம்சத்தாரே ஆண்டு வந்தனர். ஒருவர்பின் ஒருவராக அவர்களில் பத்து மன்னர்கள் இருந்தனர். அவர்கள் அந்நியர்களாயிருந்ததால், ஜனங்கள் எதிர்த்துக் கிளம்பி விடாதபடி நன்மைகளைச் செய்தும், மறுபுறத்தில் தங்கள் ஆதிக்கத்தை வலுப்படுத்தியும் வந்தனர். பின்னால் நாளடைவில் ஆட்சி முறை இழிவடைந்து அதிகாரிகளிடையே லஞ்சமும் கொடுமையும் மலிந்து விட்டன. மஞ்சு வம்ச ஆட்சியின் இறுதி நாட்களில் வல்லரசுகள் சீனாவை அலங்கோலப்படுத்தி உடன்

படிக்கைகள் எழுதி வாங்கிக்கொண் டிருந்தன. 1840-இல் அபினி யுத்தத்தில் சீனுவின் தோல்வியால், ஐந்து துறைமுகங்களும் ஹாங்காங்கும் இழக்கப் பட்டன. 1860-இல் ஆங்கில-பிரெஞ்சுப் படைகள் பெகிங் நகரைத் தாக்கிக் கொள்ளையடித்து இரண்டு உடன்படிக்கைகளைப் பெற்றன. குவாங்-ஸு சக்கர வர்த்தி காலத்தில், 1895-இல் ஜப்பானுல் சீனு தோற் கடிக்கப்பட்டு, போர்மோஸா, கொரியா முதலியவை பறிக்கப்பட்டன. 1900-இல் பாக்ஸர் கலகத்தில், பிரிட்டன், ரஷ்யா, ஜப்பான், ஜெர்மனி, பிரான்ஸ், அமெரிக்கா, ஆஸ்டிரியா, இத்தாலி ஆகிய எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து சீனுவை முறியடித்தன. இவையெல்லாம் ஏற்கனவே ஊழலாக இருந்த மஞ்சு ஆட்சியை நாடு முழுதும் துவேஷிக்கும் நிலைக்குக் கொண்டுவந்து விட்டன. இதனுல் ஆட்சியையே ஒழிக்கும் முறையில் புரட்சிப் பிரசாரம் செய்வதற்கு வசதி ஏற்பட்டது.

டாக்டர் ஸன் சரித்திரங்களை நன்கு கற்றவர்; சீனுவில் முன்னுல் புரட்சியினுல் பல ராஜ வம்சங்கள் கவிழ்க்கப்பட்டிருந்தன என்பதையும், பிரான்ஸில் புரட்சி நடந்து ஜனநாயகம் ஸ்தாபிக்கப்பட்ட பிறகு எத்தனையோ நன்மைகள் ஏற்பட்டன என்பதையும் அவர் அறிவார். புரட்சியாலேயே சுதந்திரமும், சுதந் திரத்தாலேயே முன்னேற்றமும் ஏற்படும் என்று அவர் தீர்மானித்தார். ‘ஒரு தேசத்தில் நிகரிலாது முக்கியத்துவம் வாய்ந்த இனம், மக்கள் இனமே” என்று 2,300 வருஷங்களுக்கு முன்பே சீன முனி மென்ஷியஸ் கூறியிருந்த அருள்வாக்கு அவர் உள் ளத்தில் பதிந்திருந்தது. ஆகவே, தம்முடைய வைத்திய வேலையைக் கைவிட்டு விட்டு, தேசப் புணருத்தாரணத்திற்காக அவர் புரட்சித் தலைவராக மாறிவிட்டார். பல நண்பர்கள் திரிகரண சுத்தியுடன் அவருக்குத் துணையாக முன் வந்தனர்.

பொதுவாகச் சீனவின் மற்றப் பகுதிகளைக் காட்டிலும் கான்டன் பகுதியில் மக்கள் மஞ்சு மன்னர்களை அதிகமாய்த் துவேஷித்து வந்தார்கள். ஏதாவது ஓரிடத்தில் கலகம் தோன்றினல், நாடெங்கும் புரட்சி பற்றிக்கொள்ளும் என்று அவர்கள் கருதினார்கள். டாக்டர் ஸன்னுடைய கல்விச் சங்கம் புரட்சிக்காரர்களுடைய சதியாலோசனை மண்டபமாயிற்று. வெளிப்படையாக வருவதற்கு முன்னல் எல்லா வேலைகளையும் அந்தரங்கமாகவே செய்து வரவேண்டும் என்று ஸன் ஏற்பாடு செய்திருந்தார். ஆயுதங்கள் சேகரிக்கப் பணம் தேவையாயிருந்தது. சிறுவயதில் ஸன்னுடன் கோயில் விக்கிரகத்தை உடைக்கச் சென்ற நண்பர்களில் ஒருவனை ஹோடுங் தன்னுடைய நிலங்கள், மனைவியின் நகைகள் எல்லாவற்றையும் விற்றுக் கிடைத்த பணம் முழுவதையும் கொணர்ந்து கொடுத்தான். மற்றவர்களும் அவரவரால் இயன்ற அளவு பொருள் கொடுத்தார்கள். ஆயுதங்களும் வெடிமருந்தும் கல்விச் சங்கக் காரியாலயத்தில் சேகரித்து வைக்கப்பட்டன.

ஆனல், ஒற்றர் மூலம் அதிகாரிகள் விஷயமறிந்து, சோதனையிட முற்பட்டு விட்டனர். ஹோ டுங், ஆபத்து வருவதை அறிந்து, டாக்டரைக் கான்டன் நகரை விட்டே வெளியேறும்படி செய்து, காரியாலயத்திலிருந்த கடிதங்களையும் குறிப்புக்களையும் கொளுத்திவிட முயன்றான். அவனுடன் வேறு நான்கு நண்பர்களும் இருந்தனர். அவர்களுடைய வேலை முடியுமுன்பே அதிகாரிகள் வந்து அவர்களைக் கைது செய்து விட்டனர். அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. நால்வர் சிரச்சேதம் செய்யப்பட்டனர். ஒருவன் சிறையிலேயே இறந்து விட்டான். அவர்கள் தேசத்திற்காக உயிர்ப் பலி கொடுத்த தியாகிகளாகக் கருதப்பட்டனர். அவர்களுடைய தியாகத்தினல் ஸன் உயிர் தப்ப முடிந்தது.

பிற்காலத்தில் அவர் ஹோ டுங்கைப் பற்றி மிகவும் பாராட்டி வந்தார்.

ஸன் பல கஷ்டங்களை அநுபவித்துக் கொண்டு ஹாங்காங் போய்ச் சேர்ந்தார். அங்கே நண்பர்களின் உதவியால் தலை மறைவாக இருந்து வந்தார். ஏனெனில் அதிகாரிகள் அங்கேயே அவரைப் பிடித்துக் கடத்திக்கொண்டு போய்விடக்கூடும் என்ற பயம் இருந்தது. அங்கிருந்து அவர் ஜப்பானிலுள்ள கோப் நகரத்திற்குப் பிரயாணமானார். பிரயாணத்திற்கு வேண்டிய வசதிகளைத் தோழர்கள் செய்து கொடுத்தார்கள். அப்பொழுதுதான் 1895-ஆம் வருஷத்துச் சீனா - ஜப்பான் யுத்தம் முடிந்திருந்தது. ஜப்பானில் இருந்தாலும் அவர் பிடிபட்டிருக்கக்கூடும். அதனால் அவர் ஹவாய் தீவுக்குப் போய் அங்கிருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டு விட்டார். அப்பொழுது அவர் மீசை வைத்துக்கொண்டு மேல்நாட்டு உடைகள் அணிந்து, மாறு வேஷத்துடன் காணப்பட்டார். வழியில் ஹானலுலுவில் சீன நண்பர்கள் அவருக்கு 6,000 டாலர் நிதி சேர்த்துக் கொடுத்தனர்.

அமெரிக்காவிலும் அவரைச் சனி பின்தொடர்ந்து சென்றது. அங்கிருந்த சீன ஸ்தானீகர் அவரைப் பிடித்துக்கொண்டு போகப் பெருமுயற்சி செய்தார். அமெரிக்காவிலிருந்த சீனர்களுக்கு ஸன் தம் கருத்தை விளக்கிப் பிரசாரம் செய்து, தக்க உதவி பெற்று, அங்கிருந்து இங்கிலாந்துக்குச் சென்றார்.

1896-இல் சீமைக்குச் சென்றதும் அவர், தம்முடைய பழைய வைத்திய குருவாகிய டாக்டர் காண்ட்லீயுடன் தங்கியிருந்தார். ரகசிய ஒற்றர்கள் தம்மைக் கண்டுகொள்ளாதபடி அவர் கவனமாகவே இருந்து வந்தார். இதுவரை ஒரு தேசத்திலிருந்து மறுதேசம் போகும் பொழுதெல்லாம் அவர் புதுப் புதுப் பெய்ராக மாற்றி வைத்துக்கொள்வது வழக்கம்.

ஆயினும் சூழ்ச்சியில் சீன அரசாங்கம் அவரை வென்றுவிட்டது. ஸன் அதனுடைய எமன் அல்லவா? ஒரு நாள் மாதா கோயிலில் பிரார்த்தனை செய்வதற்காக நடந்து போய்க்கொண்டிருந்தபோது எதிரிகள் கையில் அவர் சிக்கிவிட்டார். பிடித்தவர்கள் சீன ஸ்தானீகர் காரியாலயத்திலிருந்து அனுப்பப் பட்ட இரண்டு சீனர்கள். ஸன் லண்டனிலிருந்த சீன ஸ்தானிகர் காரியாலயத்தில் பந்தோபஸ்தாக அடைத்து வைக்கப்பட்டார். எமன் வாயிலிருந்து மீண்டாலும் அதிலிருந்து மீள முடியாதுபோலிருந்தது. அவர் அடைபட்டிருப்பதைப் பற்றி வெளியே தகவல் அறிவிக்க முடிந்தால் தப்ப வழி கிடைக்கும். ஆனால் காவலும் கட்டும் அதிகமாயிருந்தது. ஸன் சீட்டுக்கள் எழுதி, அவைகளில் ஏராளமான பணத்தைப் பொதிந்து, தாம் இருந்த அறையின் ஜன்னல் வழியாக வழி நடையில் எறிந்துகொண்டிருந்தார். யாராவது வேலைக்காரர்கள் பண ஆசை கொண்டு அவைகளில் ஒன்றை டாக்டர் கான்ட்லீயிடம் சேர்ப் பிக்க மாட்டார்களா என்று அவர் ஏங்கிக்கொண் டிருந்தார்.

பன்னிரண்டு நாட்களாக அவர் தவித்துக்கொண் டிருந்தார். ஆண்டவனை எண்ணித் துதித்தார். அவர் ஒரு பைத்தியக்காரர் என்று சொல்லிக் கப்பலில் ஏற்றிச் சீனவுக்கு அனுப்பிவிட ஏற்பாடு நடந்தது. ஆனால் கடைசியில் ஓர் ஆங்கில வேலைக்காரன் அவ ருக்குத் துணை புரிந்தான். அவனுடைய மனைவி மூலம் டாக்டர் கான்ட்லீக்குத் தகவல் தெரிந்தது. பிரிட்டிஷ் அதிகாரிகளின் உதவியால் அவருக்கு விடுதலை கிடைத்தது. சீமைப் பத்திரிகைகள் எல்லாம் அவரைப் பற்றி விரிவாகச் செய்திகள் பிரசுரித்தன. இதிலிருந்து அவர் உலகப் பிரசித்தமான தலைவராகி விட்டார்.

இதன் பிறகு அவர் தாய்நாடு திரும்பிச் சிறிது காலம் தங்கி யிருந்துவிட்டு, மறுபடி அமெரிக்கா சென்றார். அங்கே சீனர்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் பல பிரசங்கங்கள் செய்தார். ஜனநாயகத்திற்கும் சுதந்திரத்திற்கும் உழைக்கும் அமெரிக்கர்கள் சீன விடுதலைக்கும் உதவி செய்யவேண்டும் என்று அவர் பொதுக் கூட்டங்களில் மன்றாடினார். பழைய கான்டன் புரட்சியை வர்ணித்து, அதுபோன்ற பல கலகங்களின் முடிவில் வெற்றி நிச்சயமாக வரும் என்று வற்புறுத்தினார். அமெரிக்காவிலிருந்து சீனாவுக்குத் திரும்புகிற மார்க்கத்தில் சீனர்கள் இருந்த இடங்களுக்கெல்லாம் சென்று பிரசாரம் செய்தார். எல்லா இடங்களிலும் புரட்சிச் சங்கங்கள் அமைத்து, தக்கவர்களைச் சேர்த்து, ஏராளமான நிதியும் சேகரித்துக்கொண்டு அவர் ஹானலுலு வந்து சேர்ந்தார். அங்கிருந்து 1900-இல் அறுநூறு புரட்சிக்காரர்களைச் சீனாவுக்கு அனுப்பிக் கலகம் செய்ய ஏற்பாடு செய்தார்; தாமும் விரைவில் போய்ச் சேர்ந்து கொண்டார். டோக்கியோ போன்ற வெளி நாட்டு நகரங்களில் படித்துத் திரும்பிய சீன மாணவர்கள், மற்றும் பல்லோர் உதவிக்கு வந்து சேர்ந்தனர். ஆயினும், கலகம் மறுபடியும் தோல்வியுற்றது. பிடிபட்ட கலகக்காரர்கள் வழக்கம் போல் மரணதண்டனை அடைந்தனர்.

இதன் பிறகு ஸன் ஜப்பானில் யோகோஹாமா நகருக்குப் போய், அதையே தம்முடைய புரட்சி வேலைகளுக்குத் தலைமை ஸ்தலமாக வைத்துக் கொண்டார். அங்கிருந்து ஹவாய் தீவை அடைந்து ஆறுமாதம் தங்கியிருந்தார். அங்கேதான் அவருடைய தாயும், மனைவியும், குழந்தைகளும், சகோதரரும் இருந்து வந்தனர். அவருடைய சகோதரரும் புரட்சி விஷயங்களில் அநுதாபம் கொண்டவராக மாறி யிருந்தார். பிறகு ஸன் மறுபடி அமெரிக்கா

இங்கிலாந்து முதலான நாடுகளில் யாத்திரை செய்து விட்டுத் திரும்பினார். காண்டன் நகரில் இருந்து கொண்டு, 1904-இல் அவர் மூன்றாவது முறை புரட்சிக்கு ஏற்பாடு செய்து வந்தார். ஹாங்காங்கி லிருந்து ஒரு வியாபாரி விலாசத்திற்குச் சிமிண்டுப் பீப்பாக்களில் துப்பாக்கிகளும் வெடிமருந்தும் ஏராள மாய் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது. உள்நாட்டி லிருந்த புரட்சி வீரர்கள் ஆங்காங்கே தயாராக வைக்கப்பட்டிருந்தனர். ஹாங்காங்கிலிருந்து 3,000 கூலிகளையும் வரவழைத்துக் கலகத்திற்குப் பயன் படுத்திக் கொள்ளவும் தீர்மானிக்கப் பட்டிருந்தது. ஆனால், கடைசி நேரத்தில், கூலிகளை அனுப்பச் சங்கடம் ஏற்பட்டு விட்டதாக ஹாங்காங்கிலிருந்து தந்தி வந்தது.

அத்துடன் கப்பலிலிருந்து இறக்கப்படும் பொழுது சிமிண்டுப் பீப்பாக்களில் ஒன்று விழுந்து உடைந்துபோனதால், உள்ளேயிருந்த சரக்குகளை அதிகாரிகள் கண்டுகொண்டார்கள். அதிகாரிகளுக்குச் சந்தேகம் கிளம்பிவிட்டது. இதனால் புரட்சியை ஒத்தி வைத்துவிட்டு, கூலிகளை அனுப்பவேண்டாம் என்பதற்குச் சங்கேதமாக ஸன் பதில் தந்தி கொடுத்தார். அவர் தந்தி போகுமுன்பு கூலிகள் வந்துவிட்டனர். அவருக்குத் தகவல் இல்லை. கூலிகளுக்கு ஒரு விஷயமும் தெரியாது. அவர்கள் கண்டபடி சுற்றித் திரிந்து வந்ததால் அதிகாரிகளுக்குச் சந்தேகம் அதிகரித்தது. கடைசியில் கூலிகளிற் பலர் உயிரிழக்க நேர்ந்தது. ஸன் தம் நண்பர்கள் எல்லோரையும் பல இடங்களுக்குப் பிரித்தனுப்பி விட்டார். அவரும் சாங்-சா என்ற நண்பரும் செம்படவ ஸ்திரீகளைப் போல் மாறுவேஷம் பூண்டு ஓர் ஓடத்திலேறி வெளியே சென்று விட்டனர். புரட்சிக்காரருடைய தலைமைக் காரியாலயத்திற்குச் சமீபமாக சுற்றிக்கொண்டிருந்த பதினாறு பேர்களைக்

கைது செய்து அரசாங்கத்தார் உயிர்ப்பலி வாங்கினார்கள். இவர்களிற் பலர் ஒன்றும் அறியாத நிரபராதிகள்.

ஹாங்காங்கில் சில தினங்கள் மறைவாக இருந்து விட்டு, ஸன் சிங்கப்பூருக்கும், சாங்-சா ஹாநோலுலுவுக்கும் பிரயாணமாயினர். ஸனைப் பிடித்துக் கொடுத்தால் ஏழரை லட்சம் டாலர் வெகுமதி கொடுப்பதாகச் சீன அரசாங்கம் விளம்பரம் செய்தது. அவர் புரட்சி செய்ய ஆரம்பித்து இதுவரை தோல்வியும் துயரமும் தவிர வேறு எதையும் காணவில்லை. அவர் தலைக்கு விலையும் விதிக்கப் பட்டிருந்தது. நண்பர்களும் மேற்கொண்டு புரட்சி ஆசையைக் கைவிட்டு விடும்படி ஆலோசனை கூறினார்கள். அந்நிலையிலும் அவர் கலங்கவில்லை, தடுமாறவில்லை, அவநம்பிக்கை கொள்ளவுமில்லை. புரட்சி முயற்சிகளில் ஒவ்வொன்றையும் அவர் ஆராய்ச்சி செய்து பார்த்திருந்தார். முதல் இரண்டு முயற்சிகளைப் பார்க்கிலும் மூன்றாம் முறை எல்லா முன்னேற்பாடுகளும் செம்மையாக நடந்திருந்தன. எதிர்பாராத சில இடையூறுகளாலேயே முயற்சி கை கூடவில்லை. ஆகவே, முயற்சிகளையெல்லாம் முடிவான பெரும் புரட்சி வெள்ளத்தின் கிளை நதிகளாகவே அவர் கருதினார். மஞ்சு ஆட்சியை ஒழித்து, குடியரசு ஸ்தாபித்த பிறகே சீனாவின் இன்னல்கள் நீங்கும் என்று அவர் மீண்டும் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்.

சீன இளவரசருக்காக ஆட்சியைக் கவனித்துக் கொண்டிருந்த மகாராணி தேச நிலையைப் பார்த்துச் சில சீர்திருத்தங்களைச் செய்ய முன் வந்தார். காலந் தவறிய எந்தச் சீர்திருத்தமும் கடலில் கரைத்த காயத்தைப் போல் பயனற்றது என்பதை ஸன் அறிந்திருந்ததால், உலையா முயற்சியுடன் உழைத்து

வந்தார். இதுவரை காண்டன் பகுதியிலேயே புரட்சி செய்து வந்ததால், மேற்கொண்டு பிரெஞ்சுக் காரருக்குச் சொந்தமான டோன்கினுக்கு வடக்கே யுன்னன் மாகாணத்தில் முயற்சி செய்யவேண்டும் என்று அவர் தீர்மானித்தார். அதன்படியே 1907, அக்டோபரில் அங்கே சென்று புரட்சியை ஆரம் பித்தார். பல இடங்களில் கலகங்கள் நடந்தன. கலகக்காரர்கள் அநேக இடங்களைப் பிடித்துக் கொண்டனர். ஆயினும், சர்க்கார் படைகள் ஏராள மாக வந்து தாக்கியபொழுது, கலகக்காரர்களிடம் போதிய ஆயுதங்கள் இல்லாமற் போயிற்று. அவர்கள் தோல்வியுற்றுக் கூட்டங் கூட்டமாகப் பிரெஞ்சுப் பிரதேசத்துள் ஓடி ஒளிந்து கொண்டனர். ஸன்னும், தோழர் சாங்-சாவும் பிச்சைக்காரர்களின் உடை அணிந்து உயிர் தப்பி ஹாங்காங் சென்றனர்.

வெற்றிகரமான கடைசிப் புரட்சி 1911-இல் ஏற் பட்டது. அதற்கு முந்திய வருஷம் டாக்டர் ஸன் அமெரிக்கா சென்றிருந்தார். அக்டோபர் மாதத்தி லேயே கலகம் ஆரம்பித்து விட்டது என்று அவருக்கு அவசரத் தந்தி கிடைத்தது. அங்கிருந்து அவர் இங்கிலாந்துக்கும் சென்று புரட்சிக்கு ஆதரவு தேடினார். சீமையில் அவருடைய பழைய நண்பர் டாக்டர் கான்ட்லீ மிக்க உதவியாக இருந்தார். அங் கிருந்தபொழுது அவரைச் சீனக்குடியரசுக்குத் தலைவ ராகத் தேர்ந்தெடுத்திருப்பதாகக் கம்பியில்லாத் தந்தி மூலம் தகவல் வந்தது. ஆனால் தேர்தல் மூலம் தலைவ ராக உறுதி செய்யப்பட்டது, பின்னால் 1912, ஜனவரி யில் தான். இந்தத் தடவை புரட்சி, குறிப்பிட்ட காலத்திற்கு முன்னாலேயே ஆரம்பமாகி விட்டது. ஏனெனில், ஹாங்கோ நகரில் புரட்சிக்காரர்கள் வெடி குண்டு தயாரித்துக் கொண்டிருக்கையில், ஒரு குண்டு திடீரென்று வெடித்துவிட்டது. உடனே அரசாங்கத் துருப்புகள் வந்துவிட்டன. புரட்சிக்காரர்களும்

எதிரிகளுக்காகத் தயாரிக்கப்பட்ட வெடி மருந்துகளைப் பின்னால் உபயோகிப்பதைப் பார்க்கிலும் முன்னாடியே செலவிட்டு விடலாம் என்று கலகத்தை ஆரம்பித்து விட்டார்கள். இந்தப் புரட்சியில் அதிக இரத்தப் பெருக்கும் உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை. அரசாங்கப் படைகள் கலகக்காரரோடு சேர்ந்து கொண்டன. இரண்டு மாதத்தில் பதினொரு மாகாணங்கள் மஞ்சு ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றன. தலைவர்கள் கூடி டாக்டர் ஸன்னைக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கத் தீர்மானித்து, லண்டன் நகரிலிருந்த அவருக்குத் தகவல் கொடுத்தார்கள்.

ஸன் லண்டனை விட்டுப் புறப்பட்டு, பாரிஸ், மார்ஸீல்ஸ் வழியாகச் சிங்கப்பூர் வந்து சேர்ந்தார். அங்கேயிருந்த சீன மக்கள் சீன தேசத்தின் விடுதலை வீரராக அவரை வரவேற்று உபசரித்தனர். ஷாங்காய் நகருக்கு வந்து ஐந்து தினங்களுக்குப் பின் அவர் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நான்கிங் குடியரசின் தலைநகராக ஏற்படுத்தப் பட்டது. பெகிங் நகரில் வலிமையற்று நைந்து தேய்ந்துகொண்டிருந்த மஞ்சு ஆட்சி மரணத் தருவாயில் துடித்துக் கொண்டிருந்தது. புரட்சிக்காரர்கள் அதை விரைவில் எளிதாக முடித்து விடலாம் என்று தைரியம் கொண்டிருந்தனர்.

சாய்ஹங் என்ற சிற்றூரில் பிறந்து சிலையை உடைத்த சிறு குழந்தை, பல்லாயிரம் வருஷங்களாக முடியரசாக நடந்து வந்த சீன அரசாங்கத்தையே உடைத்துவிட்ட விஷயம், உலக சரித்திரத்தில் குறிப்பிடத் தகுந்த ஓர் உன்னத நிகழ்ச்சியாகும்.

குடியரசை அமைத்ததோடு புரட்சி முடிந்து விடவில்லை. தேசம் முழுதும் குடியரசின்கீழ் வந்து விடவில்லை. தனித் தனிப் படைகளை வைத்துக் கொண்டு யுத்தமே தொழிலாகவுடைய பழைய

பிரபுக்களை இன்னும் ஒழிக்கவில்லை. கல்வியறிவற்ற பெரும்பாலான மக்களுக்குக் குடியரசின் மகத்துவத்தைத் தெரியப்படுத்த வேண்டியிருந்தது. இத்தகைய காரியங்களை யெல்லாம் வெகு விரைவாகச் செய்து முடிக்க வேண்டியிருந்தது. டாக்டர் ஸன்னுடைய திட்டப்படி இந்தக் காரியங்கள் மூன்று படிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. முதல் படி, ராணுவத்தின் மூலம் வெற்றியை நிலை நாட்டுதல்; இரண்டாம் படி, மக்களுக்கு அரசியல் கல்வி போதனை; மூன்றும் படி, ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப் பெற்ற பிரதிநிதிகள் மூலம் ஜனங்களே அரசாங்கத்தை நடத்துதல். முதலாவதாகப் பெகிங் நகரத்து ராஜ வம்சத்தினிடமிருந்து ஆட்சி முழுவதையும் கைப்பற்ற வேண்டியிருந்தது. அந்தச் சமயம் புரட்சியை எதிர்த்து அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கு யுவான் ஷி-கேய் என்ற மாஜி தளகர்த்தர் நியமிக்கப் பட்டிருந்தார். ஆடிக் கொண்டிருந்த அரசாங்கத்திற்கு அவரே முதல் மந்திரியாகவும் சேனாதிபதியாகவும் ஆகிவிட்டார். அவர் மகா சாமர்த்தியசாலி, நயவஞ்சகர், சுயநலம் தவிர வேறு கொள்கை தத்துவம் ஒன்றும் இல்லாதவர். டாக்டர் ஸன் தம்முடைய தயாள குணத்தினால் அந்த மூர்க்கரை நம்பி மோசம்போனார். அவர் தலைமைப் பதவியை ராஜிநாமா செய்து யுவான் ஷி-கேயைக் குடியரசுத் தலைவராக்க உதவி செய்வதாகக் கூறி, அந்த வஞ்சகர் மூலம் கலகம் இல்லாமலே மன்னர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்தார். யுவான், ஒரு பக்கம் மன்னரிடம் மேற கொண்டு ஆட்சி நடக்காதென்று கையை விரித்துப் பயமுறுத்தியும், மறுபக்கம் ஸன்னுடைய உதவியால் குடியரசில் பதவி பெறச் சாமர்த்தியமாக முயற்சி செய்தும் வந்தார். பின்னால் அவர் மன்னர் ஆட்சியை எளிதில் ஒழித்துவிட்டு, ஸன்னுடைய உதவியால் குடியரசுத் தலைமைப் பதவியைப் பெற்றார். புரட்சி

வீரர்கள் எல்லோரும் பெருந் துக்கமடைந்து, டாக்டர் ஸன் ராஜிநாமா செய்வதைத் தடுத்தும் பயன்படவில்லை. ஸன் சுயநலமற்ற யாற்றறியாத பசும் பொன் அல்லவா? அவரிடம் பட்டம் பதவி என்ற ஆசைகள் ஒட்டுமா? தேசத்திற்கு நன்மையெனக் கருதி அவர் யுவானையே தலைவராக ஏற்றுக் கொள்ளும்படி நண்பர்களை வேண்டிக் கொண்டார்.

பதவி கிடைத்ததுமே யுவான் சுய ரூபத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டார். பாம்புக்குப் பால் வார்த்தது போலாயிற்று. வரிப்புலி வேங்கை தன் நோயைத் தீர்த்த வைத்தியரையே முதல் ஆகாரமாகக் கொள்வது போல், யுவான் சட்டசபைகளைக் கலைத்து, தம் இஷ்டம் போல் ஆசாமிகளை நியமித்துக் கொண்டு, குடியரசை ஸ்தாபித்த புரட்சி வீரர்களையே நசுக்க ஆரம்பித்தார். விரைவில் தாமே சீனச் சக்கரவர்த்தி என்றும் விளம்பரம் செய்து கொண்டு, ஜப்பானிடம் அரசாங்கத்தின் பெயரால் ஏராளமான பணத்தைக் கடன் வாங்கித் தம் சொந்த உபயோகத்திற்காக அதை ஒதுக்கி வைத்துக் கொண்டார். நாடெங்கும் சுதந்திர உணர்ச்சி உள்ளவர்களை யெல்லாம் அடக்கி அழித்துவிட முற்பட்டார்.

வளர்த்த கடா மார்பில் பாய்வதைக் கண்டு, டாக்டர் ஸன் வருந்தினார். வெந்த புண்ணில் வேல் நுழைந்தது போலாயிற்று. வாழ் நாளெல்லாம் அவர் உழைத்த உழைப்பு விழலில் பாய்ந்துவிட்டது; ஆனால் அவர் சிந்தை தளரவில்லை. மஞ்சு ஆட்சியைக் கவிழ்த்த அதே சக்தி தம்மிடம் மேற்கொண்டும் இருந்ததால், அதைக் கொண்டே யுவானையும் ஒருகை பார்க்கப் போவதாக யுவானுக்கு எச்சரிக்கை அனுப்பினார். காண்டனில் இருந்து கொண்டு அவர் யுவானுக்கு எதிராக இரண்டாவது மாபெரும் புரட்சியை ஆரம்பித்து வைத்தார். புரட்சிச் சங்கம்

'கோமின்டாங்' என்ற புதிய பெயருடன் புனருத்தாரணம் செய்யப் பெற்றது. கோமின்டாங் என்றால் ஜனங்களின் கட்சி என்று பொருள். பெயர் புதிதாக இருந்தாலும் சங்கம் ஆதிமுதல் நடந்து வந்த புரட்சிச் சங்கந்தான். இது நம்முடைய இந்திய தேசீய காங்கிரஸ் போன்றது. சீனாவில் இதன் பெயர் காதிற் படாதவர் கிடையாது. நம் காங்கிரஸ் மகா சபையைப் பற்றி,

'காங்கிரஸ் என்பது இந்திய நாட்டின்
கண்ணியம், கவசம், கேடையமாம்'

என்று நம் தேசீயக் கவி பாடியிருப்பதுபோல் சீனர்கள் கோமின்டாங் சபையைப் பாராட்டுகிறார்கள்.

இரண்டாம் புரட்சியில் இளைஞர் சியாங் கே-ஷேக் டாக்டர் ஸன்னுக்கு உதவியாக நின்றார். பல இடங்களில் புரட்சி ஆரம்பமாகி, யுவான் ஆட்சிக்கு உலை வைக்கப்பட்டது. வடசீனாவில் அடிக்கடி கலகம் செய்து குடியரசுக்குப் பணியாதிருந்த போர் வெறி பிடித்த பிரபுக்களை அடக்குவதற்காக ஸன் பலமுறை தேசீயப் படைகளை அனுப்பி வைத்தார். ஆனால் பூரண வெற்றி காணுமுன்பு அவர் நோயுற்று உடல் தளர்ந்து போனார்.

1915-இல் டாக்டர் ஸன் ஷாங்காய் நகரில் தங்கியிருந்த பொழுது, ஸூங் சிங்-லிங் என்ற மாது அவருடைய காரியதரிசியாக இருந்து உதவி செய்து வந்தார். டாக்டர் அவரைத் தம் இரண்டாம் மனைவியாக விவாகம் செய்து கொண்டார். அம்மாதரசியின் சகோதரி மெய்-லிங் என்பவர்தாம் பின்னர் சியாங் கே-ஷேக்கின் மனைவியாகிச் சீன ஜோதியாக விளங்குபவர். இவர்களுடைய சரித்திரமும் குடும்ப வரலாறும் போற்றத்தக்க பெருங் கதைகள். இவர்கள் குடும்பத்தை 'ஸூங்' குடும்பம் என்று சொல்லுவார்கள். சீனக் குடியரசில் இந்தக் குடும்பத்தினர்

ஆதிக்கம் பெற்றுத் தொண்டு செய்யாத பகுதியே இல்லை.

டாக்டர் ஸன் நோய்வாய்ப் பட்டதும் பெகிங் நகருக்குச் சென்று தக்க வைத்தியர்களைக் கொண்டு உடலைப் பரிசோதனை செய்து கொண்டார். அவருடைய ஈரல் முதலிய உறுப்புக்களில் புண் ஏற்பட்டு விட்டதால் நோய் குணமாகாது என்று வைத்தியர்கள் முடிவு கூறினர். சில வாரங்கள் வைத்திய சாலையிலேயே தங்கியிருந்து, 1925, மார்ச்சு 12உ ஸன் பூத உடலை நீத்துப் புகழுடம்பு பெற்றார். பிறந்தது முதலே தேசத்திற்காகச் சந்தனக் கட்டைபோல் தேய்ந்து தேய்ந்து தியாகம் செய்துவந்த அந்த உடல் அடக்கம் செய்யப்பட்ட காலத்தில் பதினெட்டு நாடுகளின் பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தனர். இந்தியாவிலிருந்து காங்கிரஸ் பிரதிநிதியாக பண்டித ஜவாஹர்லாலும் சென்றிருந்தார். ஸன் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் இடம் சீனர்களுக்கு ஒரு புண்ணிய ஸ்தலமாக இருந்து வருகிறது.

ஸன் யாட்-ஸென் இறக்கும் தருவாயில் மரண சாஸனம் ஒன்றைத் தயாரித்து வைத்திருந்தார். அதுவே சீனக் குடியரசுக்கு வழிகாட்டியாக இருந்து வருகிறது. சீனா முழுதிலும் அது லட்சக் கணக்காக அச்சிட்டு வழங்கப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

'நாற்பது வருஷங்களாக என் தேசமக்களின் புரட்சி இயக்கத்திற்காக நான் இடைவிடாமல் உழைத்து வந்திருக்கிறேன். அந்த இயக்கத்தின் நோக்கம் சீனா சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் பெறுவது. இந்த நாற்பது வருஷங்களில் பெற்றுள்ள அநுபவத்திலிருந்து, இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பெருவாரியான மக்களை எழுச்சியடையச் செய்து, உலகத்தின் மற்ற நாட்டார்களில் நம்மைச்

சமத்துவமாக நடத்துபவர்களோடு சேர்ந்து நாமும் முயற்சிசெய்ய வேண்டும் என்று கண்டிருக்கிறேன்.

'புரட்சி இன்னும் முற்றுப் பெறவில்லை. நான் எழுதி வெளியிட்டுள்ள நூல்களான "தேசீயப் புனர் நிர்மாணம்," "புனர் நிர்மாணத் தத்துவங்கள்," "ஜனநாயகத்தின் முக்கிய அம்சங்கள்" ஆகியவைகளிலும், தேசீயப் பிரதிநிதிகளின் முதல் கூட்டத்தின் அறிக்கையிலும் கூறப்பட்டுள்ள தத்துவங்களையும் முறைகளையும் இடைவிடாமல் பின்பற்றி நம் நோக்கம் முழுதும் நிறைவேறும்படி நடக்க வேண்டியது என் சகோதர ஊழியர்களுடைய கடமையாகும்.

'ஜனங்களின் மகாநாட்டைக் கூட்டி, இப்பொழுது இருந்துவரும் அநீதியான பட்சபாதமான உடன்படிக்கைகளை ரத்துச்செய்ய வேண்டும் என்று சமீபத்தில் சிபார்சு செய்யப்பட்ட காரியத்தை, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் நிறைவேற்ற வேண்டும். இது என்னுடைய அந்தரங்க உபதேசமாகும்.'

மார்ச் 11, 1925. (ஒப்பம்) ஸன் வென்.

ஸன் யாட்-ஸேன் புதிய சீனாவின் தந்தை என்றே சீனர்கள் எண்ணிப் போற்றி வருகிறார்கள். அந்த உன்னதமான தலைவரைச் சித்திரத்தில் பார்த்து மகிழ்கிறார்கள், சிலைசெய்து கும்பிடுகிறார்கள். பள்ளிக்கூடங்கள், அரசாங்கக் காரியாலயங்களிலெல்லாம் அவருடைய படம் திகழ்ந்துகொண்டிருக்கிறது. அவரை வெறும் சத்தியாலோசனைக்காரராகவோ, புரட்சிக்காரராகவோ கருதிவிடக் கூடாது. அவர் ஞானி, அத்துடன் கர்மவீரர். ஆகவே, மஞ்சு ஆட்சியைக் கவிழ்த்துவிட்டுக் குடியரசை நிறுவ வேண்டும் என்று மட்டுமே ஆரம்பத்தில் கொண்டிருந்த எண்ணத்தைப் பின்னால் அவர் விரிவாக்கிக்

கொண்டார். இங்கிலாந்திலும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் அவர் பிரயாணம் செய்த காலத்தில் ஆங்காங்கு உள்ள அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகளை நன்ருய்ப் பரிசீலனை செய்து வந்தார். அந்த நாடுகளில் சுதந்திரமும், ஜனநாயகமும், செல்வப் பெருக்கும் இருந்தபோதிலும், ஜனங்கள் எல்லோரும் இன்ப வாழ்க்கையைப் பெற்று விடவில்லை என்பதையும், ஒவ்வோரிடத்திலும் ஏற்றத் தாழ்வற்ற அபேதவாத முறைப்படி சமூக அமைப்பு வேண்டுமென்று தீவிரமான போராட்டங்கள் நடந்து வந்ததையும் அவர் கண்டார். ஆகவே ஏழை பணக்காரருக்குள் நடக்கும் அத்தகைய பொருளாதாரப் போராட்டங்கள் சீனுவிலும் ஏற்படாதபடி முன் கூட்டியே கவனிக்கவேண்டுமென்று தீர்மானித்து, அவர் தம் தத்துவங்களை விரிவான அடிப்படையுடன் அமைத்துக் கொண்டார். அந்தத் தத்துவங்கள் மூன்று பிரிவாகப் பிரிக்கப்படும். அவை 'ஜனங்களின் மூன்று தத்துவங்கள்' எனப் பெயர் பெற்றிருக்கின்றன. சீன பாஷையில் அவைகளுக்கு '**ஸான் மின் ஜூயி**' என்று பெயர்.

அம்மூன்று தத்துவங்களாவன :

1. **மிங்க்ஸூ** — ஜனங்களின் சுதந்திரம், அல்லது தேசீயம் பற்றிய தத்துவம்.

2. **மிங் ஷூவான்** — ஜனங்களின் ஆட்சி, அல்லது ஜனநாயகம் பற்றிய தத்துவம்.

3. **மிங் ஷெங்** — ஜனங்களின் ஜீவனோபாயம், அல்லது பொருளாதார சமத்துவம் பற்றிய தத்துவம்.

1924ஆ டாக்டர் ஸன் கான்டன் நகரத்தில் தம்முடைய தத்துவங்களை விளக்கிப் பதினறு பிரசங்கங்கள் * செய்திருக்கிருர். சீன மக்கள் பல நூற்

* இவை 'சுதந்திரத்தின் தேவைகள் யாவை?' என்ற புத்தகமாக வெ. சாமிநாத சர்மா அவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன.

றுண்டுகளாகவே தேசீய உணர்ச்சியில்லாமல் இருந்ததைச் சரித்திர பூர்வமாக எடுத்துக்காட்டி, தேசீய உணர்ச்சியே தேசத்தை அந்நியர்களிடமிருந்து பாதுகாக்கும் என்று அவர் விளக்கியிருக்கிறார்.

உலகமெல்லாம் ஒன்றாகி வரவேண்டிய காலத்தில் தேசீயம் என்னும் குறுகிய தத்துவத்தைப் பிரசாரம் செய்யலாமா என்று சில சீன வாலிபர்கள் கேட்டார்கள். அதற்கு டாக்டர் ஸன் ஓர் உபமானத்தால் பதிலளித்திருக்கிறார்......... ஹாங்காங் நகரில் ஒரு சீனக் கூலி இருந்தான். அவன் தோளில் ஒரு மூங்கில் கழியை வைத்துக்கொண்டு அதன் இரு முனைகளிலும் மூட்டைகளைக் கட்டித் தூக்கிக் கொண்டு போவது வழக்கம். ஒரு சமயம் அவன் தன்னிடமிருந்த பத்து டாலரைக் கொடுத்து ஒரு லாட்டரிச் சீட்டை வாங்கினான். அந்தச் சீட்டைப் பந்தோபஸ்தாக வைப்பதற்கு அவனுக்கு இடமில்லை. ஆதலால் அதைத் தன்னுடைய மூங்கில் தடிக்குள்ளே சுருட்டி வைத்துக்கொண்டான். பின்னால் லாட்டரி குலுக்கப்பட்டதில் அவனுடைய சீட்டிலுள்ள நம்பருக்கே முதல் பரிசு கிடைத்தது. அவன் சீட்டை மெதுவாக வெளியே எடுத்துக்கொண்டுபோய்க் காட்டி லட்சம் டாலரைப் பரிசாகப் பெற்றான். உடனே அவன் பழைய மூங்கில் தடியைக் கடலில் எறிந்துவிட்டு, நல்ல வீடு கட்டிக்கொண்டு, சுக வாழ்க்கை நடத்தலானான். அவன் கடலில் எறிந்த மூங்கில் தடிதான் தேசீயம் என்று டாக்டர் உபமானமாகச் சுட்டிக் காட்டினார். தடி அற்பமான பொருளாயிருந்தாலும் அதன் உதவியால் பெரிய லாபம் கிடைத்தது. பெரிய லாபம் கிடைக்காமற் போயிருந்தாலோ, முன்போல் மூட்டை சுமக்க அது உதவியாயிருக்கும். ஆகவே பெரிய லாபம் கிடைக்கு முன்பே அதைத் தூர எறிந்து விடலாகாது என்பது அவர் கருத்து.

ஜனங்கள் தங்களுக்காகத் தாங்களே ஆட்சி புரிவதுதான் ஜனநாயகம் என்பதையும், ராஜாவை ஒழித்துவிட்டதால் ராஜபக்தியே வேண்டாம் என்று தள்ளிவிடக் கூடாது என்றும், ராஜபக்தியை ராஜாங்க பக்தியாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் 'மிங் ஷுவான்' தத்துவத்திற்குப் பொருள் கூறியிருக்கிறார். 'மிங் ஷென்' தத்துவம் ஜனங்களின் வாழ்க்கைக்கு அடிப்படையானது. எல்லோருக்கும் வேலையும், ஊதியமும், ஓய்வும் கிடைப்பதற்கும், ஏற்றத் தாழ்வுகள் பெருகி மேல் நாடுகளைப்போல் வகுப்புப் போர்கள் கிளர்பிவிடாமல் இருப்பதற்காகவும் அவர் இந்தத் தத்துவத்தை மிகவும் வற்புறுத்தி யிருக்கிறார். ஜனங்களின் நல்வாழ்வின் மீதே சமூகம் நிலைத்து நிற்கிறது என்பதை அவர் என்றும் மறந்ததே இல்லை.

ஒப்பற்ற தலைவரான அவருடைய தத்துவங்களைச் செயலில் நிறைவேற்றி வைக்கும் பணியைத்தான் சியாங் கே-ஷேக் ஏற்றுக் கொண்டிருக்கிறார். டாக்டர் ஸன் இத்தாலிய தேசபக்த சிகாமணியான ஜோஸப் மாஜினியைப்* போன்ற தீர்க்கதரிசி. மாஜினிகள் தத்துவங்களையும் கொள்கைகளையும் வகுப்பார்கள். அவைகளை நிறைவேற்றி வைக்க அமெரிக்க ஐக்கிய மாகாணத்தின் சுதந்திரத்தைப் போராடிப் பெற்ற ஜார்ஜ் வாஷிங்டனைப் போன்ற தலைவர் தேவை. அத்தகைய தலைவர்தாம் சியாங். சியாங் கே-ஷேக் சீனாவின் வாஷிங்டன்.

---

* மாஜினியின் தத்துவங்களைப் பற்றி வெ. சாமிநாத சர்மா அவர்களும், ஆசிரியர் ஜம்புநாதன் அவர்களும் தமிழில் நூல்கள் எழுதியிருக்கிறார்கள்.

V

## நவஜீவன் இயக்கம்

'விருப்பமும் நம்பிக்கையும் தூண்டுகையில், மனிதன் உயிருக்கு அஞ்சிப் பின்வாங்கக் கூடாது. வழியில் ஒரு கணம் கூடச் சோம்பியிருக்கலாகாது. தாமதம் செய்பவன் பாதையிலிருந்து வெளியே தள்ளப்படுவான்.'

—பரீத்-உத்தீன் அத்தர்

---

ஒரு சீனப் பையன் கீநௌ என்ற நகரின் தெருவில் நடந்து போய்க்கொண்டிருந்தான். அவனுக்குப் பின்னால் 'குப், குப்' என்று புகை வந்து கொண்டிருந்தது. பத்து வயதுகூட ஆகவில்லை, அதற்குள் அவன் சிகரெட் ஒன்றைப் புகைத்துக் கொண்டிருந்தான். பூகியன் போராட்டத்திற்குச் சென்றிருந்த சேனாபதி சியாங் கே-ஷேக் இதைக் கண்டு விட்டார். உடனே அவனுடைய பெற்றோர் இருந்த இடத்தைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்கள் பெற்றெடுத்த கண்மணி போன்ற பிள்ளை தீய பழக்கத்தைக் கற்றுக்கொள்ளும்படி மெத்தனமாக விட்டு விட்டதை அவர் கண்டித்துக் கூறினார். மேற்கொண்டு பையனைக் கவனமாய்ப் பார்த்துவரும்படி சொல்லி விட்டுத் திரும்பினார். அதிலிருந்து நகரத்திலேயே புகைபிடிக்கும் வழக்கம் மிகவும் குறைந்து போய் விட்டது.

இந்தச் சம்பவத்தை சியாங்கே ஐம்பதினாயிரம் ஜனங்கள் கூடியிருந்த மகாநாடு ஒன்றில் குறிப்பிட்டுப் பேசினார். அந்த மகாநாடு 1934, பிப்ரவரி 19உ நவஜீவன் இயக்கத்தை* ஆரம்பித்துவைப்பதற்காகக் கூட்டப்பெற்றது. ஒரு சிறு பையனுடைய நடத்தையிலிருந்து சியாங் தேச மக்களுடைய நடத்தையைப்

---

* புத்துயிர் இயக்கம்.

பற்றியே சிந்திக்கலானார். முன்னாலும் சீன மக்களுடைய நிலைமையைப் பற்றி எண்ணமிட்டு வந்திருந்த போதிலும், இந்த விஷயம் அவரைத் தீவிரமாகச் சிந்திக்கத் தூண்டிவிட்டது. சோம்பலும் அபினைப் புகைப்பது போன்ற துர்ப்பழக்கங்களும், எதையெடுத்தாலும் நீட்டி நிமிர்ந்து அசமந்தமாக நடப்பதும், அசுத்த வாழ்க்கையும், 'முற்காலத்தோடு நல்ல காலம் போய்விட்டது, நாம் எக்கேடு கெட்டால் என்ன?' என்ற மூட எண்ணமும், மற்ற நாடுகள் எவ்வளவு வேகமாக முன்னேறுகின்றன என்பதைச் சிந்திக்காமல் கிணற்றுத் தவளைகள் போல் வாழ்வதும் சீனர்களை நிலையான அடிமைகளாகச் செய்துவிட்டன என்று அவருக்குத் தெரியும். வந்தவர்களுக்கெல்லாம் வரவு கூறி ஸலாம் போடச் செய்தவை இந்த வழக்கங்கள்தாம். சுமார் ஐம்பது கோடி மக்களில் பெரும்பாலானவர் வாளேந்தவோ துப்பாக்கி பிடிக்கவோ தகுதியில்லாமல் இருந்ததற்கும் இவையே காரணம். எல்லோரையும் ராணுவ வாழ்க்கையைப் போன்ற கட்டுப்பாடுடைய வீர வாழ்க்கை வாழச் செய்ய வேண்டுமானால், இவை தொலைய வேண்டும் என்று சியாங் உணர்ந்திருந்தார். இவை தொலைந்தால் சீனர்கள் புத்துயிர் பெற்று மீளுவார்கள் என்பதால், 'நவஜீவன் இயக்கம்' என்ற பெயரால் பெரிய இயக்கம் ஒன்றையே அவர் ஆரம்பித்துவிட்டார்.

நவஜீவன் இயக்கத்தை ஆரம்பித்து வைப்பதற்காகக் கூட்டப் பெற்ற ஒரு கூட்டத்திலேயே தேசத்தில் எதைச் சீர்திருத்தவேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்பதைக் காட்டுவதற்கு ஓர் உதாரணம் கிடைத்தது. நான்சாங் நகரில் மார்ச் 11ல் லட்சம் ஜனங்கள் கூடியிருந்தனர்; 142-ஸ்தாபனங்கள் அக்கூட்டத்தில் கலந்துகொண்டன. கூட்டத்தின் நடுவே புகைப்படம் எடுப்பதற்காக ஒரு சீனன் காமிராவை வைத்துக்கொண்டு அங்கும் இங்கும்

சுற்றிக் கொண்டிருந்தான். அவன் உடைகளைச் சரியாக உடுத்திக்கொள்ளாமல் அசுத்தமாகவும் இருந்தான். சியாங் அந்தப் பெருங் கூட்டத்தினருக்கு அவனைச் சுட்டிக் காட்டினார். கையில் மிக நவீனமான ஒரு கருவியை வைத்துக் கொண்டிருந்தும், அவன் பழைய அநாகரிக வாழ்க்கையின் சின்னமாக ஒரு பாஷாண்டியைப் போல இருப்பதை அவர் எடுத்துக் காட்டினார். நவஜீவன் இயக்கம் இத்தகைய ஆசாமிகளை யெல்லாம் துப்புரவாகவும் முறையாகவும் நடந்துகொள்ளும்படி செய்யவே ஆரம்பிக்கப் படுகிறது என்று அவர் விவரித்துச் சொன்னார்.

நல்ல காரியம் எதற்கும் ஆட்சேபம் வருவது இயற்கை. சிலர் இந்த இயக்கத்தின் பெருமையையும், அளவையும், பயனையும் அறியாமல் முதலில் ஏளனம் செய்து வந்தனர். ஆனால், பின்னால் இயக்கம் தேசம் முழுதும் காட்டுத் தீயைப் போல் பரவிப் பழைய நாற்றம பிடித்த குப்பைகளை யெல்லாம் எரித்துத் தள்ளி வந்ததைக் கண்டு அவர்கள் வாயை மூடிக் கொண்டு விட்டனர். இயக்கம் ஐரோப்பிய மறு மலர்ச்சி இயக்கத்திற்கு நிகராகப் பலன் கொடுக்க ஆரம்பித்தது.

இயக்கத்தை ஆரம்பித்து வைக்கையில் சியாங், சென்ற யுத்தத்தில் தோல்வியடைந்த ஜெர்மனி வெகு விரைவில் எப்படி முன்னேறி வலிமை பெற்றது என்பதையும், ஜப்பானிய மக்கள் தங்கள் வாழ்க்கையை எவ்வளவு கண்டிப்பான ஒழுங்கில் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டி, அவர்களுடைய நற்குணங்கள் பலவற்றைச் சீனர்கள் பின்பற்ற வேண்டும் என்று கூறினார். ஜெர்மனியும் ஜப்பானும் நிறைவேற்றிய விஷயங்களைச் சீனாவும் கடைப்பிடிப்பதற்குச் சீன மறுமலர்ச்சி ஏற்படவேண்டும், அதற்குத் தக்க

தலைவர்களைப் பயிற்சிபெறச் செய்யவேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினர். மறுமலர்ச்சி மூலம் ஒரு புதிய சீன சமூகம் பிறக்கும் என்பது அவர் கருத்து. அவசரப் படாமல், உடனே கைமேல் பலனைக் கருதாது, வேலை செய்து வரவேண்டிய அவசியத்தையும் அவர் விளக்கினர். அழுகிக் கொண்டிருந்த சமூகம் ஆரோக்கியம் பெற்று எழுந்திருப்பதற்கு இந்த இயக்கமே சஞ்சீவி மருந்து என்று அவர் கண்டார். கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் அடிப்படையாக இருக்க வேண்டியவை விசுவாசமும் மான உணர்ச்சியுமே என்பது அவர் தீர்மானம். 'முதலில் நம் வீட்டை ஒழுங்குபடுத்தி அமைக்க வேண்டும், பிறகு தான் வெளியாருடைய ஆக்கிரமிப்புக்களை வெற்றிகரமாக எதிர்க்க முடியும்' என்று பல வருஷங்களாகவே அவர் கூறிவந்திருக்கிறார். ஆகவே காலத்திற்கு ஏற்றபடி சீனு மாறுதலடைந்து முன்னேற அவர் காட்டிய வழி மிகச் சிறந்ததாக அமைந்தது. அத்துடன் அவருடைய சீரிய ஒழுக்கமும், ஒழுக்கத்தின் அவசியத்தைப் பற்றி அவர் கொண்டுள்ள கருத்தும் புதிய இயக்கத்தின் மூலம் வெளியாயின.

இயக்கம் புதிதா யிருந்தாலும் அதன் அடிப்படைத் தத்துவங்கள் எல்லாம் பழைய அறிவாளரும் அறவோரும் அறிவுறுத்தி வந்தவைதாம். பழைய தத்துவ ஞானக் களஞ்சியத்தையும் ஒழுக்க விதிகளையும் புதிய கலைப் பண்புக்கு அடிப்படையாக அமைத்துக் கொண்டு, மேல்நாட்டு விஞ்ஞான முறைகளையும் பின்பற்றி வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே இயக்கத்தின் நோக்கம். சமூகம் முன்னேறுவதற்குக் கட்டுப்பாடு, ஊக்கமாகத் தொழில் செய்தல், கலை உணர்ச்சியுடன் கௌரவமான வாழ்க்கை ஆகிய மூன்றும் அவசியம். கட்டுப்பாட்டினுல் மக்கள் அனைவரும் தேசாபிமானமும் விசுவாசமும் கொண்டு, விதிகளுக்கு அடங்கி நடப்ப

தோடு, தேசம் முழுதிலும் ஏகமனத்துடன் வேக மாகச் செயல்புரியவும், பெரிய தேசீய சுதந்திரப் படை அமையவும் வசதி ஏற்படும். ஊக்கமாகத் தொழில் செய்வதன் மூலம், ஒவ்வொருவரும் தேசத்தின் செல்வத்தைப் பெருக்க உதவி செய்ய முடியும்; இத்துடன் தொழில் திறமையையும் வளர்த்துக்கொள்ள முடியும். இதனால் நேரம் வீணாகாமலும், பொருள்கள் வீணாகாமலும் பாது காக்க முடியும். கௌரவமாகக் கலை உணர்ச்சியுடன் வாழ்க்கையை அமைத்துக்கொண்டால், மக்கள் சுதந் திரமாயும், அடக்கத்துடனும், அமைதியாயும் வளர்ந் தோங்க முடியும். சுருங்கச் சொன்னால், வேகமாகவும், விருப்பத்துடனும், திட்டம் பிசகாமலும், செட்டும் சீருமாக வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும்; உண்பதும் உறங்குவதுமாகச் சுயநலமே லட்சியமாகக் கொண்டிராமல் பரோபகாரச் சிந்தை யுடன் பரிசுத்தமாகவும் வாழவேண்டும். இவைகளை அநுசரித்து ஒவ்வோர் ஊரிலும் பலவிதமான விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. நான்சாங் நகரில் சமையற் காரர்கள் சுத்தமாக இருப்பதற்கு மட்டும் பதினறு விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. தனி நபர்களும், ஊர்களும் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார விதிகள் மிகவும் கண்டிப்பாக அமல் நடத்தப் படுகின்றன. ஆயிரக்கணக்காகவும், லட்சக் கணக் காகவும் ஜனங்கள் கூடி, ஊர்வலங்கள் நடத்தியும், பிரசங்கங்கள் நடத்தியும் இயக்கத்தைத் தேசம் எங்கும் பரப்பி வருகிறார்கள். ஜனங்களுக்கு உபதேசம் செய்யும் பிரசாரகர்களுக்கு முதலில் உபதேசம் செய்ய வேண்டிய அவசியத்தையும் அரசாங்கம் மறக்க வில்லை.

'கண்ட இடத்தில் துப்பாதே!', 'கும்பலாகக் கூடாமல் வரிசையாகச் செல்லுங்கள்!', சுத்தமாக

இரு!', 'லாகிரி வஸ்துக்களைத் தீண்டாதே!' என்பன போன்ற விதிகளெல்லாம் ஒரே சமயத்தில் திடீரென்று அமலுக்கு வருவதென்றால், ஜனங்களுக்கு முதலில் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். 'துப்புவதற்குக் கூடவா நமக்குச் சுதந்திரமில்லை?' என்றும், 'வேர்வை கொட்டும் பொழுதுகூடச் சட்டை போடாமல் இருக்கக் கூடாது என்று கட்டாயப் படுத்தலாமா?' என்றும் சில ஜனங்கள் முணுமுணுத் தார்கள். ஆனால் இயக்கமோ நாட்டிலும் நகரங் களிலும் நன்றாகப் பரவிவிட்டது. ஊர்தோறும் போலீஸ்காரர்கள் விதிகளைக் கண்டிப்பாக நிறை வேற்றி வந்தார்கள். மூட்டை சுமக்கும் கூலிகள் தெருக்களில் போகும் பொழுது போலீஸ்காரர்கள் அவர்களை வழிமறித்து, 'சட்டைப் பொத்தான்களை நேராக மாட்டிக்கொண்டு போங்கள்!' என்று சொல்லி விடுவார்கள். கூலிகள் சுமைகளைக் கீழே இறக்கிவைத்து, பொத்தான்களை ஒழுங்காக மாட்டிக் கொண்டுதான் மறுபடியும் புறப்படுவார்கள். 'இது என்ன இழவு இயக்கமடா? யாருடைய இயக்கம் இது?' என்று அவர்கள் முனகிக்கொண்டே போவார்கள். அவர்கள் என்ன சொன்னாலும் சரி, பொத்தான்கள் மட்டும் முறையாக மாட்டப்பட் டிருக்கவேண்டும்! இல்லாவிட்டால் அடுத்த திருப் பத்தில் மற்றொரு போலீஸ்காரன் பிடித்துக்கொண்டு மூட்டைகளைக் கீழே இறக்கச் சொல்லுவான்! ஏனெனில், சியாங் கே-ஷேக், 'சமூகம் இயற்கையாக வளர்ச்சி பெற்றுத் திருந்துவதற்காகக் காத்துக் கொண்டிராமல், விசேஷ முறைகளைக் கையாண்டு நாம் சமூகத்தைத் திருத்தி அமைக்கவேண்டும்; ஒரு பெரிய புயல்காற்றின் மூலம் சமூகத்தின் பிற்போக் கான நிலைமைகளை அடித்துத் தள்ளிவிட்டு, மெல்லிய தென்றல் காற்றின் மூலம் சமூகத்திற்கு ஜீவசக்தியை யும் முறையான உணர்ச்சியையும் அளிக்கவேண்டிய

பகீரதப் பிரயத்தனம் இது' என்று சொல்லியிருந்தார். சந்தர்ப்பம் வரும் வரையில் காத்துக்கொண்டிருக்க அவர் தயாராயில்லை. சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே அவர் தீர்மானம்.

ஒரு வருஷத்திலேயே இயக்கம் விசேஷமான பலனைக் கொடுத்தது. இயக்கத்தின் முதல் வருஷ விழாவில் சியாங் புது வருஷத் திட்டத்தை விளக்கிக் கூறினார். அதை ஒரு கூட்டத்தார் கையில் ஒப்படைத்து விடாமல், கோமின்டாங் கட்சியும், அரசியல், ராணுவம், கல்வி இலாகாக்களும் சேர்ந்தே நடத்தி வைக்க வேண்டும் என்பதை வற்புறுத்தினார். முக்கியமாக உபாத்தியாயர்களும் மாணவர்களுமே வழிகாட்டி முன்னால் செல்ல வேண்டும் என்றும், புது வருஷத்தில் 'நம் கடன் நமது பணியைச் செய்வதே' என்ற வாக்கியத்தைத் தேசம் முழுதும் ஒலிக்கும்படி செய்துவிட வேண்டும் என்றும் அவர் வேண்டிக் கொண்டார். இரண்டாவது வருஷத்தில் இயக்கத்தைப் பிரசாரம் செய்யும் ஊழியர்கள் மட்டுமே லட்சம் பேர்கள் சேர்ந்தார்கள். எனினும் அந்த வருஷ முன்னேற்றம் தலைவருக்குத் திருப்தியளிக்கவில்லை. ஆகவே பன்மடங்கு அதிக உத்ஸாகத்துடன் வேலை செய்யும்படி அவர் தூண்டி வந்தார்.

அபினைச் சீனாவிலிருந்தே தொலைத்துவிட வேண்டும் என்பது வெகுநாளாக அவருடைய எண்ணம். அதற்காக அவர் பலவருஷங்களாக உழைத்தும் வந்திருக்கிறார். நவஜீவன் இயக்கம் தீவிரமாகப் பரவிவரும் பொழுது, அபினையும் ஒழித்து விடுவதற்கு அவர் திட்டங்கள் வகுத்துச் சட்டங்கள் இயற்றினார். ஒரு சீர்திருத்தவாதி முதலில் சீர்திருத்தத்தைத் தன்னிடமிருந்தே ஆரம்பிக்க வேண்டும் என்பதால், சியாங் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் முதலில் அபின் பழக்கத்தை விட்டு விடுவதற்கும் அதற்கான

சிகிச்சை பெறுவதற்கும் விதிகள் செய்தார். தாமாகச் சிகிச்சைக்கு வரும் ஜனங்கள், சிகிச்சைக்குப் பிறகு மறுபடி அபின் போன்ற லாகிரி வஸ்துக்களை உபயோகித்தால் குறைந்தபட்சம் ஐந்து வருஷக் கடுங்காவல் தண்டனை விதிக்கப் படுவார்கள். சர்க்காரால் கண்டு பிடிக்கப்பட்டவர்கள் சிகிச்சை ஸ்தலங்களுக்குப் பலவந்தமாக அழைத்துச் செல்லப் படுவார்கள். சிகிச்சைக்குப் பிறகு அவர்கள் ஐந்து வருஷத் தண்டனை அநுபவிக்க வேண்டும். அதற்கும் பின்னால் அவர்கள் போதை வஸ்துக்களை உபயோகித்தால் மரண தண்டனை விதிக்கப்படும். அபினை உபயோகிக்கும் கோமின்டாங் அங்கத்தினர்கள், அதிகாரிகள், ராணுவ அதிகாரிகள், மாணவர்கள் ஆகியோர் குறித்த காலத்திற்குள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு சிகிச்சை பெறத் தவறினால் அவர்களுக்கும் மரண தண்டனை தான்.

அரசாங்கத்திற்கு லாகிரி வஸ்துக்களிலிருந்து காலணா கூட வரியாக வர வேண்டியதில்லை என்று முதலிலேயே சியாங் கூறிவிட்டார். அவைகளை அறவே ஒழிப்பதற்காகப் பழைய சட்டங்கள் மிகவும் கடுமையாகத் திருத்தி அமைக்கப்பட்டன. லாகிரி வஸ்துக்களைத் தயாரிப்பவர்கள், விற்பவர்கள் எல்லோருக்கும் சட்டப்படி மரண தண்டனை விதிக்கப்படும். இந்தக் குற்றங்களைச் செய்வதற்கு உதவியா யிருப்பவர்களுக்கு ஆயுள் பரியந்தம் சிறைவாசத் தண்டனை விதிக்கலாம். உத்தியோகஸ்தர்களில் இந்தக் குற்றங்களில் எதையும் செய்வதற்கு உதவியா யிருப்பவர்களுக்கு யாதொரு தயவு தாட்சண்யமும் இல்லாமல் மரண தண்டனையே விதிக்கப்படும். லாகிரி வஸ்துக்களைத் தயாரிக்க உபயோகிக்கப்பட்ட கட்டடங்கள் பறிமுதல் செய்யப்படும். பின்னால் இத்தகைய விதிகள் மேலும் கடுமையாக்கப்பட்டன. லாகிரி வஸ்துக்களின் விநியோகத்தில் சம்பந்தப் பட்டவர்களின் சொத்

துக்களையெல்லாம் பறிமுதல் செய்யவும் விதி செய்யப் பட்டது. பறிமுதல் செய்த சொத்துக்களிலிருந்து, குற்றவாளிகளைக் கண்டு பிடித்துக் கொடுப்பவர் களுக்கு ஏராளமான வெகுமதிகள் வழங்குவதற்கும் வசதி செய்யப்பட்டது.

இந்தச் சட்டங்களின் கடுமையைப் பார்த்தாலே சீனாவில் அபின் பழக்கம் எவ்வளவு தூரம் வேரூன்றி யிருந்தது என்பது விளங்கும். அபின் சீனர்களின் வாழ்க்கையைத் தொலைத்து, உடல்களைப் பசையற உலர்ந்த கட்டைகளாக்கி விட்டது. உயர்ந்த அதிகாரிகள் முதல் கூலிகள் வரை அநேகர் அதற்கு அடிமையாயிருந்தனர். எதையும் செய்து எவ்வகை யாலும் அந்தப் பேயை நாட்டைவிட்டே ஓட்டிவிட வேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்ததில் வியப்பு ஒன்றுமில்லை. ஜனங்களை லாகிரி வஸ்துக்களுக்கு இரையாக்கித்தான் கலால் வருமானம் பெறவேண்டும் என்று எண்ணுவதற்குச் சீன சர்க்கார் அந்நியருடைய ஆதிக்கத்தில் இல்லை. குடிகள் சோறு கிடைக்காத பொழுது குடித்து மகிழட்டும் என்று சொல்லக்கூடிய கேவல நிலையில் சீன சர்க்கார் இருக்கவில்லை. அப்படிச் சொன்னால் சர்க்கார் இரண்டு வகைக் குற்றங்களைச் செய்வதாகும். ஒன்று, சோறு கிடைக்காமல் இருக்கும் நிலையில் குடிகளை வைத்திருப்பது, இரண் டாவது, அவர்களைப் போதையில் ஆழ்த்துவது. ஆகவே சீன அரசாங்கம் போதையை ஒழிக்க ஆரம் பித்ததும் ஜனங்களுக்கு உணவும் வேலையும் கிடைத்து வருவதற்காகப் புதிய பொருளாதாரத் திட்டம் ஒன்றையும் ஆரம்பித்து வைத்தது.

ஜனங்களின் பொருளாதாரப் புனருத்தாரணத் திட்டம் நவஜீவன் இயக்கத்திற்குத் துணையாக 1935-ஆம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. மிகவும் பிற்போக்காயிருந்த குவெய்செள மாகாணத்தில் சியாங் அதை ஆரம்பித்து வைத்தார். விவசாய

அபிவிருத்தி, சுரங்கங்களைப் பாதுகாத்தல், தொழில்களுக்கும் வர்த்தகத்திற்கும் உதவிபுரிதல், முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் கூட்டுறவு அதிகரிக்கச் செய்தல், ரஸ்தாக்கள் அமைத்தல், தந்தி தபால் வசதிகளைப் பெருக்குதல், பண வரவு செலவுகளைச் செம்மையான நிலையில் வைத்தல், தொழில்களுக்கு வேண்டிய மூலதனம் உதவுதல், தேசீயப் பெருந் தொழில்களை ஸ்தாபித்தல் ஆகியவையே அந்த இயக்கத்தின் நோக்கம் என்பதைச் சியாங் பத்திரிகைகளுக்கு அறிவித்தார். இயக்கத்தின் முதற்படியாகப் பல வரிகள் குறைக்கப்பட்டன. மத்திய சீனப் பாங்கி, சீனப் பாங்கி, போக்குவரத்து வசதிகளுக்கான பாங்கி ஆகியவைகளின் மூலதனம் அதிகரிக்கப்பட்டது. பொருளாதாரச் சீர்திருத்தங்களைப்பற்றி ஜனங்களிடையே தீவிரமாகப் பிரசாரம் செய்வதற்கும் சியாங் ஏற்பாடு செய்தார். பொருளாதார விஷயங்களைக் கவனிப்பதற்குத் தனியே பொருளாதாரக் கவுன்ஸில் இருந்தபோதிலும், அது வேகமாக வேலை செய்வதற்குப் புதிய இயக்கம் தூண்டுகோலாக அமைந்தது.

பொருளாதார இயக்கம் சாதிக்கக் கூடிய காரியங்களைப் பற்றிச் சியாங் கூறியிருப்பதாவது: 'ராணுவச் சீர்திருத்தத்திற்கு முன்னால் ஆட்சி முறைச் சீர்திருத்தம் வந்துவிட வேண்டும். அவைகளின் கூடவே தேசத்தின் இயற்கைச் செல்வங்களைத் தேடிச் சேர்ப்பதற்கும், புதிய தொழில்களை ஏற்படுத்துவதற்கும், வர்த்தகத்திலும் விவசாயத்திலும் பழைய முறைகளைச் சீர்திருத்துவதற்கும் உறுதியான வழிகளைக் கைக்கொள்ள வேண்டும். பல விஷயங்களிலும் சீர்திருத்தங்கள் செய்யவேண்டும். தேசீயப் புனருத்தாரணத்திற்கு முதலில் கவனிக்க வேண்டிய விஷயம் விவசாய அபிவிருத்தியாகும். புது ரெயில் பாதைகள் அமைக்கவேண்டும். சாமான்

களை அனுப்பவும், பிரயாணம் செய்யவும் முன் வருப வர்களுடைய சௌகரியத்திற்காக இப்பொழுதுள்ள ரெயில்களையும் லாபகரமாக நிர்வகித்து வர வேண்டும். போக்குவரத்து வசதிகள் எல்லா வற்றையும் விரிவு படுத்தும் கொள்கை நிரந்தரமாக இருந்துவர வேண்டும்.

'பொது ஜனங்களின் உள்ளத்தையும் அதிகாரி களின் உள்ளத்தையும் காலத்திற்குத் தேவையான விஷயங்களைப்பற்றிப் பண்படுத்துவதற்காகவே ஜனங் களின் பொருளாதாரப் புனருத்தாரணத் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது.* அதன் நோக்கம் சீனவையே புதுப்பித்துக் கட்டுவது. வெறும் விவசாய ராஜ்ய மாக இருப்பதைத் தொழில் மிகுந்ததாக மாற்ற வேண்டியதே அதன் வேலை.'

இந்த வேலைகளைப் பற்றிச் சொல்வது எளிது, ஆனால் செய்து முடிப்பதுதான் கஷ்டம். கஷ்டப் படாமல் சுகத்தை அநுபவிக்கவும் முடியாது. ஆகவே சீன அரசாங்கம் பொருளாதார முன்னேற்றம் கருதிப் பல புதிய சட்டங்களை இயற்றியது. தொழில்களில் பொருளை முடக்கியவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தது. நாணயச் செலாவணியில் பணத்திற்குப் பதிலாக நோட்டுகள் விநியோகிப்பது பற்றித் தக்க ஏற்பாடு செய்தது. வரிகள் கண்டபடி விதிக்கப் படாமல் அவைகளை முறைப்படுத்தி அமைத்தது. சுரங்கத் தொழில், கம்பெனி அமைப்பு, தொழிற்சாலை, தொழிலாளர், கூட்டுறவுச் சங்கங்கள், குடியான வருக்குக் கடன் வசதிகள், பாங்கித் தொழில் ஆகிய பல விஷயங்களைப் பற்றியும் ஆராய்ச்சிசெய்து அரசாங்கம் தக்க சட்டங்களை இயற்றி வைத்தது. இந்த வேலைகளோடு, அடிக்கடி வெள்ளங்கள் ஏற் பட்டுச் சேதம் விளைப்பதைத் தடுக்கவும், வீணாகப் போகும் ஆறுகளின் நீரைத் தேக்கி வைக்கவும் ஏற்பாடுகள் செய்யும்படி சியாங் வற்புறுத்தி வந்தார்.

ஏனெனில், 1935–இல் மட்டும் ஹூப்பே, ஹூனான், கியாங்ஸி, ஆங்வெய் மாகாணங்களில் வெள்ளத்தினால் ஒரு கோடி அநாதைகள் திண்டாடும்படியும், ஐம்பது கோடி டாலர் பெறுமானமுள்ள பொருள்கள் சேதமாகும்படியும் நேர்ந்துவிட்டது. புதிதாகச் செய்ய வேண்டிய வேலைகளுக்கு ஜனங்களைக் கட்டாயப் படுத்தி வேலை வாங்கும்படியும், தரிசு நிலங்களைத் திருத்திச் சாகுபடி செய்யவும், பொருள் விநியோகத்தைத் திட்டம் செய்யவும், சுரங்கங்களின் உற்பத்தியைப் பெருக்கவும், சியாங் யோசனை கூறினார். இயற்கையின் சக்திகள் மக்களை அழித்துவிடாமல் பாதுகாத்தால்தான் வாழும் உரிமை இருக்கும் என்பதை அவர் மக்களுக்கும் எடுத்துக் காட்டினார். காலியாயுள்ள தோட்டங்களில் மரங்கள் நட்டு வைக்கவும், காடுகளை நெருப்பிட்டு அழிக்காமல் பாதுகாக்கவும் விசேஷ முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இவ்வாறு ஒரு பக்கத்தில் ஜனங்களுடைய உடல் வலிமையும், ஒழுக்கமும், ஆத்மிக உணர்ச்சியும் வளர்க்கப்பட்டும், மறு பக்கத்தில் சுபிட்சமாக வாழும் வழிகள் அமைக்கப்பட்டும் வந்ததற்குச் சியாங் கே-ஷேக்குடன் பல விசேஷ நிபுணர்களும் ஒத்துழைத்தார்கள். இதன் பலனாகப் பழைய கொள்கைகளும், பழக்க வழக்கங்களும், முறைகளும் நாலு பக்கத்திலும் தாக்கித் தகர்க்கப்பட்டன. நுட்பமான நூதனக் கருவிகள் சிருஷ்டிக்கவும், பயிற்சி பெற்ற திறமைசாலிகள் தொழில்களுக்கு வரவும், உற்பத்திப் பொருள்கள் சில இடங்களில் மட்டும் தங்கிவிடாமல் பல இடங்களுக்கும் போய்ச் சேரும்படி வசதிகள் செய்யவும், அறியாமை, அவநம்பிக்கை, மூடப் பழக்கங்கள், சிக்கனமில்லாமை ஆகியவைகளுக்குப் பதிலாக நேர்மையான பொருளாதாரத் தத்துவங்கள் நிலைபெறவும் நாடெங்கும் பிரசாரம் நடந்தது. விவ

சாயக் கல்விக்கும் தொழிற்கல்விக்கும் தனிப் பள்ளிக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஸ்திரீகளுக்கு வீட்டு வேலைகளோடு குழந்தை வளர்ப்பு, உடைகள் தயாரித்தல், காயம்பட்டோருக்கும் நோயாளருக்கும் சிகிச்சை செய்தல் ஆகியவை பற்றித் தனிக் கல்விச் சாலைகள் போதித்து வந்தன. எந்த இடத்திலும், யாரையும் சிந்தையை அடக்கிச் சும்மா இருக்க விடவில்லை. இதற்கெல்லாம் கைம்மாறாக ஜனங்களும் அரசாங்கத்தை அதிகமாக நேசிக்கலாயினர். குடியானவர்களுக்கு விதைகளும், கடனும், கூட்டுறவு சங்கங்களும் கிடைத்தவுடன் அவர்கள் கோமின்டாங் சபையையும் அது நடத்தி வந்த அரசாங்கத்தையும் போற்ற ஆரம்பித்தனர்.

சீனாவின் மறு பிறப்புக்காகவே சியாங் பிறந்திருந்தார் என்று சொல்லலாம். அவருடைய பிறப்பும் வளர்ப்பும் அவர் வாழ்க்கையைச் செம்மையான அடிப்படையில் அமைத்ததோடு நில்லாமல், கோடிக் கணக்கான குடும்பங்களை ஒழுங்குபடுத்தி அமைக்கவும் காரணமாயின. நிறைந்த கல்வியும் கேள்வியும் இல்லாமல் பெரிய தேசத்தின் பிரச்னைகளைப் பரிசீலனை செய்ய முடியுமா? சுயநலத் தியாகமும், துறவுக் குணமும், தவ முறையும், விடா முயற்சியும், தைரியமும், உறுதியும் இல்லாத ஒரு தலைவரால் தாம் கண்டுபிடித்த பரிகாரங்களைச் செயலில் நிறைவேற்றி வைக்க முடியுமா? சர்வ ஜனங்களிடமும் பரந்த அன்பு இல்லாமல் ஒரு தலைவர் தம் அதிகாரங்களையும் ஆதிக்கத்தையும் பெருக்கிக் கொண்டே போனால், முடிவில் கொடிய சர்வாதிகாரியாகி விடுவதைத் தவிர, தேசம் சன்மார்க்கத்தில் புத்துயிர் பெற்று எழுந்து வலிமையடைய முடியுமா? ஆகவே, சீனாவின் புனர் ஜன்மத்திற்காக நவஜீவன் இயக்கத்தை ஆரம்பித்து வைத்த தலைவர் மேற்கூறிய நற்குணங்கள் எல்லாம்

ஒருங்கே அமையப் பெற்று விளங்கினர் என்பதே சீனாவின் பாக்கியமாயிற்று.

'தாயொக்கும் அன்பில்,
தவமொக்கும் நலம் பயப்பில்,
சேயொக்கும் முன்னின்று
ஒருசெல்கதி உய்க்கும் நீரால்...'

என்ற புகழ் முழுதும் சியாங்குக்குப் பொருத்தமாக இருக்கிறது.

# VI

## பிறப்பும் வளர்ப்பும்

'நான் புரட்சிக்காகவே பிறந்தேன்.'

—சியாங் கே-ஷேக்

---

மகாத்மா காந்தி, லெனின், ஸ்டாலின், ரூஸ்வெல்ட், சர்ச்சில், சியாங் கே-ஷேக் ஆகிய பெருந்தலைவர்கள் உலகத்தில் ஏக காலத்தில் தோன்றியதே பெரிய விசித்திரமாகும். இவர்களில் ஒவ்வொருவரும் நெருக்கடியான காலத்தில் தம்முடைய தேசத்திற்குத் தலைமை தாங்கி வழிகாட்டி வந்திருக்கின்றனர். ஒவ்வொருவருடைய தேசமும் வெவ்வேறு நிலையில் இருப்பது. ஒவ்வொருவரும் மாறுபட்ட பல குணங்களையும் அநுபவங்களையும் பெற்றவர். இவர்களுக்குள் எத்தனை வேற்றுமைகள் இருந்தபோதிலும், உலகத் தலைவர்கள் என்ற மாலையில் இவர்களை ஒளியுடன் திகழும் மணிகளாக எண்ணுவது வழக்கமாயிருக்கிறது. இவர்கள் எல்லோரிலும், கொடிய இன்னல்களைத் தாண்டி, அதிகக் கஷ்டமான காரியங்களைச் சாதித்து வெற்றி கண்டவர் சியாங் கே-ஷேக். சின்ன பின்னமாகச் சிதறிக்கிடந்த சீனாவை ஒன்று படுத்தியவர் அவர்.

ஆயுதமில்லாமல் மெலிந்து தளர்ந்து கிடந்த அந்தத் தேசம் ஆறு வருஷத்திற்கு மேலாக ஜப்பானை எதிர்த்துப் போராடும்படி தலைமை வகித்து நடத்தியவர் அவர். யுத்த காலத்தில் குழப்பமும் கொந்தளிப்பும் ஏற்பட்டுத் தேசம் மறுபடி குலைந்து விடாமல் உறுதிப்படுத்தி வைத்திருப்பவர் அவர். ஸ்டாலின் நாஜிப் படைகளை எதிர்ப்பதற்குப் போதிய போர்க் கருவிகளும், பயிற்சி பெற்ற படைகளும், புனருத்தாரணம் செய்யப்பெற்ற புதிய சமூகமும் தயாராக இருந்தன. இவை ஒன்றும் இல்லாமலே சியாங் கே-ஷேக், படையெடுத்து வந்த ஜப்பானுக்குப் பணிய மறுத்துப் போர் தொடங்கிவிட்டார். நம்முடைய பக்கத்தில் சேர்ந்துள்ள நாடுகள் எதிலும் சீனுவைப்போல் ஒரு மனிதரின் விசேஷச் செல்வாக்குப் பரவியுள்ள நாடு அநேகமாக வேறில்லை. அவருடைய பெயர் சியாங் கே-ஷேக். சீனுவில், "ஜெனரலிஸ் ஸிமோ"* என்றே எங்கும் அவர் அழைக்கப்படுகிறார்; சில சமயங்களில் "ஜிஸ்ஸிமோ" என்று அன்புடன் சுருக்கமாகக் கூறப்படுவதும் உண்டு' என்று வென்டல் வில்கி என்ற அமெரிக்கத் தலைவர் கூறியிருக்கிறார்.

சியாங் 1887-ஆம் ஞு அக்டோபர் 31-உ சிகௌ என்ற ஊரில் பிறந்தவர். சிகௌ பட்டிக்காடும் அன்று, பெரிய நகரமும் அன்று. அது செகியாங் மாகாணத்தில் பெங்குவா ஜில்லாவில் இருக்கிறது. ஷாங்காய் நகரிலிருந்து சிகௌவுக்குப் பத்து மணி நேரத்தில் போய்ச் சேரலாம். ஊரைச்சுற்றி எங்கும் குன்றுகள் நிறைந்திருக்கின்றன. ஏராளமான நீர் வீழ்ச்சிகளுடன் விளங்கும் குன்றுகளும் காடுகளும் பார்க்க ரமணீயமாக இருப்பவை. சிகௌ ஒரு

---

* ஜெனரலிஸ்ஸிமோ-தரைப்படை, கடற்படை எல்லாவற்றிற்கும் தலைவர், அல்லது அநேகம் படைகளுக்கு அதிபதி என்ற பொருளில் உபயோகமாகும் ஆங்கிலப்பெயர்—சேனுபதி.

குன்றின் பள்ளத்தாக்கில் அமைந்திருக்கிறது. ஞானிகள் மலைகளின் மேல்தான் அவதரிப்பார்கள் என்று சீன ஜனங்களிடையே ஒரு நம்பிக்கை உண்டு. ஞானிகள் மலைகளிலே தோன்றினாலும் தோன்றா விட்டாலும் மலைகளைத் தேடிப் போய்விடுவது நம் நாட்டிலும் வழக்கமா யிருக்கிறது. மலைகளில் தோன்றியவர்கள் எல்லோரும் அறிவாளிகள் என்ப தில்லை. எனினும் சியாங் மலையிலேயும் தோன்றினார், அறிவாளியாயும் இருந்தார்.

குடும்பத்தை வைத்துத்தான் சமூகம் அமைக்கப் படுகிறது என்று சீனர்கள் சொல்லுவார்கள். குடும்பத்தின் கௌரவம் எவ்வளவு முக்கியம் என்பது இதிலிருந்தே தெரியும். சியாங் கே-ஷேக்கின் முன்னோர்கள் விவசாயிகள். அவருடைய பாட்டனார், குடியானவரா யிருந்ததோடு, கல்வி கேள்விகளில் சிறந்த அறிஞராயும் இருந்தார். அவருக்குப் பேரனிடத்தில் அளவற்ற அன்பு உண்டு. சியாங்கின் தந்தை ஸு-ஆன் என்பவர். அவர் பரோபகாரியாயும் நீதிமானாயும் விளங்கி வந்தார். ஊரில் ஏற்படும் வழக்குகளை எல்லாம் அவரே தீர்த்து வைப்பது வழக்கம். இதனால் மக்கள் ஏராளமான பொருளை வீணாக்கிப் பகையை வளர்த்துக் கொள்ளாமல் சகிப்புத் தன்மையுடன் ஒற்றுமையாக வாழ முடிந்தது. சாட்சிக்காரன் காலில் விழுவதைக் காட்டிலும் சண்டைக்காரன் காலில் விழுவது நல்லது. இருவர் கால்களிலும் விழாது வழக்கை ஸு-ஆனிடம் ஒப்படைத்து விடுவது ஜனங்களுக்கு எல்லாவற்றிலும் மேலானதாக இருந்தது. அவர் நடு நிலையில் நின்று நியாயம் சொல்லி வந்த பெருமையை இன்றும் ஜனங்கள் பாராட்டி வருகிறார்கள்.

சியாங் சிறு வயதிலேயே தாயை இழந்தார். ஒன்பதாவது வயதில் தந்தையையும் இழந்துவிட்டார்.

ஸே—ஆனுக்கு மூன்று மனைவியர். மூன்ருவது மனைவியே தம் சக்களத்தியின் குமாரராகிய சியாங்கை வளர்க்கும் பெருமையையும் சிரமத்தையும் மேற்கொண்டிருந்தார். 'ஒரு சிற்றன்னை வேருெருத்தி பெற்ற பிள்ளையை இவ்வளவு அன்பாக வளர்க்க முடியுமா?' என்று ஊரெல்லாம் ஆச்சரியப்படும்படி அவர் வளர்த்திருக்கிருர். சியாங்குக்கு அன்னை என்ருல் இந்தச் சிற்றன்னைதான். ஆகவே நாமும் அவரை அன்னை என்றே குறிப்பிடுவோம்.

அன்னை சிறந்த அறிவாளி. கல்வி கற்றவர், கட்டுப்பாடுடையவர். குழந்தையை வளர்ப்பதில் மிகுந்த அன்பு காட்டியதோடு நில்லாமல் கண்டிப்பாகவும் இருந்து வந்தார். குழந்தைகளை அடித்து வளர்க்க வேண்டுமா, அடியாமல் வளர்க்கவேண்டுமா என்பதைப்பற்றி அறிஞர்களுக்குள்ளே இன்னும் அபிப்பிராய பேதம் இருந்து வருகிறது. உலகம் புகழும் பெர்னுர்ட் ஷா குழந்தைகளை அடிப்பவர்களைப் பிசாசுகளுக்கு ஒப்பிடுகிருர். மற்ருேர் ஆங்கில அறிஞரான டீன் இஞ்ஜ், என்று குழந்தைகளை அடித்துப் போதிப்பதை நிறுத்திளுேமோ அன்று முதல் உலகம் பாழாய்ப் போய்க்கொண்டிருக்கிறது என்று அபிப்பிராயப்படுகிருர். சியாங்கின் அன்னை டீன் இஞ்ஜ் கூட்டத்தைச் சேர்ந்தவர். சிறு வயதிலேயே சியாங் கட்டுப்பாடான வாழ்க்கையை விட்டு அப்படி இப்படி விலகுவதற்கு அவர் விடுவதில்லை. கண்ணுக்குள் வைத்துக் காப்பாற்றுவது போல் அவரைப் பேணி வந்தார். கிராமப் பள்ளியில் கல்வி கற்கும்படி ஏற்பாடு செய்தார். வீட்டு வேலைகளைக் கேவலம் என்று பாராமல் செய்யும்படி வற்புறுத்தி வந்தார். அந்தக் காலத்தில் சியாங் வீடு கூட்டியிருக்கிருர், மெழுகியிருக்கிருர், சமைத்திருக்கிருர், பாத்திரங்களும் தேய்த்திருக்கிருர். இவை மட்டுமல்ல; இன்றும் அப்படியெல்லாம் சிறுவயதில்

செய்ததாகப் பெருமையுடன் பேசிக்கொண்டிருக்கிருர். 'கொஞ்சம் அரிசியைச் சிந்தி விட்டாலோ, என் உடைகளைச் சரியாக உடுத்திக்கொள்ளாமல் இருந்தாலோ, நான் கடுமையாகத் தண்டிக்கப்பட்டு வந்தேன்' என்று அவரே சந்தோஷமாகக் கூறுகிருர்.

எல்லோருக்கும் அன்னை வாய்த்ததுபோல அல்ல சியாங்கின் அன்னை. அந்த அம்மையாருடைய உபதேசம் மைந்தரின் வாழ்க்கை முழுதும் ஒரு பொற் சரடுபோல் ஓடிக் கொண்டிருக்கிறது. அவர் புத்த மதத்தை ஆர்வத்துடன் பின்பற்றி வந்தார். பழைய சீன மகான்களின் உபதேசங்களில் திளைத்து ஊறியிருந்தார். சியாங் தனி மனிதராக விளங்குவதைக் காட்டிலும் இந்த அன்னையின் புதல்வராகவே விளங்குகிருர் என்று சொல்லலாம். அவர் தம்முடைய ஐம்பதாவது பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது, அருள் சுரந்து தம்மை வளர்த்த அன்னையைப் பாராட்டி ஒரு விசேஷ அறிக்கை வெளியிட்டார். அதில் தாயின் பெருமையும், அந்தத் தாயின் ஐம்பது வயதுக் குழந்தையின் பெருமையும் ஒளிர்வதால், அதன் முக்கியப் பகுதிகள் கீழே கொடுக்கப் பட்டிருக்கின்றன:

'என்னுடைய வாழ்க்கையில் பெரும் பகுதியைப் புரட்சி இயக்கத்திற்காகச் செலவிட்டு, நான் என் தேசத்திற்காகச் செய்யக் கருதும் வேலையில் நூறில் ஒரு பங்குகூடச் செய்து முடிக்கு முன்பாக, எனக்கு ஐம்பது வயதாகிவிட்டது. அரசாங்கத்தால் கல்வி அளிக்கப் பெற்று, முப்பது வருஷம் போஷிக்கப் பெற்று, வயது வந்ததும் நான் ராணுவத்தில் சேர்ந்து அதுமுதல் தேசியப் புரட்சிக்காக என்னை அர்ப்பணம் செய்துகொண் டிருக்கிறேன்.

'இந்த வருஷங்களிலெல்லாம், நான் உண்டதும், உடுத்ததும், தினந்தோறும் உபயோகித்த பொருள்

களும், அரசாங்கத்தினிடமிருந்து, அதாவது பொது மக்களின் உழைப்பிலிருந்து, பெற்றவை. தேசத்திற்கு என் கடன் பெரிதாகவே உள்ளது......

'என்னுடைய உபாத்தியாயர்களுடைய உபதேசங்களும், தோழர்களுடைய உதவியும், கூட்டாளிகளுடைய தியாகமும் எனக்கு இப்பொழுது ஞாபகத்திற்கு வருகின்றன. அவைகள் என் கண்முன்பு இப்பொழுது நடப்பவை போல் இருக்கின்றன. பல திறப்பட்ட உணர்ச்சிகளுடன் அவைகளைச் சிந்தித்துப் பார்க்கிறேன்.

'இத்தகைய ஆழ்ந்த நினைவுகளின் இடையே தந்தையை இழந்த சிறுவனாகிய என்னைப் படிப்பிக்கவும் வளர்க்கவும் எவ்வளவோ சிரமத்தை மேற்கொண்ட என் அன்னையின் மறக்க முடியாத ஞாபகமும் எழுகின்றது. இப்பொழுது அவளுடைய சமாதி அருகேயுள்ள மரங்கள் ஓங்கி உயர்ந்து பருத்து வளர்ந்திருந்த போதிலும், நான் செய்து முடித்த காரியம் எவ்வளவு அற்பமானது என்பதையும், அவள் என்பால் வைத்த நம்பிக்கையின் அளவுக்குத் தக்கபடி நான் கடமை ஆற்றத் தவறிவிட்டேன் என்பதையும் உணர்கிறேன்...

'அந்தக் காலத்தில் என் குடும்பத்தின் கஷ்டமான நிலைமை வர்ணிக்கும் தரமன்று. என் அன்னையின் அன்பினாலும், விடாமுயற்சியாலுமே குடும்பம் அழிந்துவிடாமல் பாதுகாக்கப் பெற்றது. குடும்பத்தை எப்படியாவது பாதுகாத்துவிட வேண்டியது என்று அவள் ஒரே பிடியாகத் தீர்மானித்தாள். அதே உறுதியுடன் குழந்தைகளையும் வளர்த்து வந்தாள்.

'அவளுடைய வேலை எளிதாக இல்லை. யாரும் அதைப் பார்த்துப் பொறுமைப்படவும் முடியாது. ஏனெனில் அவள் ஒவ்வொரு காரியத்தையும் தானே கவனிக்க வேண்டியிருந்தது. சிறுவனாகிய என்னிடம்

அவள் மிகவும் பிரியமாயிருந்தாள்; ஆனால் அவளுடைய அன்பு சாதாரணத் தாயினுடையதைக் காட்டிலும் விசேஷமானது. அவள் மிகவும் கண்டிப்பானவள். நான் அதிகச் சேஷ்டைகள் செய்த பொழுது அவள் என்னைத் தண்டிக்காமல் விடுவதில்லை.

'நான் வீட்டுக்குத் திரும்பி வரும்பொழுது நான் எங்கே சென்றிருந்தேன் என்பதையும், என்ன செய்து கொண்டிருந்தேன் என்பதையும், பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போது அன்றன்று நடந்த பாடத்தைப் பற்றியும் கேட்பாள். நான் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற ஒழுக்க முறையை அவளே கற்பித்தாள். என் உடல் பயிற்சி பெறுவதற்கான வேலைகளைச் செய்யும்படி சொல்லுவாள். அவளுடைய நேரமும் சக்தியும என் நலனைக் கருதியே செலவிடப் பட்டன என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிடலாம்.

'வயது வந்ததும் ராணுவக் கல்வி பெறவேண்டி நான் வெளிநாடு செல்ல விரும்பினேன். முதலில் என் உற்றார் உறவினர்கள் என் தீர்மானத்தைக் கண்டு வியப்படைந்தார்கள். சிலர் எதிர்த்தார்கள். என்னுடைய தாயின் மன உறுதியும் எனக்குத் தேவையான பணம் சேகரித்துக் கொடுக்க அவள் எடுத்துக்கொண்ட முயற்சியும் இல்லாவிட்டால், அவர்கள் என் விருப்பம் நிறைவேருமல் தடுத்திருப்பார்கள். பிறகு நமது தேசியப் புரட்சியின் அடிப்படையான தத்துவம் என் உள்ளத்தில் ஆழமாக வேரூன்றியபொழுது, நான் கட்சிக்காகவும் சமுதாயத்திற்காகவும் என்னை அர்ப்பணம் செய்யத் தீர்மானித்தேன். அதனால் மிகுந்த கஷ்டமும் அபாயங்களும் நேர இருந்தன. அந்தச் சமயத்தில், என் பந்துக்கள் எல்லோரும் என்னுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளவே மறுத்துவிட்டனர். நான் என்னென்ன செய்யக் கருதினாலும் அவைகளில் நம்பிக்கை

கொண்டு, ஆத்மிக வழியிலும், பொருள் உதவியிலும் தன்னால் இயன்றதையெல்லாம் செய்து வந்த ஓரே உயிர் என் அன்னை தான்......17- வருஷ காலமாக - அதாவது, ஒன்பது வயதில் நான் என் தந்தையை இழந்ததிலிருந்து என்னுடைய 25-வயது வரை- என் தாய் குடும்பக் கஷ்டங்கள் இல்லாமல் ஒரு நாள் கூடக் கழித்ததில்லை...

'புரட்சியின் ஆரம்ப நாட்களில் நான் முதலில் ஏமாற்றமடைந்த பொழுது, அன்னை மறுபடி என் உதவிக்கு வந்தாள். பெற்றோரிடமுள்ள பக்தியைச் சமூகம் முழுவதற்குமே காட்டும் முறையை அவள் எனக்குக் கற்பித்தாள். முன் நாட்களில் வீட்டுக் கஷ்டங்களை நாங்கள் எப்படிச் சரிப்படுத்திக் கொண்டோம் என்பதை ஞாபகப்படுத்தி, அதே தத்துவத்தைச் சமூகம் முழுவதற்கும் உபயோகிக்கும்படி கூறினாள். அதன் மூலம் மானிட சரித்திரத்திலிருந்தே அநீதியும் கொடுமையும் ஒரே யடியாய்த் தொலையும்படி வழி காட்டினாள். பெற்றோரிடமுள்ள பக்தி விசுவாசத்திற்கு ஒரு மகனுடைய கடமைகளை மட்டும் செய்தால் போதாது என்றும், சமூகத்தின் காரியத்திலும் தவறாத பக்தி காட்டவேண்டும் என்றும் அவள் என் மனத்தில் பதிய வைத்தாள்.

'இந்த நல்லுபதேசங்கள் எல்லாம் இந்த உலகில் என் வாழ்க்கைக்கு வழி காட்டுவதற்காக என் அன்னை கூறியவையாகும். காலஞ்சென்ற என் அன்னையின் விருப்பப்படியே ஒவ்வொரு காரியத்தையும் செய்ய வேண்டும் என்று எப்பொழுதும் நான் தீவிரமாக விரும்பிவந்த போதிலும், இதுவரை அவள் எதிர்பார்த்த அளவுக்கு நான் நிறைவேற்றவில்லை. நாங்கள் இருவரும்—விதவையான ஒரு தாயும் தந்தையை இழந்த புதல்வனும்—

கற்பனையாக அன்றி, வாழ்க்கையில் நிதரிசனமான கஷ்டங்களின் நடுவே வாழ்ந்து வந்ததை எண்ணுந் தோறும், என் தாயின் அபிலாஷைகளைத் தக்க முறையில் நிறைவேற்றி வைக்கும் ஆற்றல் எனக்கு இருக்கவேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன்...'

'சுவர்க்கம் உன் தாயின் பாதத்தடியில் இருக்கிறது' என்று நபிகள் நாயகம் உபதேசித்தார். சியாங் கே-ஷேக் அப்படியே அதைக் கண்டு கொண்டார்.

சிறு வயதில் சியாங் குன்றுகளிலிருந்து பெருகி வந்த சிற்றாறுகளைப் போய்ப் பார்த்துக்கொண்டிருப்பது வழக்கம். கூட்டம் கூட்டமாக மீன்கள் வெள்ளத்தை எதிர்த்து நீந்துவதைப் பார்த்துக் கொண்டேயிருப்பார். அவைகள் நீந்துவது பட்டாளங்கள் அணிவகுத்துச் செல்வதுபோல் அவருக்குத் தோன்றும். இளமையில் அவர் அதிகத் துஷ்டத்தனம் செய்ததாகத் தெரியவில்லை. ஒரு சமயம் மட்டும் உணவெடுத்துச் சாப்பிடுகிற மூங்கில் குச்சி ஒன்றைத் தொண்டையில் வெகுதூரம் செலுத்திக்கொண்டு விட்டார். வயிற்றில் எவ்வளவு ஆழமிருக்கிறது என்று பார்ப்பதற்காக இந்தப் பரீட்சையை நடத்திவிட்டார்! பிறகு அவருடைய பாட்டனார் வந்து மிகவும் சிரமப்பட்டுக் குச்சியை வெளியே எடுத்தாராம்.

படிப்பில் சியாங் சாமர்த்தியமாயில்லாமல், விளையாட்டுக்களில் தலைமை வகிப்பதில் மிகவும் ஊக்கமாக இருந்தாராம். அந்தப் பருவத்திலிருந்தே ஒழுக்க முறைகள் அவருக்குப் பழக்கமாகி விட்டன. ஒரு சமயம் ஒரு சிறு பையனைப் பெரிய மாணவன் ஒருவன் அடித்துவிட்டான். வழக்கு சியாங்கினிடம் வந்தது. அவர் வகுப்பை விட்டு முன்கூட்டியே வெளியே போய்க் காத்திருந்து, அந்த மாணவன் வந்தவுடன், அவனை ஓங்கி ஒரு போடு போட்டு

விட்டார். எளியாரை வலியார் வாட்டலாமா? வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் இருப்பான் அல்லவா! ஆனால், உபாத்தியாயர்கள் சியாங்கைச் சும்மா விடவில்லை, கடுமையாகச் சிட்சித்தார்கள். அதுமுதல் சியாங்கே மற்றப் பிள்ளைகளுக்குத் தலைவர். தலைவர் தம்முடைய பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்கு, அவசியம் நேர்ந்த பொழுது, முஷ்டியை உபயோகிக்கத் தயங்குவதில்லை. மலைகளி லிருந்து வீசும் சுத்தமான காற்றைச் சுவாசித்துக் கொண்டு ஓடியும் சாடியும், ஆறுகளில் நீந்தியும், சியாங் பாலியத்திலேயே தக்க உடற்பயிற்சி பெற்றிருந்தார். வேறுமுறையான தேகாப்பியாசம் ஒன்றும் அவர் இருந்த ஊரிலேயே இல்லை.

கிராமப் பள்ளியில் படித்த பிறகு, சியாங் பெங்லு, லுங்சிங் ஹைஸ்கூல்களில் படிக்கச் சென்றார். அங்கே படிப்பில் அவருக்கு அதிகக் கவனம் உண்டாயிற்று. அத்துடன் மற்றவர்களுடன் ஒட்டாமல் தனித்திருக்கும் வழக்கமும் அவருக்கு ஏற்பட்டது. இதைச் சிலர் அகம்பாவம் என்று கருதினார்கள். உண்மை அதுவன்று. வெறும் பேச்சும் வீண் விவாதங்களும் அவருக்குப் பிடிக்காத விஷயங்கள். அப்பொழுதே அவர் யுத்தவீரராக விளங்க வேண்டும் என்று தீர்மானித்து விட்டதாகவும் தெரிகிறது. அந்தக் காலத்தில் சீன ஆடவர்கள் கொஞ்சம் தலை வளர்த்துப் பின்னல் போட்டுக் கொள்ளவேண்டும் என்று அரசாங்கம் வற்புறுத்தி வந்தது. பின்னலே அந்நிய ராஜ வம்சத்தினராகிய மஞ்சு மன்னர்களுக்கு அடிமைப் பட்டிருப்பதற்கு அறிகுறியாகக் கருதப் பட்டது. சியாங் இளமையிலேயே பின்னலை வெட்டித் தூர எறிந்துவிட்டார். இது போலவே ஸன் யாட்-ஸென்னும் முன்னால் செய்தார் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. பின்னலை எடுத்துவிடுவதே அந்த நாளில் பெரும் புரட்சியாகக் கருதப்பட்டு வந்தது.

அதிகாரிகள் பின்னல் இல்லாதவர்களை நுட்பமாகக் கவனிப்பது வழக்கம்.

ஜப்பானுக்குச் சென்று ராணுவக் கல்வி பெறுவதற்காக 1906-இல் சியாங் லுங்சிங் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறினார். அந்தப் பள்ளிக்கூடத்தில் இருக்கும் பொழுது ஹோலிங்டன் டாங் என்று அங்கு ஓர் உபாத்தியாயர் இருந்தார். சியாங் கே-ஷேக்கின் சரித்திரத்தில் அவருக்கும் ஒரு முக்கிய ஸ்தானம் உண்டு. அது மட்டுமன்று, சியாங் பிற்காலத்தில் தேசத் தலைமைபூண்டு நிர்வாகத்தை ஏற்று நடத்துகையில், அவர் கூட இருந்து உதவிபுரிந்து வருகிறார். மேலும், அவர் உதவியால்தான் சியாங் கே-ஷேக்கின் வீரச் சரித்திரம் உலகத்திற்குக் கிடைத்திருக்கிறது. பெரிய அளவில், 640-பக்கத்தில், ஆங்கில மொழியில் அவர் தம்முடைய அருமை மாணக்கரின் சரித்திரத்தை எழுதியிருக்கிறார். அச் சரித்திரம் இந்த நூலுக்குரிய ஆதாரங்களில் முக்கியமானதாகும். அது இல்லாவிட்டால் சியாங்கைப் பற்றி உலகம் அதிகமாய்த் தெரிந்துகொள்ள முடியாது. ஏனெனில் அவர் தாமே வாய்விட்டுத் தம் சரித்திரப் பிரதாபங்களைச் சொல்லுவது வழக்கமில்லை. அவர் சேனாபதியான பிறகு, ஒரு நிருபர் அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் பற்றிக் கேட்டபொழுது, அவர் ஒரு துண்டுக் கடுதாசியில் சீன பாஷையில் பின் கண்ட வார்த்தைகளை மட்டும் எழுதிக் கொடுத்தாராம்: 'பிறப்பு செகியாங் மாகாணத்தில்; பயின்றது பாஓடிங் கலாசாலையிலும் ஜப்பானிலும்; புரட்சி ஆரம்பித்தது முதல் இருப்பு டாக்டர் ஸன் யாட்-ஸென்னுடன்.' இதுதான் அவர் சொன்ன சரித்திரம்! 'அயோத்திமா நகரில் பிறந்து, தண்டகாரண்யம் சென்று, சமுத்திரத்தின்மீது அணை கட்டி, ராவணனை வதம் செய்தேன்!' என்று ராமன் கூறியிருந்தால் அது ராமாயணமாகுமா? ஆனால்,

சியாங்கிடம் இவ்வளவுக்கு மேல் எதிர்பார்க்க முடியாது. அவர் மிகுந்த அடக்கமுள்ளவர். மற்றையோர் சீனவைப் பற்றியும் சியாங்கைப் பற்றியும் எழுதியுள்ள நூல்களிலும் சில அம்சங் களையே விவரமாகக் காணமுடிகிறது.

ஜப்பானுக்குச் சென்றதும் சியாங் சென் சி-மெய் என்ற புகழ்பெற்ற சீனப் புரட்சிக்காரரை முதன் முதலாகச் சந்தித்தார். அதுமுதல் புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபடலானார். ஜப்பானில் சீன அரசாங்கத்தின் சிபார்சு இல்லாமல் சீன மாணவர்களை ராணுவக் கலாசாலையில் சேர்த்துக் கொள்வதில்லை. இதை அவர் விசாரித்துத் தெரிந்துகொண்டார். அதனால் மீண்டும் சீனவுக்குத் திரும்பி, பா-ஓடிங் ராணுவக் கலாசாலையில் சேரவேண்டுமென்று சென்றார்.

அங்கே சேருவதற்கு முதலில் ஒரு பரீட்சை வைப்பது வழக்கம். அதில் சியாங் தேர்ச்சிபெற்றதும், கலாசாலையில் மாணவராகச் சேர்ந்துகொண்டார். மற்ற மாணவர்கள் எல்லோரும் தலையில் பின்னல் வைத்திருந்தார்கள். பின்னல் இல்லாதவர் சியாங் ஒருவர்தாம். எனினும் கலாசாலை அதிகாரிகள் அதற்காக விசேஷ நடவடிக்கை ஒன்றும் எடுத்துக் கொள்ளவில்லை.

உபாத்தியாயர்களிலே ஜப்பானியர் ஒருவர். அவர் சுகாதாரத்தைப் பற்றி ஒரு நாள் போதித்துக்கொண் டிருந்தார். மேஜையின்மேல் கொஞ்சம் மணலைப் பரப்பி, அதில் ஓர் அங்குல அளவில் 40-கோடிப் புழுக்கள் வசிக்க முடியும் என்று அவர் கூறினார். அத்துடன் நில்லாது, அந்த மணலைச் சீனவுக்கு ஒப் பிட்டு, சீன ஜனங்கள் 40-கோடிப் பேரும் அந்த அளவுப் புழுக்களுக்குச் சமானமா யிருப்பதாகவும் விளக்கிச் சொன்னார். இந்தக் கேவலமான உப

மானத்தைக் கேட்டுச் சியாங் மனம் கொதித்தார். உடனே வேகமாக மேஜையின்மேல் பாய்ந்து, அதிலிருந்த மணலை எட்டாகப் பிரித்து, 'ஜப்பானில் 5-கோடி ஜனங்கள் இருக்கிறார்கள். ஓர் அங்குலத்தின் எட்டில் ஒரு பாகத்திலுள்ள 5-கோடிப் புழுக்களா அவர்கள்?" என்று அவர் உபாத்தியாயரிடம் கேட்டார். ஆசிரியருக்குத் தூக்கிவாரிப் போட்டது: 'நீ புரட்சிக்காரனோ, அப்பா?" என்று கேட்டார். 'நீர் சொன்ன உபமானம் பொருத்தமா யிருக்கிறதா என்றுதான் தெரிந்துகொள்ள விரும்பினேன். வேறொரு விஷயத்தைக் கிளப்பி, எடுத்துக்கொண்ட விஷயத்தை நீர் மழுப்பக் கூடாது!" என்று சியாங் பதிலுரைத்தார்.

படிப்பிலும் பயிற்சியிலும் அவர் ஒரு குறையும் இல்லாமல் கவனமா யிருந்தார். ஒரு வருஷத்திற் குள்ளாகவே, ஜப்பானுக்கு அனுப்பவேண்டிய மாணவர்களில் அவரும் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

1907-ஆம் ஆண்டு சியாங் ஜப்பானை அடைந்தார். அங்கே நாலரை வருஷம் தங்கி ராணுவப் பயிற்சி பெற்று வந்தார். முதலில் டோகியோவிலுள்ள ஷின்போ கோகியோ என்ற ராணுவக் கலாசாலையில் ஆரம்பப் பயிற்சி பெற்று வந்தார். சிறுவயது முதலே வீட்டில் வறுமையால் பல கஷ்டங்களை அநுபவித்தவர் எனினும், அவருக்கு ஜப்பானியரின் சிக்கனமும் எளிய வாழ்க்கையும் மிகவும் வியப்பாக இருந்தன. பள்ளிக் கூடத்தில் கொடுக்கப்பட்ட உணவு அரை வயிற் றுக்குத்தான் காணும். ஆனால் ஜப்பானியர் மிகவும் குறைவாகவே சாப்பிடுவதை அவர் கண்டார். கொஞ்சம் சோறு, ஒரு மீன் துண்டு, கீரை-இவைகளை மட்டும் சாப்பிட்டு விட்டு அவர்கள் எந்த வேலையையும் சளைக்காமல் செய்து வந்தார்கள். உண்டி சுருங்குதலைச் சியாங் அவர்களிடம் கற்றுக்கொண்டார்.

அதுமுதல் அவர் அதிக உணவு உட்கொள்வதே இல்லை. வயிற்றை இறுகக் கட்டிக்கொண்டு படுத்துக் கொள்வதில் அவர் முன்னாலேயே பயிற்சி பெற்றிருந்ததும் உதவியாயிருந்தது.

அவருடன் 60-சீன வாலிபர்கள் பயிற்சி பெற்று வந்தார்கள். 1909-ல் அவர் பள்ளிக்கூடப் படிப்பு முடிந்து, 13-வது ஜப்பானிய பீரங்கிப் படையில் சேர்ந்து, தளகர்த்தர் பதவிக்குரிய வேலைகளில் பயிற்சி பெற்று வந்தார். அக்காலத்தில் போர் வீரர்களுக்கு வேண்டிய சாகசங்களோடு, வாழ்க்கைக்கு வேண்டிய அநுபவக் கல்வியையும் அவர் பெற்று வந்தார். காலையில் எவ்வளவு கடுமையாகப் பனி பெய்துகொண்டிருந்தாலும், அவர் பயிற்சிக் களத்திற்குப் போய்விடுவார். பூட்ஸு துடைத்தல், குதிரை தேய்த்தல் முதலிய சாதாரண வேலைகள் முதல் எல்லாவற்றையும் அவரே செய்து வந்தார். மேலதிகாரிகள் அவரிடம் ஆச்சரியமான அபூர்வத் திறமைகள் இருப்பதாக உணராவிட்டாலும், அவர் வைத்த பாரத்தையெல்லாம் தாங்குவார் என்பதையும், மிகுந்த பொறுமையுடன் தம் பணிகளைப் பிழையில்லாமல் நிறைவேற்றுவார் என்பதையும் கண்டு கொண்டார்கள். அவரும் தம்முடைய போதகர்களிடம் மிக்க நன்றியறிவுடன் நடந்துவந்தார்.

ஜப்பானிலிருந்த சீனப் புரட்சிக்காரர்களிடம் அவருக்கு நெருங்கிய உறவு இருந்து வந்தது. கோமின்டாங் சங்கத்திற்கு முன்னால் ஏற்பட்டிருந்த டங் மெங் ஹூயி என்ற புரட்சிச் சங்கத்தில் அவர் அங்கத்தினராகச் சேர்ந்துகொண்டார். டோகியோ நகரில் அந்தச் சங்கத்தின் கூட்டம் ஒன்றில், அவர் டாக்டர் ஸன் யாட்-ஸென்னை முதல் முறையாக நேரில் தரிசித்துக்கொண்டார். புரட்சியைப் பற்றித் தலைவருடைய அமுத மொழிகளை நேரிலே கேட்டுத் தெரிந்துகொண்டார். அவருடன் பேசிப் பார்த்த

பிறகு, ஸன் யாட்-ஸென், 'நம்முடைய புரட்சியில் இந்த மனிதர் சூரராக விளங்குவார்; நம் புரட்சி இயக்கத்திற்கு இதேமாதிரி ஆசாமி தேவை' என்று சென் சி-மெய் என்ற நண்பரிடம் கூறினாராம்.

ராணுவப் பயிற்சி முடிந்ததும், சீன அரசாங்கத்தில் பதவி பெறுவதை விரும்பாது, சியாங் தம்முடைய கல்வி, அநுபவம், உடல், உழைப்பு எல்லாவற்றையும் சீனத் தாய்க்கே அர்ப்பணம் செய்துவிட்டார். மஞ்சு ஆட்சியை ஒழிக்கவேண்டும், குடியரசு அமைக்கவேண்டும், தேசத்தைப் புனருத்தாரணம் செய்யவேண்டும் என்ற எண்ணங்கள் அவரை ஆட்கொண்டுவிட்டன. 1911-ஆம் ஸு அக்டோபர் 10-உ வூசாங் என்ற இடத்தில் புரட்சியின் போர் முரசு முதன் முதலாகக் கொட்டப்பெற்றது. பேரிகை ஒலி ஜப்பானின் தலைநகரான டோகியோவுக்கும் எட்டியது. சியாங் தம் நண்பர் ஒருவரைச் சேர்த்துக்கொண்டு, ராணுவத்திலிருந்து 48-மணி நேரத்திற்கு ரஜா எடுத்துக்கொண்டு, வெளியே கிளம்பிவிட்டார். நேராகக் கடைக்குப் போய்ச் சாதாரண உடைகள் கொஞ்சம் வாங்கி அணிந்து கொண்டார். பழைய ராணுவ உடைகளையும் வாளையும் தபால் பார்சல் மூலம் ராணுவக் காரியாலயத்திற்கு அனுப்பிவிட்டு, பெற்ற தாயையும், பிறந்த பொன் நாட்டையும் நோக்கிப் புறப்பட்டுவிட்டார். 48-மணி நேரத்திற்கு ரஜா வாங்கிக்கொண்டு வந்தார். பின்னால் 34-வருஷங்கள் கழிந்தும் ஜப்பானிய ராணுவ வேலைக்குத் திரும்பிப் போகவே இல்லை!

## VII

### குண விசேஷங்கள்

'வலிமைகளிலே மதியை நிறுத்தி ஆழ்ந்த தியானம் செய்தால் யானையின் பலம் முதலியவை கைகூடும்.'

— பதஞ்சலி

சியாங் கர்மவீரர். தீவிரமான சிந்தனு சக்தியும், சிந்தனையைச் செயலாக்கும் திறனும் அவருக்கு ஒருங்கே அமைந்திருக்கின்றன. காற்றடிக்கும் திசையெல்லாம் சுற்றி அலையும் மரக்கலங்களைப் போன்றவர்கள் சாதாரண மனிதர்கள். கர்மவீரர்களோ, கொந்தளிக்கும் கடலில், கொடிய புயலையும் எதிர்த்து, தாம் நினைத்தபடியே குறித்த காலத்தில் குறித்த இடத்திற்குப் போய்ச் சேரும் மரக்கலங்களைப் போன்றவர்கள். அவர்கள் எந்தக் காரியத்தையும் எண்ணியே துணிவார்கள், துணிந்தபின் எண்ணமாட்டார்கள். காரியம் கைகூடும் வரை இடையில் சோம்பலுக்கு இடம் கொடுக்க மாட்டார்கள். வினைத் திட்பம் என்பது மனத் திட்பம். அவர்களுடைய மனத்திட்பமே அவர்களுடைய காலடியில் வெற்றியைக் கொணர்ந்து சமர்ப்பித்துவிடும். பெரிய காரியங்களைத் தொடங்கியவுடனே வெற்றியை எதிர்பாராமல், கிடைக்கிற தோல்விகளைக் கண்டு கலங்காது, அவர்கள் காலம் கருதி இருப்பார்கள். இத்தனை அருங் குணங்களையும் சியாங் பெற்றிருக்கிறார்.

'பின்னல் நோக்கினல் மரணம்; முன்னல் நோக்கினல் ஆசை; ஆதலால் பார்வையை அந்தர்முகமாய்த் திருப்பவேண்டும்' என்று நம்முடைய ஞானிகள் சொல்லுவார்கள். இந்த வித்தையிலும் சியாங் தேர்ந்தவராக இருக்கிறார். பிள்ளைப் பருவத்திலிருந்தே அவர் தனியே ஒதுங்கிச்

சிந்திக்கும் ஆற்றலை வளர்த்திருக்கிறார். பழங் காலத்தையும், வருங்காலத்தையும் பார்க்கிலும் அவருக்கு நிகழ்காலமே முக்கியம். இந்த நிகழ் காலத்தில் செயல் இல்லாமல் ஒரு கணம்கூடக் கழியக்கூடாது. செயலும் பற்றற்ற தொண்டாக-நிஷ்காமிய கர்மமாக - இருக்கவேண்டும். அவர் 'கர்மத்தின் தத்துவம்' என்று ஒரு சிறு நூல் எழுதியிருக்கிறார். அதிலிருந்து சில வாக்கியங்களை எடுத்துக் காட்டி, எல்லாம் பகவத்கீதையின் வாக்கியங் களைப்போல் விளங்குகின்றனவே என்று காலஞ் சென்ற மகாதேவ தேசாய் ஆச்சரியப்பட்டிருக்கிறார். தகப்பன் வெட்டிய கிணறு என்பதற்காக உப்பு நீரைக் குடிக்கும் கோடிக்கணக்கான ஜனங்களுக்கு அறிவூட்டி வழிகாட்டத் தோன்றியவரின் வாக்கி யங்கள் வேறு எப்படி யிருக்கமுடியும்!

சீனாவில் அவரைப் பார்க்கச் சென்றிருந்த வென்டல் வில்கி என்ற அமெரிக்கத் தலைவர் அவரைப் பற்றிக் கூறியுள்ள புகழ் மொழியாவது: 'சேனாபதி ஒரு மனிதர் என்ற முறையிலும் தலைவர் என்ற முறையிலும், கற்பனைக் கதைகளின் மூலம் அவரைப் பற்றி ஏற்பட்டிருக்கும் புகழைக் காட்டிலும் அதிகப் புகழுக்கு உரியவர் என்ற என் முடிவைக் கூறாமல், சீனாவைப்பற்றி எந்த விவரத்தையும் என்னால் எழுத முடியாது. அவர் ஆச்சரியமான அமைதியுடன் இருக்கிறார். மிக மென்மையாகப் பேசுகிறார். ராணுவ உடை தரித்துக் கொள்ளாமல் இருக்கும் பொழுது அவர் சாதாரணச் சீன உடையே உடுக்கிறார். இதனால், அவர் ஓர் அரசியல் தலைவர் என்பதைக் காட்டிலும், ஒரு சிறந்த கல்விமான் என்பதே எடுத்துக் காட்டப் படுகிறது. பொறுமையுடன் செவிக்கு விருந்து பெறுவதில் அவர் நல்ல பயிற்சி பெற்றிருக்கிறார் - அதாவது, மற்றோரிடமிருந்து அறிவைத் திரட்டிக் கொள்வதில் சமர்த்தரா யிருக்கிறார். நாம் சொல்லுவது

சரிதான் என்று அவருக்குப் படும்பொழுது அவர் தலையை ஆட்டிக்கொண்டு, மெதுவாக "ஆம், ஆம்" என்று கூறிக்கொண்டிருப்பார்; இது நம்மைப் பாராட்டும் ஒரு நுணுக்கமான முறை; இதன் மூலம் அவர் தம்மிடம் பேசுகிறவரை வென்று தம் வசம் திருப்பிக் கொண்டுவிடுகிறார்.

'சேனாபதி ஒவ்வொரு நாளும் பிரார்த்தனைக்கும் விவிலிய வேதம் படிப்பதற்கும் நேரத்தை ஒதுக்கி வைத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதன் மூலமோ, அல்லது இளமையில் ஏற்பட்ட அநுபவத்திலிருந்தோ அவர் ஆழ்ந்து சிந்திக்கும் முறையையும், சாந்தி நிறைந்த நிலையையும், அபூர்வமாகப் பேசும்பொழுதுகூட உரக்கச் சிந்திக்கிறார் என்றே சொல்லும்படியான தன்மையையும் பெற்றிருக்கிறார். சந்தேகமில்லாமல் அவர் அந்தரங்க சுத்தியுள்ளவர்; அவருடைய கண்யமும், எளிதில் பேசவைக்க முடியாத பான்மையும் மிகவும் கடுமையாக இருப்பதாகவே தோன்றுகின்றன.'

சியாங் 5-அடி 10-அங்குல உயரமுள்ளவராயிருந்தபோதிலும் பார்வைக்குச் சிறிது குள்ளமாயிருப்பதுபோல் காணப்படுவார். நேரே நிமிர்ந்து நிற்கும் பொழுதும் நடக்கும்பொழுதும் கம்பீரமாகத் தோன்றுவார். சில ஜெர்மானியரும் ரஷ்யரும் செய்து கொள்வதுபோல் அவரும் தலை முழுவதையும் சிரைத்துக் கொள்ளுகிறார். முகம் எப்பொழுதும் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும். தாடை சதுர வடிவமாயும், கீழ் உதடு நேராக ஒரு கோடுபோலவும் சற்று வெளியே தள்ளிக் கொண்டும் இருப்பதால் அவருடைய உறுதியை அவை காட்டுவன என்று சொல்லுவர். விசாலமான நெற்றியும் ஆழ்ந்து பார்க்கும் கூர்மையான கண்களும் அடக்கமான அவருடைய அறிவுக்கு அடையாளங்களாக விளங்கும்.

குழந்தைப் பருவத்தில் மெலிந்திருந்ததாகச் சொல்லப் பட்ட போதிலும், பின்னிட்டு அவர் எப்பொழுதும் திடகாத்திரராகவே இருந்து வருகிறார். உடலின் வலிமையில் அவர் உள்ளமும் பங்கு கொண்டிருக் கிறது. இரண்டும் உருக்கினால் செய்யப்பட்டவை; அவை வளையவும் மாட்டா, உடையவும் மாட்டா. எப்பொழுது ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என்று தீர்மானித்தாலும், உடனே அவர் அதை நிறை வேற்றி விடுவார். எந்த இலாகாவிலும், எந்த விஷயமும் நெடுங்காலம் தூங்கிக்கொண்டிருக்க அவர் விடுவதில்லை. ஆனால், அவருக்குத் தகவல் தெரிய வேண்டியது மட்டும் அவசியம்.

உடலையும் உள்ளத்தையும் ஒரு யோகியைப்போல் அவர் பண்படுத்தி வைத்திருப்பதால்தான் நினைத்த காரியத்தை விரைவில் முடிக்க முடிகிறது. நெப் போலியன் குதிரைமேல் அமர்ந்துகொண்டே சிறிது தூங்கிவிட்டுக் குறித்த நேரத்தில் விழித்து விடுவாராம். பல வருஷப் பயிற்சியினாலேதான் இது சாத்தியமாகும். ஸன் யாட் - ஸென்னைப் போல் சியாங் பல பேர்களிடத்திலும் சுமுகமாய்ப் பேசிக் குலாவிக்கொண் டிருப்பதில்லை. ஸன் வெளிநாடுகள் பலவற்றிற்குப் பல முறை போய் வந்தவர். சியாங் குக்கு ஜப்பானையும் ரஷ்யாவையும் தவிர வேறு வெளிநாடு தெரியாது. அந்நாடுகளிலும் அவருக்கு ஏராளமான நண்பர்கள் கிடையாது. வேடிக்கை யாகவும், விந்யாசமாகவும் பேசிக்கொண்டிருப் பதிலோ, விவாதம் செய்வதிலோ அவருக்கு விருப்பம் இல்லை. அவர் வாய்விட்டுப் பலமாகச் சிரிப்பது கூடக் கிடையாது. லெனின் சில சமயங்களில் கட்டடம் அதிரும்படியாக உரக்கச் சிரிப்பார் என்று பார்த்தவர்கள் சொல்லுகிறார்கள். காந்திஜியோ பொக்கை வாயைத் திறந்து சிரிக்காத நேரமே இல்லை.

ஆனால், சியாங் மட்டும் சிரிப்பதில்லை; சிரித்தாலும் உதடுகள் மெல்ல அசைவதோடு சரி.

சியாங் வெறும் அரசியல்வாதி அல்லர். மேடைப் பிரசங்கியும் அல்லர். ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டது அவருடைய அரசியல்; அது சீனக் கலைப் பண்பை ஆதாரமாய்க் கொண்டது. பிரசங்கம் என்றால், சியாங் தம் மனத்தில் தோன்றுகிற விஷயங்களை ஆடம்பர அலங்காரங்கள் இல்லாமல் அப்படியே கூறுவதுதான் வழக்கம். முக்கியமாக அவர் போர்வீரர். எல்லையற்ற தைரியமுடையவர். எத்தகைய அபாயம் நேர்ந்தாலும் அவர் துணிவைக் கைவிடுவதில்லை. மரணத்தைக் கண்டும் அவர் அஞ்சுவதில்லை என்பதைப் பல சமயங்களில் காட்டியிருக்கிறார். தாம் போர்வீரரா யிருப்பது போலவே தமக்குக் கீழுள்ள சிப்பாய்களும் தளகர்த்தர்களும் சுத்தவீரராக இருக்கவேண்டும் என்பதையும் அவர் கண்ணும் கருத்துமாய்க் கவனித்து வருகிறார். வீரர்கள் தனிப்பட்ட நபர்களுக்கோ தலைவர்களுக்கோ விசுவாசமா யிருப்பது விரும்பத்தக்கதில்லை என்றும், கொள்கைக்கும் கட்சிக்குமே விசுவாசமா யிருக்க வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தி வருகிறார்.

அவருடைய தேசாபிமானத்திற்கு அளவே இல்லை. தூங்கும் பொழுதிலும் சீனாவைப்பற்றியே கருதுகிறார் என்று சொல்லலாம். தேசப் புனருத்தாரண விஷயமாகத் தம்மைப் பார்க்க வரும் வெளி நாட்டாரிடமும், தம் கூட்டாளிகளிடமும் விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வதில் அவருக்குச் சோம்பலே கிடையாதாம். வென்டல் வில்கி போயிருந்த சமயத்திலும் ஒரு வாரம் தொடர்ச்சியாகப் பல விஷயங்களைக் கேட்டுக்கொண்டிருந்தார். அமெரிக்காவில் பெரிய தொழில்களை எப்படி நிர்வகிக்கிறார்கள், மோட்டார் கார்கள் செய்வதற்கு, மிகப் பெரிய தொழிற்சாலைகளா யில்லாமல், சாதாரணத்

தொழிற்சாலைகள் அமைத்தால் என்ன நஷ்டம் என்பவை போன்ற கேள்விகளைச் சரமாரியாகக் கேட்டுக் கொண்டிருந்தாராம். உலகத்திலுள்ள உயர்ந்த விஷயங்கள் எல்லாம் சீனாவுக்கு வந்துவிட வேண்டும், ஸன் யாட் - ஸென்னின் ஸான் மின் ஜூயி தத்துவங்கள் மூன்றையும் பின்பற்றி, சீனா உலகத்து நாடுகளின் நடுநாயகமாய்த் திகழவேண்டும் என்பவையே அவர் நினைவாகவும் கனவாகவும் இருக்கின்றன.

அவருடைய உயர்ந்த லட்சியங்கள் நிறைவேறுவதற்கு எந்த இடையூறு நேர்ந்தாலும், அதைக் களைந்து எறிந்து விடுவதில் அவர் கூசுவதில்லை. எவ்வளவு நெருங்கிய நண்பராயிருந்தாலும், அரசாங்கத்திற்கோ ஜனங்களுக்கோ துரோகம் இழைத்தால், அல்லது சட்டத்தை மீறி நடந்தால் தாட்சண்யம் இல்லாமல் மரண தண்டனைவரை விதித்துவிடுவது அவர் வழக்கம். ராணுவத்தில் அவர் ஏராளமான சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார். பழைய கூலிப் படைகளுக்குப் பதிலாக இப்பொழுது மக்களின் தேசியப் படையை நிறுவியிருக்கிறார். ராணுவ முறைகளில்தான் அவருடைய கண்டிப்பு உச்ச ஸ்தானத்தை அடைந்திருக்கிறது. எதிரிகளைத் தாக்காமல் திரும்பி ஓடிவரும் படைகளின் தளகர்த்தர்களை அவர் சும்மா விடுவதில்லை; உடனே விசாரித்து அநேக சமயங்களில் மரணதண்டனை விதிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

பிடிவாதத்தில் அவருக்கு நிகராகச் சிலரே உண்டு. ஓரளவு பிடிவாதம் இல்லாமல், கணந்தோறும் கொள்கையையும் காரியத்தையும் மாற்றிக் கொண்டிருப்பவரால் ஒன்றுமே சாதிக்க முடியாது. எனினும் சியாங்கின் பிடிவாதம் எல்லை கடந்தது என்றே சொல்லவேண்டும். ஆனால் அவருடைய கண்டிப்புக்கும் பிடிவாதத்திற்கும் மாறாக அவ

ருடைய அன்பும் பொறுமையும் விளங்குகின்றன. இடுக்கண் கண்ட இடத்தில் அவர் பரிவோடு உதவிக்கு ஓடுவார். கொடுமையில் ஆசை வைத்து அவர் கொடுமை செய்வதில்லை. சீனுக்கு நன்மை என்று அவர் தீர்மானித்துவிட்டால், ஆயிரக் கணக்கான உயிர்களை அதற்காகப் பலி கொடுப்பதில் அவர் அஞ்சுவதில்லை. அதே சமயத்தில் நண்பர்கள் பந்துக்களிடத்தில் மிகுந்த பிரியத்தோடு இருப்பார். பெரிய விஷயங்களுக்கு நடுவே, நோய்வாய்ப்பட்ட ஒரு நண்பருக்கு ஞாபகமாகப் பண உதவிசெய்ய மறக்கமாட்டார். 'அவர் சிப்பாயின் வீரத்தையும், கவிஞரின் அருள் நிறைந்த உள்ளத்தையும் பெற்றிருக்கிறார்' என்று அவருடைய மனைவியார் கூறியிருக்கிறார்.

வாம்போவா என்ற இடத்தில் சீன இளைஞர்களைப் போர்த் தலைவர்களாகப் பயிற்சி செய்வதற்கு ஒரு கலாசாலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்குச் சியாங் தலைவராக இருந்து பல வருஷங்கள் உழைத்திருக்கிறார். அப்பொழுது அவர் தம் மாணவர்களிடம் காட்டிய அன்பைப்பற்றி ஐவாடா என்ற ஜப்பானியர் குறிப்பிட்டிருக்கிறார்: 'அவருடைய கடுமையான தோற்றத்தின் நடுவே மென்மையான உள்ளம் ஒன்று இருக்கிறது. சியாங் கே-ஷேக் தம் மனிதர்களின் உள்ளங்களில் பயத்தை உண்டாக்க விரும்பவில்லை; ஆனால் அவர்கள் மரியாதையுடன் அவருக்குப் பணிந்து நடக்கவேண்டியது அவசியம். அன்பினாலும் ஆதரவாலும் அவர் அவர்களுடைய உள்ளங்களைக் கவர்ச்சிசெய்து விடுகிறார். அவர்களிடம், "நான் சேனைபதியா யிருப்பதால் உங்களை விட்டு நான் வேறானவன் என்று கருதாதீர்கள். எப்பொழுதும் போல் இப்பொழுதும் நான் மக்களின் புரட்சியில் பங்கெடுத்துக் கொள்பவனாக இருக்கிறேனே தவிர, உங்களுக்கும் எனக்கும் எவ்வித

வித்தியாசமும் இல்லை'' என்று அவர் ஆதரவுடன் கூறுவது வழக்கம்.

'சியாங் கே-ஷேக் தமக்குக் கீழே வேலை பார்த்து வந்தவர்களின் அன்புக்குப் பாத்திரமா யிருந்தார். வாம்போவா ராணுவக் கலாசாலையின் தலைவராக இருந்தபொழுது அவர் மாணவர்களைத் தம் சொந்தக் குழந்தைகளைப் போலவே பாவித்து வந்தார். கஷ்டப் பட்டுக்கொண் டிருந்தவர்களுக்கு அவர் பணம் கடனாகக் கொடுத்து உதவி செய்வார். விவாகங்களைக் கூட இருந்து நடத்திவைப்பார். கல்யாணச் செலவு களுக்கு வேண்டிய பணம் கொடுப்பார். அவருடைய ஆதரவில் கலாசாலையின் வாலிபத் தளகர்த்தர்கள் பயிற்சி பெற்று வந்தார்கள்.'

அவருடைய உள்ளத்தில் அன்பு வற்றாமல் இருப்பதற்கு மூலகாரணராக இருவரைக் குறிப் பிடலாம். முதலாமவர் அவருடைய அன்னை; அடுத் தாற்போல் அவருடைய இரண்டாவது மனைவியாரான ஸ்ரீமதி மெய்லிங். இன்றைக்கும் அவர் அன்னையை ஆர்வத்தோடு போற்றி வருகிறார். அடிக்கடி தம்முடைய ஊருக்குச் சென்று, பெற்றோருடைய சமாதிகளுக்கு வணக்கம் செய்துவிட்டு வருகிறார். அவருடைய மனைவியார், வாழ்க்கையிலும் போர்க் களத்திலும் கூட, அவர் அருகே நின்று உதவி புரிந்து வருகிறார். தாய்க்குப் பின் தாரமே அவருக்குத் தாயாக விளங்குகிறார் என்று கூறலாம். மெய்லிங் தேவி அவருக்கு வாழ்க்கைத் துணையாகவும், வலது கரமாகவும், அரசியல் முதலிய துறைகளிலெல்லாம் ஆலோசனையாளராகவும் இருந்து வருகிறார். சியாங் எவருடைய அதிகாரத்தையும் ஏற்றுக்கொள்ளாத மிடுக்குடையவர். ஆயினும், அன்னையும் மனைவியும் அன்பைக் கொண்டு அவர்மேல் ஆதிக்கம் செலுத்த முடிந்தது.

இதில் உண்மையும் இருக்கிறது. ஸூங் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் - அந்தக் குடும்பத்தில் பிறந்தவர்களும், பெண்ணெடுத்தவர்களும் - அரசாங்கத் தலைமைப் பதவிகளை வகித்து வருகிறார்கள். அக்குடும்பத்தைச் சேர்ந்த முதல் பெண் எய்லிங்கின் கணவர் டாக்டர் எச். எச். குங் பொருளாதார மந்திரியா யிருக்கிறார். இரண்டாவது பெண்ணாகிய சிங்-லிங் ஸன் யாட்-ஸென்னுடைய மனைவியார். மூன்றாவது பெண்ணாகிய மெய்-லிங் அரசாங்கத் தலைவரும் சேனாபதியுமாகிய சியாங் கே-ஷேக்கின் தேவியார். முதல் மகனாகிய டி. வி. ஸூங் வெளிநாட்டு மந்திரியாயிருக்கிறார். இவரே எல்லோருக்கும் மூத்தவர்; டி. எல். ஸூங், டி. ஏ. ஸூங் என்ற இரு பிள்ளைகளும் கடைக் குட்டிகள். இவர்கள் பாங்கித் தொழிலிலும் ஆலைத் தொழில்களிலும் தலைமை வகித்து நடத்தி வருகிறார்கள். ஆறு ஸூங்குகள் இருக்கிறார்கள். அறுவரும் அரசாங்கத்தின் நிர்வாகத்திலும், சீனப் புனருத்தாரணத்திலும் பங்கு எடுத்துக் கொண்டிருக் கிறார்கள்!

இந்த ஆறு ரத்தினங்களையும் சீனவுக்கு அளித்த பெற்றோர் சார்லஸ் ஜோன்ஸ் ஸூங்கும் அவருடைய பத்தினி நி ஸூங்கும் ஆவர். சார்லஸூடைய சரித்திரம் மிகவும் விசித்திரமானது. சிறு வயதில் அவர் அமெரிக்கா சென்று, போஸ்டன் நகரில் இருந்த பந்து ஒருவருடைய 'சாயா கடை'யில் வேலை பார்த்து வந்தார். நிறையப் படிக்கவேண்டும், படித்துச் சீன நாட்டுக்குத் தொண்டு செய்து நாகரிக நாடுகளின் முன்னணியில் அதை நிற்கச் செய்ய வேண்டும் என்று அவர் அந்தக் காலத்திலேயே ஆசைகொண்டிருந்தார். அதனால் கடையை விட்டு வெளியேறி, முதலில் ஒரு கப்பலில் வேலைக்கு அமர்ந்தார். அந்தக் கப்பலின் தலைவர் சார்லஸ் ஜோன்ஸ் என்பவருடைய சிபார்சின் பேரில், மாஜி தளகர்த்தரான ஜூலியன் கார் என்ப

வருடைய உதவிபெற்று அவர் ஜியார்ஜியாவிலுள்ள ட்யூக் சர்வகலாசாலையில் சேர்ந்து கல்வி பயிலும் பேறு பெற்றார். பின்னர் வான்டெர்பில்ட் சர்வ கலாசாலையிலும் சிறிது காலம் பயின்று, பரீட்சையில் தேறிப் பட்டமும் பெற்றார். அக்காலத்திலேயே, 'எனக்குப் பத்து—நூறு ஜன்மங்கள் வேண்டும் என்று ஆசை இருக்கிறது. அத்தனையையும் சீனாவுக்கு அர்ப் பணம் செய்ய வேண்டும்!' என்று அவர் சொல்வது வழக்கமாக இருந்தது.

சிறு வயதில் அவருடைய பெயர் ஸூன் சியா-ஜூ. இளமையிலேயே அவர் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து கொண்டார். அப்பொழுது தமக்கு உதவி செய்த கப்பல் தலைவர் சார்லஸ் ஜோன்ஸிடம் நன்றி மறவாமல் இருப்பதற்காக அவருடைய பெயரையே தாமும் சூட்டிக்கொண்டார். ஆதரிப்பார் இல்லாத அநாதைப் பிள்ளையாகச் சுற்றிவந்து, விடா முயற்சியாலும் உறுதியாலும் நவ நாகரிக நாடான அமெரிக்காவில் கல்வி கற்று ஒரு மேதையாகி, அவர் தாய்நாடு திரும்பினார். ஷாங்காய் நகரில் ஒரு ஹைஸ் கூலில் உபாத்தியாயராக அமர்ந்து வெகு நாள் உழைத்து வந்தார். அங்கேதான் அவர் நி என்ற கன்னியை மணம் செய்து கொண்டார்.

இந்தத் தம்பதிகள் தங்களுடைய ஆறு குழந்தை களையும் அரும் பெருஞ் செல்வங்களாகக் கருதி, கண்ணும் கருத்துமாக வளர்த்து, அமெரிக்காவில் படிக்க வைத்தார்கள். குழந்தைகளும் பெற்றோரின் நடபிக்கைப்படியே நன்றாகப் படித்துத் தேறி வந்தார்கள். எய்லிங் தக்க வயது வந்ததும் டாக்டர் குங் என்ற செல்வரை மணந்து கொண்டார். சிங்-லிங், ஸன் யாட்—ஸென்னுடைய காரியதரிசியாகச் சிறிது காலம் இருந்து, பிறகு இரண்டாந் தாரமாக அவரையே மணம் செய்து கொண்டார். டாக்டர் ஸன் ஸூங் குடும்பத்திற்கு அறிமுகமானவர். அடிக்

கடி ஷாங்காயில் அவர் சார்லஸ் ஸூங் வீட்டுக்குப் போய்ப் புரட்சியைப் பற்றிக் கலந்து பேசுவது உண்டு. மூன்ருவது பெண்ணுகிய மெய்-லிங் 1917-ஆம் ஆு அமெரிக்காவில் வெல்லெஸ்லி கலாசாலையில் படிப்பை முடித்துக் கொண்டு தாய்நாடு திரும்பி வந்திருந்தார். அவர் சங்கீதத்திலும், கலையிலும் முதல் தரமாகத் தேறியிருந்தார். அவரை அப்பொழுது வாலிபத் தளகர்த்தராக இருந்த சியாங் கே-ஷேக் காதலித்தார். சியாங்குக்கு முதல் மனைவி ஒருவர் இருந்ததால், முதல் விவாகத்தைச் சட்டபூர்வமாக அவர் ரத்துச் செய்து விட்டார். மெய்-லிங்கை மணந்துகொள் வதற்கு மற்ருேர் இடையூறும் இருந்தது. சியாங் பௌத்தர், காதலி கிறிஸ்தவர். ஆகவே பெண்ணைப் பெற்ற தாய் அவரையும் கிறிஸ்தவ மதத்தில் சேரும் படி கேட்டுக் கொண்டார். சியாங் அதைப் பற்றித் தாம் உறுதிகூற முடியாது என்றும், ஆனல் கிறிஸ்தவ சமயத்தைப் பற்றித் தாம் ஆதரவுடன் படித்து அறிந்து கொள்ளத் தயாராக இருப்பதாகவும் கூறினர். நி அம்மையார் அதற்குச் சம்மதித்து மெய்-லிங்கை அவருக்கே மணம் செய்து கொடுத்து விட்டார். பின்னல் சியாங்கும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக் கொண்டார்.

சியாங்-மெய்லிங் காதல் கதை மிகவும் ருசிகர மானது. இருவரும் தம் குடும்ப கௌரவத்தையும் சொந்தக் கௌரவத்தையும் விட்டுக் கொடுக்காமலே இருந்து வந்தனர். ஆனல் இருவருக்கும் இடையே காதல் கனிந்து கொண்டிருந்தது. சியாங் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய மாதச் சம்பளம் 1,000 டாலர். மெய்-லிங் செல்வம் மிகுந்த பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய மூத்த சகோதரி சிறுவயதிலேயே பெரிய பணக்காரரான டாக்டர் குங்கின் மனைவியாயிருந்தார். அந் நிலையில் சியாங்கை எப்படி மணந்து கொள்வது? ஆனல்,

சியாங் எதிர்காலத்தில் மகோன்னத நிலைக்கு வரப் போகிறார் என்பதை மெய்-லிங் அறிந்திருந்தார். எதிர்காலச் சீனாவை மனக் கண்ணால் பார்த்து அவர் பூரித்தார்.

சியாங் அவரை முதல் தடவை தனியாகச் சந்தித்தது காண்டன் நகரிலுள்ள ஒரு ஹோட்டலில். பிரபுக்களும் அதிகாரிகளும் உணவருந்தும் மண்டபத்தில், ஒரு சமயம் அங்கே கூடியிருந்தவர் எல்லோரும் வெளியேறிய பின்னர், மெய்-லிங் தனியே இருந்தார். அப்பொழுது சியாங் அவர் அருகே போய் அமர்ந்தார். மெய்-லிங் கூச்சப்பட்டு எழுந்து போகு முன்பு, அவர் முறைப்படி மரியாதை செய்து விட்டுப் பேசத் தொடங்கினார். 'மன்னிக்கவும்... நீங்கள் டாக்டர் ஸன் யாட்-ஸென்னின் மைத்துனி அல்லவா?' என்று கேட்டார். மெய்-லிங் 'ஆம்' என்று ஒப்புக்கொண்டு, அவரை எங்கோ பார்த்த ஞாபகம் இருப்பதாகவும் சொன்னார். சியாங், 'உங்களுக்கு என்னைப்பற்றி அதிகம் தெரிந்திருக்கக் காரணம் இல்லை. நீங்கள் அமெரிக்காவிலிருந்து இப்பொழுது தான் வந்திருக்கிறீர்கள்...என் பெயர் தளபதி சியாங் கே-ஷேக். அநேக வருஷங்களாக நான் டாக்டர் ஸன்னுடன் வேலை செய்து வந்திருக்கிறேன்' என்றார். மெய்-லிங் தம் சந்தோஷத்தைத் தெரிவித்துவிட்டு, 'வேறு விசேஷம் இல்லையே! நான் போய் வருகிறேன்!' என்று புறப்பட்டு விட்டார். அவரை மறுபடி எங்கே பார்க்கலாம் என்று சியாங் அவசரமாகக் கேட்டுக் கொண்டார். அமெரிக்காவில் ஆங்கிலம் கற்ற அந்த மாதரசி, 'என்னையா? பத்திரிகைகளில் பார்க்கலாமே!' என்று வெடுக்கென்று பதில் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

துடுக்கான இந்த வார்த்தைகளின்படியே அவர் பெயர் அன்று முதல் இன்று வரையில் பத்திரிகைகளில் வந்து கொண்டிருக்கிறது. சீனப் பத்திரிகைகள்

மட்டுமல்ல, உலகப் பத்திரிகைகள் எல்லாவற்றிலுமே, நாள் தவருமல், வந்து கொண்டிருக்கிறது. ஆனால் மெய்-லிங் என்று வரவில்லை, சியாங் கே-ஷேக்கின் தேவியாக, ஸ்ரீமதி சியாங் கே-ஷேக் என்றுதான் வருகிறது. ஒரு பெண்ணின் துடுக்கான வார்த்தைகளைக் கண்டு தளகர்த்தர் அஞ்சி ஒதுங்கி விடுவாரா? காதலாகிக் கசிந்து, விடாமல் அலைந்து, பெண்ணின் சம்மதம் பெற்று, அவர் தாயின் ஆசியும் பெற்றுக் கடைசியில் தம் நோக்கப்படியே சியாங் விவாகம் செய்து கொண்டார். விவாக மகோத்ஸவம், ஷாங்காய் நகரில், 1927-ஆம் ஹூ டிஸம்பர் முதல் தேதியில் நடந்தது. சீனுவிலுள்ள பிரபலஸ்தர்கள் எல்லோரும் பெருங் கூட்டமாக வந்திருந்தார்கள். பெண்ணின் தந்தை சார்லஸ் ஸூங், பணத்தைத் தண்ணீர் போல் அள்ளிச் செலவழித்து, விருந்தினர்களை உபசரித்தார். மொத்தம் ஒரு லட்சம் சீன டாலர் செலவானதாகச் சொல்லப்படுகிறது!

திருமணத்தன்று காலையில் சியாங் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதில் அவர் குறிப்பிட்டிருந்த முக்கிய விஷயமாவது: 'எங்களுடைய விவாகத்திற்குப் பின்னுல் புரட்சி வேலை அதிக முன்னேற்றம் அடையும் என்பதில் சந்தேகம் இல்லை; ஏனென்ருல், இனிமேல் நான் மன நிம்மதியுடன் புரட்சியின் அபாரப் பொறுப்பைத் தாங்க முடியும்... இதுமுதல், சீனப் புரட்சி இயக்கத்திற்காக நாங்கள் இருவரும் எங்களுடைய முழுச்சக்தியையும் உபயோகிக்க உறுதிகொண்டிருக்கிருேம்.'

சுப முகூர்த்தத்திலே வெளியிடப்பெற்ற இந்த அறிக்கையைப் படித்தால், மெய்-லிங் சியாங் கே-ஷேக்கை மணந்தாரா அல்லது புரட்சியையே மணந்து கொண்டாரா என்று சந்தேகம் ஏற்படும். அவருடைய வாழ்க்கைச் சரித்திரம் முழுதையும்

கவனித்தால், அவர் சியாங்கின் மூலம் புரட்சியையே தம் நாயகனுக வரித்துக்கொண்டார் என்பது தெளிவாகிறது.

'என்னை எடுத்துக்கொள், அப்பா! அக்காளைக் கீழே விடு! நான்தான் உன்னுடைய பாப்பா!' என்று குழந்தைப் பருவத்தில் மெய்-லிங் தந்தையிடம் பிடிவாதம் செய்வது வழக்கம். அந்த மெய்-லிங் பின்னல் கோடிக்கணக்கான சீன மக்களின் பாப்பாவாக விளங்குகிருர். அவர்களுடைய இதய கமலங்களில் அவர் நிலையான இடம் பெற்றிருக்கிருர். அவர் பேரழகி. பெருஞ்செல்வமும், பெருங்குணமும் படைத்தவர். அவர் கல்வி அறிவும் இசைத் திறமையும், கலைகளில் ஆர்வமும் கொண்டவர். இவைகளோடு எல்லையற்ற வீரமும் பெற்றிருக்கிருர். அவருடைய அறிவும், திறமையும், ஆர்வமும், வீரமும் கோடிக்கணக்கான மக்களுக்குப் பயன்படுவதற்குச் சியாங் கே-ஷேக்கை அவர் மணந்து கொண்டதால் தான் சாத்தியமாயிற்று. சீனுவில் அன்று முதல் ஏற்பட்டுள்ள ஒவ்வொரு முன்னேற்றத்திலும் அவருடைய உழைப்பின் முத்திரையைக் காணலாம். அவரும் சியாங்கும் ஒருமனப்பட்டு உழைத்ததால் தான் தேசம் வலிமை பெற்று மேலோங்கி வளர முடிந்திருக்கிறது. ஒருவரிடம் குறைவாகவுள்ள குணங்கள் மற்றவரால் நிறைவாக்கப்படுகின்றன. சியாங்கின் வீரமும், உறுதியும், பிடிவாதமும் எல்லை கடந்து போனுல் கொடுமைகள் பெருகிவிடும். அப்படி ஏற்படாமல் இருப்பதற்கு மெய்-லிங் தேவியின் அருளும், அடக்கமும், ஆலோசனையும் காப்பாக இருக்கின்றன. சியாங்குக்கு மேல் நாட்டுக் கல்வி கிடையாது. மெய்-லிங் அக் கல்வியைக் கரைத்துக் குடித்தவர். வெளிநாடுகளுடன் தொடர்பு வைத்துக் கொள்ள அவர் மிக்க உதவியாக இருக்கிருர். கணவருடைய வாழ்க்கையில் அவர் எவ்வளவு உதவியா

பிருக்கிறார் என்பது இந்நூலில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இனி, மெய்-லிங்கினுடைய சகோதர சகோதரிகளைப்பற்றிச் சிறிது கவனிப்போம். அவருடைய மூத்த சகோதரர் டி. வி. ஸூங் மிகவும் சாமர்த்திய சாலி. சீனாவிலுள்ள பெரும் பணக்காரரில் அவர் ஒருவர். மேல்நாட்டுப் பொருளாதார முறைகளையெல்லாம் கரைகண்டவர். அரசாங்க வரவு செலவில் கோடிக்கணக்கான பொருளுக்குத் திட்டம் போடுவதில் அவர் நிபுணர். இதனால் அவரைப் 'பொருளாதார மந்திரவாதி' என்று சொல்லுவது உண்டு. வெளிநாடுகளில், முக்கியமாக அமெரிக்காவில், அவருக்கு அநேக நண்பர்கள் இருக்கிறார்கள். அவர் எங்கும் பிரசித்தமானவர். அவருடைய பாங்கின் தலைமை ஸ்தலம் கான்டன். அந்த இடத்தில்தான் உலகத்துப் பத்திரிகை நிருபர்களும், நண்பர்களும், அதிகாரிகளும் அவரைப் பேட்டி கண்டு பேசுவது வழக்கம். சியாங் கே-ஷேக்குக்கு அடுத்தபடியாகச் சீனாவில் புகழ் பெற்றவர் அவரே. ஆனால், ஜனங்கள் அவரிடம் பிரமாதமான மரியாதை காட்டவில்லையாயினும், ஒன்று அவர் குதூகலத்துடன் பாராட்டப்படுகிறார் அல்லது துவேஷிக்கப்படுகிறார் என்று சீனாவுக்குப் போய் வந்த மௌரர் என்பவர் எழுதியிருக்கிறார். எப்படி யிருந்தாலும், அவர் 'பெரிய ஆசாமி' என்று எல்லோரும் ஏகோபித்துப் புகழ்கிறார்கள். ஸோவியத் ரஷ்யாவுடன் அவருக்கு மிகுந்த நெருக்கம் இருந்து வருகிறது. சீனாவின் வெளிநாட்டு மந்திரியாக இருந்து அவர் செய்து வரும் காரியங்கள் மக்களால் பெரிதும் போற்றப்படுகின்றன. ஏனெனில், ஜப்பானுடன் சீனா உயிருக்கு மல்லாடிக்கொண்டிருக்கும் பொழுது, சீனாவுக்கு வெளியிலிருந்து கிடைக்கவேண்டிய எல்லா உதவிகளையும் சேகரித்துக் கொடுப்பதே முதல் வேலையா யிருக்கிறது. இந்த

நெருக்கடியான காலத்தில் அந்நிய நாடுகளின் உறவில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டியது அவசி யத்திலும் அவசியமாகும்.

அவருடைய தம்பிமார்கள் இருவரும் மகா புத்தி சாலிகள்; நன்ருகப் படித்திருக்கிருர்கள். அரசாங்க சம்பந்தமாக அவர்களும் சியாங் கே-ஷேக்குக்கு மிக்க உதவியாக இருக்கின்றனர்.

ஸ்ரீமதி எய்-லிங்கின் கணவராகிய குங் சீனுவின் ஆதி குருவாகிய கன்பூஷியஸ் முனியின் வம்சத்தில் வந்தவர். வட சீனுவில் அவருக்கு அநேகம் பாங்கிகள் இருக்கின்றன; தென் சீனுவிலும் அவருடைய வர்த்தக ஸ்தலங்கள் பல இடங்களில் இருக்கின்றன. அவர் மதப்பற்றுடைய பழுத்த கிறிஸ்தவர். இங்கிலீஷ் அருமையாகப் பேசுவாராம். யுத்தகாலத்தில் சீனுவின் தலை நகராக விளங்கும் சுங்கிங் நகரிலுள்ள மாளிகைகள் எல்லாவற்றிலும் அவருடையதே மிக அழகாக இருக்கிறது என்று வென்டல் வில்கி வர்ணித் திருக்கிருர். வில்கி அந்த வீட்டில் விருந்து உண்ணப் போயிருந்தார். அப்பொழுது அவரும், டாக்டர் குங், மெய்-லிங், சிங்-லிங் ஆகியோரும் உலகப் பிரச்னை களைப்பற்றி வெகுநேரம் விவாதித்துக்கொண் டிருந் ததைப்பற்றி அவர் அமெரிக்காவுக்குத் திரும்பியதும் எழுதிய புத்தகத்தில்* விரிவாகக் குறிப்பிட்டிருக் கிருர். கீழ்த்திசை நாடுகளில் புரட்சிகரமான தத்து வங்கள் அதிவேகமாகப் பரவிவருவதைப் பற்றியும், இந்தியாவைப் பற்றியும், ஜவாஹர்லால் நேருவைப் பற்றியும், சீனுவின் எதிர்காலம், சியாங் மேற்கொண் டிருக்கும் வேலைகள் முதலியவைகளைப் பற்றியும் பேசினுர்களாம். 'எனக்கு இது வசீகரமாக இருந்தது. அவர்கள் மூவரும் சகல புள்ளி விவரங்களையும்

---

* '*One World*—ஒரே உலகம்' என்பது புத்தகத்தின் பெயர்: ஸ்ரீ தி. ஜ. ர. இதைத் தமிழாக்கி யிருக்கிருர்.

தெரிந்து வைத்துக்கொண் டிருந்தார்கள். மூவருமே பிடிவாதமான அபிப்பிராயங்கள் உடையவர்கள். அவர்கள் ஒவ்வொருவரும், முக்கியமாக ஸ்ரீமதி சியாங், சம்பாஷணைக்கு இன்பம் அளித்து வந்தனர்' என்று வில்கி எழுதியிருக்கிறார். அவர் போயிருந்த சமயம் எய்-லிங் நோயுற்றிருந்ததால் அவர் அந்த விவாதத்தில் கலந்து கொள்ளவில்லை. டாக்டர் குங் செய்து முடித்துள்ள பெரிய காரியங்கள் பல அவருடைய மனைவியாரின் ஆலோசனையின் பேரிலும், தூண்டுதலாலுமே செய்யப்பட்டனவாக ஜனங்கள் சொல்லுகிறார்கள். பொதுவாகவே, ஸூங் சகோதரிகள் எல்லோருமே தாங்கள் செய்யக் கருதும் அருங் காரியங்கள் எல்லாவற்றையும் தத்தம் கணவர் மூலமே செய்து முடித்துவிடுவார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

எய்-லிங்குக்கு அடுத்த இளைய சகோதரியான சிங்-லிங் அம்மையார் ஸன் யாட்-ஸென்னின் வாழ்க்கைத் துணைவியாக இருந்து தேசியப்புரட்சிக்குப் பெருந் தொண்டுகளைச் செய்திருக்கிறார். கணவரை இழந்த பிறகும் அவர் பொதுநல ஊழியத்தைக் கைவிடவில்லை. அவர் அதி தீவிரவாதி. ரஷ்யாவிடத்திலும் பொதுவுடைமையிலும் அவருக்கு மிகுந்த பற்று உண்டு. 'இந்த ஆத்மா ஸ்படிகம்போல் சுடர் விட்டுப் பிரகாசித்துக்கொண் டிருந்தது' என்று அவரைப்பற்றி நூலாசிரியர் மௌரர் புகழ்ந்திருக்கிறார். அவர் சிறந்த அறிவாளியா யிருப்பதால், அடிக்கடி பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதுவதன் மூலம் தம் கருத்துக்களை நாடெங்கும் பரப்பி வருகிறார். சீனாவின் முதல் குடியரசுத் தலைவரான ஸன் யாட்-ஸென்னின் தர்ம பத்தினியான அந்த மாதர்குல விளக்கை நேரில் சந்திக்க முடியாமல் திரும்பிவிட்டதற்காகப் பண்டித நேரு மிகவும் வருத்தப்பட்டு எழுதியிருக்கிறார். நேரு சீனாவுக்குப்

போயிருந்த சமயத்தில் சிங் - லிங் அம்மையார் ஹாங்காங் தீவில் வசித்து வந்தார்.

'1914-ஆம் ஞூ மகா யுத்தம் ஆரம்பமானதி' லிருந்து தொடங்கிய புரட்சியின் சகாப்தத்தில் நாம் வாழ்கிறோம். அது வருஷத்திற்கு வருஷம் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. உலகமோ எங்கும் போராட்டங் களுக்கு நிலைக்களனாக விளங்குகிறது' என்று ஜவா ஹர்லால் தம்முடைய உலக சரித்திரத்தில் * கூறி யிருக்கிறார். சீனாவையும் புரட்சி உலுக்கிக் குலுக்கி வருகிறது. அந்தப் புரட்சி அனலின் கொழுந்து களாக ஸூங் குடும்பத்தினர் விளங்குகின்றனர்.

## IX

### வெற்றியும் தோல்வியும்

'மெலிந்தோருக்கு விடுதலை இல்லை. மெலிவை யெல்லாம் துரத்திவிடு. உடம்பு வலிது என்று அதனிடம் சொல்லு. அறிவு வலிது என்று அதனிடம் சொல்லு.'

— விவேகானந்தர்

---

1911-இல் சியாங் ஜப்பானிலிருந்து சீனாவுக்குத் திரும்பிவந்த பொழுது அவருடன் 120-புரட்சிக்காரர்களும் வந்திருந்தனர். அச்சமயத்தில் புரட்சிக்காரர்கள் பெருங் கூட்டமாகப் பிரயாணம் செய்வதில் எத்தனையோ ஆபத்துக்கள் இருந்தன. எனினும் அவைகளைப் பொருட்படுத்தாது, எல் லோரும் ஷாங்காய் நகரில் வந்து சேர்ந்தனர். அந்தப் பெரிய நகரில் ஆளுக்கு ஒரு மூலையாகப் போய் அங்குள்ள ஜன சமுத்திரத்தோடு ஐக்கியமாகி மறைந்துகொண்டனர்.

சென் சி-மெய் ஷாங்காய் நகரில் இருந்து கொண்டு புரட்சி இயக்கத்தை நடத்திவந்தார்.

---

**Glimpses Of World History.*

அவருக்கும் சியாங்குக்கும் ஜப்பானில் வைத்தே பழக்கம் ஏற்பட்டிருந்ததால், சியாங் முதலில் அவரைச் சந்தித்தார். அடுத்தாற்போல் டாக்டர் ஸன் யாட்-ஸென்னையும் கண்டு பேசினார். அது முதல் தம்மைப் புரட்சிக்கே அர்ப்பணம் செய்யத் தயாராக இருந்தார். சென்னும் ஸன்னும் அவரிடம் பூரண நம்பிக்கை கொண்டிருந்தனர். அப்பொழுது ஹாங்சௌ, ஷாங்காய் இரு நகர்களையும் கைப்பற்றுவதற்காகத் திட்டம் போடப்பட்டிருந்தது. ஷாங்காயைப் பிடிப்பதற்கு முதலில் அரசாங்கத்தின் ஆயுதக் கிடங்கைக் கைப்பற்றவேண்டியது அவசியமாக இருந்தது. சியாங் ராணுவ ஆலோசனைகளில் முதன்மையாக நின்று கலந்து கொண்டிருந்தார்.

அரசாங்க அதிகாரிகள் புரட்சி அனல் பற்றிக் கொள்ளு முன்பே அதை அணைத்துவிட வேண்டும் என்று முயற்சித்து வந்தார்கள். நிலைமை எல்லை கடந்துவிட்டது என்பது அவர்களுக்குத் தெரியாது. நகரத்திற்கு வந்து போகும் ஓடங்களையும், ரயில் வண்டிகளையும் அவர்கள் கவனமாகக் கண்காணித்து வந்தார்கள். புதிதாக அநேக மனிதர்கள் பாதுகாப்பு வேலைக்காகச் சேர்க்கப் பட்டார்கள். அரசாங்கப் படைகளும் ஏராளமாக இருந்தன. புரட்சிக்காரரிடமோ, ஆயுதம் தாங்கிய சிலரே இருந்தனர். ஆயினும் அரசாங்கத்திற்குப் பொதுஜன ஆதரவு இல்லை. புரட்சிக்காரர்கள் வியாபாரிகள், தொழிலாளர்கள் முதலிய பலதிறப்பட்ட மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றிருந்தார்கள். சென் ஷாங்காயிலும், சியாங் ஹாங்சௌவிலும் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்யப் பெற்றது.

1911-இல் நவம்பர் மீ 4-உ பிற்பகல் 2-மணிக்கு ஒரு சிறு சைனியத்துடன் சியாங் புறப்பட்டார். ஹாங்சௌவில் ஏராளமான அரசாங்கப்

படைகள் இருந்தன. சியாங்கின் படையில் மொத்தம் 100 வீரர்களே இருந்தனர். ஆனால் அவர்கள் அனைவரும் தீரர்கள், புரட்சியில் ஆர்வம் உள்ளவர்கள், வெற்றி அல்லது மரணத்தையே விரும்புகிறவர்கள். அவர்களுடன் புரட்சிக்காரர்களான இரண்டு ஸ்திரீகளும் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் எல்லோரும் ஏராளமான வெடிகுண்டுகளும் ஆயுதங்களும் வைத்திருந்தனர். முதலில் அவர்கள் கவர்னருடைய காரியாலயத்தைத் தாக்கினார்கள். அங்கிருந்த காவலர்கள் நடுங்கி நாலு பக்கத்திலும் சிதறி ஓடிவிட்டார்கள். காரியாலயத்திற்குத் தீ வைக்கப்பட்டது. சிறிது நேரத்தில் நகரம் முழுதுமே புரட்சிக்காரர் கையில் சிக்கிவிட்டது. மறுநாள் காலையில் அங்கே ஒரு தாற்காலிகப் புரட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டது.

ஹாங்செள வெற்றி இரண்டு விதங்களில் முக்கியத்துவம் வாய்ந்தது. அது புரட்சியின் முதல் வெற்றி. அத்துடன் சியாங் கே-ஷேக்கின் வாழ்க்கையில் அது அவருடைய கன்னிப் போர். பயிற்சி பெற்ற ஒரு சிறு கூட்டத்தை வைத்துக்கொண்டு எவ்வளவு பெரிய காரியங்களைச் சாதிக்க முடியும் என்பதை அவர் நேரில் தெரிந்துகொள்ள முதலிலேயே சந்தர்ப்பம் வாய்த்தது.

நவம்பர் 3-லேயே சென் ஷாங்காயில் கலகக் கொடியை ஏற்றிவைத்தார். போலீஸ் தலைமைஸ்தலம் தீக்கு இரையாயிற்று. போராட்டம் இல்லாமலே மற்ற ஸ்டேஷன்கள் சரணாகதி அடைந்து விட்டன. 100-புரட்சி வீரர்கள் அணிவகுத்துச் சென்று மாஜிஸ்டிரேட் காரியாலயத்தைப் பிடித்துக்கொண்டனர். அவர்களில் 50-பேர் கொண்ட ஒரு பிரிவினர் ஆயுதக் கிடங்கைத் தாக்கப் புறப்பட்டனர். அவர்கள் சென்றதும் காவலர்கள் குண்டு மழை பொழிய ஆரம்பித்து விட்டனர். புரட்சி வீரர்களில் எட்டுப்

பேர் உயிர் துறந்து வீழ்ந்தனர். உடனே சென் ஆலோசனையில் ஆழ்ந்தார். சமாதான முறையில் நேரில் பேசி, காவலர்களைக் கைக்குள் போட்டுக் கொண்டு, ஆயுதக் கிடங்கைப் பிடித்துவிட வேண்டும் என்று தீர்மானித்தார். அதற்கு யாரை உள்ளே அனுப்புவது? தாமே நேரில் போவது என்று கருதி, அந்தச் சுத்த வீரர் தன்னந் தனியே புறப்படலானார். சிங்கத்தின் வாயில் தலையைக் கொடுப்பதுபோல், அவர் கிடங்குக்குள் போய்ச் சேர்ந்தார். காவலர்கள் அவருடைய பேச்சைக் கேட்கவில்லை. அதற்குப் பதிலாக அவரைப் பிடித்து ஒரு நாற்காலியில் வைத்துக் கம்பிகளால் நாற்காலி யோடு சேர்த்துக் கட்டிவிட்டார்கள். திரிகரண சுத்தியாகத் தேசத்தின் நன்மையைத் தவிர வேறு சிந்தனையே அறியாத அந்த மாசிலாமணி, எதிர்பாராத விதத்தில் கட்டுண்டு கிடந்தார். ஆனால், வெளியே இருந்த அவருடைய தோழர்கள் விடவில்லை. இரவு முழுதும் திரும்பத் திரும்பப் போராடிக்கொண்டே இருந்தார்கள். கடைசியில் அவர்கள் வெற்றி யடைந்து, ஆயுதக் கிடங்குள் புகுந்து, தங்கள் அருமைத் தலைவரை விடுதலை செய்துகொண்டு வந்துவிட்டார்கள். ஷாங்காயும் கலகக்காரர் கைக்கு வந்தது. சியாங்கும் ஷாங்காய் வந்து சேர்ந்தார். ஒரு பட்டாளத்தின் தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டார். அந்தக் காலத்தில் புரட்சிக்காக வீரமும் கண்யமும் வாய்ந்த ஜனங்கள் பட்டாளங்களில் சேர முன் வருவதில்லை. ஊர்சுற்றிகளும், சோதாக்களும், போக்கிரிகளுமே கிடைத்து வந்தார்கள். இவர்களைப் பயிற்சி செய்வித்து, வல்லமை மிகுந்த மஞ்சு மன்னரின் படைகளை எதிர்க்கவேண்டும்! சியாங் மனம் தளர வில்லை. இதுவரை அவர் போர் முறைகளைப்பற்றிக் கற்றதெல்லாம் ஏட்டுச் சுரைக்காய்கள். அநுபவத்தில், நேரில், யுத்த முறைகளையும், எதிர்காலத்தில் சீனப்

பாதுகாப்புக்கும் வெற்றிக்கும் என்ன என்ன வேண்டும் என்பதையும் அறிந்துகொள்ள அவருக்கு இப்போதுதான் சந்தர்ப்பம் வாய்த்தது. பணமும் போதுமான அளவு இல்லை. கஷ்டங்கள் மலைபோலே வழிமறித்து நின்றன. ஆனால், சியாங்கைப் போலவே சென் சி-மெய்யும் அசகாய சூரரானதால், சித்தம் கலங்காமல் திட்டங்களை வகுத்து வந்தார். போராட்டத்திற்கு உடற் சதையும் பொருளும் ஏராளமாகப் பலி கொடுக்க வேண்டியிருந்தது. 'சதை நம்மிடம் நிறைய இருக்கிறது. ஆனால் பொருள்தான் இல்லை!' என்று சென் சொல்லி வந்தாராம். பொருள் சேகரிக்கவும் தக்க ஏற்பாடு செய்யப்பட்டது. சியாங் போர்வீரர்களுக்குப் பயிற்சி கொடுத்து வந்தார். அத்துடன் கூட்டுறவு சங்கங்கள் அமைத்து, அவைகளின் மூலம் படைகளுக்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்து அனுப்புவதற்கும் ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்.

நவம்பர் 30-இல் நான்கிங் நகர் புரட்சிக்காரர்களால் தாக்கப்பட்டது. டிஸம்பர் 2-இல் அது அவர்களிடம் சிக்கிவிட்டது. அந்த மாதத்திலேயே ஒரு தாற்காலிகப் பார்லிமெண்டு அமைக்கப்பட்டது. பார்லிமெண்டு முதன் முதலாகச் செய்த தீர்மானம், பேரறிஞரும் பெருந் தலைவருமான டாக்டர் ஸன் யாட்-ஸென் சீனக் குடியரசின் முதல் தலைவராக இருக்கவேண்டும் என்பதே. புரட்சி ஆரம்பித்த பொழுது ஸன் சீமையில் இருந்தார். பிறகு டிஸம்பர் மாதக் கடைசியில்தான் அவர் ஷாங்காய் வந்து சேர்ந்தார். சியாங் கே-ஷேக்கும் மற்றத் தலைவர்களும் அவரை எதிர்கொண்டு அழைத்துவந்தனர். 1912-ஜனவரி முதல் தேதியில், நான்கிங் நகரில் ஏற்படுத்தப்பெற்ற குடியரசுக்கு அவர் தலைவராக அமர்ந்தார். அந்தச் சமயம் ஏற்பட்டிருந்த ஊக்கத்திற்கும், உத்ஸாகத்திற்கும், கோலாகலத்திற்கும்

அளவே இல்லை. பீரங்கிகளின் முழக்கமும், வாண வேடிக்கைகளும், ஊர்வலங்களும் மக்களின் மகிழ்ச் சிக்கு அறிகுறிகளாக விளங்கின. தலைவர்கள் ஆரவாரங்களைக் கண்டு மயங்கிவிடவில்லை. புரட்சி ஆரம்பமாகி யிருந்ததைத் தவிர அதன் வேலைகள் எல்லாம் இனிமேல்தான் நடைபெறவேண்டும் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். குடியரசு பெயரளவில் ஏற்பட்டிருந்த போதிலும், அதன் ஆதிக்கம் தேசம் முழுதும் பரவுவதற்கு முன்னால் இரத்த ஆறுகளைக் கடந்துசெல்ல வேண்டியிருக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும். பெரிய போராட்டங் களில், அரசாங்கப் படைகளுக்கு முன்னால் புரட்சிப் படைகள் சில நிமிஷங்கள்கூட நிற்க முடியாது என்பதும், பொருளாதாரத் துறையில் குடியரசு மிகப் பலக்குறைவாக இருந்தது என்பதும் உள்ளங்கை நெல்லிக் கனி போல் தெளிவாயிருந்தன.

இந்த நிலைமையில் டாக்டர் ஸன் யாட்-ஸென் தாம் தலைமைப் பதவியிலிருந்து விலகிக்கொண்டு யுவான் ஷி-கேய் என்பவரைக் குடியரசுத் தலைவ ராக்கினார். இது மகா தியாகம் என்று முன்னரே குறிப்பிடப்பட்டிருக்கிறது. யுவான் ஒரு கொள்கையும் இல்லாதவர். வெற்றியடைகிற கட்சிதான் அவர் கட்சி; மஞ்சு வம்சத்துக் கடைசி மகாராணியாக அப் பொழுது ஆட்சிபுரிந்து வந்தவரால் அரசாங்கத்தின் உதவிக்காக அவர் அழைக்கப்பட் டிருந்தார். முன்னால் அதே மகாராணியால் அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டவர். நீக்கும்பொழுது அவருக்கு உடம்பு சௌகரியமில்லாததால், அவராக விலகிக்கொள்வதாக மகாராணி அறிக்கை விட்டிருந்தார். பின்னால் புரட்சி கொந்தளிக்க ஆரம்பித்ததும், ஹாங்சௌ, ஷாங்காய், நான்கிங் எல்லாம் புரட்சிக்காரர்கள் கையில் விழுந்து விட்டதும், மகாராணி கவலை யடைந்து, யுவானை மறுபடி வேலைக்கு அழைத்தார்.

யுவான் முன்னால் தம்மை இழிவுபடுத்தியதை மறக்கவேயில்லை. தமக்கு 'உடம்பு இன்னும் சௌகரியமாயில்லை' என்று பதில் அனுப்பினார். மகாராணி மன்ருடி அவரை வரவழைத்துச் சேனபதியாக்கிவிட்டார். யுவான் சந்தர்ப்பவாதியானதால், பாலுக்கும் காவலாய்ப் பூனைக்கும் தோழராக இருக்க வேண்டும் என்று தீர்மானித்தார். புரட்சிக்காரர்களைக் கொடூரத்துடன் அடக்க ஆரம்பித்தார். அதே சமயத்தில் புரட்சித் தலைவர்களுக்குத் தூதனுப்பி, குடியரசில் தமக்குப் பதவி கிடைக்கவும் ஏற்பாடு செய்துகொண்டார். டாக்டர் ஸன் அவர் உதவியாலேயே ராஜ வம்சத்தை ஒழித்துக் கட்டிவிடத் தீர்மானித்தார். இதன் பலனைத்தான் யுவான் குடியரசுத் தலைவராக வந்தார். முதலில் ராஜ வம்சத்தை ஒழித்துவிட்டு, அடுத்தபடியாகக் குடியரசையும் ஒழித்துவிட அவர் முற்பட்டார்.

ராணுவமே புதிய அரசாங்கத்தின் ஆணிவேர் என்பது அவருக்கு நன்ருகத் தெரியும். ஆதலால் முதலில் ராணுவத்திலிருந்த, ஜப்பானில் பயிற்சி பெற்ற தளகர்த்தர்களையும், குடியரசுக் கொள்கையுடைய தளகர்த்தர்களையும் வேலையை விட்டு நீக்க ஆரம்பித்தார். சியாங் இதையெல்லாம் எதிர்பார்த்து, அரசியலை விட்டு விலகி, ஜப்பானில் உயர்தர ராணுவப் பயிற்சி பெறுவதற்காகப் போய்விட்டார். கிளியை வளர்த்துப் பூனையிடம் கொடுப்பதுபோல், அதிகாரம் யுவான் கையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர் நாள்தோறும் கொடுமையில் திளைத்து, தம் பிடியை வலுப்படுத்திக்கொண்டு வந்தார்.

சியாங் ராணுவப் பயிற்சி சம்பந்தமான ஒரு பத்திரிகை நடத்தி வந்தார். சீனர்கள் போர் முறைகளில் திறமையும் பயிற்சியும் பெறுவதைப்பற்றியும், அரசியல், சீன நாட்டின் எல்லைகள், வெளிநாடுகளுடன்

சீனாவுக்கு உரிய தொடர்புகள் ஆகிய விஷயங்களைப் பற்றியும் அவர் தெளிவான உயர்ந்த கட்டுரைகள் பலவற்றை எழுதி, அப்பத்திரிகை மூலம் பிரசாரம் செய்தார். ஜப்பானில் சிறிது காலம் இருந்துவிட்டு ஜெர்மனிக்கும் போய் யுத்தப் பயிற்சி பெறவேண்டும் என்று அவர் யோசனை செய்திருந்தார்.

சீனாவில் வெகு சீக்கிரத்திலேயே யுவானுக்கு எதிரிகள் தோன்றிவிட்டார்கள். லீ லியே—சுன் என்ற தளகர்த்தர் கியாங்ஸி மாகாணத்தில் யுவானின் படைகளை எதிர்த்து விரட்டி மாகாணத்தின் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தார். நான்கிங், அன்வெய், குவாங்டுங், பூகியன், ஹூனான் ஆகிய இடங்களிலும் யுவானின் ஆதிக்கம் நிராகரிக்கப்பட்டது. இவ்வாறு இரண்டாவது புரட்சி ஆரம்பமாகி, மறுபடியும் புரட்சிச் சக்திகள் பெருக ஆரம்பித்தன.

சியாங் ஜெர்மனிக்குப் போகாமல் சீனாவுக்கே திரும்பி, ஷாங்காயில் சென் சி—மெய் முதலிய நண்பர்களோடு சேர்ந்துகொண்டார். ஷாங்காய் யுவானுடைய துருப்புகள் வசம் இருந்தது. முதலில் அதை விடுதலை செய்யும் போராட்டம் ஆரம்பமாயிற்று. ஜூலை 22-இல் ஷாங்காயிலுள்ள ஆயுதக்கிடங்கு மறுபடி தாக்கப்பட்டது. ஏராளமான படைவீரர்கள் அதைப் பாதுகாத்துக் கொண்டிருந்ததால் புரட்சிப் படைகளால் அவர்களை முறியடிக்க முடியவில்லை. இரவு முழுதும் போராட்டம் நடந்தும், வெற்றி கிடைக்கவில்லை. புரட்சிக்காரர்கள் 29உ வரை விடாப்பிடியாகப் போர் புரிந்து வந்தும் பயன்படவில்லை. இரண்டாம் புரட்சி தோல்வியில் முடிந்துவிட்டது.

இந்தப் போராட்டங்கள் தோல்வியில் முடிந்தாலும், புரட்சி வீரர்களுடைய பெருமையும் திறமையும் இவைகளின் மூலம் தெளிவாயிருந்தன.

சியாங் எத்தகைய தளகர்த்தர் என்பதும் அவருடைய அரிய சேவைகளிலிருந்து புலனாயிற்று. டாக்டர் ஸன் அவரிடம் அதிக நம்பிக்கைகொண்டு, முன்னிலும் அதிக நெருக்கமாகப் பழகிவந்தார். இதுமுதல் அவர்களைக் 'குருவும் சீடரும்' என்று கருதலாம். தாற்காலிகமாக ஏற்பட்ட தோல்வியால் இருவரும் கலக்கம் அடையாமல், ஜப்பானுக்குப் போய் மேல் விளைவு என்ன ஆகும் என்பதைச் சிந்தித்துத் திட்டம் வகுக்க ஆரம்பித்தனர். அதே சமயத்தில் சீனாவில் யுவான் புரட்சியை வேரோடு கல்லி எறிந்துவிட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வந்தார். கோமின்டாங் கலைக்கப்பட்டது. கோமின்டாங் அங்கத்தினர் பார்லிமென்டில் இல்லாமற் போனதால் பார்லிமென்டும் ஜீவனை இழந்தது. தமக்கு ஒத்தபடி தலையாட்டக் கூடிய சில பொம்மைகளைப் பொறுக்கி யுவான் ஓர் அரசியல் சபையை நியமித்துக் கொண்டார். சுருங்கச் சொன்னால், குடியரசையே அவர் கசக்கி மோந்து பார்த்துக்கொண்டிருந்தார்.

ஸன் யாட்-ஸென், சியாங், சென் முதலிய தலைவர்கள் புரட்சி இயக்கத்தின் பலவீனங்களைப் பற்றி ஆராய்ந்து, மேற்கொண்டு அவைகளைக் களைந்து விடுவதற்கு வழிகளை அமைத்துக்கொண்டிருந்தனர். கோமின்டாங் அங்கத்தினருள் ஒழுங்கும் கட்டுப்பாடும் குறைவாக இருந்ததாலும், தென் சீனாவில் மட்டுமே புரட்சிப் பிரசாரம் அதிகமாக நடந்து வந்ததாலும், பல தோல்விகள் ஏற்பட்டன என்று அத் தலைவர்கள் அபிப்பிராயப்பட்டனர். டாக்டர் ஸன், மேற்கொண்டு சேருகிற அங்கத்தினர், தம்மிடம் விசுவாசமாக இருப்பதாகப் பிரமாணம் செய்ய வேண்டும் என்று ஒரு புது விதியை அமைத்தார். வட சீனாவிலும், வட கிழக்கிலும் புரட்சி வித்துக்களை ஆழமாக விதைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. மஞ்சூரியாவிலும் பிரசாரம் செய்ய அங்குள்ள

புரட்சிக்காரர்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. சியாங் ஒரு முறை அங்கே சென்று நேரில் பல பகுதிகளில் சுற்றுப்பிரயாணம் செய்து பார்த்தார். வெளியிலிருந்து அங்கே போகும் புரட்சிக்காரர்களின் உயிருக்கு மிகுந்த அபாயங்கள் இருந்தும், அவர் அவைகளைப் பொருட்படுத்தாமல், புரட்சித் தலைவர்களைக் கண்டு பேசினர். மஞ்சூரியா அச்சமயத்தில் புரட்சிக்குத் தயாராக இல்லை என்று அவர் கருதியதால், ஜப்பானுக்குத் திரும்பி, மற்றத் தலைவர்களிடம் தம் கருத்தை விளக்கி ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தார். பின்னர், சென் சி-மெய் மீண்டும் ஷாங்காய்க்குச் சென்று மூன்ருவது புரட்சியை ஆரம்பித்து வைப்பதற்கான வேலைகளில் ஈடுபட்டார்.

ஷாங்காய் அப்பொழுது அரசாங்கத்தின் வலிமை மிகுந்த கோட்டையாக இருந்தது. செங் ஜூ-செங் என்ற அதிகாரி அங்கே பாதுகாப்புக் கமிஷனராக இருந்தார். அவர் மிகுந்த சாமர்த்தியசாலி, யுவான் ஷி-கேயிடம் பற்றுள்ளவர். அவரை முதலில் தொலைத்தால் அன்றி ஷாங்காய் நகரில் ஒன்றும் நடக்காது என்பதைப் புரட்சிக்காரர்கள் கண்டனர். அவருக்கு மரண தண்டனை விதித்துவிடத் தீர்மானித்தனர். உடனே பத்து வாலிபர்கள் வெடிகுண்டுகள் முதலியவை தயாரித்துக்கொண்டு புறப்பட்டனர். ஒரு நாள் ஹாங்கோ ரஸ்தாவிலிருந்த ஒரு பாலத்தின் அருகே செங் மோட்டார்காரில் சென்றுகொண்டிருந்தபொழுது, புரட்சி வாலிபர்களில் இருவர் அவர் மீது குண்டுகளைப் பொழிந்து கொன்றுவிட்டனர். இந்தச் சம்பவத்தினல் யுவானுடைய ஆட்சியே ஆட்டம் கொண்டுவிட்டது என்று சொல்லலாம்.

ஷாங்காயிலிருந்த கப்பல் தலைவர்கள் சிலரும் புரட்சியில் கலந்துகொண்டார்கள். சௌஹோ என்ற யுத்தக் கப்பல் (1913, டிஸம்பர், 5உ) ஆயுதக்

இடங்கை நோக்கிப் பீரங்கிப் பிரயோகம் செய்யும் நிலைக்கு வந்துவிட்டது. அதன் உச்சியில் புரட்சிக் கொடி பறந்துகொண்டிருந்தது. துரதிருஷ்ட வசமாக மற்றும் பல கப்பல்கள், சௌஹோவை நோக்கிச் சுட ஆரம்பித்து விட்டன. அவைகளின் தலைவர்கள் துரோகி யுவானுக்கு ஆதரவாக இருந்தார்கள். அதனால் மறுநாள் காலையில் புரட்சிக் கப்பல் பின் வாங்கிச் செல்ல நேர்ந்தது.

சௌஹோ கப்பல் பீரங்கிப் பிரயோகம் செய்த அதே சமயத்தில், சென், சியாங் முதலிய தலைவர்கள் நான்டாவுக்குச் சென்று, நில மார்க்கமாகவும் தாக்கு வதற்கு முற்பட்டார்கள். அவர்களுடைய திட்டம் நிறைவேறாமல் போயிற்று. யுவானின் படைகள் முக்கியமான ஒவ்வொரு கட்டத்திலும் அணிவகுத்து நின்று எதிர்த்தன. புரட்சிப் படைகள் பின்வாங்கி விட்டன.

பின்னால் சியாங் கலந்துகொண்ட போராட்டங் களில் முக்கியமாய்க் குறிப்பிடவேண்டியது கியாங்கின் கோட்டையைப் பிடித்துக்கொண்டதாகும். இந்தக் கோட்டை யாங்ட்ஸி நதியின் தென்கரையில், ஷாங் காய்க்கும் நான்கிங்குக்கும் நடுவே உள்ளது. இதைப் பிடித்த பிறகு, படைகளுக்குள் ஒரு கலகம் ஏற்பட்ட தால், சியாங் ஷாங்காய்க்குத் திரும்பிச் சென்றார்.

இதன் பிறகு அவர் உள்ளத்தை வாட்டி வருத்தக் கூடிய ஒரு சம்பவம் நடந்தது. புரட்சியே மூச்சுக் காற்றாகக்கொண்டு வாழ்ந்து வந்த சென் சி-மெய்யின் உயிருக்குப் பகைவர்கள் உலை வைத்துவிட்டார்கள். சென் புரட்சியின் கொழுந்து. அதை அவித்தால் அன்றி யுவான் தப்ப முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். இதனால், அரசாங்க ஒற்றர்கள் சிலர் ஒரு ஜப்பானிய வியாபாரியிடமிருந்து புரட்சிக்கு ஏராளமான கடன் வாங்கித் தருவதாகச்

சொல்லி ஏமாற்றிச் சென்னை ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அழைத்துச் சென்றனர். ஆரம்பத்தில் சியாங் சந்தேகம் அடைந்து, சென் போகவேண்டாம் என்று தடுத்திருந்தார். ஆயினும், புரட்சியின் மேலிருந்த ஆசையால், சென் எளிதாக எதிரிகள் கையில் சிக்க நேர்ந்தது. அவர்களில் இருவர் சென்னைச் சுட்டுக் கொன்று விட்டனர்.

இந்த அதிர்ச்சியிலிருந்து சியாங் மீளுவதற்குப் பல நாள் ஆயிற்று. கோடிக் கணக்கான மக்களின் நலத்திற்காகச் சுய நலத்தை அறவே ஒழித்துவிட்ட ஓர் உத்தம நண்பரைப் பறிகொடுப்பது என்றால் சாமானிய விஷயமா? ஆனால் புரட்சிப் பிடியில் சிக்கியிருந்த சீனாவில், இறந்துபோன தலைவர்களைப் பற்றி எண்ணி ஏங்கிக்கொண்டிருக்க நேரம் இல்லை. ஏனெனில், போனவர் போக, அடுத்தாற் போல் மற்றவர்வளுக்கும் ஆபத்து விளைக்க எதிரிகள் காத்துக் கொண்டிருந்தனர். சென்னுக்குப் பின்னால் சியாங்கையும் பழி வாங்கிவிடுவதற்கு ஒற்றர்கள் வேலை செய்து வந்தனர். ஒரு சமயம் சியாங் போயிருந்த ஒரு வீட்டை அவர்கள் சுற்றி வளைந்துகொண்டுவிட்டனர். ஆனால் சியாங் அங்கே இல்லை. அவர், அந்த வீட்டில் தாம் தேடிப்போன நண்பர் இல்லாததால், ஒற்றர் களுக்குத் தெரியாமலே வெளியே போயிருந்தார். மறுபடி அங்கே அவர் வந்து பார்த்தபொழுது ஒற்றர்கள் சூழ்ந்திருப்பதைக் கண்டு, மெதுவாக நழுவிவிட்டார்.

இந்தச் சமயத்தில்தான் ஜப்பான் 21 நிபந்தனை களைத் தயாரித்து, சீனா அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியது. யுவானுக்கு ஜப்பான் பக்க உதவியாக நின்று கடன் வசதிகள் எல்லாம் செய்து கொடுத்து வந்தது. மற்ற வெளி நாடுகளும், யுவான் பலசாலியாயிருந்து சீனாவை

ஒற்றுமைப்படுத்திப் பலமான அரசாங்கத்தை அமைத்துவிடுவார் என்றும், அதனால் தங்கள் வியாபாரம் இடையூறு இல்லாமல் நடந்து வரும் என்றும் நம்பி, யுவானை ஆதரித்து வந்தன. அதுதான் சமயம் என்று ஜப்பான் நிபந்தனைகளைப் போட ஆரம்பித்தது. அவைகளின்படி சீனா ஜப்பானின் அடிமையாகப் போவதைத் தவிர வேறு வழியில்லை. புரட்சிக்காரர்கள் விழிப்படைந்தனர். யுவானைத் தொலைத்து விட்ட பிறகும், அவர்கள் ஜப்பானை எளிதாகப் புறக்கணித்து விட முடியாது என்பது தெளிவாயிற்று.

1915-ஆம் வருஷம் முழுதும் ஆங்காங்கே புரட்சிக் கலகங்கள் நடந்து வந்தன. அவ்வருஷக் கடைசியில், யுவான் தாமே சக்கரவர்த்தி என்று சொல்லிக் கொண்டு, பெகிங் நகரில் சிம்மாசனத்தில் ஏறி அமர்ந்து கொண்டார். அன்னம் இருந்து அரசாண்ட இடத்தில் புன்மையான காகம் போய் உட்கார்ந்தால், அந்த மாறுதல் ஜனங்களின் மனக்கொதிப்பை உடனே கிளப்பிவிடும் அல்லவா? பற்பல இடங்களில் மக்கள் கொதித்துக் கிளம்பிவிட்டார்கள். யுன்னான் மாகாணம் முதலில் சுதந்திரமாகக் கிளம்பியது. உடனே வேறு சில மாகாணங்களும் யுவானின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றன. யுவான் நடுங்கிப் போய், சிம்மாசனம் வேண்டாம், ஆளை விட்டாற் போதும் என்ற நிலைமைக்கு வந்து விட்டார். தென் சீனா முழுதும், உடனே அவர் ராஜீநாமா செய்து தொலையவேண்டும் என்று பிடிவாதமாகக் கூறியது. யுவான் நோயால் மிகவும் அவதிப்பட்டு, சிம்மாசனம் மட்டும் அன்றி, உலகத்தையும் விட்டே போய் விட்டார். அவர் சாகும்பொழுது, அவருடைய தளகர்த்தர்கள் அவருக்கு விரோதமாக இருந்தனர். அவர் சக்கரவர்த்தியாக இருந்தால் இவர்களுக்கு யதேச்சாதிகாரம் இல்லாமல் போயிருக்கும். முதலில் யுவானுக்கு உதவி செய்துவந்த ஜப்பானும், அவர்

சிம்மாசனம் ஏறுவதைச் சகிக்கவில்லை. முன்னால் இதே யுவான் கொரியாவில் ஜப்பானுக்கு எதிராகப் போர் புரிந்த ஒரு தளகர்த்தராக இருந்தார் என்பதை ஜப்பான் மறக்கவில்லை. நாலு வழியிலும், மரணத் தறுவாயில் அநுதாபம் காட்டுவதற்கு யாரும் இல்லாமல் புதிதாக வந்த யுவான் சக்கரவர்த்தி தேக வியோகமாகிவிட்டார்.

யுவான் வீழ்ந்ததும், ஆங்காங்குள்ள தளகர்த்தர்கள் அதிகாரத்திற்குப் போட்டிபோட ஆரம்பித்தார்கள். எங்கும் குழப்பம் ஆரம்பித்தது. போலிப் பார்லிமென்டுக்கு ஒருவர் பின் ஒருவராகத் தலைவர்கள் தோன்றினார்கள். புரட்சியின் வளர்ப்புப் பண்ணையாக இருந்த கான்டன் பகுதியிலும் போர் வெறி பிடித்த பிரபுக்கள் ஆதிக்கம் பெற்றனர். மூன்றுவது புரட்சி நடந்ததன் பலன் பல பிரபுக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் வந்து முடிந்தது.

சமயம் வந்துவிட்டது என்பதை உணர்ந்த ஸன் யாட்-ஸென், உடனே சியாங் முதலிய நண்பரைக் கலந்து கொண்டு, கான்டன் நகருக்குச் சென்று, விசேஷப் பார்லிமெண்டைக் கூட்டி வைத்து, ராணுவ சர்க்கார் ஒன்றையும் அமைத்துவிட்டார். அவரே சேனாபதியாகவும் பதவி ஏற்றுக்கொண்டார். வடக்கே போலிப் பார்லிமென்டின் தலைவர் என்று சொல்லிக் கொண்டிருந்த பெங் குவோ—சாங், அவருடைய நண்பர்கள் எல்லோரும் தேசத்துரோகிகள் என்று ஸன் பிரகடனம் செய்தார். வடக்கே இருந்த யுத்த வெறியர்களை அடக்காமல் புரட்சி முற்றுப் பெறாது என்பதை எல்லோரும் ஏகமனதாக ஒப்புக்கொண்டனர். ஆனால் சுயநலமும், பதவி வேட்கையும், பொறாமையும் கொண்டுள்ள தளகர்த்தர்களை நம்பி எந்தப் பெரிய காரியத்தையும் செய்ய முடியாமல் இருந்தது. ஸன்னோடு கூடவே இருந்த லு யுங்-டிங்

என்ற தளகர்த்தர் போலிப் பார்லிமென்டின் தலைவரோடு அந்தரங்க உறவு வைத்துக்கொண்டிருந்தார். இத்தகைய துரோகிகளால் ஸன்னுடைய லட்சியம் கைகூடுவதற்கு இடையூறு நேர்ந்து கொண்டேயிருந்தது. அவருடைய திட்டங்களெல்லாம் இவர்களால் தகர்க்கப்பட்டு வந்தன.

1918, மே 4-உ ஸன் சேனாபதிப் பதவியை விட்டு விட்டார். லு யுங்-டிங்கின் கூட்டத்தார் கொம்மாளம் போட ஆரம்பித்தனர். அரசாங்கம் திருத்தி அமைக்கப்பட்டு, ஸன் உள்ளிட்ட ஏழு பேர்கள் நிர்வாகஸ்தர்களாக இருக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. தனியே நின்று வழி காட்டத்தக்க பேராற்றல் வாய்ந்த தியாகமூர்த்தியான ஸன், எழுவரில் ஒருவராக இருந்து வேலை பார்க்கவே இல்லை. அந்தக் கேவலத்தை அவர் சகித்திருக்க முடியாது. அவர் குவாங்டுங் மாகாணத்தின் தலைவரான சூ-சிங்-லான் உதவியால் 20-படைகளைப் பெற்றுக்கொண்டு, சென் சியுங்-மிங் என்பவரைத் தளகர்த்தராக நியமித்து, பூகியன் மாகாணத்தின் தென்பகுதியைத் தாக்கும்படி அனுப்பிவைத்தார். 1918, மார்ச் மாதத்தில், சியாங் கே-ஷேக்கும் அந்தப் படையெடுப்பில் கலந்து கொண்டார். சென் சியுங்-மிங் ஒரு துரோகி என்பதை அவர் கொஞ்சங் கொஞ்சமாகத் தெரிந்துகொண்டார். டாக்டர் ஸன் முதலில் அவருடைய யோசனையைக் கேளாமல், பின்னால் வருந்துவது பல சமயங்களில் வழக்கமாகிவிட்டது. எனினும், அவர் தம்மால் இயன்ற அளவு உழைத்துச் சேனையைச் சீர்திருத்தி, வீரத்துடன் போராடும்படி செய்து வந்தார். சீனத் தளகர்த்தர்கள், மொத்தமாகச் சிப்பாய்களின் எண்ணிக்கையைச் சொல்லிப் பெருந்தொகைகளை அவர்களின் சம்பளமாக வாங்கிக் கொள்ளுவது வழக்கம். அவர்கள் கூறுகிற சிப்பாய்களில் அநேகர் கற்பனைச் சிப்பாய்கள்! இந்த ஊழலை

ஒழிப்பதற்காகச் சியாங் கே - ஷேக், ஒவ்வொரு சிப்பாயின் பெயரையும் வாசித்து, அவரவர் நேரில் வந்து சம்பளம் வாங்கிக் கொள்ளவேண்டும் என்று ஏற்பாடு செய்தார். இப்படி அவர் செய்துள்ள சீர்திருத்தங்கள் பல. துரோகிகளின் கும்பல்கள் இல்லாமல் இருந்தால், அந்தச் சமயத்திலேயே புரட்சி பூரணமான வெற்றியை அடைந்திருக்கும்.

சியாங்கின் தலைமையில் ஆயிரம் வீரர்கள் இருந்தனர். அவர்களை வைத்துக்கொண்டு அவர் பூகியன் மாகாணத்தின் படைகளை சுங்கௌ நகருக்கு அருகே முறியடித்தார். எதிரிகளை வெகு தூரம் விரட்டி விட்டு, அவர் சுங்கௌ நகரையும் பிடித்துக் கொண்டார். பூகியன் ஜனங்களும் அவருக்கு உதவியாயிருந்தனர். எதிரிகள் சமாதானம் செய்து கொண்டனர். ஆனால் வஞ்சனையாக மறுபடியும் தாக்குவதற்குத் தயாரித்துக்கொண் டிருந்தனர். அந்த நிலையில் சியாங்குக்கு உதவிப் படைகள் அனுப்ப வேண்டிய தளகர்த்தர்கள், அவர் உத்தரவை லட்சியம் செய்ய மறுத்துவிட்டார்கள். வீராவேசத்துடன் போராடி வெற்றிபெற்ற ஒரு சிறு படையுடன், முன்னால் பகைவர்களின் கொடிய வஞ்சனையை எதிர்த்தும், பின்னால் நண்பர்களுடைய வஞ்சனையை எதிர்த்தும், போராடித் தப்பித்துக் கொள்ள வேண்டிய நிலையில் சியாங் சிக்கியிருந்தார். அவர் மிகவும் சாமர்த்தியமாகச் சேனையைப் பின் வாங்கச் செய்து தப்பித்துக்கொண்டார். அப்பொழுது போராட்டத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடத்தை அவரே கூறியிருக்கிறார்: 'இதிலிருந்து நான் ஒரு பெரிய பாடத்தைக் கற்றுக்கொண்டேன். பின் உதவி இல்லாத ஒரு படை வெகு தூரம் முன்னேறிச் சென்றால், அது தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு வழிதான் உண்டு. அது தன் குறிக்கோளை அடையும் வரை போராடிக்கொண்டே முன்னேறிப்

பின்னர்தான் சண்டையை நிறுத்தவேண்டும்; நடு வழியில் சண்டையை நிறுத்தவே கூடாது, எதிரி தன் வாக்குப்படி நடப்பான் என்று நம்பிக்கொண் டிருக்கவும் கூடாது.'

பூகியன் போருக்குப் பின் சியாங் உள்ளமும் உடலும் தளர்ந்து போயிருந்தார். எந்த விதத்திலும் தம்முடைய சாமர்த்தியத்தைக் காட்டவோ, பெருங் காரியங்களைச் செய்யவோ, அவருக்குச் சந்தர்ப்பம் இல்லாமற் போயிற்று. டாக்டர் ஸன்னும் அவரை விட்டுவிடத் தயாராயில்லை. இருவருக்குள்ளும் நாளுக்கு நாள் நெருக்கமும் நேசப்பான்மையும் வளர்ந்துகொண்டே வந்தன. ஆகவே சேனையை விட்டு ஒரே அடியாக விலகிப் போய்விடாமல், சியாங் குவாங்டுங் சேனையின் தலைமைக் காரியாலயத்தில் இருந்து வந்தார். 1920-இல் அவர் ஷாங்காய்க்குப் போய்விட்டு, பின்னல் மறுபடி கான்டனுக்கு வந்து, டாக்டர் ஸன்னுடன் சேர்ந்து சில போராட்டங்களில் கலந்துகொண்டார்.

## X

### வாம்போவா ராணுவக் கலாசாலை

'உண்மையிலேயே பெருமை பொருந்திய ஒரு சமூகத்தாரின் உண்மையான உன்னத லட்சியத்தை நாம் காண்கிறோம். வெகு நாளாக இருந்துவரும் அடிமைத் தனத்திற்காக வருந்துவதோடு நில்லாமல், சுதந் திரத்தையும் சமத்துவத்தையும் பற்றிக் கனவு காண் பதோடு நில்லாமல், தொன்று தொட்டே சீனவை நசுக்கி வருகிறவர்களை எதிர்த்துப் போராடவும் அது சக்தி பெற்றிருக்கிறது.'

—லெனின்

1921-ஆம் ஆண்டு சியாங்கின் அன்னை நோயினால் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார். அன்னையின்

அந்திய காலத்தில் அருகே இருப்பதற்காகச் சியாங் விரைந்து ஓடினார். ஜூன் 4-உ அவருடைய அன்னையின் ஆவி பிரிந்தது. எனவே, அவர் சொந்த ஜில்லாவில் சில நாள் தங்கித் துக்கம் காக்கவேண்டி யிருந்தது. இதற்கு முந்திய மாதத்தில்தான் டாக்டர் ஸன் பார்லிமென்ட் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தார். குவாங்ஸி மாகாணத்துப் படைகளை அடக்கி அந்த மாகாணத்தைக் கைப்பற்ற வேண்டிய பெரிய வேலை காத்துக்கொண்டிருந்தது. ஆயினும் சியாங் வெளியேற முடியாதிருந்ததால், அவர் தாம் முன்னால் தயாரித்த திட்டப்படியே போராட்டம் நடைபெறும்படி ஏற்பாடு செய்தார். ஜூன் மாத முடிவில் வூசௌ பிடிக்கப்பட்டது. பின்னர், குவாங்ஸித் தலைவர்களில் முக்கியஸ்தரான ஷென் ஹூங்-யிங் தம்முடைய 20,000 படைவீரர்களுடன் சரணாகதி அடைந்தார்.

குவாங்ஸி, குவாங்டுங் மாகாணங்கள் இரண்டும் கோமின்டாங்கின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட் டதும், டாக்டர் ஸன் அவைகளைப் பாதுகாத்து வருவ தற்காகச் சென் சியுங்-மிங்கை நியமித்தார். உடனே படைகளை வட திசைக்குக் கொண்டு போய் யுத்த வெறியர்களை அடக்கவேண்டும் என்றும் தீர்மா னித்தார். அந்தப் படையெடுப்புக்கு வேண்டிய சாமக்கிரியைகளை எல்லாம் சென் தவறாமல் அனுப்பி வரவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். 1921 நவம்பர் மாதம் படையெடுப்புக்கு ஏற்பா டாயிற்று. தலைவர்களும் சேனாபதியும் நியமிக்கப் பட்டனர்: சியாங் கே-ஷேக்கும் கூடப் பிரயாண மானார். அந்தச் சமயம் சென் சியுங்-மிங்கே துரோகி யாகிக் காட்டிக் கொடுத்து விடுவார் என்று அவர் கருதினார். ஆரம்பத்திலேயே சென்னைக் கவிழ்த்து விட்டு, அவருடைய குவாங்டுங் படைகளை அடக்கி விடவேண்டும் என்று அவர் ஸன்னுக்கு ஆலோசனை

சொன்னார். சென் கலகம் ஒன்றும் ஆரம்பிக்காததால், ஸன் அவரை நீக்க இணங்கவில்லை.

வடக்கே யுத்தப் பிரபுக்களின் திருவிளையாடல்கள் தடபுடலாக நடந்து வந்தன. சாங் த்ஸோ-லின் என்ற வலிமை மிக்க தளகர்த்தர், 1922, மார்ச்சீ 3ஆ எதிரிகளால் முறியடிக்கப்பட்டு, மஞ்சூரியா சென்றார். அங்கே போனதும் மஞ்சூரியா சுதந்திர நாடு என்று பிரகடனம் செய்தார். வூ பெய்-பூ நாள் தோறும் தம் வலிமையைப் பெருக்கிக்கொண்டு, லி யுவான்-ஹுங்கைப் பார்லிமென்ட் தலைவராக நியமித்தார். கோமின்டாங் அங்கத்தினரில் சிலரும் இதற்கு உடந்தையாக இருந்தனர். வூ பெய்-பூவும் சாங் த்ஸோ-லின்னும் டாக்டர் ஸன்னுடைய விரோதிகள். ஆதிமுதலே அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தார்கள். யுவான் காலத்தில் அவர்களுடைய அட்டகாசங்களுக்கு அளவில்லாமல் இருந்தது. அவர்களைப் போலவே, சென் சியுங்-மிங்கும் சமயம் பார்த்துக் கலகத்தை ஆரம்பித்தார். அவருடைய படைகள் கான்டன் நகருக்கு அருகில் இருந்தன. உடனே தென் பார்லிமென்டின் தலைவரான டாக்டர் ஸன்னுடைய தலைமைக் காரியாலயத்தையே தாக்கும் படி சென் தம் படைகளுக்கு உத்தரவிட்டார். ஸன்னையே கொன்று தொலைத்து விடுவதற்காக அவருடைய வாசஸ்தலத்தின் அருகே பீரங்கிப் பிரயோகம் நடந்தது. நல்ல வேளையாக நண்பர்கள் கட்டாயத்தின் பேரில் ஸன் வெளியேறிப் பகைவர்களைக் கடந்து சென்று ஒரு யுத்தப் படகில் ஏறித் தப்பிக்கொண்டார். அங்கிருந்து படகு வாம்போவா போய் நங்கூரம் பாய்ச்சி நின்றது. ஷாங்காயிலிருந்த சியாங்கே-ஷேக்கும் தம் அருமைத் தலைவருடன் வந்து சேர்ந்து கொண்டார். சென் விடுவதாயில்லை. எப்படியாவது ஸன்னைக் கொன்று விடவேண்டும் என்று ஏற்பாடு செய்தார். ஸன்னும்

சியாங்கும், மற்றும் சில நண்பர்களும் ஒரு பிரிட்டிஷ் கப்பலில் ஹாங்காங் சென்று, அங்கிருந்து ஷாங்காயை அடைந்தனர்.

சென் சியுங்-மிங் கலகம் ஆரம்பித்தது முதல் இரண்டு மாத காலம் சியாங்கும் ஸன்னும் ஒன்று சேர்ந்து வாழ நேர்ந்தது. ஒத்த கொள்கையும் ஒத்த உணர்ச்சியும் கொண்ட இந்த உத்தமர்கள் துக்கத்தையும் ஒன்றுபோலப் பகிர்ந்து அநுபவிக்க இந்தச் சந்தர்ப்பம் உதவியது. சோகந்தான் மனிதரைப் புடம்போட்டு ஒளிபெறச் செய்ய வல்லது. துன்பத் தீயில் வெந்துகொண்டிருந்த ஸன், சிறிதும் கலங்காமல், தர்மம் மறுபடியும் வெல்லும் என்று நம்பி, உதய காலத்தை எதிர் நோக்கிக்கொண் டிருந்தார். சியாங் அவருக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்து, ஆலோசனை கூறி, அவரை விட்டு அகலாமல் அருகேயிருந்து பாதுகாத்து வந்தார். தலைவர் ஸன் சியாங்கின் அரிய குணங்களைக் கண்டு, அவர் புரட்சி இயக்கத்திற்குக் கிடைத்த ஒரு பொக்கிஷம் என்று கருதினர். இதிலிருந்து இருவருடைய வாழ்க்கையிலும் ஒரு புதிய சகாப்தமே ஆரம்பமாயிற்று. பத்து வருஷ காலமாகப் பெயர் ஊர் தெரியாமல், புரட்சி இயக்கத்தின் நடுவே எத்தனையோ போராட்டங்களில் கலந்துகொண்டிருந்த சியாங் முக்கியமான தலைமைப் பதவிகளை ஏற்கவேண்டிய காலம் நெருங்கி வந்து கொண்டிருந்தது.

சென் சியுங்-மிங் செய்து வந்த துரோகங்கள் தேசத்தில் கொந்தளிப்பை உண்டாக்கின. அவரைத் தொலைக்கவேண்டியதே முதல் வேலையாக இருந்தது. 1922 அக்டோபரில் அவருக்கு எதிரான போராட்டங்கள் ஆரம்பமாயின. இரண்டு மாதங்களில் யுன்னான் படைகள் யாங் ஸி-மின்னின் தலைமையில் வேறு படைகளின் உதவியையும் பெற்றுக்கொண்டு,

கான்டனைத் தாக்கிப் பிடித்துக்கொண்டன. 1923, ஜனவரிமாதத்தில் குவாங்டுங் மாகாணத்தில் பெரும் பகுதி கோமின்டாங் ஆட்சிக்குள் வந்துவிட்டது. டாக்டர் ஸன் கான்டனுக்குத் திரும்பி வந்து மீண்டும் அரசாங்கத்தை அமைத்தார்.

இது முதல் ரஷ்யாவின் ஸோவியத் அரசாங்கத்திற்கும் டாக்டர் ஸன்னுடைய புரட்சி அரசாங்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. ரஷ்யாவிடமிருந்து பல உதவிகளையும் ஏற்றுக்கொள்ள ஸன் தயங்கவில்லை. ஆகஸ்ட் மாதத்தில் சியாங் கே-ஷேக்கை அவர் ரஷ்யாவுக்கு அனுப்பி வைத்தார். ஸோவியத் முறைகளை நேரில் பார்த்துப் பரிசீலனை செய்துவர வேண்டும் என்பதே அவர் நோக்கம். லெனின், டிராட்ஸ்கி, ரஷ்ய வெளிநாட்டு மந்திரி சிசெரின் ஆகியோருக்கு ஸன் சியாங்கை அறிமுகம் செய்து கடிதங்கள் எழுதிக் கொடுத்திருந்தார். அச்சமயம் லெனின் நோயுற்றிருந்ததால், சியாங் மற்றத் தலைவர்களையே பார்க்க முடிந்தது. அவர் நான்கு மாதம் ரஷ்யாவில் தங்கியிருந்தார். ஸோவியத் முறைகளில் பலவற்றைச் சீனவிலும் அமலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று அவர் விரிவாகத் திட்டங்கள் தயாரித்துக் கொண்டு திரும்பி வந்தார்.

1924-இல் ஸோவியத்தின் முதல் ஸ்தானிகராகக் காரகான் என்பவர் சீனவுக்கு வந்து சேர்ந்தார். ஸோவியத் சீனவைச் சம அந்தஸ்துடன் நடத்தி வந்தது. அதனால் சீனவுக்கு உதவியைத் தவிர வேறு தீங்கு ஒன்றும் ஏற்படாது என்ற நிலைமை உண்டாயிற்று. சீனவின் புனருத்தாரணத்திற்காக ஆலோசனைகள் பெறுவதற்கு டாக்டர் ஸன் ரஷ்யாவிலிருந்து போரோடின் என்ற நிபுணரையும் வரவழைத்தார். போரோடின் மிகுந்த திறமையுள்ளவர். அமெரிக்கா, துருக்கி முதலிய தேசங்களில் அவர்

அநுபவம் பெற்றிருந்தார். ஸன் அவரிடம் மிகுந்த நம்பிக்கை வைத்தார். கோமின்டாங்கின் நடவடிக்கைகளில் போரோடினும் கலந்து கொண்டு, இடைவிடாமல் ஆலோசனை கூறி வந்தார். ஸன்னுடைய ஸான்-மின்-ஜூயி தத்துவங்களை முறையாக நிறைவேற்றுவதே சீனா முதலில் செய்ய வேண்டிய வேலை என்பதை அவர் ஏற்றுக்கொண்டிருந்தார். அவர் வருகையால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வலிமை அதிகரித்ததோடு, தேசிய உணர்ச்சியும் பெருகி வந்து, கோமின்டாங் நாள்தோறும் ஆற்றல் மிகுந்து விளங்கியது.

கம்யூனிஸ்ட் கட்சி சீனாவில் 1921-இல் ஏற்பட்டிருந்தது. சிறு கட்சியாக இருந்தாலும், அதனுடைய ஊக்கத்தினால், குடியானவர்களிடையிலும் தொழிலாளர்களிடையிலும் மிகுந்த பிரசாரம் நடந்தது. ஆங்காங்கே ஸ்தாபனங்கள் எழுந்தன. கட்டுப்பாடும், அரசியல் எழுச்சியும் அதிகரித்தன. 1924-ஆம் ஆண்டு ஜனவரியில் கம்யூனிஸ்டுகளும் கோமின்டாங்கில் சேரலாம் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அது முதல் ஏராளமான கம்யூனிஸ்டுகள் கோமின்டாங்கில் சேர்ந்து ஊழியம் புரிந்து வந்தனர். கட்சி அதிகாரிகளுக்கு எல்லா அங்கத்தினரும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று உறுதி மொழி வாங்கப்பட்டது. பின்னால் இடையிடையே கம்யூனிஸ்டுகளுக்கும் கோமின்டாங்கின் மற்ற அங்கத்தினர்களுக்கும் சச்சரவு ஏற்பட்டு வந்த போதிலும், ஆரம்பத்தில் கோமின்டாங் புத்துயிர் பெற்றுப் புது முறையில் உழைப்பதற்குக் கம்யூனிஸ்டுகளின் கூட்டுறவு மிக்க உதவியாக இருந்ததை யாரும் மறுக்க முடியாது.

ரஷ்யாவிலிருந்து திரும்பி வந்த பிறகு சியாங் ராணுவச் சீர்திருத்தத்தில் கருத்து வைத்தார்.

புரட்சிப் போராட்டங்களில் தோல்விக்கு ஒரு முக்கிய காரணம் பயிற்சி பெற்ற தளகர்த்தர்கள் இல்லாமை என்பதை அவர் அறிந்திருந்தார். பழைய தளகர்த்தர்கள் சுயநலத்தினர், கொள்கையற்றவர்கள்; அவர்களுக்கும் தேசபக்தி கட்டுப்பாடு முதலியவை களுக்கும் சம்பந்தம் இல்லை. ஆதலால் உடற்பயிற்சி போர்முறைப் பயிற்சிகளோடு, உள்ளப் பயிற்சியும் சேர்ந்து நடை பெற வேண்டும் என்று சியாங் தீர்மானித்தார். தனிப்பட்ட அதிகாரிகளுக்கு விசுவாசமாக இருப்பதை விட்டு, தேச விடுதலைக்காக உழைத்து வந்த கோமின்டாங் ஒன்றுக்கே விசுவாசம் காட்ட வேண்டும் என்று தளகர்த்தர்களுக்கு உபதேசம் செய்ய விரும்பினர். கோமின்டாங்கின் அடிப்படைத் தத்துவங்களான தேசியம், ஜனநாயகம், ஜனங்களின் ஜீவனோபாயம் ஆகியவைகளை அவர்கள் தெரிந்து கொண்டு திரிகரண சுத்தியாக அவைகளுக்காக உழைக்கவேண்டும் என்று அவர் கருதினர். இவை களை எல்லாம் நிறைவேற்றுவதற்காக வாம்போவா என்ற இடத்தில் ஒரு ராணுவக் கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது. 'வாம்போவா ராணுவக் கலா சாலை' என்று அதற்குப் பெயர். 1924–ஆம் ஒரு ஜூன் 16-உ டாக்டர் ஸன் நேரில் சென்று அதைத் திறந்து வைத்தார். சியாங் அதன் தலைவராக நியமிக்கப் பெற்ருர். முதலில் 300 பேர்களை மட்டும் சேர்ப்பதற்குத் தீர்மானித்திருந்தார்கள். ஆனல் 3,000 மனுக்கள் வந்தன. இவைகளைப் பரிசீலனை செய்து, முதலில் 500 பேர்களுக்கு மட்டும் பயிற்சி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கலா சாலையின் வேலை முறை ரஷ்யாவில் செஞ்சேனைக்காக டிராட்ஸ்கி வகுத்திருந்த முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டது. காலாசாலை ஆரம்பிக்கப்பட்டதில் டாக்டர் ஸன்னுடைய பெருமை அதிகரித்தது; அதைத் திறமையுடன் நடத்திவந்ததில் சியாங்கும்

பெரும் புகழ் பெற்றூர். அதன் மூலம் ஏராளமான தளகர்த்தர்கள் பயிற்சி பெற்று வெளிவந்ததால்தான் பிற்காலத்தில் சியாங் பற்பல போர்க்களங்களில் வெற்றி பெற முடிந்தது. சீனக் குடியரசில் வாம்போவா ஒரு முக்கிய ஸ்தானத்தைப் பெற்றிருந்தது. அங்கே பயிற்சி பெற்ற தளகர்த்தர்கள் புரட்சியில் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார்கள். அதுவும், மிகுந்த கண்யத்துடனும் புகழுடனும் எடுத்துக்கொண்டார்கள் என்று சொல்லவேண்டும்.

1924-ஆம் ஞு இறுதியில் டாக்டர் ஸன் வட சீனுவுக்குப் போயிருந்தார். சாங் த்ஸோ - லின் போன்ற தளகர்த்தர்களை நேரில் கண்டு பேசி, வடக்கேயும் தெற்கேயும் இரண்டு சர்க்கார்கள் நடை பெறுவதை ஒன்ருக்கவும், மேற்கொண்டு போர்கள் ஒடுங்கவும் ஒரு வழி காண்பதே அவருடைய விஜயத்தின் நோக்கம். அவர் புறப்படு முன்பாக ஹு ஹான்-மின்னைத் தாற்காலிக சேனுபதியாக நியமித்திருந்தார். ராணுவ விஷயங்களைப் பொது வாகச் சியாங் கே-ஷேக்கே கவனித்து வந்தார். அவர் தம்மிடம் பயிற்சி பெற்ற தளகர்த்தர்களைக் கொண்டு இரண்டு பெரிய படைகளை அமைத்திருந்தார். அவர் எதிர்பார்த்தபடியே அவை தீவிர தேசபக்தியுடன் புரட்சியின் சின்னங்களாக விளங்கின.

டாக்டர் ஸன் வடதிசை போய்விட்டார் என்பதை அறிந்ததும் பழைய கலகத் தலைவர் சென் சியுங்-மின் மீண்டும் கான்டனைப் பிடித்துக்கொள்ளக் கிளம்பி விட்டார். அவருடைய படைகள் வேகமாக அணிவகுத்து வந்தன. ஆனால், பழைய நிலைமை மாறி விட்டது என்பது அவருக்குத் தெரியாது. சியாங் தேசியப் படைகளை ஒன்று சேர்த்து, தற்காப்புக்காகக் காத்துக்கொண்டிராமல், படையெடுத்து வரும் படைகளின்மேல் படையெடுத்துச் செல்லும்படி

உத்தரவிட்டார். சென்னுடைய படைகள் சின்ன பின்னப்படுத்தப்பட்டன. வெளியிலிருந்து அவருக்கு உதவியாக வந்துகொண்டிருந்த படைகளும் வழி மறித்து முறியடிக்கப்பட்டன. சென்னுடைய தலைமை ஸ்தலமும் கைப்பற்றப்பட்டது. கோமின்டாங் தேசீயப் படைகள் பூரண வெற்றியுடன் ஜூன் 9உ கான்டன் நகரை அடைந்தன.

டாக்டர் ஸன் பெகிங் நகரில் வைத்திய சிகிச்சை செய்துகொண்டும் குணப்படாமல் 1925—ஆம் வரு மார்ச் 12உ இறந்துபோனார். அவர் மரிப்பதற்கு முன் தமக்குப் பின்னால் யார் பதவிக்கு வரவேண்டும் என் பதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. அதனால் பலவிதக் கஷ்டங்கள் ஏற்பட்டன. சியாங் கே-ஷேக், ஹூ ஹான்-மின், லியாவோ சுங்-கெய், வாங் சிங்-வெய் ஆகிய நால்வரை ஸன் தயாரித்து வைத்தார். அவர்களுக்குள் சியாங் ஒருவரே மற்ற மூவருடனும் ஒத்துழைக்கும் பான்மை பெற்றிருந்தார். பின்னால் ஹூ ஹான்-மின்னின் சகோதரன் முயற்சியால் லியாவோ கொலை செய்யப்பட்டு உயிர்துறந்தார். கொலையாளிகளும் கொலைக்கு உடந்தையாக இருந்த தளகர்த்தர்களும் மரணதண்டனை பெற்றார்கள். சியாங்கும் வாங் சிங்-வெய்யும் கொலையில் ஹூ ஹான்-மின் சம்பந்தப்பட்டிருக்கமாட்டார் என்று தீர்மானித்து, அவர் ரஷ்யாவுக்குச் செல்ல அநுமதித்து விட்டனர். அந்த நிலையில் கான்டன் சர்க்காரின் தலைமைப் பொறுப்பையும் தேசத் தலைமையையும் சியாங்கே வகிக்கும்படி நேர்ந்தது.

சியாங் சந்தேகமாயுள்ள படைவீரர்களின் ஆயு தங்களையெல்லாம் பறித்துவிட ஏற்பாடு செய்தார். பிறகு கோமின்டாங் ராணுவத்தைச் சீர்திருத்தி அமைக்கலானார். ஹோனானிலும் மேற்கிலும் சிதறிக் கிடந்த படைகளை ஒன்று சேர்த்து நாலாவது படை

என்ற பெயருடன் ஒரு படையை அமைத்தார். அதன் தளகர்த்தர் லி சி-ஷென். ஐந்தாவது படைக்கு லீ பூ-லின் நியமிக்கப்பட்டார். முதல் படைக்குச் சியாங்கே தலைமை வகித்தார். மூன்றாவது படை சூ பெய்-டே வசமும், இரண்டாவது படை டான் யென்-கெய் வசமும் ஒப்படைக்கப்பட்டன. சியாங் சேனாபதியாகவும் நியமிக்கப்பட்டார். 12,000 படை வீரருடன் அவர் எதிரிகளை வேட்டையாடி விரட்ட ஆரம்பித்தார். அக்டோபர் 14உ வெய்சௌ கைப் பற்றப்பட்டது. அம்மாத இறுதியில் அவருடைய படைகள் ஸ்வாடௌ நகர் வரை முன்னேறிவிட்டது. அந்த நகரம் எதிர்ப்பில்லாமலே பணிந்துவிட்டது. அடுத்த மாத மத்தியில் குவாங்டங் மாகாணத்தில் கலகக்காரரே இல்லாமல் துவம்சம் செய்து ஒழிக்கப் பட்டனர். வடதிசைக்குப் படை யெடுத்துச் செல் வதற்கு இதனால் வழி திறக்கப்பட்டது.

தென் பகுதியில் கோமின்டாங்கின் ஆதிக் கத்தை அசைக்க முடியாதபடி நிலை நிறுத்தியதால், வடதிசைப் படையெடுப்பைப் பற்றியே சியாங் கருதிக்கொண் டிருந்தார். அந்த நேரத்தில் ஷாங் காயில் ஒரு பெரிய படுகொலை நடந்துவிட்டது. அங்கே 1925, மே 30உ மாணவர்களும் தொழி லாளரும் ஓர் ஊர்வலம் நடத்தினார்கள். வெளிநாட் டாருக்குச் சொந்தமாக விடப்பட்டிருந்த பிர தேசத்தின் வழியே ஊர்வலம் சென்றுகொண்டிருந்த பொழுது, போலீஸார் கூட்டத்தைப் பார்த்துச் சுட்டனர். ஏராளமான உயிர்கள் பலிவாங்கப் பட்டன. இந்தச் சம்பவம் சீனவையே குலுக்கி விட்டது. எல்லா நகரங்களிலும் அந்நியருக்கு எதிரான கிளர்ச்சிகள் ஆரம்பமாயின. ஷாங்காயில் பொது வேலைநிறுத்தம் செய்யப்பட்டது. தேசீய சம்பந்தமாயும், அரசியல் பொருளாதார சம்பந்த மாயும் நிபந்தனைகள் விதித்து, அவை நிறைவேற்றப்

பட்டாலன்றி வேலை செய்வதில்லை என்று தொழிலாளர் அனைவரும் நின்றுவிட்டனர். ஹாங்கோ கான்டன் நகர்களிலும் வேலைநிறுத்தம் ஆரம்பமாயிற்று. கான்டனில் தொழிலாளர் கூட்டத்தை ஆங்கிலோ-பிரெஞ்சுப் படைகள் ஒரு முறை சுடும்படி நேர்ந்தது. அதனால் 52 பேர் இறந்தனர்; 117 பேர் காயமடைந்தனர். ஹாங்காங்கிலும் எல்லாத் தொழில்களிலும் வேலைநிறுத்தம் தொடங்கப்பட்டது. அங்கே பெரிய ஆலைத் தொழில்கள் எல்லாம் வெளி நாட்டார் வசமே இருந்தன; உழைப்பாளர் அனைவரும் சீனர்கள். அவர்கள் செய்த வேலைநிறுத்தம், ஒரு வாரம் இரண்டு வாரத்தோடு நில்லாமல், 15-மாதம் நடைபெற்றது. உலகத்தில் இதுவரை நடந்துள்ள வேலைநிறுத்தங்களில் இதுவே மிக நீண்ட கால அளவுள்ளது. ஷாங்காய்ப் படுகொலைக்கு அநுதாபம் காட்டுவதற்காகக் கான்டனில் நடந்த ஊர்வலத்திலும் பிரிட்டிஷாரும் பிரெஞ்சுக்காரரும் சேர்ந்து சீனரைப் படுகொலை செய்யத் துணிந்ததால், ஹாங்காங் தொழிலாளருக்குக் கோபம் அதிகமாயிற்று. அவர்கள் உடனே உலகம் கண்டிராத ஓர் அற்புத முறையைக் கைக்கொண்டார்கள். ஒரு லட்சம் தொழிலாளர் ஹாங்காங் தீவைவிட்டே வெளியேறிக் கான்டன் பகுதிக்கு வந்துவிட்டனர். கான்டன் சர்க்காரும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துவந்தது. ஜனங்கள் பிரெஞ்சுக்காரர்களை அலட்சியம் செய்துவிட்டு, முக்கியமாகப் பிரிட்டிஷாரையே துவேஷித்து வந்தனர். பிரிட்டிஷ் சாமான்களை எல்லாம் பகிஷ்காரம் செய்யவேண்டும் என்று நாடெங்கும் ஓர் இயக்கம் ஆரம்பமாயிற்று. அதனால் ஆங்கில வர்த்தகம் சீர்குலைந்து போயிற்று; சீனர்களுக்கும் பெரிய பொருளாதார நஷ்டங்கள் ஏற்பட்டன.

பிரமாதமான வேலைநிறுத்தங்கள் நடைபெற்றதிலிருந்தே சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சி வேருன்றி

யிருந்தது என்பது விளங்கும். அக்கட்சியைப் பற்றிப் பின்னால் விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது. எனினும், வடதிசைப் போராட்டம் ஆரம்பமாகு முன் அக்கட்சி இருந்த நிலைமையை இங்கே சிறிது கவனிக்க வேண்டியது அவசியம். டாக்டர் ஸன் காலமான பிறகு அக்கட்சிக்கும் கோமின்டாங் சபைக்கும் பிளவு அதிகரித்து வந்த காரணங்களையும் அறிந்துகொள்ள வேண்டும். பொதுவாகக் கோமின்டாங் அங்கத்தினர்கள், தேசம் அந்நியர்களுடைய பிடியிலிருந்து விடுதலை பெற்று, மேல் நாடுகளிலுள்ள குடியரசைப் போல் அரசாங்கம் அமைந்து, யுத்த வெறிகொண்ட பிரபுக்களுடைய கொட்டம் ஒடுங்கிவிட்டாற் போதும் என்றே கருதினார்கள். கம்யூனிஸம் போன்ற தீவிரக் கொள்கைகளில் அவர்களுக்குச் சிறிது அநுதாபம் உண்டு, அவ்வளவுதான். அவர்களிற் பெரும்பாலோர் குடியானவர் வகுப்பைச் சேர்ந்த பிரபுக்கள். அவர்களுக்கு மாறாகத் தீவிரத் தன்மையும், புரட்சிகரமான மனப்பான்மையும் கொண்ட வேறு ஒரு படித்த வகுப்பாரும் இருந்தனர். அவர்களை இடதுசாரியினர் என்று சொல்வது வழக்கம். அவர்கள் உண்மையான ஜனநாயகம் அமையவேண்டும் என்று விரும்பியவர்கள். ஜனங்கள் வாக்குரிமை பெற்றுப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதோடு நில்லாது, பொருளாதாரத் துறையிலும் அடிப்படையான மாறுதல் ஏற்படவேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். அவர்கள் கம்யூனிஸ்டுகள். தொழிலாளர்களும் விவசாயிகளும் ஜனநாயகப் புரட்சியில் சேர்ந்து போராடும்படி கட்சியை விரிவுபடுத்தி அமைக்க வேண்டும் என்பது அவர்கள் கருத்து. அவர்கள் கார்ல் மார்க்ஸ், லெனின் முதலியோருடைய நூல்களைக் கற்று, ரஷ்யா காட்டி வந்த மாதிரியைப் பின் பற்றுவதில் மோகம் கொண்டவர்கள். ஏகாதிபத்திய எதிர்ப்பிலும், ஜனங்களுக்கே சகல அதிகாரங்களும்

இருக்கவேண்டும் என்பதிலும் அவர்கள் வலது சாரியைவிட ஊக்கமுள்ளவர்கள். ஆனல் விவசாயிகளுடைய நிலையைச் சீர்திருத்துவது போன்ற உள்நாட்டுக் காரியங்களை முதல் வேலைகளாகச் செய்ய வேண்டும் என்பது அவர்கள் தீர்மானம். வலது சாரியினர் முக்கியமாக நகரங்களையே அதிகமாய்க் கவனித்தனர். அடிப்படையான பொருளாதார மாறுதல்களை அவர்கள் ஒத்திப்போட்டு வந்தனர்.

1924-ம் வரு கோமின்டாங் ஒரு மகாநாடு கூட்டி ஆலோசனை செய்து சில தீர்மானங்களையும் நிறைவேற்றியது. கட்சியின் புனர் நிர்மாணத்தைப் பற்றி அவசியமான மாறுதல்களைச் செய்ய வழி காட்டியது. குடியானவர்களும் தொழிலாளிகளும் சேர்ந்து வந்து உழைத்தால்தான் தேசியப் புரட்சி வெற்றியடையும் என்று, அவர்களை ஏராளமாகச் சேர்ப்பதற்கு முயற்சிகள் செய்யப்பட்டன. சில வியாபாரிகள், முதலாளிகள், அறிவாளிகள், மாணவர்களுடைய கட்சியாயிருந்த கோமின்டாங் பொதுஜனங்களின் கட்சியாக உருவாகியது. உடனே செய்ய வேண்டிய வேலைகளாக ராணுவத்தார்களுடைய யதேச்சாதிகாரத்தை அடக்குவதும், நிலவரிகளைக் குறைப்பதும், ஜனங்களுக்கு அதிக உரிமைகள் கொடுத்து, அதிக ஜனநாயக ஸ்தாபனங்களை நிறுவுவதும் குறிப்பிடப்பட்டன. இத்தனையையும் கம்யூனிஸ்டுகள் மனப்பூர்வமாக ஆதரித்தனர். 1924, ஆகஸ்ட் மாதம் கம்யூனிஸ்டுகள் தனி நபர்களாகக் கோமின்டாங்கின் அங்கத்தினராகலாம் என்றும், கட்சியில் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், கம்யூனிஸ்டுகள் தனியாகத் தங்கள் ஸ்தாபனங்களையும் வைத்துக் கொண்டிருந்தார்கள். தேசிய இயக்கத்தில் தொழிலாளருடைய விசேஷ சிரத்தையைப் பாதுகாப்பதற்கும், சீன முதலாளிகள் வெளிநாடுகளோடு

சேர்ந்து சமயம் வாய்த்தபொழுது புரட்சியைக் காட்டிக் கொடுத்து விடாமல் கவனிப்பதற்கும் அவர்களுக்குத் தனி ஸ்தாபனங்கள் அவசியமா யிருந்தன. கம்யூனிஸ்டுகளுக்கு வெளிப்படையாக வேலை செய்வதற்கு உரிமை இருந்ததால், நாட்டில் தொழிலாளர் சங்கங்களும், குடியானவர் சபைகளும் பெருகி வந்தன. 1925-ஆம் வரு ஆரம்பத்தில் கம்யூனிஸ்ட் கட்சியில் 800 அங்கத்தினரே இருந்தனர்; அவ்வருஷக் கடைசியில் 3,500 அக்கத்தினர் சேர்ந்து விட்டனர். தொழிற்சங்க அங்கத்தினர் தொகையிலும் விசேஷ வளர்ச்சி இருந்தது. 1924, மேமீ 2,70,000 அங்கத்தினரே இருந்தனர்; 1925, மேமீ 5,40,000 பேர் இருந்தனர்.

சியாங் கே-ஷேக்குக்கு ஆரம்பம் முதலே கம்யூனிஸ்டுகளைப் பிடிக்கவில்லை என்று தெரிகிறது. ரஷ்யாவுடன் நெருங்கிய உறவு வைத்துக்கொள்வதிலும் அவர் ஊக்கமாயில்லை. ஸன் யாட்-ஸென் உயிரோடு இருந்திருந்தால் இடதுசாரியினரோடுதான் சேர்ந்து உழைத்திருப்பார் என்று அவர் பத்தினியார் கூறியுள்ளார். ஆனால் சியாங் வலது சாரியினரிடத்தில் அநுதாபம் கொண்டிருந்தார். அவருக்கு வெளிநாட்டுப் பாஷைகள் தெரியாததாலும், வெளிநாட்டுப் பழக்கம் இல்லாததாலும், அவரைச் சுற்றியிருந்தவர்கள் மிகத் தீவிரமான காரியங்களில் பிரவேசிக்க இடங் கொடாத சுயநலப் பிரபுக்களாக இருந்ததாலும், அரசியலைப் பார்க்கிலும் போர்த் திறமையே அந்தச் சமயத்தில் அவருக்கு முக்கியமாகப் பட்டதாலும் அவர் கம்யூனிஸ்டுகளின் சக்தியையே உடைத்துவிடவேண்டும் என்று முன் வந்து விட்டார். லின் யு-டாங் என்ற புகழ்பெற்ற சீன எழுத்தாளர், 'சீனக் கம்யூனிஸ்டுகளே சீன ஜனநாயகத்தின் அசைக்க முடியாத அடிப்படையாக விளங்குவார்கள்' என்று சமீபத்தில் கண்டு பிடித்துக் கூறியதை அக்

காலத்தில் சியாங் கண்டு கொள்ளச் சக்தியற்றிருந்தார். கம்யூனிஸ்ட் கட்சி ஏதோ சில வெளி நாட்டு ராஜதந்திரிகளின் சதியாலோசனையால் ஏற்பட்டதன்று என்பதையும், உலக நிலைமையும் தேச நிலைமையுமே அத்தகைய தீவிரக் கட்சியை ஒவ்வொரு நாட்டிலும் தோற்றுவித்து வருகின்றன என்பதையும் அவரால் நம்ப முடியவில்லை. '150 வருஷங்களுக்கு முன்னால் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சி படிப்படியாக அரசியல் சமத்துவம் ஏற்படுவதற்குக் காரணமாயிற்று. ஆனால், காலம் மாறிவிட்டது; அதுமட்டுமே இன்றைய நிலையில் போதுமானதாக இல்லை. பொருளாதார சமத்துவமும் அடங்கிய முறையில் ஜனநாயகத்தின் எல்லைகளை இப்பொழுது விரிவடையச் செய்யவேண்டும். பொருளாதார சமத்துவத்தை நிலைநிறுத்தவும், அதன் மூலம் ஜனநாயகத்தின் முழுக் கருத்தையும் நிறைவேற்றவும் விஞ்ஞானமும் நுணுக்கமான உற்பத்திக் கருவிகள் அமைக்கும் முறையும் முன்னேறி வருவதற்கு ஏற்றபடி நாமும் முன்னேறவும், புரட்சி நடந்து வருகிறது. இந்தப் பெரும் புரட்சியின் நடுவேதான் நாம் எல்லோரும் போய்க்கொண்டிருக்கிறோம்' என்று ஜவாஹர்லால் நேரு எழுதியுள்ளார். இந்தக் கருத்தைச் சியாங் கே-ஷேக் புரிந்து கொள்ளவும் ஏற்றுக் கொள்ளவும் மறுத்ததின் பலனாகப் பத்து வருஷ காலம் சீனாவில் உள்நாட்டுக் கலகம் ஏற்படவும், கம்யூனிஸ்டுகளை அரசாங்கப் படைகள் அடக்கி வரவும் நேர்ந்தது. 1937-ஆம் ஆறு வரை சியாங் கம்யூனிஸ்டுகளைக் 'கம்யூனிஸ்டுகள்' என்று கூடச் சொல்லுவதில்லை. 'கொள்ளைக்காரர்கள்' என்றே அழைத்து வந்தார். கம்யூனிஸ்டுகளை மட்டந் தட்டுவதில் அவர் செலவழித்த காலத்தை ஜப்பானை எதிர்ப்பதற்குத் தயாரிப்பதில் செலவழித்திருந்தால், சீனாவின் கொடுந் துன்பங்கள் பல தவிர்க்கப்பட்டிருக்கலாம்; சீனா —

ஜப்பான் யுத்தமும் விரைவில் முடிந்திருக்கும், அல்லது ஜப்பான் படையெடுக்கவே துணிந்திராது. சீனு பலஹீனமாயிருக்கும் பொழுதே அதை அடித்துவிட வேண்டும் என்பதுதான் ஜப்பானின் நோக்கம். அந்தப் பலஹீனத்திற்கு மூல காரணம் உள்நாட்டுக் கலகம்.

இரண்டாவது கோமின்டாங் காங்கிரஸ் 1926, ஜனவரி 1௳ முதல் 16 ௳ வரை நடந்தது. ஸன்யாட்-ஸென்னின் மரண சாஸனமான ஜனங்களின் மூன்று தத்துவங்களைக் கட்சியின் நிரந்தரமான அடிப்படை லட்சியமாகக் கொள்ளவேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது. காலஞ் சென்ற தலைவருடைய ஞாபகத்தை நிலைநிறுத்துவதற்காக அவரே என்றும் கட்சியின் தலைவர் என்றும் தீர்மானிக்கப்பட்டது. கட்சிக்கு அவ்வப்பொழுது தேர்ந்தெடுக்கப் பெறும் தலைவர்கள் இயற்கைத் தலைவர் ஸன் யாட்-ஸென் சார்பாக வேலை செய்வதாகவே கருதப்பட்டனர். புதிய அர சாங்கத்தின் தலைவராக வாங் சிங்-வெய் தேர்ந்தெடுக் கப்பட்டார். இவ் அரசாங்கத்தில் கம்யூனிஸ்டு களில் முக்கியமான தலைவர்கள் சிலரும் பதவி வகித் திருந்தனர். இவர்கள் கட்சியை உள்ளிருந்தே உடைத்து விடுவதற்காக வேலை செய்து வந்தார்கள் என்று சியாங்கும் மற்ற வலது சாரியினர் பலரும் கருதி வந்தார்கள். சமயம் பார்த்து இவர்களுக்கு அதிகாரமே இல்லாமல் செய்துவிட வேண்டும் என்றும் தீர்மானித்தார்கள்.

கோமின்டாங் படையில் சுமார் லட்சம் போர் வீரர் இருந்தனர். படை ஆறு டிவிஷன்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவைகளை வடசீனுவுக்கு அனுப்பி யுத்த வெறியர்களை அடக்கிவிட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அப்பொழுது சியாங் படைகளை மேல் பார்க்கும் இன்ஸ்பெக்டர் —

ஜெனரலாக நியமிக்கப் பெற்றிருந்தார். அப்பொழுது தான் கம்யூனிஸ்டுகளை அடக்குவதற்கும் அவர் தீவிர மாக முற்பட்டார். வாம்போவா ராணுவக் கலாசாலை யில் பயின்ற கம்யூனிஸ்ட் தளகர்த்தரான லீ சி-லுங் என்பவர் ஒரு யுத்தக் கப்பலைக் கான்டனுக்குச் சமீபத்தில் கொண்டுவந்திருந்தார். உத்தரவில்லாமல் அவர் அப்படி வந்ததற்காகச் சியாங் அவருடைய பதவியைப் பறித்துவிட்டு, கான்டனில் ராணுவச் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்தார். கம்யூ னிஸ்ட் வேட்டை ஆரம்பமாயிற்று. ரஷ்ய நிபுணர்கள் பலரும் போரோடினும் நாட்டைவிட்டு வெளியேற் றப்பட்டனர். பிரபல கம்யூனிஸ்ட் தலைவர்கள் கைதி செய்யப்பட்டனர். மூன்று நாட்கள் எங்கும் தட புடலாக வேலைகள் நடந்தன. அப்பொழுது அர சாங்கத் தலைவர் வாங் சிங்-வெய் நோயுற்றிருந்தார். அவரைக் கேளாமலே சியாங் வேலைகளை முடித்துக் கொண்டு, தாம் தம் அதிகாரத்தை மீறி நடந்ததாகக் கூறினால் தண்டனை ஏற்றுக் கொள்ளத் தயார் என்று சொல்லிவிட்டார். வாங் சிங் — வெய் உடல் நலம் கருதி ஐரோப்பாவுக்குப் போய்விட்டார். பின்னால் தேசிய அரசாங்கம் சியாங் கே-ஷேக்கைச் சேனா பதியாக நியமித்தது. 1926-ஆம் வரு ஜூலை 9உ அவர் பதவி ஏற்றுக்கொண்டார்.

## XI

## வெற்றி மேல் வெற்றி

'முதலில் நாம் தேசியத்தை வலியுறுத்தி நமக்குள்ளேயே ஒற்றுமையை நிலைநாட்டிக்கொள்ள வேண்டும். பிறகு மற்றவர்களுக்கு உதவி செய்வதைப்பற்றி யோசித்துக் கொள்ளலாம்.'

— ஸன் யாட்-ஸென்

---

சியாங் சேனாபதியாக வந்ததும் வடசீனப் படையெடுப்பை முதல் பிரச்னையாகக் கவனித்தார். சென்ற 15 வருஷங்களாக உள் நாட்டுக் கலகங்கள் ஓயாமல் நடந்து வந்தன. ஏகாதிபத்திய மோகம் கொண்ட வெளிநாட்டார்கள் உள் நாட்டு யுத்த வெறியர்களைக் கிளப்பிவிட்டுப் புரட்சியின் முற்போக்கைத் தடுத்து வந்தார்கள். அவர்கள் அரசியலிலும் பொருளாதாரத் துறையிலும் சீனாவில் ஆதிக்கம் பெறவே முயன்று வந்தார்கள். இத் தகைய அபாயகரமான நிலையில், புரட்சியை அதன் முடிவான லட்சியம் கைகூடும்வரை நடத்திவைக்க வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. தேசம் முழுதும் ஒற்றுமைப்பட்டு ஸன் யாட்-ஸென்னின் மூன்று தத்துவங்களையும் நிறைவேற்றவேண்டும். இந்தக் கருத்துக்களைக் கொண்ட ஒரு விரிவான அறிக்கையைச் சியாங் தேச மக்களுக்கு வெளியிட்டார். 'புரட்சி என்றாலே ரத்தம் சிந்துதல்தான்' என்று ஸன் கூறியிருந்தார். குடியரசை ஸ்தாபிக்கும் பொழுது ரத்தம் சிந்தாமலே எளிதாக ஏற்பாடு செய்துவிட்டார்கள். ஆனால், சேனைகளைத் தழை யாக்கிச் செங்குருதியை நீராகப் பெருக்கினால் ஒழியத்

தேசிய ஒற்றுமை மூளைப்பதாயில்லை. ஆகையால், சியாங், கோமின்டாங்கின் அநுமதி பெற்று, படைகளை வடதிசை நோக்கிச் செல்லுமாறு உத்தரவு கொடுத்தார். முதலில் அவரும் கூடச் செல்ல வசதியில்லாதிருந்ததால், சிறிது காலத்திற்குப் பின்னுல் தான் அவர் புறப்பட முடிந்தது.

லட்சம் படைவீரர் அணிவகுத்துச் சென்றனர். எதிரிகளை ஒவ்வொருவராகப் பிரித்துத் தோற்கடிக்க வேண்டும் என்று சியாங் ஏற்பாடு செய்திருந்தார். முதலாவது வூ பெய்-பூ என்ற பழைய எதிரியைத் தொலைக்க வேண்டும் என்று தீர்மானித்தார். வூ வசம் லட்சம் படைவீரர் இருந்தனர். அவர் தேசியப் படைகளின் அளவை அற்பமாகக் கருதியிருந்தார். கூலிப் படைகளை வைத்துக்கொண்டே வெற்றி பெற்று விடலாம் என்பது அவர் நம்பிக்கை. சியாங் 50,000 படைவீரரை மட்டும் பிரித்து யாங்ட்ஸி நதிக்கரைக்குக் கொண்டு சென்றுர். வூ அந்தச் சமயம் வடக்கே போயிருந்தார். இரண்டு படைகளும் பல அரங்கங்களில் போராடின. தேசியப் படை நான்கு வழிகளில் பிரிந்து சென்று தாக்கிற்று. ஆகஸ்ட் மாதம் சாங்ஷா பிடிபட்டது. அப்பொழுதும் சியாங் ஓர் அறிக்கையை வெளியிட்டார். ராணுவத் தலைவர்கள் சீனுவின் வடபாகத்தில் இருந்தாலும், தென்பாகத்தில் இருந்தாலும், சரணுகதி அடைந்து விட்டால் அவர்களைத் தோழர்களாக ஏற்றுக்கொள்வதாகவும், அப்படி இல்லை என்ருல் முடிவு வரை போரிடப் போவதாகவும் அவர் தெளிவாக அறிவித்தார். ‘போராட்டத்தின் காலத்தைக் கூடியவரை சுருக்கிவிட என்னுல் இயன்ற அளவு செய்கிறேன். அதன் மூலம் ஜனங்களின் பளுவையும் குறைக்கிறேன்; ஆனுல் புரட்சி பூரண வெற்றி பெற வேண்டும், தீமைகள் வேரோடு கல்லி எறியப்பட வேண்டும்’ என்றும் அவர் குறிப்பிட்டார்.

வழி நெடுகிலும் ஜனங்கள் தேசீயப்படைக்கு உதவி செய்து வந்தார்கள். பாதைகள் காட்டுவதிலும், சௌகரியங்கள் செய்து கொடுப்பதிலும், எதிரிகளை ஏமாற்றி வழி தவறச் செய்வதிலும் குடியானவர்கள் ஒத்துழைத்து வந்தார்கள். ஆகஸ்ட் 22உ யோசௌ பிடிபட்டது. டிங்ஷெகியோ என்ற இடத்திலும் பெரும்போர் நடந்தது. அதிலும் வூ பெய்-பூவின் படைகள் தோல்வியுற்றன. வூ அங்கு வந்ததும் தம்முடைய முக்கியமான ஒன்பது தளகர்த்தர்களைச் சுட்டுத் தள்ளும்படி உத்தரவிட்டார் என்றால், தோல்வியின் அளவை ஒருவாறு யூகித்துக் கொள்ளலாம். அவர் தம் படைகளுக்குக் கடுமையாக உத்தரவு செய்து மீண்டும் டிங்ஷெகியோவைப் பிடித்துவிட ஏற்பாடு செய்தார். சியாங்கும் விடவில்லை. அந்நகரை மறுபடி பிடித்துக்கொள்ள வேண்டும் என்றார். வூ பீரங்கிகளையும் யந்திரத் துப்பாக்கிகளையும் பிரயோகிக்க ஏற்பாடு செய்தார். புரட்சிப் படை வீரர்கள் குண்டு மழையால் சம்ஹாரம் செய்யப்பட்டு வந்தனர். போர்முனையில் நின்ற ஒரு தளகர்த்தர், சேதம் அளவற்றதாக இருந்ததால், சிறிது காலம் போரை நிறுத்தி வைக்கலாமா என்று சியாங்கிடம் டெலிபோன் மூலம் கேட்டார். சியாங் மறுத்துவிட்டார். ஆகஸ்ட் 28உ நகரம் புரட்சிப் படையின் வசமாயிற்று. இதற்குப் பின் மீண்டும் வூ முயற்சி செய்து அதைப் பிடித்துக் கொண்டதால், கடைசி முறையாகப் புரட்சிப் படை வீராவேசத்துடன் போர் புரிந்து, பெருந் தியாகங்கள் செய்து, நகரைக் கைப்பற்றிக் கொண்டது. வூ கட்சியைச் சேர்ந்த 3,000 சிப்பாய்களும் பிடிபட்டனர். இந்தப் போராட்டத்தில் புரட்சிப் படைக்கு ஏராளமான சேதம் ஏற்பட்டபோதிலும், அதனுடைய போர்த் திறமை தேசம் எங்கும் உற்சாகத்தைப் பரப்பியது.

வூ பெய்-பூவின் படைகள் யாங்ட்ஸி நதியின் தென் கரையில் உள்ள கின்கௌ நகருக்குப் பின் வாங்கி விட்டன. அங்கிருந்து 20 மைல் தூரத்தில் வூசாங் நகரம் இருக்கிறது. அது மிக முக்கியமான இடம், கோட்டை கொத்தளங்களுடன் பாதுகாப்புள்ளது. ஹூப்பே மாகாணத்தின் தலைநகருக்குச் செல்ல அதுவே பிரதான வாயில். அதை அவசியம் பிடிக்கவேண்டும் என்று கருதி, சியாங் தம் படைகளை அனுப்பி முதலில் கின்கௌவைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்தார். எதிரிகள் அங்கிருந்து வூசாங் சென்று விட்டனர். வூசாங் ஹாங்கோ இரண்டையும் எப்படியாவது பாதுகாத்துவிட வேண்டும் என்று வூ ஏற்பாடு செய்தார். தேசியப் படைகள் மூன்று முறை வூசாங்கைத் தாக்கின. மூன்றும் தடவையில், நகரத்தின் ஒன்பது வாயில்களில் ஆறு வாயில்கள் ஒரே சமயத்தில் தாக்கப்பட்டன. சேனாபதி சியாங் தாமே நேரில் கூட இருந்து போரை நடத்தினார். யுத்த அரங்கத்தின் முன்னணியில் அவர் அடிக்கடி போய் நின்றதால், ஒரு சமயம் அவர் அருகே ஒரு குண்டு வெடித்து உயிருக்கே அபாயம் நேரக்கூடிய நிலைமை ஏற்பட்டது. எனினும் அவர் சிறிதும் அதைரியப்படாமல், போர் முகத்தில் நின்று, சிப்பாய்களுக்கு வீரம் புகட்டி வந்தார். 1926, அக்டோபர் மீ 10உ வூசாங் அவர் கைக்கு வந்துவிட்டது. அதற்கு முன்பே ஹன்யாங், ஹாங்கோ இரண்டையும் புரட்சிப் படை பிடித்துக்கொண்டது. செப்டம்பர் மீ முடிவிலேயே வூ தம் படைகளை ஹோனான் மாகாணத்திற்குள் அழைத்துச் சென்றுவிட்டார். ஹூனன் ஹூப்பே மாகாணங்களில் தேசியக் கொடி பறந்து கொண்டிருந்தது.

வூ பெய்-பூவைப் போலவே வலிமை மிகுந்த ராணுவத் தலைவர் வேறு ஒருவர் இருந்தார். அவர் கியாங்ஸூ, செகியாங், பூகியன், அன்வெய், கியாங்ஸி

ஆகிய மாகாணங்களின் சேனாபதி. ஸென் சுஆன்-பாங் என்பது அவர் பெயர். அவரிடம் ஒன்றரை லட்சம் துருப்புகள் உண்டு. அவர் ஹூவுடன் சேர்ந்துகொண்டிருந்தால் ஜயிப்பது கஷ்டமாகப் போயிருக்கும். ஆனால், அவருக்கு ஹூவிடம் பொறாமை இருந்ததால் சேரவில்லை. இந்த ஸென்னோடு போர் புரியாமல் சமாதானமாகப் பணிய வைத்துவிட வேண்டும் என்று சியாங் கே-ஷேக் மிகவும் முயற்சித்தார். அம் முயற்சி பலிக்காமற் போனதால் இரு பக்கத்துப் படைகளும் பல முனைகளில் போராட நேர்ந்தது. நான்சாங் என்ற இடத்தில்தான் இருதிறத்தாரின் பலாபலம் தீவிரமாகப் பரீட்சிக்கப்பட்டது. செப்டம்பர் 19உ புரட்சிப் படை முதலில் அந்நகரைப் பிடித்துக் கொண்டது. உடனே எதிரிகள் கடும்போர் புரிந்து அதை மீட்டுக் கொண்டனர். சியாங் தாமே நேரில் அங்கே சென்றார். அவரிடம் இரண்டு படைகளே இருந்ததால், புதிய படைகள் வரும்வரை யுத்தத்தை நிறுத்தி வைத்திருந்தார். புதிய படைகள் இரண்டு வந்ததும், நவம்பர் 1உ அவை நான்சாங்கின் மேல் படை யெடுக்கும்படி அவர் அனுப்பி வைத்து, ஒரு படைக்குத் தாமே தலைமை வகித்தும் சென்றார். 8உ நகரம் அவர் கையில் சிக்கியது. ஸன் வடக்கே ஓடிச் சென்று சாங் த்ஸோ-லின்னுடன் சேர்ந்து கொண்டார். சாங் த்ஸோ-லின் வூ பெய்-பூவையும் ஸன்னையும் ஏவிப் புரட்சிப் படையை முறியடிப்பதற்கு முயற்சித்தார். சியாங் தம்முடைய சொந்த மாகாணமாகிய செகியாங் மாகாணத்தில் பல இடங்களில் எதிரிகளை முறியடித்து மாகாணம் முழுவதிலும் கோமின்டாங் கொடியைப் பறக்கவிட்டார். இந்தப் போராட்டங்கள் எல்லாம் தனிச் சரித்திரமாக எழுதி வைக்க வேண்டிய பெருமை பொருந்தியவை. புரட்சிப் படை என்றுமே இத்தகைய வெற்றிகளைக் கண்டதில்லை. அது கான்டனிலிருந்து 700 மைல்

தூரம் வடக்கே சென்று, தன்னிலும் பெருந் தொகையான படைகளை முறியடித்து வெற்றி பெற்றது விந்தையிலும் விந்தையாகும்.

1927-ம் ஞு ஆரம்பத்தில் ஸன்னுடைய தளகர்த்தர்கள் பலர் தேசியப் படைகளிடம் சரணடைந்தனர். மார்ச் 15வ சியாங் நான்கிங் நகரைப் பத்து நாட்களில் பிடித்துவிட வேண்டும் என்று உத்தரவிட்டார். யாங்ட்ஸி நதியின் இரு கரைகளின் வழியாகவும் அந்நகரை நோக்கித் தேசியப் படை அணிவகுத்துச் சென்றது. அதே சமயம் சாங்செள நகரை நோக்கியும் தேசியப் படை சென்றது. மார்ச் 24வ நான்கிங் கைப்பற்றப் பட்டது. அதன் பின்னர் சிப்பாய்கள் அங்கே வசித்து வந்த அந்நியர்களையும் ஜனங்களையும் பலவிதமாக ஹிம்சித்தும், கொள்ளையடித்தும், வதைத்தும் கொடுமைகள் புரிய ஆரம்பித்துவிட்டார்கள். இவைகளுக்குக் கம்யூனிஸ்டுகளின் தூண்டுதலே காரணம் என்று பின்னால் தேசியவாதிகள் குறை கூறினர். எது எப்படியிருந்தாலும், நான்கிங் சம்பவம் மிகவும் வருந்தத் தக்கதாயும், புரட்சியின்மேல் படிந்துவிட்ட மாசாகவும் இருந்தது. பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான் போன்ற வெளி நாடுகள் தங்களுக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களுக்காகச் சீனாவைத் தண்டிக்காமல் விட்டதே ஆச்சரியமாயிருந்தது. சியாங் உடனே கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டார். நான்கிங்கிலிருந்த கம்யூனிஸ்ட் படைகளைக் கடுமையான கட்டுப்பாட்டில் அடக்கி வைத்தார். அக்கிரமங்களில் நேரில் கலந்து கொண்ட சிப்பாய்களுக்கு மரண தண்டனை விதித்தார்.

சியாங் கம்யூனிஸ்டுகளை அடக்குவதற்குத் தக்க சந்தர்ப்பத்தைப் பெற்றார். ஷாங்காயில் பல இடங்களில் சோதனை நடத்தி, அநேகம் கம்யூனிஸ்டுகளைக் கைதி செய்ய ஏற்பாடு செய்தார். சிலர் கொல்லவும்

பட்டனர். ராணுவச் சட்டம் அமுலுக்கு வந்தது. முதலாளிகளும், வியாபாரிகளும், பணக்காரர்களும் சியாங்குக்கு மிக்க உதவியாயிருந்து 30 லட்சம் டாலர் கடன் நிதி வசூலித்துக் கொடுத்தனர். கம்யூனிஸ்டுகள் ஒழிவதில் அவர்களுக்குத்தானே கவனம் அதிகமிருக்கும்! ஷாங்காய் தவிர, ஹாங்கோ, வூசாங் முதலிய இடங்களிலும் கம்யூனிஸ்டுகள் மிகுந்த வல்லமை பெற்றிருந்தார்கள். பின்னால் ஹாங்கோவில் அவர்கள் தனி அரசாங்கம் அமைத்துக்கொண்டு, சியாங் வெறும் ராணுவ வெறி பிடித்தவர் என்றும், ஸன் யாட்-ஸென்னின் கொள்கைகளைக் காற்றில் பறக்க விட்டுவிட்டார் என்றும் பிரசாரம் செய்து வந்தனர். அடிக்கடி வேலைநிறுத்தங்களும், வெளி நாட்டாருக்கு எதிரான கிளர்ச்சிகளும் நடந்து வந்தன. ரஷ்யாவிலிருந்து கோமின்டாங்குக்கு ஆலோசனையாளராக வந்திருந்த போரோடினும் தீவிரமாக வேலை செய்து வந்தார். கம்யூனிஸ்டுகள் தனிப் படைகளும், பயிற்சி பெற்ற தளகர்த்தர்களும் கொண்ட பெருஞ் சேனையையும் பெற்றிருந்தனர். இவைகளையெல்லாம் கவனித்த சியாங், 'இப்பொழுது கம்யூனிஸ்டுகள் கோமின்டாங்கினிடம் எதிர்ப்பைக் காட்டி வருகிறார்கள். தேசியப் புரட்சிப் படையின் தலைவர் என்ற முறையில் அவர்களுடைய இயக்கத்தை அடக்குவது என் கடமையாகிறது. கோமின்டாங்கின் வலது சாரியினர் நம் இயக்கத்திற்குத் துரோகம் செய்தாலும் நாம் அதே நடவடிக்கை எடுத்துக் கொள்வோம்' என்று கூறினார். வலது சாரியினரைப் பற்றி அவர் பேச்சுக்காகக் குறிப்பிட்டதைத் தவிர, உண்மையில் அவர்கள் பெட்டிப் பாம்புகளைப் போல் அடங்கிக் கிடந்தனர். தேசத்தில் உணர்ச்சியும், வீரமும், ஆவேசமும், இடைவிடாத உழைப்பும் காட்டி வந்தவர்கள் கம்யூனிஸ்டுகளே. அவர்களுடைய ஊர்வலமோ, கூட்டமோ,

பிரசாரமோ இல்லாமல் ஒரு நாள் கூடக் கழிந்த தில்லை. அத்தகைய ஜீவனும் துடிப்பும் நிறைந்த கூட்டத்தோடு சியாங்கும் மற்ற வலது சாரியினரும் ஒத்துப் போக முடியவில்லை. நாள்தோறும் பிளவு அதிகரித்துக்கொண்டே போயிற்று.

ஏப்ரில் மாதம் 3உ வாங் சிங்-வெய் வெளிநாட்டி லிருந்து திரும்பிவந்தார். தேசத்தில் அவரும் சியாங்குமே முக்கியமான தலைவர்கள். இருவரும் கூடிக் கலந்து பேசினர். சியாங் இடைக்காலத்தில் நேர்ந்த சம்பவங்களை யெல்லாம் விவரமாக எடுத்துக் கூறினார். வாங் சிங்-வெய் ஹாங்கோவுக்குச் சென்று கம்யூனிஸ்டுகளின் கட்சியை விவரமாகத் தெரிந்து வரவேண்டும் என்று புறப்பட்டார். அவர் திரும்பி வருகிறவரை சியாங் பொறுத்துக்கொண்டிருக்க முடியவில்லை. இடையில் வடக்கே சாங் த்ஸோ-லின் உத்தரவின் பேரில் பெகிங் நகரிலிருந்த ஸோவியத் ஸ்தானிகருடைய க்ாரியாலயம் சோதனையிடப் பட்டது. அங்கே இருந்த தஸ்தவேஜுகள் எடுத்துச் செல்லப்பட்டன. அவைகளிலிருந்து போரோடினும் கம்யூனிஸ்டுகளும் கோமின்டாங்குக்கு எதிராக வேலை செய்து வந்தது வெளியாயிற்று என்று சொல்லப் படுகிறது. சியாங் தாமதமில்லாமல் கம்யூனிஸ்டு களின்மேல் அடக்குமுறைகளைப் பொழிய ஆரம் பித்தார்.

ஷாங்காயில் பட்டாளத்திற்கு அருகே வந்து தாக்கிய தொழிலாளரில் 100 பேர் கொல்லப்பட்டனர், 90 பேர் கைதி செய்யப்பட்டனர். முன்னால் சியாங் அந்த நகரத்தைப் பிடித்துக்கொள்ள உதவியாக நின்று வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் அதே சியாங்கின் உத்தரவினால் கொடுந் துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். கம்யூனிஸ்டுகளிடமிருந்த துப்பாக்கிகள், தோட்டாக்கள், பிஸ்டல்கள் எல்லாம் பறிக்கப்பட்டன. மேலும், நான்கிங்கிலும்

கான்டனிலும் இதே முறைகள் ஆரம்பமாயின. கான்டனில் ஏப்ரில் 15உ இரவில் 2,000 பேர் கைதி செய்யப்பட்டனர். அநேகம் மாணவிகளும், வாம் போவா ராணுவக் கலாசாலையில் பயிற்சி பெற்ற தீவிரமான தளகர்த்தர்களும் கொலை செய்யப் பட்டனர். மொத்தம் 5,000 புரட்சிக்காரர்கள் உயிர் துறக்க நேரிட்டது. தொழிலாளர் ஸ்தாபன நிலையங் களும், கோமின்டாங் காரியாலயங்களும் பூட்டி முத்திரை வைக்கப்பட்டன. இவைகளில் கம்யூனி ஸ்டுகள் வேலைசெய்து வந்ததாகப் புகார் சொல்லப் பட்டது. ரஷ்ய ஆலோசனையாளர் அனைவரும் காவலில் வைக்கப்பட்டனர். பத்து நாட்களில் கம் யூனிஸ்டுகள் நேரில் ஆஜராகித் தங்களைப் பதிவு செய்து கொள்ளாவிட்டால், கைதிசெய்து சுடப்படு வார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

இதன் பிறகு கோமின்டாங் தலைமை சர்க்கார் நான்கிங் நகருக்கு மாற்றப்பட்டது. வாங் சிங்-வெய் ஹாங்கோவிலிருந்து திரும்பிவந்து, தம்மைக் கலக் காமலே சியாங் தடபுடலாக நடவடிக்கைகள் எடுத்து விட்டதற்காக மிகவும் வருந்தினர். ஆனால், கடைசி யாகக் கான்டனில் ஒரு கூட்டத்தில் கம்யூனிஸ்டு களையும் மிகவும் கண்டித்துப் பேசிவிட்டு, மீண்டும் அவர் வெளிநாட்டுக்குப் பிரயாணமானர்.

1912-ல் யுவான் ஷி-கேய் புரட்சிகரமான தலைவர் களையும் மக்களையும் அடக்கியது போலவே, 1927-ல் சியாங் கே-ஷேக் தலைமையிலும் கம்யூனிஸ்டுகளையும் அதிதீவிரப் புரட்சிக்காரர்களையும் அடக்க நேர்ந்தது, சீனாவின் துரதிர்ஷ்டமே யாகும். 1911-ஆம் ஆண்டு ஆரம்பித்த புரட்சி வேலைகளைத்தானே தீவிரமாக நடத்தவேண்டும் என்று கம்யூனிஸ்டுகளும் கோமின் டாங்கின் தீவிரவாதிகளும் கூறிவந்தனர்? அடக்கு முறைகளையும், சமயோசிதம் போல் அந்நியருக்குத் தலை வணங்குவதையும் குடியானவர்களும் தொழி

லாளரும் நாடெங்கும் எதிர்த்து வந்தனர். தெற்கே கம்யூனிஸ்ட் தளகர்த்தாகள் நாஞ்சாங், ஸ்வாடௌ முதலிய இடங்களைப் பிடித்துக் கொண்டார்கள். ஆனால் கோமிண்டாங் படைகள் வந்து அவர்களை விரட்டவே, அவர்கள் தம் படைகளுடன் கியாங்ஸி மாகாணத்திற்குச் சென்று விட்டனர். அங்கே ஸோவியத் சபைகளை நிறுவினார்கள். குவாங்டுங் மாகாணத்தின் வட பகுதியிலும் குடியானவர்களுடைய ஸோவியத்துகள் ஏற்படுத்தப்பட்டன. வரிக் கொடுமைகளாலும் நிலச்சுவான்களுடைய கொடுமையாலும் வருந்தி வந்ததால், குடியானவர்கள் கம்யூனிஸ்டுகளின் மூலமே தங்களுக்குக் கதிமோட்சம் கிடைக்கும் என்று நம்பி வேலைசெய்து வந்தார்கள்.

நான்கிங்கில் குழப்பம் அதிகரித்துக்கொண்டிருந்தது. இரண்டோர் இடங்களைத் தவிர மற்ற இடங்களில் இருந்த ஸோவியத் ஸ்தானிகர்கள் வெளியேற்றப்பட்டனர். உலகத்தில் சீனாவுக்கு உதவக்கூடிய ஒரே நாடாக இருந்த ருஷ்யாவின் உறவும் அறுந்துபோயிற்று. நான்கிங்குக்கும் ஹாங்கோவுக்கும் பலத்த போட்டி ஏற்பட்டது. வடக்கே இருந்த சாங் த்ஸோ—லினை அடக்குவதற்காக நான்கிங் படைகளை அனுப்பிய சமயத்தில், ஹாங்கோவும் படைகளை அனுப்பிவைத்தது. ஷான்டுங் மாகாணத்தில் சியாங் கே-ஷேக்கின் படைகள் பிரவேசிக்கும்வரை பொறுத்திருந்த ஜப்பான், மேற்கொண்டு அவர் வலிமை அடைந்துவிடக் கூடாது என்று தடுக்க ஆரம்பித்தது. ஷான்டுங் மாகாணத்தில் இருந்த ஜப்பானியப் பிரஜைகளைப் பாதுகாப்பதற்காக என்று சொல்லி ஏராளமான ஜப்பானியப் படைகள் அனுப்பப்பட்டன. பெகிங் நகரைப் பிடித்துச் சீனாவை ஒன்று சேர்த்துவிடாமல் தடுப்பதற்கு ஜப்பானுக்குத் தக்க சந்தர்ப்பம் வாய்த்தது.

ஜப்பானியப் பிரதம மந்திரி டானகா பிரபு, சீனா, பர்மா, ஜாவா முதலிய பல நாடுகளை ஜயித்துக் கடைசியில் உலகத்தையே ஜப்பான் ஆண்டு வரலாம் என்று கனவு கண்டவர். அவர் தம் கருத்தை ஒரு திட்டமாகத் தயாரித்து ஜப்பானியச் சக்கரவர்த்தியிடம் சமர்ப்பித்திருந்தார். இவ்வளவு ஆசைகொண்ட மந்திரி, சீன தேசியப் படை அகில சீனாவையும் வென்று ஒரே குடியரசுக்குக் கீழ் அமைத்துவிட விடுவாரா? 1927 மே மாதம் முதல் ஜூலை மாதம் வரை அவர் படைகளை ஷான்டுங் மாகாணத்திற்கு அனுப்பி வந்தார். அந்தப் படைகள் மறு வருஷம் தேசியப் படைகள் அணிவகுத்து வந்தபொழுதும் தம் இடத்தை விட்டு அசையவில்லை. ஸினான் என்ற இடத்தில் அவைகள் சியாங்கின் படைகளைத் திரும்பிச் செல்லும்படி எதிர்த்துத் தாக்கின. சாங் த்ஸோ-லின் சியாங் படைகளை எதிர்க்காமல் ஒருவேளை அவரோடு சேர்ந்து விடுவாரோ என்று ஜப்பானியருக்குச் சந்தேகம் தோன்றியது. தோற்று ஓடிவரும் சேனைகள் கூட மஞ்சூரியாவுக்குள் பிரவேசிக்கக் கூடாது என்றும் மந்திரி டானகா கூறினார். மஞ்சூரியா சீனாவிடமே இருந்த போதிலும், அது தம் குடியேற்ற நாடு என்றே டானகா கருதினார். ஜூன் 3ல் சாங் த்ஸோ-லின் பெகிங்கிலிருந்து முக்டென் நகருக்கு ஒரு ரயிலில் திரும்பி வந்து கொண்டிருந்தார். மறுநாள் வழியில் ஜப்பானியர் அந்த ரயிலுக்கே வேட்டு வைத்து அவரைத் தொலைத்து விட்டனர். சாங் த்ஸோ-லின் உடைய குமாரரான தளகர்த்தர் சாங் ஸியூ-லியாங் என்பவர் சியாங் கே-ஷேக்கிடம் விசுவாசமுள்ளவராயிருந்ததால் மஞ்சூரியாவின் பாதுகாப்பு அவர் வசம் ஒப்படைக்கப்பட்டது. 1925 முதல் 1927 வரை சீன தேசிய இயக்கத்தை எதிர்த்துவந்த வெளி நாடுகளில் ஜப்பானே கடைசிவரை விட்டுக் கொடுக்காது என்பது தெளிவாயிற்று. சீனாவின் ஒரே

வெளி விரோதி ஜப்பான் என்பதும் நிரூபணமாயிற்று.

ஆனால் அந்தச் சமயத்தில் சியாங்கை எதிர்த்துப் பெரிய போராட்டத்தில் இறங்குவதற்கு ஜப்பான் தயாராக இல்லை. அவருடைய படைகள் பின்னல் பெகிங்கைப் படையெடுத்துப் பிடித்துக்கொண்டன. சாங் த்ஸோ-லின்னுடைய குமாரர் சமாதானம் செய்துகொண்டார். 1928-ஆம் ௵, டிஸம்பர் மாதம் வடசீனவிலும், மஞ்சூரியாவிலும் கோமின்டாங் கொடி பறக்கவிடப்பட்டது. அதன்பின் ஜப்பானும் தன் படைகளை ஷான்டுங் மாகாணத்திலிருந்து வாபஸ் வாங்கிக்கொண்டது. பெகிங் நகருக்குப் பெய்ப்பிங் என்று புதிய பெயர் சூட்டப்பெற்றது.

1927-ம் அதற்கு அடுத்த வருஷமும் சியாங்கின் வாழ்க்கையில் மிக முக்கியமான வருஷங்கள். இக் காலத்தில் 1,80,000 டாலர் செலவில், பெரும் படைகளை அணிவகுத்து நடத்தி, ஐந்து மாதங்களில் ஆறு பெரிய மாகாணங்களை அவர் ஜயித்திருந்தார். பின்னர் ஷான்டுங் மாகாணத்தையும் வென்று கோமின்டாங் ஆட்சிக்கு உட்படுத்தினர். தேசத் துரோகக் கும்பல்களான யுத்த வெறியர்களின் படைகள் ஒழிக்கப்பட்டன. இந்த வெற்றிகளோடு, எதிர்காலத்தில் தம்மோடு சேர்ந்து சீன நாட்டைப் புனருத்தாரணம் செய்யக்கூடிய மாதரசி மெய்-லிங் தேவியை அவர் மணம்புரிந்து கொண்டதும் 1927-ல் தான். கான்டனிலிருந்து வடகோடித் தலை நகரான பெய்ப்பிங் வரை தேசியக் கொடியைப் பறக்கவிட்ட பெருமை சியாங் ஒருவரே தேசத்தின் நெருக்கடியான சமயத்தில் தலைமை வகித்து நடத்தும் ஆற்றல் படைத்தவர் என்பதை நிரூபித்து விட்டது.

1928-ஆம் வருஷம் அக்டோபர் 10ௗ சீனவின் தேசீய தினம். அன்று சியாங் கே-ஷேக் ஒற்றுமையாக அமைக்கப் பெற்ற புதிய அரசாங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

# XII

## 1928—1936

*'சமாதான காலத்தில் வேர்வையை அதிகமாய்ச் சிந்தினால், யுத்த காலத்தில் நாம் ரத்தத்தைக் குறைவாகச் சிந்தினால் போதும்.'* — **சீனப் பழமொழி**

---

சீனா முழுதும் ஒற்றுமைப் பட்டாலொழிய அதற்குக் கதிமோட்சமே இல்லாமற் போய்விடும் என்பதைச் சியாங் கே-ஷேக் தெளிவாக அறிந்திருந்தார். 'ஒற்றுமை, ஒற்றுமை—எந்த விதத்திலும் ஒற்றுமை' என்பதே அவருடைய சகல வேலைகளிலும் அடிப்படையாக இருந்து வந்தது. ஒற்றுமைக்குப் பெரிய இடையூறாக இருந்த முதல் விஷயம் தேசத்தின் விஸ்தீரணம். போக்குவரத்துச் சௌகரியங்களைச் சீர்திருத்தி, புதிய ரயில் பாதைகளையும் ரஸ்தாக்களையும் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. முன்னால் ரயில் பாதைகள் வெளிநாட்டார் உதவியாலும் வெளி மூலதனத்தைக் கொண்டும் அமைக்கப் பட்டன. பின்னிட்டுச் சீன எஞ்சினீர்கள் மிகுந்த திறமையுடன் இந்த வேலையைத் தாமே மேற்கொண்டார்கள். சீனாவின் மிகப் பெரிய நதியாகிய யாங்ட்ஸியில் 2,000 மைல் தூரம் கப்பல் போக்குவரத்துக்கு வசதி இருந்தாலும், அதுமட்டும் போதாது என்று பல கிளை ரஸ்தாக்களும் பெரிய ரஸ்தாக்களும் ஆங்காங்கே அமைக்கப்பட்டன. இவையெல்லாம் முன் கூட்டியே ஏற்பட்டிராவிட்டால், பின்னால் ஜப்பானை எதிர்த்துப் போரிடுவது அசாத்தியமாக இருந்திருக்கும். பின்னால் யுத்த காலத்தில் போக்குவரவுக்கான வசதிகள் பலமடங்கு அதிகமாயின. விமானப் போக்குவரத்துக்கும் விரிவான முறைகள் வகுக்கப் பட்டன. விமானம் ஓட்டுவதற்குச் சீன வாலிபர்கள் பயிற்சி பெற்று வந்தார்கள். உள்நாட்டிலேயே

கடன் தொகைகள் வாங்கிச் சேனைகள் பலப்படுத்தப் பட்டன. திறமையுள்ள ஜெர்மன் நிபுணர்கள் அவைகளுக்குப் பயிற்சி கொடுத்து வந்தார்கள். கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் தொழில்களும் வர்த்தகமும் வளர்வதற்கு அரசாங்கம் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டது. தேசியப் பொருளாதாரக் கவுன்சில் ஒன்று அமைக்கப்பட்டது. விவசாயத்தில் அடிப்படையான பெரிய மாறுதல்கள் நிறைவேறாவிட்டாலும், விவசாயிகளுக்குக் கடன் முதலிய வசதிகள் கிடைத்ததால் அவர்கள் நிலை சற்று மேம்பட்டிருந்தது. சுகாதார சம்பந்தமாகச் சர்வதேச சங்கத்தின் நிபுணர்களுடைய ஆலோசனையின் பேரில் மூன்று வருஷத் திட்டம் ஒன்று தயாரிக்கப் பெற்றது. வைத்திய வசதிகளும் சுகாதார வசதிகளும் விஸ்தரிக்கப்பட்டன. தொழில் நிபுணர்களும் விஞ்ஞான நிபுணர்களும் தேசம் எங்கும் ஸ்தாபனங்கள் அமைத்து வேலை செய்து வந்தார்கள். இவர்களில் வெளிநாடுகளில் பயிற்சி பெற்றவர்கள் பலர் இருந்தனர். தேசம் முழுதும் கல்வியைப் பரப்புவதற்காக விசேஷச் சட்டங்கள் இயற்றப்பட்டன. மேற்கொண்டு சில வருஷங்கள் அமைதியாக இருக்கும்படி விடப்பட்டிருந்தால், சீனா பலதுறைகளிலும் முன்னேறி, உலகத்து வல்லரசுகளோடு முன்னணிக்கு வந்திருக்கும். உள் நாட்டுக் குழப்பங்களும், ஜப்பானின் ஏகாதிபத்திய வெறியும் அதற்குச் சாந்தியே இல்லாமற் செய்துவிட்டன.

சீனாவின் ஒற்றுமைக்காகச் சியாங் சாத்தியமான சகல துறைகளிலும் உழைத்து வந்தார். ஆனால், முக்கியமான ஒரு விஷயத்தில் மட்டும் அவர் தவறு செய்து விட்டார். ஜப்பானை எதிர்ப்பதில் தலைமை வகித்து வெற்றிகரமாகப் போராடக் கூடிய சீனக் கம்யூனிஸ்டுகளையும், அவர்களுடைய செஞ்சேனை

யையும் அவர் ஆரம்பம் முதலே பகைத்துக் கொண்டார். கம்யூனிஸ்டுகளைப் பற்றிக் குறிப்பிடும் பொழுதெல்லாம் 'அந்தக் கொள்ளைக்காரர்கள்' என்றே கூறிவந்தார். 'கொள்ளைக்காரர்களை அடக்கும் யுத்தங்கள்' என்று சொல்லிப் பற்பல படைகளை அனுப்பி, கம்யூனிஸ்டுகளை அடக்கி அழித்து விடுவதற்கு இடைவிடாமல் அவர் வேலை செய்து வந்தார். இந்தக் கொள்கையால் சுமார் பத்து வருஷங்களாகச் சீனா அலங்கோலமாக்கப் பட்டுவிட்டது. மேலும், கம்யூனிஸ்டுகள் ஆயிரக்கணக்கில் வதைக்கப்பட்ட போதிலும், அவர்களை அழித்துவிட முடியவில்லை; அவர்களுடைய செஞ்சேனை அரும்பெரும் போராட்டங்கள் செய்து, கடைசிவரை பணியாமல் நிமிர்ந்து நின்றுவிட்டது. இவைகளைப் பற்றியெல்லாம் தனிச் சரித்திரங்கள் வெளிவந்திருக்கின்றன. ஆயினும், பிற்காலத்தில் பாரபட்சமில்லாத ஆசிரியர்கள் பெரிய சரித்திரங்களை எழுதும் பொழுதுதான் உண்மை முழுதும் வெளியாகும். ஹிட்லருடைய 240-டிவிஷன்கள் கொண்ட நாஜிப் படைகளை ரஷ்யக் கம்யூனிஸ்டுகள் ஓட ஓட விரட்டுவதற்கு முன்னால், பல வருஷங்களாக அநேக நாட்டார்கள் ரஷ்யர்களையும் 'கொள்ளைக்காரர்கள்' என்றுதான் சொல்லிவந்தார்கள். அந்தக் 'கொள்ளைக்காரர்கள்' ஹிட்லரை எதிர்த்து அவருடைய கொடுமையிலிருந்து உலகத்தையே பாதுகாத்து விட்டார்கள்! இதுபோலவே, சீனக் கம்யூனிஸ்டுகளும் ஜப்பானை எதிர்த்துப் புரிந்து வரும் போரிலிருந்து அவர்களுடைய நிரந்தரமான லட்சியம் சீனாவுக்கும் உலகத்திற்கும் தெளிவாகி யிருக்கிறது. ஜப்பானின் ஆக்கிரமிப்பை எதிர்க்க வேண்டும் என்றும், அதற்காகத் தாங்கள் மற்றக் கட்சிகள் எல்லாவற்றுடனும் ஒத்துழைக்கத் தயார் என்றும், கோமின்டாங் உள்நாட்டுப் போரை நிறுத்த வேண்டும் என்றும், தேசிய ஐக்கிய முன்னணி ஏற்பட

வேண்டும் என்றும் ஆதிமுதல் அவர்கள் கூறி வந்தார்கள். ஆனால், சியாங்கும் கோமின்டாங் தலைவர்களும், சண்டை செய்ய வேண்டியதெல்லாம் கம்யூனிஸ்டுகளோடு மட்டுமே என்றும், அரசாங்கப் படைகளையும் பணத்தையும் அதற்கே அர்ப்பணம் செய்துவிடுவது என்றும் தீர்மானித்தார்கள். 1937-ஆம் வரு வரை அவர்கள் ஜப்பானை எதிர்த்துப் போராட முடியாது என்று கருதி வந்ததோடு, வெளிப்படையாக அப்படியே கூறியும் வந்தார்கள். இத்தகைய சந்தர்ப்பத்தை ஜப்பான் தனக்கு அநுகூலமாக உபயோகித்துக் கொண்டதில் வியப்பே இல்லை. கொஞ்சம் கொஞ்சமாக அது சீனாவின் பிரதேசங்களைக் கடித்து விழுங்க ஆரம்பித்தது.

எழுபது வருஷ காலமாகவே ஜப்பான் பெரிய யுத்தத்திற்குத் தயாரித்துக்கொண்டு வந்திருக்கிறது. இடையிடையே சிறு யுத்தங்களில் தலையிட்டுப் பலம் தேடிக்கொண்டு, பயிற்சியும் பெற்று வந்திருக்கிறது. 1894-ல் அது சீனாவைத் தோற்கடித்தது; 1905-ல் ரஷ்யாவைத் தோற்கடித்தது; 1914-ல் நேசதேசங்களுடன் சேர்ந்து, சீனாவில் ஷான்டுங் மாகாணத்தையும், பல தீவுகளையும் பிடித்துக்கொண்டது. 1915-ல் அக்கிரமமான 21-நிபந்தனைகளைச் சீனா நிறைவேற்ற வேண்டும் என்று வற்புறுத்தியது. 1927-ல் மீண்டும் ஷான்டுங் மாகாணத்தின்மேல் படையெடுத்துப் பிறகு பின்வாங்கியது. 1928-ல் மஞ்சூரியாவைச் சீனாவிடமிருந்து அபகரிக்க ஏற்பாடு செய்தது. சீனா சர்வதேச சங்கத்தை நம்பி வெகு நாள் ஏமாந்துகொண்டிருந்தது. ஜப்பானுக்கு எதிராகத் தீவிர நடவடிக்கை எடுப்பதற்குச் சியாங்குக்கு ஆலோசனை சொல்லித் தூண்டக்கூடிய பலர் கோமின்டாங்கில் இல்லை. இருந்த சிலரும் வலது சாரியினரின் அதிகார மோகத்திற்கு அடிபணிந்து நிற்கவேண்டியிருந்தது.

1928-க்குப் பின் சியாங் உள் நாட்டு வேற்றுமைகள் மறைய வேண்டும் என்றும், ஒரே தேசிய அரசாங்கத்தின் கீழ்த் தேசிய ஒற்றுமை நிலைபெற வேண்டும் என்றும் பல முறை கூறிவந்தார். அதே சமயத்தில் தம்முடைய படைகளை ஏவிக் கம்யூனிஸ்டுகளுடன் போரிடச் செய்து அவரே அந்த ஒற்றுமை ஏற்படாமலிருக்கவும் செய்துவிட்டார். மாணவர்களுடைய தேசிய இயக்கம்கூட ஆங்காங்கே அடக்கப் பட்டது. 1931-ல் சியாங் ஒரு சமயம் தம்முடைய எல்லா வேலைகளையும் ராஜிநாமா செய்துவிட்டுப் போய்விட்டார். பின்னால் மிகவும் சிரமப்பட்டு அவரை அழைத்துவர வேண்டியதாயிற்று.

1931, ஸெப்டம்பர் 18-ல் ஜப்பான் மஞ்சூரியாவின்மேல் படையெடுத்தது. முதலில் இரண்டொரு சில்லறை விஷயங்களில் பரீட்சை பார்த்துவிட்டு, அது வளம் பொருந்திய மஞ்சூரியா முழுவதையுமே வளைத்துக்கொள்ள ஆரம்பித்தது. ஓரிரண்டு நாட்களிலேயே முக்கியமான நகரங்கள் எல்லாம் அதன் கைக்கு வந்துவிட்டன. நான்கிங் சர்க்கார் எதிர்ப்பதற்கு ஒன்றும் ஏற்பாடு செய்யாமல், சர்வதேச சங்கத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டது. ஜப்பானை எதிர்க்கவேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த சாங் ஸியூ-லியாங்கை எதிர்க்க வேண்டாம் என்று உத்தரவிட்டுத் தடுத்து விட்டது. அவருடைய படைகளும் ஸ்தலத்தில் தயாராக இல்லை. ஆயினும் மஞ்சூரிய இளைஞர்கள் தொண்டர் கூட்டங்களாகச் சேர்ந்து, தங்களால் இயன்றமட்டிலும் ஜப்பானியப் படைகளைத் தாக்கிவந்தனர். மூன்று மாதங்களில் மஞ்சூரியா முழுதும் ஜப்பானுக்கு அடிமையாயிற்று. பிறகு 1932, ஜனவரி, 28-ல் ஜப்பானியப் படைகள் ஷாங்காய்க்கும் வந்து தாக்கின. அந் நகரிலிருந்த ஜப்பானிய மில்களில் உடனே வேலைநிறுத்தம் ஆரம்பமாயிற்று. சீனாவின்

19-வது படை அங்கிருந்தும், அது ஜப்பானியரை எதிர்க்க வேண்டாம் என்று சர்க்கார் ஆலோசனை சொல்லியிருந்தது. அப்படியிருந்தும் அந்தப் படை மூர்த்தண்யமாக எதிர்த்துப் போராடிற்று. ஜப்பான் ஷாங்காயைத் தாக்கி, அந்த நேரத்தில் மஞ்சூரியாவில் தன் ஆதிக்கத்திற்கு அடங்கிய 'மஞ்சுகுவோ' என்ற ஓர் அரசாங்கத்தை ஸ்தாபித்துவிட வேண்டும் என்றே எண்ணியிருந்தது. அது நிறைவேறியவுடன் ஷாங்காயிலிருந்து வாபஸாகிவிட்டது.

1933-ல் ஜப்பானியப் படைகள் ஜீஹோல் மாகாணத்தைப் பிடித்துக்கொண்டன. ஜீஹோல் மஞ்சுகுவோவுடன் சேர்க்கப்பட்டது. அதன் பின் சீனாவுடன் ஒரு சமாதானம் செய்து கொள்ளப் பட்டது. அதன்படி பெய்ப்பிங்குக்கும் பெரிய மதிலுக்கும் இடையே இருந்த சீனப் படைகள் உள் நாட்டுக்கு அழைக்கப்பட்டன. ஜப்பானுடைய முதல் ஆக்கிரமிப்பு வெற்றியாயிற்று. அது வாயில் போட்டுக் கொண்ட பிரதேசங்களை மென்று ஜீரணிப்பதற்கும் போதுமான நேரம் கிடைத்தது.

யாதொரு காரணமும் இல்லாமல் ஜப்பான் சீனாவின் மேல் படையெடுத்ததைத் தடுக்க உலகில் ஒரு தேசமும் முன்வரவில்லை. சர்வதேச சங்கத்தின் விதிகளை ஜப்பான் காற்றில் பறக்க விட்டு விட்டது. பிற நாடுகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை அது அலட்சியம் செய்துவிட்டது. அதுமட்டுமல்ல, பெரிய யுத்தத்தை ஆரம்பிக்கவும் தயாராக இருந்தது. அமெரிக்கா அதன் வெற்றியை அங்கீகரிக்க மறுத்தது. இங்கிலாந்து அதைக்கூடச் செய்யவில்லை. சர்வ தேச சங்கம் எல்லா விஷயங்களையும் ஆராய்ந்து பார்க்கும்படி ஒரு கமிஷனை அனுப்பி வைத்தது. ஸர் ஜான் ஸைமன் ஜினீவாவில் பத்திரிகை நிருபர்களிடம் பேசிக் கொண்டிருந்த பொழுது,

ஜப்பான் விஸ்திரணம் அடையவேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்ததாயும், முற்காலத்தில் பிரிட்டன் இந்தியாவில் பிரவேசித்தது போலவே ஜப்பான் மஞ்சூரியாவில் பிரவேசித்தது என்றும் கூறினார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் காரியாக இவர் இருவருடைய அபிப்பிராயமே போதுமல்லவா? இத்தகைய அபிப்பிராயங்களால் இரண்டாவது உலக யுத்தம் தோன்றி ஒவ்வொரு நாட்டுக்கும் எவ்வளவு கேடு நேர்ந்தது என்பதை நாம் அறிவோம். ஜப்பானிலிருந்த பிரிட்டிஷ் ஸ்தானிகரும், ஜப்பான் செய்ததெல்லாம் சரிதான் என்றும், சீனுதான் முறையாக நடந்துகொள்ளவில்லை என்றும் சொல்லிவிட்டார். இந்த அபிப்பிராயங்களால் சீன சம்பந்தமாகத் தெளிவாகிய விஷயம் ஒன்றுதான்: சீன தன் கையே தனக்கு உதவி என்பதை அறிந்துகொள்ளாமல், வெளி உதவியையே நாடுகிறவரை அதற்குத் தோல்வியைத் தவிர வேறில்லை என்பதுதானே அவ்விஷயம்.

ஜப்பான் தலைவாசலில் வந்து போருக்கு அறைகூவி அழைத்துக்கொண்டிருந்தது. ஒவ்வொரு மாகாணமாக அது கைப்பற்றிக்கொண்டு வந்தது. அப்பொழுதுகூட அதை எதிர்க்கவேண்டும் என்று நான்கிங் சர்க்கார் தீர்மானிக்கவில்லை. அதற்குப் பதிலாக வடக்கேயும் வடகிழக்கிலும் கம்யூனிஸ்டுகளை முற்றிலும் அடக்கிவிட வேண்டும் என்று கோமின்டாங் படைகளுக்கு உத்தரவுகள் போய்க்கொண்டேயிருந்தன. ஆனால், ஜனங்கள் விழித்துக் கொண்டார்கள். கம்யூனிஸ்டுகளும் தங்கள் திட்டங்களை மாற்றிக்கொண்டு, கோமின்டாங் எதிர்ப்பை மாற்றி, ஐக்கிய முன்னணிக்கு வேண்டிய தீர்மானங்களைச் செய்தனர். மஞ்சூரியாவில் இளைஞர்கள் கொரில்லாப் படைகளாகச் சேர்ந்து பயிற்சி பெற்று, ஜப்பானிய ஆட்சிக்கு உலைவைத்துக்கொண்டு வந்தனர். சீன மாணவர்கள் தேசம் முழுவதிலும் கொந்தளித்துக்

கிளம்பிவிட்டார்கள். சீனாவில் எந்த முன்னேற்ற இயக்கத்திலும் அவர்களே முன்னணியில் நிற்பது வழக்கம். அந்நியரை எதிர்த்து விரட்டவேண்டும் என்பதே அவர்களுடைய முழக்கமாக இருந்தது. இத்தகைய புனிதமான தேசீய எழுச்சியைக் கூடச் சியாங் கே-ஷேக்கின் போலீஸ் படையினர் அடக்கி வந்ததோடு நகரங்களில் ஏராளமான மாணவர்களையும் மாணவிகளையும் கைதுசெய்தும், அடித்தும், வதைத்தும் வந்தார்கள் என்றால், கோமின்டாங்கின் புரட்சி அரசாங்கம் வெறும் ஆணவமுள்ள அதிகார வர்க்கமாக மாறியிருந்தது என்பதற்கு வேறு அத்தாட்சியே அவசியமில்லை. அதற்கு அறிவூட்டி வழி திருப்பிவிட வேண்டியிருந்தது. அந்த வேலையைச் சீனாவின் வடகிழக்கிலுள்ள ஷியான் மாகாணம் செய்துமுடித்த வரலாறு அடுத்த அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

இடையில், 1934-ல், சியாங் நவஜீவன் இயக்கத்தைத் தேசமெங்கும் பரவச் செய்தார். அதன் விவரம் முன்னரே ஐந்தாவது அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது. அந்த வருஷத்தில் சியாங்கும் அவர் தேவியாரும் தேசத்தின் பல பாகங்களில் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். சில இடங்களுக்கு விமானங்களிலும் சென்றார்கள். மொத்தம் பத்து மாகாணங்களில் முக்கியமான நகர்களுக்கு அவர்கள் விஜயம் செய்தார்கள். சென்ற இடமெல்லாம் அவர்களுக்கு ராஜ வரவேற்பு நடந்தது. அதுவரை எந்த அரசியல் தலைவரும் இம்மாதிரி திக்விஜயம் செய்ததில்லை. ஜனங்கள் தங்கள் மாபெருந் தலைவரைக் கண்ணாரக் கண்டு களித்தனர். அவருடைய வீர வாசகங்களைக் காதால் கேட்டு ஊக்கமும் உறுதியும் அதிகரிக்கப் பெற்றனர்.

1935-ல் சியாங் தம்முடைய யாத்திரை முடிந்து நான்கிங்குக்குத் திரும்பி வந்தார். அவ்வருஷம் நவம்பர்

1-ல் கோமின்டாங்கின் மத்திய நிர்வாகக் கமிட்டியின் கூட்டம் நடைபெற்றது. அதற்கு வாங் சிங்-வேயும் வந்திருந்தார் முதல் நாள் கூட்டத்திற்குப் பின் தலைவர்கள் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து புகைப் படம் எடுக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த நேரத்தில் மிகவும் வருந்தத் தக்க ஒரு சம்பவம் நேர்ந்துவிட்டது. ஒரு வாலிபன் வாங் சிங்-வேயைக் குறிபார்த்துச் சுட்டுவிட்டான். அதனால் அவருக்குக் காயம் ஏற்பட்டு, சிகிச்சைக்காக அவர் ஐரோப்பா செல்ல நேர்ந்தது. அவரைப் பற்றி இந்நூலில் இடையிடையே குறிப்பிட்டிருப்பது சீனப் புரட்சியில் அவர் பெற்றிருந்த ஸ்தானத்தின் காரணமாகத்தான். அவர் ஸன் யாட்-ஸென்னின் தோழர், தீவிரப் புரட்சிக்காரர், மகா தியாகி, சிறந்த அறிவாளி, புரட்சி காரணமாக அவர் நெடுநாள் சிறையில் அடைக்கப் பட்டிருந்தார். வருஷக் கணக்காக அவருடைய கைகள் முதுகின் புறமாக வைத்துக் கட்டப்பட் டிருந்ததாகவும், புரட்சி வெற்றி பெற்ற பிறகு, ஜயகோஷத்துடன் ஜனங்கள் சென்று அவரை விடுதலை செய்ததாகவும், அவருடைய கைகள் அவிழ்த்து விடப்பட்ட பிறகு நெடுங்காலம் அவைகளை உபயோகிக்க முடியாமல் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. அவர் தேசத்திற்காக அரும் பெருந் தியாகங்கள் செய்தவர் என்பதும், அவருக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது என்பதும், சியாங் இல்லாதிருந்தால் அவரே தலைமைப் பதவியில் இருந் திருப்பார் என்பதும் உண்மை. மற்றப்படி சியாங்கின் குண விசேஷங்களுக்கும் அவருடைய குணங்களுக்கும் எத்தனையோ வேற்றுமைகள் உண்டு. எக்காரணத் தாலோ இவ் இருவர்களுக்கும் நாளுக்கு நாள் மனக் கசப்பு வளர்ந்து கொண்டே வந்தது. பிற்காலத்தில் ஜப்பான் மேற்கொண்டும் ஆக்கிரமிப்பில் இறங்கி, பெய்ப்பிங், டீன்ட்ஸின், ஷாங்காய், நான்கிங்

ஏாதலிய நகரங்களை எல்லாம் பிடித்துக்கொண்ட காலத்தில், வாங் முதல்தர தேசத் துரோகியாக முன் வந்தார். ஜப்பான் பிடித்துக் கொண்ட சீனப் பிரதேசத்தில் அவர் தலைமையில் ஒரு பொம்மை சர்க்கார் அமைக்கப்பட்டது. ஜப்பானைச் சீனு எதிர்ப்பது தவறு என்றும், ஜப்பான் ஆசியாவின் விடுதலைக்காக வந்திருக்கும் உதய சூரியன் என்றும், சியாங் கே-ஷேக் ஆங்கில அமெரிக்கர்களின் கையாளாக இருந்து அநியாயமாகச் சீனர்களை வதைக்கிறார் என்றும் அவர் வாய்க்கு வந்தபடியெல்லாம் பிற் காலத்தில் கதைக்க ஆரம்பித்துவிட்டார். ஸன் யாட்-ஸென்னின் துணைவர்களில் வாங் இப்படிப் பிரிந்து போன பிறகு, சியாங் ஒருவரே முக்கியஸ்தராகவும் நடுநாயகமாகவும் எஞ்சியிருந்தார்.

வாங் குண்டுபட்டு வெளி நாடு சென்றதும், அவருடைய தலைமைப் பதவியையும் சியாங் ஏற்க வேண்டியதாயிற்று. 1936-ஆம் வரு அக்டோபர்மீ 31உ அவருடைய ஐம்பதாவது பிறந்த நாளைக் கொண் டாடுவதற்காகத் தேசத்தின் பல பாகங்களிலும் கோலாகலமான ஏற்பாடுகள் நடந்திருந்தன. ஏராள மாகப் பணவசூல் செய்து சுமார் நூறு ஆகாய விமா னங்கள் வாங்கி ஜனங்கள் அன்று அவருக்குப் பரி சளித்தனர். ஏழைச் சிறுவர்களும் சிறுமிகளுங்கூட அந்த நிதிக்குத் தங்களுடைய காசுகளைக் கொடுத்தும், வசூல் செய்தும் உதவினார்களாம். நான்கிங் மட்டும் 17-விமானங்களை அளித்தது. அந் நகரில் இரண்டு லட்சம் ஜனங்கள் கூடி மிகுந்த ஆரவாரத்துடன் பிறந்த நாள் வைபவத்தைக் கொண்டாடினார்கள். தேசிய அரசாங்கத்தின் தலைவரான லின் ஸென் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசும்பொழுது, ஜனங்கள் சேனுபதிக்குக் காணிக்கையாக அளித்த விமானங்களில் 35, தலைக்கு மேலே பறந்து, 'சுங் - செங்' என்ற வார்த்தைகளை ஆகாய வீதியில்

எழுதினவாம். (சுங்-மத்தி, செங்-நேராக நிற்பது.) சுங்-செங் என்பது சியாங் கே-ஷேக்கின் ஆதிப் பெயர். அந்தப் பெயரின் பொருளுக்கு ஏற்ப, அவர், இடது புறமோ வலது புறமோ அதிகமாய்ச் செல்லாமல், நடுமத்தியில் நேராக நிலைத்து நிற்பவர் என்பதில் சந்தேகமில்லை. வைபவத்தில் நேராக வந்து கலந்து கொள்வதற்குச் சியாங்கின் அடக்கம் இடம் கொடுக்கவில்லை. வேறு பல இடங்களிலும் நான்கிங்கைப் போலவே கொண்டாட்டங்கள் இனிது நிறைவேறின.

பிறந்த நாளன்று சியாங்கும் மெய்லிங் அம்மையும் ஹோனுன் மாகாணத்தில் லோயாங் நகரில் இருந்தனர். சியாங் அன்று ரயிலை விட்டு இறங்கியதும் அரை மணி நேரம் மழைபெய்து எங்கும் குளிர்ச்சியாக இருந்தது. பல மாதங்களாக மழையே இல்லாதிருந்த அந்நகரில் அவர் வந்தபொழுது மழையும் கூடவே வந்துவிட்டதைக் கண்ட ஜனங்கள் பெருமகிழ்ச்சி அடைந்தனர். அன்று பொதுக் கூட்டத்தில் 20,000 மக்கள் கூடியிருந்தனர். பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்கு நன்றிசெலுத்தும் முறையில் சியாங் வெளியிட்ட அறிக்கையில் அவர் உள்ளத்திலிருந்து எழுந்த செஞ்சொற்களும் சிறந்த கருத்துக்களும் அமைந்திருந்தன. அத்துடன் அவர் தம்முடைய வாழ்க்கையைப் பற்றியும், தம்மைத் தேசப் பணிக்காக வளர்த்து அளித்த அன்னையைப் பற்றியும் விரிவாகக் குறிப்பிட்டு ஒரு விசேஷ அறிக்கையையும் வெளியிட்டார். ஜன்ம தின வாழ்த்துக்களாக அவருக்கு வந்த தந்திகள் மட்டுமே 5,000 இருக்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

இத்தனை கோலாகலத்திற்கும் பின்னால், ஒரு மாதம் கழிந்ததும், சியாங் வாழ்க்கையிலேயே மிக முக்கியமான ஒரு சம்பவம் நடந்தது. அதுவே

சீனுவின் புதிய சரித்திரத்திலும் பெரிய மாறுதலை ஏற்படுத்திவிட்டது. அதைக் கண்டு கோடிக் கணக்கான சீன மக்களும், உலக மக்களில் அநேகரும் முதலில் ஸ்தம்பித்துப் போனார்கள். ஆனால், பிற் காலத்தில் அந்தச் சம்பவமே சீனுவுக்கு நிரந்தரமான இன்ப மளிப்பதாகவும், அதன் பகைவர்களின் கருத்தை அழிப்பதாகவும் அமைந்தது. அதுதான் 1936, டிஸம்பர் 12ல், சேனபதி சியாங் சிறைப் பட்ட சம்பவம்.

## XIII

### சேனபதி சிறைப்பட்டார்!

'சிறுபான்மைக் கட்சியினரின் சிந்தனையையும் அவர்கள் அபிப்பிராயம் சொல்லுவதையும் அடக்கினால், அது சமூகம் முன்னேற்றமடைய முடியாமல் தடுத்து இறுகிப் போகும்படி செய்துவிடும். சிறுபான்மைக் கட்சிகளின் அநுபவத்தினால் பெரும்பான்மையோரும் ஊக்கம் அடைகின்றனர். மனித உள்ளம் தன்னைப் பரிசோதனை செய்துகொள்வதற்காக நேர் எதிரான அபிப்பிராயங்களைப் பெறவேண்டியது அவசியம்.'

— வெண்டல் எல். வில்கி

சீன நாகரிகத்தின் வளர்ப்புப் பண்ணையாக விளங்குவது ஸியான் நகரம். அது ஷென்ஸி மாகா ணத்தின் தலைநகர். ஜன்ம தினக் கொண்டாட்டத் திற்குப் பிறகு டிஸம்பர் 4வ, சியாங் கே-ஷேக் லோயாங்கிலிருந்து ஸியானுக்கு விஜயம் செய்தார். அங்கு நடந்த வரவேற்பைக் கண்டு அவர் உச்சி குளிர்ந்து போயிருப்பார். அது வெறும் ஆடம்பரங் களும் ஆர்ப்பாட்டங்களும் நிறைந்த வரவேற்பு அன்று. அவருடைய உள்ளத்திற்கு உவப்பான விஷயங்களே

அதில் நிறைந்திருந்தன. ஸியான் அவருடைய நவ ஜீவன் இயக்கத்தின் உறைவிடம் போலக் காட்சி அளித்தது. தெருக்கள், சந்துகள், வீடுகள் எல்லாம் பரிசுத்தமாக இருந்தன. ரிக்ஷாகாரர்கள்கூட, ஒரே மாதிரி உடைகள் அணிந்து, ஒழுங்காக அணிவகுத்து நின்றனர். சியாங்குடைய கார் மெதுவாகச் செல்வதற்காக வழியெங்கும் மென்மையான மணல் விரிக்கப்பட்டிருந்தது. மொத்தத்தில் ஒவ்வொரு விஷயமும் மிகவும் கவனமாக 'நவஜீவன்' முறையிலேயே கவனிக்கப்பட்டிருந்தது.

இப்படி அன்பும், கனிவும், விசுவாசமும்கொண்டு வரவேற்ற அதே ஸியான் நகரில், சேனாபதி சியாங் தம்முடைய படைகளாலேயே டிஸம்பர் 12உ காலை கைதி செய்யப்பட்டார்! இது நயவஞ்சகமா? துரோகிகள் செயலா? ஜப்பானின் சூழ்ச்சியா? யுத்த வெறியர்களின் தந்திரமா? இவை ஒன்றும் இல்லை. எட்டு வருஷம் தம்முடன் பழகிய அருமை நண்பரான தளகர்த்தர் சாங் ஸியூ-லியாங் என்பவர் உத்தரவின் பேரிலேயே சியாங் கைதி செய்யப்பட்டிருந்தார். இரண்டு வாரங்களுக்குப் பின், அதே நண்பர் கூடத் தொடர்ந்துவர, அவர் விடுதலை பெற்று நான்கிங் தலை நகருக்கு விமானத்தில் பறந்து சென்றார். சேனாபதி இவ்வண்ணம் 14-நாள் சிறைப்பட்டிருந்த சம்பவத்தைப் புரிந்துகொள்ளப் பல விஷயங்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. அதுவரை அவர் செய்து வந்த காரியங்கள், அவருடைய நெஞ்சின் உறுதி, தேசமக்களின் உணர்ச்சி, மார்ஷல் சாங் ஸியூ-லியாங்கின் சரித்திரம், கம்யூனிஸ்டுகளின் மனப்பான்மை, நான்கிங்கில் தலைமைச் சர்க்காரை நடத்தி வந்தவர்களின் நிலைமை, ஸ்ரீமதி சியாங்கும் அவர் சகோதரர் டி. வி. ஸூங்கும் நெருக்கடியான நிலைமையில் காட்டிய பெருந்தன்மை, பின்னால் ஏற்பட்ட தேசிய எழுச்சி, சியாங்கின் மனமாற்றம் ஆகிய

இத்தனையும் 'ஸியான் சம்பவம்' என்ற இரண்டு சொற்களில் அடங்கியிருக்கின்றன. ஆனால் சேனாபதி கைதியானதும் ஒரே சமயத்தில் இத்தனை விஷயங்களும் மக்களுக்கு எப்படித் தெரிய முடியும்? சீனாவின் ஒப்பற்ற தலைவர் கொலையுண்டார் என்றும், சீனரின் குலவிளக்கான ஜோதி அணைந்து போய்விட்டது என்றும் நாடெங்கும் வதந்திகள் பரவின. சியாங்கைக் கைதி செய்தவர்கள், கைதி செய்த தினம் முதல், நாள்தோறும் அவரைப்பற்றி அறிக்கைகளும் தந்திகளும் அனுப்பிய போதிலும், அவைகள் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் பரவா வண்ணம் நான்கிங்கிலிருந்த அதிகாரிகள் அவைகளை வெகு சாதுரியமாக அடக்கிவைத்து விட்டார்கள்! இதனால் 14-நாட்களும் சீனாவுக்கு 14-யுகங்களாகவே இருந்திருக்கவேண்டும்!

பொதுவாகத் தேசமக்கள் உள் நாட்டுக் கலகத்தை விரும்பவில்லை. வெறும் கணக்காக மக்கள் ஒருவரை ஒருவர் சுட்டுக்கொண்டிருப்பதில் யாருக்குத்தான் விருப்பம் இருக்கும்? சியாங்கும், அவருக்குப் பக்க பலமாக இருந்த பிற்போக்கான கோமின்டாங் அதிகாரிகளும், கம்யூனிஸ்டுகளை வதைப்பதையே கர்ம சிரத்தையாகக் கொண்டிருந்தார்கள். நோக்கிய திசையெல்லாம் அவர்களுக்குப் பொது உடைமைப் பூதமே தென்பட்டது. கம்யூனிஸ்டுகள் காலத்திற்கும் தேச நிலைமைக்கும் தக்கபடி தங்கள் திட்டத்தை மாற்றிக்கொண்டு பிரசாரம் செய்து வந்தார்கள். சீனர்களே சீனர்களைக் கொல்வது நிற்கவேண்டும் என்று அவர்கள் பெருங் கிளர்ச்சியை ஆரம்பித்தார்கள். அதிகாரிகள் சம்பந்தப்பட்ட வரை அது செவிடன் காதில் ஊதிய சங்கு போலவே இருந்தது. ஆனால் கம்யூனிஸ்ட் படைகளை அழிப்பதற்காக வந்த கோமின்டாங் படைகளின் முன்னால், 'சீனர்களே சீனர்களைக் கொல்ல மாட்டார்கள்!'

என்று கூவினுல், பலனில்லாது போகவில்லை. சியாங் அனுப்பிய படைகளில் அநேகம் செஞ்சேனையுடன் சேர்ந்துவிட்டன. எப்படியாவது செஞ்சேனையைத் தவிடு பொடியாக்கிவிட வேண்டும் என்று மேலேயிருந்து தாக்கீதுகள் வந்துகொண்டேயிருக்கும். தேசியப் படைகள் தீவிரமாகச் சண்டையிலும் இறங்கும். ஆனுல், செஞ்சேனையிடம் தோல்விமேல் தோல்வியாகப் பெற்று அவை திரும்பிவிடும். இவை தாம் வடமேற்கில் கம்யூனிஸ்டுகளை அடக்கி வந்த வைபவங்கள்.

'கம்யூனிஸ்ட் கொள்ளைக்காரர்களை' அடக்கிய பின்பே மறு காரியம் பார்க்கவேண்டும் என்ற உத்தரவை நிறைவேற்றுவதற்கு அங்கு நியமிக்கப்பட்டிருந்த தளபதி, சாங் ஸியூ-லியாங் என்பவர். வடமேற்கில் கம்யூனிஸ்டுகள் வலிமையுடன் நிலைபெற்ற காரணம் என்ன? சாங் ஸியூ-லியாங் யார்?

சீனக் கம்யூனிஸ்டுகள் 1927-ல் குவாங்டுங் மாகாணத்தில் 'ஹெய்பெங் ஸோவியத் குடியரசு' என்ற பெயருடன் ஓர் அரசாங்கத்தை அமைத்துக் கொண்டிருந்தார்கள். நாளடைவில் அதன் எல்லை விரிவடைந்து, 1932-ல் சீனுவின் ஆறில் ஒரு பகுதி அதன் ஆதிக்கத்திற்கு வந்துவிட்டது. ஸோவியத் பிரதேசம் இரண்டரை லட்சம் சதுர மைல் அளவுள்ளது. அதன் ஜனத்தொகை ஐந்து கோடி. ஸோவியத் அரசாங்கத்திற்கு நான்கு லட்சம் வீரர்களுள்ள ஒரு பெரிய செஞ்சேனை இருந்தது. கம்யூனிஸ்டுகள் பல மாகாணங்களிலும் புகுந்து ஜனங்களிடையே பிரசாரம் செய்து வந்தார்கள். செஞ்சேனையை எதிர்த்துப் போராடுவதற்காக 1934-ல் சியாங்கே-ஷேக் ஐந்தாவது முறையாகப் பெரும் படையைத் திரட்டிக் கொண்டு வந்திருந்தார். அப்பொழுது கம்யூனிஸ்டுகள் கியாங்ஸி, பூகியென் மாகாணங்களிலும் நிலைபெற்றிருந்தார்கள். கியாங்ஸியின்

தலைநகரான நான்சாங்கில் சியாங் தம் தலைமைக் காரியாலயத்தை அமைத்துக்கொண்டிருந்தார். அவரிடம் பத்து லட்சம் துருப்புகள் இருந்தன. கம்யூனிஸ்டுகளை அழிப்பதற்கு விமானங்கள்கூடக் கொண்டுவரப் பட்டன. ஆயிரக்கணக்கில் உயிர்ச் சேதம் ஏற்பட்ட பிறகு, அதுவரை எதிர்த்து நின்ற செஞ்சேனை மேற்கொண்டு எதிர்க்க முடியாமற் போயிற்று.

சியாங் செஞ்சேனையை அழித்துவிடப் புறப்பட்டார். ஆனால் செஞ்சேனை அவர் கையிலிருந்து நழுவி ஹூனன் மாகாணத்தின் வழியாக வடமேற்குத் திசைக்குப் போய்விட்டது. சு—டே என்ற புகழ் பெற்ற கம்யூனிஸ்ட் தலைவர் அதன் சேனபதியாக இருந்தார். சேனையில் லட்சம் படைவீரர் இருந்தனர். எனினும், சேனை அணிவகுத்துச் சென்று, பல பகை மாகாணங்களையெல்லாம் கடந்து 7,000 மைல் யாத்திரை செய்து, 1935-ஆம் வருஷம் ஷென்ஸி மாகாணத்தை அடைந்தது. அங்கே 1932-முதல் நிலைபெற்றிருந்த மற்றக் கம்யூனிஸ்ட் படைகளுடன் இந்தச் சேனையும் கலந்துகொண்டது. உலக சரித்திரத்தில் இந்தச் சேனையைப் போல் நெடுந்தூரம் யாத்திரை செய்து நிலைகுலையாது நின்ற ஆச்சரியத்தைக் காண முடியாது. கம்யூனிஸடுகள் வடமேற்கை நோக்கிச் சென்றதற்கு முக்கியமான காரணம் ஒன்று உண்டு. ஜப்பானியர் மஞ்சூரியாவிலிருந்து மங்கோலியா வழியாகத் தெற்கேயும், ஜீஹோல் வழியாக மேற்கிலும் பிரவேசித்தால், முதன் முதலாக அவர்களைச் சந்தித்துப் போராடலாம் என்பதுதான் அக்காரணம். எப்படியும் ஜப்பானியர் தங்கியிருக்கும் இடத்திற்குச் சமீபமாய்ப் போய்த் தாக்கிவிட வேண்டும் என்பது அவர்கள் அவா. முதலில் தாக்க ஆரம்பித்துவிட்டால், பிறகு ஜனங்களும், நான்கிங்

சர்க்காரும் போராட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்று அவர்கள் நம்பினார்கள்.

வடமேற்கிலுள்ள கம்யூனிஸ்ட் படைகளையும் ஒழித்துவிட வேண்டும் என்பதற்காகவே சியாங் சாங் ஸியூ-லியாங்கை அங்கு அனுப்பிவைத்தார். வந்த வுடன் சாங் இரண்டு முறை தோல்வியுற்றார். அத்துடன் அவருடைய படைகள் இரண்டும் எதிரிகளுடன் சேர்ந்துகொண்டு விட்டன. செஞ்சேனையை எதிர்த்துத் தாக்கி அழித்துவிட முடியாது என்பதை அவர் நான்கிங் அரசாங்கத்திற்கும் அறிவித்துவிட்டார். மேலும், அவர் மனத்திற்கும் அது பிடித்த வேலையாயில்லை. ஜப்பானே விரோதி, அதையே அடிக்கவேண்டும் என்று அவர் ஆசை கொண்டிருந்தார். அவர் அப்பொழுதுதான் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பி வந்திருந்தார். ஹிட்லர், மூஸோலீனி எல்லோரையும் நேரில் பார்த்துப் பேசியவர் அவர். உலக நிலைமையையும், அதற்கு ஒவ்வாத தம் நாட்டு நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்து அவர் மனம் குமுறினார். ஆனால், சேனுபதி சியாங்கிடம் அவருக்கு அளவற்ற விசுவாசமும் நம்பிக்கையும் உண்டு. அதிலும், ஹிட்லரையும் முஸோலீனியையும் பார்த்த பிறகு, சீனாவிலும் எல்லோரும் ஏகமனத்துடன் சியாங்கையே தலைவராகக் கொள்ளவேண்டும் என்று அவர் தீர்மானித்து விட்டார்.

அவருடைய நிலைமை தர்ம சங்கடமானது. சீனாவின் நிலைமையுமே அப்படித்தான் இருந்தது. ஒரு பக்கம் லட்சக்கணக்கான கம்யூனிஸ்டுகள் ஜப்பானின் ஏகாதிபத்திய மோகத்தை எதிர்த்துப் போராடத் தயாராக இருந்தார்கள். மறுபக்கம் தேசியப் படைகளே அவர்களை வதைக்க ஏற்பாடு செய்து வந்தன. சியாங் கே-ஷேக் துப்பாக்கிகளை ஜப்பானியர் பக்கம் திருப்பப் பிடிவாதமாக மறுத்துக்கொண்டே

வந்தார். ஆனால், அவர் ஒப்பற்ற சேனாபதி. அதோ கதியாக விழவேண்டிய சீனாவை உத்தாரணம் செய்தவர் அவர். கடுகளவு சுய நலமும் இல்லாத தூயர். அவரே தலைமையில் இருக்கவேண்டும். ஆனால் கம்யூனிஸ்டுகளைப் பற்றிய அவருடைய மனப் பான்மை மாறவேண்டும்; எல்லா ஆயுதங்களும் ஏக காலத்தில் ஜப்பானியரைத் தாக்க உபயோகமாக வேண்டும். சியாங் பிடிவாதக்காரர். ஆனால் நியாயம் கம்யூனிஸ்டுகள் பக்கம் இருந்தது. எனவே, சாங் ஸியூ-லியாங் கம்யூனிஸ்டுகளை எதிர்ப்பதை நிறுத்தி விட்டார். ஜப்பானுக்கு எதிராகத் துவேஷம் உண்டா வதற்குத் தம்மால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு வேலையும் செய்ய ஆரம்பித்தார். அவர் ஏராளமான பள்ளிக்கூடங்கள் அமைத்து மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தார். ராணுவக் கலாசாலை அமைத்துத் தளகர்த்தர்களுக்குப் பயிற்சி அளித்தார். பல விதத்திலும் ஜனங்களுக்கும் படை வீரர்களுக்கும் வீர ஆவேசம் உண்டாகும்படி அவர் வேலைசெய்து வந்தார்.

சாங் ஸியூ-லியாங் பழைய மஞ்சூரிய தளகர்த்த ரான சாங் த்ஸோ-லின்னின் குமாரர் என்பது முன் 181-ஆம் பக்கத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. தந்தை இறந்தவுடன் குமாரர் படைகளை எல்லாம் ஒன்று சேர்த்துச் சாமர்த்தியமாகத் தம் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டார். பின்னால் ஜப்பான் மஞ்சூரி யாவைப் பிடித்துக்கொண்டதால், அவர் சீனாவின் உட்பகுதிக்கு வந்துவிட்டார். அவருடன் 40,000 வீரரைக் கொண்ட படையும் இருந்தது. அந்த வீரர்கள் எல்லோரும் தங்கள் தாயகமாகிய மஞ்சூரி யாவை அபகரித்துக்கொண்ட ஜப்பானைப் பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்று துடித்துக் கொண்டிருந் தார்கள். தங்களுடைய உற்றார் உறவினரையெல்லாம் ஜப்பானியப் படைகள் வதைத்ததை அவர்கள்

கண்ணுல் பார்த்தவர்கள். ஆதலால், அவர்களுடைய கோபம் கொதித்துக் கொண்டிருந்தது. கம்யூனிஸ்டு களும் சீனர்கள் ஆதலால் அவர்களைத் தாக்குவது அந்த மஞ்சூரிய வீரருக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் சியாங்கை மிகவும் துவேஷிக்க ஆரம்பித்தனர்.

சாங் ஸியூ-லியாங் 'வாலிபத் தளபதி' என்று பிரியமாக அழைக்கப்படுவது வழக்கம். அவருடைய கம்யூனிஸ்ட் எதிர்ப்பு வரவரக் குறைந்து போய் விட்டது. மூர்க்கமாகப் போராடக்கூடிய அவருடைய படைவீரர்கள், 'மறுபடி மஞ்சூரியாவைக் காண்பது எப்போ? எப்போ?' என்று தவித்துக்கொண் டிருந்தனர். 'விட்டுப் பிரிந்த அம்மா, அப்பா, தம்பி, தங்கை எல்லோரையும் மறுபடி சந்திப்பது எப்போ? எந்த வருஷம், எந்த நாளில்?' என்று அல்லும் பகலும் அவர்கள் புலம்பித் துடித்துக்கொண் டிருந்தனர். எல்லா விஷயங்களையும் ஆர அமர யோசித்துப் பார்த்தார் சாங். நான்கிங் சர்க்காரின் நோக்கத்திலேயே அவருக்குச் சந்தேகம் தோன்றி விட்டது. தம்முடைய வீரப் படைகளைப் பிரித்துப் பெரும் பகுதியை வடமேற்குக்கு அனுப்பியது, அவை உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு அழிந்து ஒழியட்டும் என்ற நோக்கத்தோடுதான் இருக்க வேண்டும் என்று யூகித்தார். மற்றும் சில படை களுக்கு ஏராளமான ஆயுதங்களும் நவீன யுத்தக் கருவிகளும் அளித்திருந்தது போல் அவருடைய படைகளுக்குக் கிடைக்கவில்லை. இந்த விஷயங் களோடு, அவர் சீனக் கம்யூனிஸ்டுகளின் சரித்திரத் தையும் வேலைகளையும் ஆதியோடு அந்தமாக ஆராய்ந்து பார்த்தார். அவர்களின் தலைவர்களையும் சந்தித்துப் பேசினுர். கம்யூனிஸ்டுகள் கொள்ளைக் காரர் அல்லர் என்பதும், ஜப்பானை எதிர்க்காமல் சீனுவைப் பலிகொடுத்து வருகிறதே என்ற காரணத் தாலேயே அவர்கள் நான்கிங் அரசாங்கத்தைத்

துவேஷித்து வந்தனர் என்பதும் அவருக்குத் தெளிவாயின. அவர் எல்லா விஷயங்களையும் சியாங்கிடம் விண்ணப்பித்து, ஜப்பானைத் தாக்குவதற்கு உரிய திட்டம் வகுக்கும்படி பன்முறை மன்றாடினார். ஒன்றும் பலிக்கவில்லை. சியாங் ஸியானுக்கு வந்ததும் மற்றும் பல தளகர்த்தர்களும் அவரைக் கண்டு பேசினார்கள். சியாங் அசையவில்லை.

ஜனநாயக நாடுகளில் அரசாங்கத் தலைவர் தவறாக நடந்துவந்தால் அதைக் கண்டித்து வெளிப்படையாகக் குறை கூறுவது மக்களுக்கு இயல்பாக ஏற்பட்ட உரிமையாகும். ஆனால் சீனாவில் வாக்கு சுதந்திரம் ஏற்படவில்லை. பூர்ணமான ஜனநாயகம் ஏற்படு முன்பு அதற்கு ஏற்றபடி ஜனங்களைப் பயிற்சி செய்யவேண்டும் என்று ஸன் யாட்-ஸென் திட்டம் வகுத்திருந்தார். அப்பொழுது 'பயிற்சி' நடந்து வந்ததால் ஜனங்களின் உரிமைகள் பல கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆகவே வாலிபத் தளபதியும் அவருடன் சேர்ந்த மற்றத் தளகர்த்தர்களும் தங்கள் அபிப்பிராயத்தை வற்புறுத்த ஒரு புது வழியைக் கண்டுபிடித்தனர். டிஸம்பர் 11௳ இரவில் அவர்கள் ஒரு முடிவு செய்தனர். சேனாபதியைச் சிறைப்பிடித்து விடவேண்டும் என்பதே அவர்கள் தீர்மானம். சேனாபதியின் உயிருக்கு எவ்வித ஹானியும் ஏற்படாமலிருக்கும்படி சாங் கவனித்துக்கொண்டார். சேனாபதியைக் கொண்டுவந்து சேர்க்கும் பொறுப்பை அவர் தம்முடைய மெய்காப்பாளனான வாலிப வீரன் ஸன் மிங்-சியூ என்பவனிடம் ஒப்படைத்தார்.

மறுநாள் சனிக்கிழமை காலை 6-மணிக்கு கலகப்படை ஒன்று சேனாபதி தங்கியிருந்த ஹோட்டலை வளைந்து கொண்டு சில குண்டுகளைச் சுட்டது. அங்கிருந்த பாதுகாப்பாளர் அதிகமாய் எதிர்க்கவில்லை. சேனாபதி அப்பொழுதுதான் தேகப்பயிற்சி

செய்து முடித்திருந்தார். கலகக்காரர்கள் வேகமாக மாடிப் படிகளில் ஏறிப் பல அறைகளைத் தாண்டிச் சேனபதியின் அறைக்குச் சென்றனர். முன்னணியில் ஸன் மிங்-சியூ சென்றான். அறையில் சேனபதியைக் காணவில்லை! அவர், ஒரு வேலைக்காரனைக் கூட அழைத்துக்கொண்டு, இருளோடு இருளாகப் பின்புறமாக வெளியேறி விட்டார். அங்கிருந்து மதில் சுவரில் ஏறி மறு புறம் குதித்துத் தப்பித்துக் கொண்டார். மதிலின் அருகே பெரிய பள்ளம் இருந்ததால் கீழே குதித்ததில் அவருக்கு மிகுந்த வலி ஏற்பட்டது. சிறிது நேரம் எழுந்திருக்க முடியாமல் அப்படியே கிடந்தார். பிறகு ஒருவாறு சமாளித்துக் கொண்டு, பக்கத்திலிருந்த ஒரு குன்றை நோக்கி நடந்து சென்றார்.

குன்றில் வெகு தூரத்திற்கு அப்பால் ஒரு குகையில் புகுந்து பதுங்கிக்கொண்டார். வாலிப வீரன் ஸன், நாலுபுறமும் தேடிவிட்டு, அவரைக் காணமையால் அந்த மலைக்கே வந்துவிட்டான். அவனுடன் சில சிப்பாய்களும் வந்தனர். கடைசியில் சேனபதியின் வேலைக்காரனைக் கண்டு, அவரும் பக்கத்தில் எங்கோ ஒளிந்திருக்கவேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தார்கள். ஸன் சியாங் இருந்த குகை அருகிலேயே வந்துவிட்டான். சியாங் ஒரு 'கவுன்' மட்டும் அணிந்திருந்தார். காலில் செருப்பில்லை. முள்ளிலும் கல்லிலும் ஓடியதால் பாதங்களிலிருந்து உதிரம் வடிந்துகொண்டிருந்தது. ஸன் அவரைக் கண்டதும் சேனபதிக்குரிய மரியாதையுடன், 'வெய் யுவான் சாங்!' என்று கூறி வணங்கினன். சியாங் தம் முடிவு காலம் நெருங்கி விட்டதோ என்று சந்தேகித்துக் கொண்டிருந்தார்.

'நீங்கள் என் தோழர்களாக இருந்தால், என்னை இப்பொழுதே சுட்டுத் தள்ளி, எல்லாவற்றையும்

முடித்துவிடுங்கள்!' என்று அவர் கடூரமாகக் கூறினார்.

'நாங்கள் சுட மாட்டோம்! ஜப்பானுக்கு எதிராக நம் தேசத்தைத் தலைமை வகித்து நடத்தவே தங்களை வேண்டுகிறோம். அப்பொழுது எங்கள் சேனாபதி என்று தங்களைப் போற்றுவதில் நாங்களே முன்னணியில் நிற்போம்!' என்றான் ஸன்.

பிறகு, சாங் ஸியூ-லியாங்கைப் பார்க்கவேண்டும் என்று சேனாபதி விரும்பினார். அவர் ஊருக்குள் இருந்ததால் அங்கேயே செல்லவேண்டும் என்று ஸன் சொன்னான். கால்கள் சோர்ந்து, உடல் தளர்ந்து, பனியில் விறைத்துக் கொண்டிருந்த சேனாபதியால் மேற்கொண்டு நடக்க முடியவில்லை. அவரை மலையிலிருந்து இறக்குவதற்கு ஒரு நல்ல வாகனம் வேண்டியிருந்தது. ஸன் உடனே சேனாபதி அருகில் சென்று மண்டியிட்டு, தன்னுடைய விசாலமான முதுகில் எழுந்தருளும்படி அவரை வேண்டிக் கொண்டான். அவர், சிறிது நேரம் தயங்கி யோசித்து விட்டு, அவன் முதுகில் ஏறிக்கொண்டார். ஸன் சீனாவின் தவப்புதல்வரைச் சுமந்து கொண்டு அடிவாரத்தை அடைந்தான்.

சேனாபதி நகருக்குள் மிகவும் பந்தோபஸ்தான ஓரிடத்தில் வைக்கப்பட்டார். ஊரின் நிலைமை மோசமாக இருந்தது. எந்த நேரத்திலும் படைகள் கலகம் செய்து அவரை எதிர்த்துக் கிளம்பிவிடக் கூடும். எங்கும் துவேஷம் நிறைந்திருந்தது. சேனாபதியை அவருடைய படைகளின் கையிலிருந்து காப்பதே பெரிய காரியமாக இருந்தது. சாங் ஸியூ-லியாங் எல்லா விஷயங்களையும் தாமே கவனித்து, சேனாபதியைத் தம் சொந்தப் பாதுகாப்பிலேயே வைத்துக்கொண்டார். சீனாவின் லட்சக்கணக்கான படைகளின் அதிபதி, அன்று நண்பகலில் அந்த

வாலிபத் தளகர்த்தரின் கைதியாக வந்து சேர்ந்தார். சேர்ந்ததும் அவர் தம்மை அழைத்து வந்த ஸன்னை மிகவும் பாராட்டி அனுப்பினர்.

சேனபதியைக் கொலை செய்துவிட வேண்டும் என்றால், அதற்கு அவரிடம் துவேஷமுள்ள எத்தனையோ பேர்கள் தயாரா யிருந்தார்கள். ஆனால் சாங் அத்தகைய கோரமான கருத்தை என்றுமே எண்ணியதில்லை. தம்முடைய குருவும், தோழரும், அண்ணனுமாக விளங்கிய சேனபதிக்கு 'ராணுவ பலத்தைக்கொண்டு உபதேசிக்க வேண்டும்' என்பதே அவர் நோக்கம். சியாங் பயமறியாதவர், வளைந்து கொடுக்கமாட்டார். அவரைக் கட்டாயப்படுத்தி வாக்குறுதி வாங்க முடியாது. பின், வாலிபத் தள கர்த்தர் அவரைக் கைதி செய்ததில் என்ன பயன்? இதன்மூலம் தேசத்தைத் தட்டி எழுப்பிவிடலாம் என்றே அவர் கருதினர். நான்கிங் சர்க்காருக்கும் இது ஓர் எச்சரிக்கையாகும் அல்லவா? இந்த முறையிலேயே அவருடைய நடவடிக்கைகள் எல்லாம் இருந்தன என்பது ஸியான் சம்பவம் முழுவதையும் கவனித்தால் புலனாகும். சியாங் கைதியானதும், சாங் தேசத்திற்கு ஓர் அறிக்கை தயாரித்து அதை நான்கிங் சர்க்காரின் மத்திய நிர்வாகக் கமிட்டிக்குத் தந்தி மூலம் அனுப்பி வைத்தார். ஐந்து வருஷங் களுக்கு முன்னால் வடகிழக்கு மாகாணங்களை இழந் ததிலிருந்து சீன அவமானத்தில் ஆழ்ந்துவிட்டதையும், ராணுவத்தையும் பொது ஜனங்களையும் தேசத் தற் காப்புக்காகத் தயாரிக்காமல் அதிகாரிகள் ராஜி பேசிக் கொண்டே இருந்ததையும் அதில் குறிப்பிட்டிருந்தார். மேலும் அவர் எழுதியிருந்ததாவது:

"சேனபதி சியாங், தகுதியற்ற ஆலோசனை யாளரால் சூழப்பட்டு, நம் மகாஜனங்களின் ஆதரவுக்குப் பாத்திரமில்லாமற் போய்விட்டார்.

தேசத்திற்கு அவருடைய கொள்கைகள் செய்துள்ள தீங்குக்கு அவரே குற்றவாளி. சாங் ஸியூ-லியாங் ஆகிய நானும் மற்றவர்களும், கண்ணீர் விட்டுக் கொண்டு, வேறு வழியைக் கைக்கொள்ளுமாறு அவருக்கு யோசனை கூறினோம்; ஆனால் திரும்பத் திரும்ப நாங்கள் ஒதுக்கப்பட்டுக் கண்டிக்கப் பட்டோம்.

'சமீபத்தில் ஸியான் மாணவர்கள் அவர்களுடைய தேசிய விடுதலை இயக்கத்தின் சம்பந்தமாக ஊர்வலமாக வந்தார்கள்; தேசாபிமானமுள்ள இந்தக் குழந்தைகளைக் கொல்லும்படி சேனாபதி சியாங் போலீஸை ஏவிவிட்டார். மனிதருக்கு உரிய மனச் சாட்சியைப் பெற்றுள்ள ஒருவர் இதைச் செய்ய எப்படிச் சகிக்க முடியும்? பல வருஷம் அவர் தோழரா யிருந்த நாங்கள் பேசாமல் உட்கார்ந்து அதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை.

'சேனாபதி சியாங்குக்கு, அவர் உயிருக்குப் பாதுகாப்பு அளிப்பதாக உறுதி சொல்லிவிட்டு, எங்களுடைய கடைசி ஆலோசனையையும் கூறியிருக்கிறோம். அவருடைய சிந்தனையைத் தூண்ட வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

'வடமேற்கிலுள்ள படைவீரரும் பொது ஜனங்களும் ஏகமனதாகக் கீழ்க்கண்ட காரியங்களை நிறைவேற்றவேண்டும் என்று கோருகிறார்கள்:

'1. நான்கிங் அரசாங்கத்தைத் திருத்தி அமைத்து, தேசத்தைக் காப்பாற்றும் பொறுப்பைக் கூட்டாக ஏற்றுக் கொள்ளும்படி எல்லாக் கட்சிகளையும் அதில் அநுமதிக்க வேண்டும்

2. எல்லா வகையான உள்நாட்டுப் போர்களையும் நிறுத்த வேண்டும்.

3. ஷாங்காயில் கைதி செய்த தேசீயத் தலைவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும்.
4. தேசம் முழுவதிலுமுள்ள அரசியல் கைதிகள் எல்லோரையும் விடுதலை செய்யவேண்டும்.
5. ஜனங்களின் தேசீய இயக்கத்தை வளர்க்க வேண்டும்.
6. பொதுக் கூட்டம் கூட்டும் உரிமையை ஜனங்களுக்குப் பாதுகாத்துக் கொடுக்க வேண்டும்.
7. டாக்டர் ஸன் யாட்-ஸென்னின் மரண சாஸனம் அப்படியே நிறைவேற்றப்பட வேண்டும்.
8. தேசீய விடுதலை மகாநாடு ஒன்றை உடனே கூட்டவேண்டும்.'

இவ்வாறு எட்டுப் பிரிவுகளுடைய திட்டத்தை அனுப்பியதுடன், மேற்கொண்டு தாம் நிர்வாகக் கமிட்டியின் உத்தரவை எதிர்பார்த்திருப்பதாகவும் சாங் குறிப்பிட்டிருந்தார். இந்த அறிக்கையையும், பின்னுல் அனுப்பிய செய்திகளையும் நான்கிங் சர்க்கார் வாங்கி வைத்துக்கொண்டு, கிணற்றுள் கல் போட்டது போல், மௌனமாக இருந்துவிட்டது. தேசத்தின் தலைமையான இனிய உயிர் பணயமாக இருந்ததைக் கருதி அவசரமான நடவடிக்கை ஏதாவது எடுக்கவேண்டுமே என்ற சிந்தனையே அதற்கு இல்லாமற் போய்விட்டது. அதன் கருத்தெல்லாம் வேறு விதமாகத் திரும்பியிருந்தது.

சேனுபதியின் ஆலோசனையாளர்களில் டோனல்ட் என்ற ஆஸ்திரேலியர் ஒருவர். அவர் இரண்டு தினங்களுக்குப் பின் ஸியான் வந்து சேர்ந்தார்.

அவரும் சேனபதியோடு துணைக்கு இருக்கும்படி சாங் அநுமதித்தார். ஒவ்வொரு நாளும் அவர் தாம் நேரில் சென்று தளபதிகளுடன் பேசிவந்தார். மற்றும் சில தளகர்த்தர்களும் சேனபதியை அடிக்கடி பார்த்து வந்தனர். இவர்கள் எல்லோரிலும் பிரபல மான கம்யூனிஸ்ட் தலைவர்கள் பேட்டி கண்டது மிக முக்கியமான விஷயம். யே சியென்-யிங், சௌ யென்-லே என்ற இரு கம்யூனிஸ்டு வீரர்களும் சேனபதி யைக் கண்டு பேசினார்கள். யே என்பவர் அவருடன் வாம்போவா ராணுவக் கலாசாலையில் இருந்தவர். சௌ என்பவரைச் சியாங் என்றுமே மறந்திருக்க முடியாது. ஷாங்காயைப் பிடிக்கவேண்டும் என்று 1927-ல் சேனபதி புறப்படு முன்னல், சௌ அங்கே சென்று ஆயிரக் கணக்கான தொழிலாளரை ஒன்று சேர்த்து, வேலைநிறுத்தம் செய்யச் சொல்லி, 5,000 தொழிலாளருக்கு ஆயுதங்கள் கொடுத்து ஒரு படையாக அமைத்து வைத்திருந்தார். அதாவது, சேனபதி வருமுன்பே சௌ அவருக்காக ஷாங்காயை ஜயித்து வைத்திருந்தார் என்றே சொல்லவேண்டும். அதிலிருந்து ஒரு மாதத்திற்கெல்லாம், சேனபதி ஷாங் காய் முதலாளிகளுடன் சேர்ந்து கொண்டு, தமக்கு உதவி செய்த கம்யூனிஸ்டுகளையே வேட்டையாட ஏற்பாடு செய்துவிட்டார். அப்பொழுது சௌ கைதியாகி மரண தண்டனை விதிக்கப்பெற்றிருந்தார். ஆனல், எப்படியோ தப்பி வெளியேறிப் பிழைத்துக் கொண்டார். அவர் மகா தீரர்; அவர் கலந்து கொள்ளாத கம்யூனிஸ்ட் போராட்டமே கிடையாது என்று ஜேம்ஸ் எம். பெர்ட்ராம் என்ற ஆசிரியர் புகழ்ந்திருக்கிறார். அவரைப் பிடித்துக்கொடுப் பவருக்கு 80,000 டாலர் பரிசு வழங்குவதாக நான் கிங் சர்க்கார் விளம்பரம் செய்திருந்தது. அந்த நிலைமையிலேதான் அவர் சேனபதியைச் சந்தித்தார். இந்தத் தலைவர்கள் எல்லோரையும் சியாங் பார்த்துப்

பேசியதால் பெரிய மன மாற்றம் அடைந்திருந்தார் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும், அவருடைய பிடிவாத குணம் அந்த மாற்றத்தை வெளிக்காட்ட விடவில்லை.

சியாங் கைதியான பிறகு கம்யூனிஸ்ட் தலைவர்களுடைய கருத்து எப்படி இருந்தது? அவரை விரைவில் விடுதலை செய்து அனுப்பிவிட வேண்டும் என்பதே அவர்களுடைய ஏகோபித்த அபிப்பிராயம். அதற்காக அவர்கள் வாலிபத் தளகர்த்தரிடம் இடைவிடாமல் வாதாடி வற்புறுத்தி வந்தார்கள். சேனுபதியைக் கைதி செய்ததில் கம்யூனிஸ்டுகளுக்கு யாதொரு சம்பந்தமும் இல்லை என்பது பின்னால் தேசம் முழுவதிலும் தெளிவாகத் தெரிந்திருந்தது. ஆனால் அவர் கைதியானதில் அவர்கள் சந்தோஷப் படாமல் இருந்திருக்க முடியாது.

சிறைப்பட்ட சேனுபதி, ஓய்வு நேரத்தில் விவிலிய நூலைப் படிப்பதும், சிந்தனை செய்வதுமாக இருந்தார். மகோன்னத நிலையிலிருந்து திடீரென்று ஒரு கைதியாக மாறிவிட்டதால், அவர் உறுதியை இழந்துவிடவில்லை. உயிரை அவர் திரணமாகவே மதித்தார். மானம் போனால், அத்துடன் அவர் உயிரும் போய்விடும் என்பதை எல்லோரும் அறிந்திருந்தார்கள். கைதியான முதல் நாளில்கூட அவர் தம்முடைய கம்பீரத்தையும் மிடுக்கையும் விட்டுக் கொடுக்கவில்லை. சாங் ஸியூ-லியாங் முதல் முறை அவரைக் கண்டு பேசவந்த பொழுது, 'சேனுபதி!' என்று அழைத்தாராம். உடனே சியாங், 'நீர் என்னைச் 'சேனுபதி' என்று அழைப்பதால் என் ஆக்கினைக்கு நீர் உட்பட்டவராக ஆகிறீர். இன்று என்னை இரண்டு விதங்களில் நீர் நடத்த முடியும். அவைகளில் ஒன்றைத்தான் கைக்கொள்ள வேண்டும். நான் உம்முடைய மேலதிகாரி என்று நீர் கருதினால்,

உடனே என்னை நீர் லோயாங் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டும்; இல்லாவிட்டால் நீர் கலகக்காரராக ஆவீர். நான் கலகக்காரர் கையில் இருந்தால், உடனே நீர் என்னைக் கொன்றுவிடலாம். இதைத் தவிர வேறு சொல்லவேண்டியது ஒன்றும் இல்லை!" என்று கூறினாராம். இந்த விஷயம் அவர் சிறை யிருந்த பொழுது எழுதிவந்த தினசரிக் குறிப்பில் இருக்கிறது.

சேனாபதியோ சிறையில் இருந்தார்; நான்கிங் அதிகாரிகள் பேசிக்கொண்டே காலங் கழித்து வந்தார்கள். சியாங்கின் சகலரான டாக்டர் குங், மைத்துனரான டி. வி. ஸூங், மனைவியார் ஆகிய சிலரைத் தவிர மற்றோர்கள் அவ்வளவு தீவிரமாகச் சிந்தித்ததாகவே தெரியவில்லை. அவர்கள் உடனே விமானங்களையும் படைகளையும் அனுப்பி ஸியான் நகரையே அழித்துவிடவேண்டும் என்று கொக்கரித்து வந்ததோடு, அதற்கான ஏற்பாடுகளையும் செய்து வந்தார்கள். ஸியான் அழியும் பொழுது சியாங்கும் அழிந்துவிடுவாரே என்பது அவர்களுக்குப் புலப்பட வில்லையா? இந்தப் பிரச்னையினால்தான் ஸியானில் பெருங் கவலை ஏற்பட்டது. நான்கிங் தலைமை அர சாங்கத்தில் பொம்மைகளாக விளங்கிய அதிகாரி களில் பலர் சியாங் ஒழிந்துவிட்டால் நலம் என்றுகூட எண்ணியிருந்திருப்பார்கள். சியாங் இல்லாவிட்டால் முற்காலத்தைப் போலவே மேற்கொண்டும் அதி காரிகள் திருவிளையாடல் புரியலாம் என்ற ஆசை பல ருக்கு இருந்திருக்கும். அதனால்தான், உடனே பழி வாங்கவேண்டும், படையெடுக்கவேண்டும் என்று அவர்கள் துடித்தார்கள் போலிருக்கிறது. ஆனால் மெய்லிங் தேவி மட்டும், சிந்தை தளராமல், மூளை கலங்காமல், நிதானமாக யோசித்து, அவர்களுடைய ஏற்பாட்டை எதிர்த்து வந்தார். அவருடைய எதிர்ப் பையும் மீறி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க



ஸியானில் சியாங் கே — ஷேக்

சிறை மீண்டதும் எடுத்த படம்.

வலமிருந்து ~~மூன்றா~~மவர் சியாங், ஐந்தாமவர் ஸ்ரீமதி சியாங்.

இரண்டாம்

[பக். 211

முற்படு முன், அவரும் சகோதரர் டி. வி. ஸூங்கும் விமான மூலம் ஸியானுக்கு நேரே போய்ச் சேர்ந்தனர்.

கலகத் தலைவர்களோடு அவர்கள் கலந்து பேசினார்கள். வாலிபத் தளபதியும் நான்கிங் நிலைமையை நன்கு உணர்ந்துகொண்டார். அங்கே யுத்த மந்திரி ஹோ யிங்-சின் சேனைகளை ஸியானுக்கு அனுப்புவதிலும், விமானங்களைக் கொண்டு ஸியானைத் தகர்த்தெறிவதிலுமே முனைந்து ஏற்பாடு செய்துவந்தார். அத்துடன் அவர் ஐரோப்பாவிலிருந்த வாங் சிங்-வேய்க்கும் தகவல் கொடுத்து உடனே புறப்பட்டு வர வேண்டினாராம். சேனாபதி மேலும் சில நாள் கைதியாக வைக்கப்பட்டிருந்தால், நான்கிங்கில் ஏதாவது ஒரு ராணுவ சர்வாதிகாரம் அமைக்கப்படும். உள்நாட்டுக் கலகம் கொழுந்துவிட்டு எரியும். ஜப்பான் சீனாவையே விழுங்கிவிட முற்பட்டிருக்கும். இந்த விபரீதப் பலன்களை வாலிபத் தளபதியும் அவர் தோழர்களும் விரும்பவில்லை. சியாங் மனத்தில் ஒரு மாறுதலை மட்டுமே அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆகவே மேற்கொண்டு அவரை வைத்துக்கொண்டிராமல் விடுதலை செய்யத் தீர்மானித்தார்கள்.

டிஸம்பர் 25௳ சாங் ஸியூ-லியாங் தம்முடைய பெரிய விமானத்திலேயே சேனாபதியை ஏற்றிக்கொண்டு லோயாங்கில் கொண்டுபோய்ச் சேர்த்தார். அங்கிருந்து சேனாபதி நான்கிங்குக்கு விமானத்தில் சென்றபொழுது அவரும் கூடவே சென்றார். அங்கு சென்று தம்முடைய நடத்தைக்குச் சேனாபதி என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயார் என்பதை நிரூபிக்கவே அவர் இப்படிச் செய்தார். விடுதலையாகி வந்த சேனாபதிக்குத் தலைநகரில் உன்னதமான வரவேற்பு நடந்தது.

சாங் ஸியூ—லியாங் ராணுவ நீதிஸ்தலத்தில் விசாரிக்கப்பட்டார். பத்து வருஷக் காவல் தண்டனை

விதிக்கப்பட்டது. சேனுபதி அதை ரத்துச்செய்து அவரை மன்னித்துவிட்டார்.

இதன் பின்னர் சியாங் சிறிது காலம் ஓய்வெடுத்துக் கொண்டார். 1937, பெப்ரவரி 15உ முதல் 22உ வரை கோமின்டாங் சபை நான்கிங் நகரில் கூடித் தேசத்திற்கு முக்கியமான சில தீர்மானங்களைச் செய்தது. அக் கூட்டத்தில் சேனுபதி ஸியானில் நடந்த விஷயங்களைக் குறித்து விரிவான ஓர் அறிக்கை சமர்ப்பித்தார். அதில் வாலிபத் தளபதியும் அவருடைய நண்பர்களும் வற்புறுத்திய எட்டுப் பிரிவுள்ள திட்டத்தைப் பற்றியும் விளக்கியிருந்தார். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய நிர்வாகக் கமிட்டி தேசீய ஒற்றுமை சம்பந்தமாக அனுப்பியிருந்த தந்தி ஒன்றும் அக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. கம்யூனிஸ்டுகளையும், அவர்கள் செஞ்சேனையையும், மற்ற வடமேற்குப் படைகளையும் மத்திய அரசாங்கத்துடனும் அதன் சேனையுடனும் ஒன்று சேர்ப்பதற்கு உரிய ஆரம்பத் தீர்மானங்கள் அக்கூட்டத்தில் நிறைவேறின.

பின்னல், பிளவுபட்டுக் கிடந்த படைகள் எல்லாம் ஒற்றுமையும் வலிமையும் பெருகும்படி சீர் திருத்தி அமைக்கப்பட்டன. கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கோமின்டாங்குக்கும் 'ராஜி' ஏற்பட்டது. அகில சீனவும் ஒற்றுமைப்பட்டு, மருந்துக்குக்கூட உள்நாட்டுக் கலகம் என்ற பெயரே இல்லாமல் ஒழிந்தது. கம்யூனிஸ்ட் தலைவர்கள் நான்கிங்குச் சென்று சேனுபதியுடன் அடிக்கடி கலந்து பேசி வந்தார்கள். வடமேற்கில் சிறை வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் எல்லோரும் விடுதலை செய்யப்பட்டனர். மொத்தத்தில் ஜப்பானுக்கு எதிராகச் சீன ஐக்கிய முன்னணி மிகச் சிறப்பாகவும் உறுதியாகவும் அமைந்துவிட்டது. அரசியலிலும் ராணுவக் கொள்கையிலும் எல்லாக் கட்சிகளுக்குள்ளும் நிலையான

ஒற்றுமை ஏற்பட்டது. இந்த நிலையை வர்ணித்துக் கூறுகையில் செள யென்-லே என்ற புகழ்பெற்ற கம்யூனிஸ்ட் தலைவர் அழகான ஓர் உபமானத்தை எடுத்துக் காட்டினார்: 'ஜப்பானுக்கு எதிராகத் தேசப் பாதுகாப்பு யுத்தத்தில் நாங்கள் கலந்துகொள்ளச் சந்தர்ப்பம் இடைத்திருக்கிறது. ஜனநாயகத்தை அடையும் விஷயமாக இப்பொழுதுதான் நோக்கம் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. ஜப்பானியரை எதிர்க்கும் இயக்கத்தைவிட இது அதிகக் கஷ்டமானது. ஆயினும், பொது ஜனங்களிடையிலும், நான்கிங் அரசாங்கத்தினிடையிலும் ஜனநாயக உணர்ச்சி மெதுவாக வளர்ந்து வருகிறது. ஜப்பானியரை எதிர்க்கும் யுத்த முயற்சியையும் ஜனநாயகத்தையும் ஒரு ஸைக்கிளின் இரண்டு சக்கரங்களாகக் கருதவேண்டும்; அவை ஒன்றுக்குப் பின்னால் ஒன்று அமைந்திருக்கும்; ரிக்ஷா வண்டியின் சக்கரங்களைப் போல் இரண்டு பக்கங்களில் இருக்கமாட்டா. ஜப்பானியரை எதிர்க்கும் யுத்த முயற்சி முன்னால் வரும், அதைத் தொடர்ந்து ஜனநாயக இயக்கமும் வரும். முன் சக்கரத்தைப் பின்னுள்ளது முன்னால் தள்ளும். இரண்டு சக்கரங்களும் ஏககாலத்தில் முன்னேறிச் செல்லுகின்றன; ஆனால் ஜப்பானிய எதிர்ப்பு முன் ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது.'

சீன தேசிய அரசாங்கம் என்றும் இல்லாத புது ஒற்றுமையும் வலிமையும் பெற்று வளர்ந்து வந்தது. அதிகாரங்கள் யாவும் நான்கிங் அரசாங்கத்தின் கையில் அமைந்திருந்ததால், அதன் ராணுவ பலம் எவ்வளவு அதிகமாயிருக்கும் என்பதை ஜப்பான் அறிந்து வந்தது: இன்னும் சிறிதுகாலம் சென்றால் சீனா எந்த அந்நிய வல்லரசுக்கும் தலை வணங்காது, கொஞ்சம் கொஞ்சமாகச் சீனப் பிரதேசங்களைப் பிடித்துக்கொண்டு வந்த பழைய முறையை ஜப்பான் மேற்கொண்டு கையாள முடியாது. சீன மத்திய

அரசாங்கத்தின் படைகளை அடக்கி நசுக்கி அழித்தா லொழிய ஜப்பான் இனிமேல் சீனவில் தலை காட்ட முடியாது என்ற நிலைமை ஏற்பட்டது. ஆகவே ஜப்பானிய ராணுவ யதேச்சாதிகாரிகள் சீனவுடன் மகாயுத்தம் ஒன்றை ஆரம்பித்துவிடுவது என்றே தீர்மானித்து விட்டார்கள்.

## XIV

### மகா யுத்தம்

'இன்று சீனர்கள் அடக்க ஒடுக்கத்துடன் இருக்க வில்லை; அவர்கள் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள். சீனவை ஒரு காலத்தில் ஏளனமாக மதித்த தேசங்களின் அரசாங்கங்கள் கோழைகளைப் போலவும் அயோக்கியர்களைப் போலவும் நடந்துகொண்ட சமயத்தில், அவர்கள் பாஸிஸ எதிர்ப்புப் போராட்டத்தில் மலை போன்ற பாரத்தைத் தாங்கியிருக் கிறார்கள். உலக சரித்திரத்தின் மத்தியப் பிரவாகத்தில் சீனர்கள் புகுந்துவிட்டார்கள்; அவர்கள் அந்தச் சரித்திரத் தைப் படைத்தும் வருகிறார்கள்; இந்த விஷயத்தை எல் லோரும் கவனித்துக் கொள்ளவேண்டும் என்று அவர்கள் அறைகூவி அழைக்கிறார்கள். ஜப்பானுக்கு எதிரான யுத்தம் முடிந்து, இப்பொழுது வளர்ந்து வரும் தொழில்களை அடிப் படையாகக் கொண்டு, புதிய உலகத்தில் தன் ஸ்தானத்தை அடைவதற்கு ஒரு புதிய சீன கிளம்பி வந்துகொண்டிருக் கிறது: அதில் சாதாரண ஜனங்களும் ஆவலோடும் ஊக்கத் தோடும் முன்னேறி வருகிறார்கள்.'

— ஆர்தர் கிளைக்

---


**1937**-ஆம் ஆண்டு ஜுலை 7உ ஜப்பானியப் படைகள் பெகிங் நகருக்கு அருகே லூகௌசியோ என்ற இடத்தில் சீனப் படைகளைத் தாக்க ஆரம் பித்ததில் இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்ப

மாயிற்று. 1939-இல் ஹிட்லர் போலந்தின் மீது பாய்வதற்கு முன்பே, மூதன் முதலாக ஜனநாயகப் பாதுகாப்புக்காகப் போரில் இறங்கியது சீன தேசமே யாகும். நான்கு வருஷமாக அது தன்னந்தனியே ஜப்பானை எதிர்த்து வந்தது. ஜனநாயக நாடுகளில் பல, சீனுவுக்கு உதவி செய்ய மறுத்ததோடு, ஜப்பானுக்குப் பல வழிகளில் உதவி செய்தும் வந்தன. பின்னால் 1941-டிசம்பரில்தான் பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளும் சீனுவுடன் சேர்ந்து ஜப்பானை எதிர்த்துப் போர் தொடுக்க முன்வந்தன. சீனு எட்டு வருஷங்களுக்கு மேலாக ஜப்பானை எதிர்த்துத் தாக்கி வந்திருக்கிறது. சீனுவின் சரித்திரமே வியப்பானது; அதிலும் இந்த யுத்தத்தில் அது போராடி வந்த சரித்திரம் விசித்திரத்திலும் விசித்திரமானது.

ஆரம்பத்தில் பல போர்க்களங்களில் சீனர்கள் தோற்றூர்கள். ஏராளமான பிரதேசங்களை அவர்கள் ஜப்பானுக்குப் பறிகொடுத்து விட்டார்கள். முதல் ஆறு மாதங்களில் வட சீனுவிலுள்ள ஐந்து மாகாணங்கள் பகைவர் வசமாயின. ஆயினும் சீனர்கள் சிந்தை தளரவில்லை, எதிர்ப்பை நிறுத்தவில்லை. ஜப்பான் பிடித்துக்கொண்ட பகுதிகளிலும் தங்களுடைய மத்திய சர்க்காரின் ஆட்சி நடைபெறும்படி செய்து வந்தார்கள். அங்கேயும் வரிகள் வாங்கப்பட்டன, நீதி விசாரணை நடைபெற்று வந்தது, தேசியப் பட்டாளங்களுக்கு ஆட்கள் சேர்க்கப்பட்டனர். அங்கெல்லாம் இடைவிடாமல் போராட்டமும் நடந்து வந்தது. தேசிய கொரில்லாப் படைகள் வெஞ்சினத்தோடு நாள்தோறும் ஜப்பானியரைத் தாக்கித் தூங்கவிடாமல் துயர்ப்படுத்தி வந்தன. சுதந்திரச் சீனுவுக்கும் பறிக்கப்பட்ட பிரதேசங்களுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருந்து வந்தது. ஜப்பானிய ஆதிக்கத்திலிருந்த பிரதேசங்களிலிருந்து, அவசியம் நேர்ந்தபோது, லட்சக்கணக்கான மக்கள்

சுதந்திர பூமிக்கு ஓடிப் போய்விட்டார்கள்; வயது வந்த வாலிபர்கள் தப்பிச் சென்று தேசியப் படைகளில் சேர்ந்துவிட்டார்கள்; பெரிய பெரிய ஆலை யந்திரங்களும், ரயில்பாதைகளும், உபயோகமாகும் சகல சாமான்களுமே அப்புறப்படுத்திக் கொண்டு போகப்பட்டன. ஜப்பான் தான் பிடித்த பகுதிகளை நிர்வகித்துப் பயன்படுத்த முடியாமல் தத்தளிக்கும் நிலைமை ஏற்பட்டது. யுத்த ஆரம்பத்தில் வெகு சீக்கிரத்தில் சீனாவை அடித்து விடலாம் என்று ஜப்பான் கருதியதால் கண்ணை மூடிக்கொண்டு போரில் குதித்துவிட்டது. ஆனால் பின்னால், சேற்றில் காலை மாட்டிக்கொண்ட யானை போல், அது முன்னும் போக முடியாமல், பின்னும் போக முடியாமல், தவிக்க வேண்டியதாயிற்று. இதற்குக் காரணம் அதன் வலிமைக் குறைவன்று. அதன் வலிமை என்ன என்பதைப் பஸிபிக் யுத்தரங்கத்தில் அது பிற்காலத்தில் நிரூபித்திருக்கிறது. சீனர்களின் வலிமையும், உறுதியும், ஊக்கமுமே அதைத் திணற வைத்திருக்கின்றன. ஜப்பானின் வெற்றிகள் ஆரம்ப வெற்றிகள். பின்னால் மூன்று வருஷங்களாக அது மேற்கொண்டு முன்னேற முடியாமல் தடுத்து நிறுத்தப்பட்டது.

முற்காலத்தில் எதிரிகள் சீனாவின் வட பகுதி வழியாக வருவார்கள், அல்லது யாங்ட்ஸி, ஹூவாங்-ஹோ, ஸிகியாங் முதலிய நதிகளின் வழியாகக் கப்பல்களில் வருவார்கள். ஜப்பானியர் இந்த இரு வழிகளாலும் வந்ததுடன், மூன்றாவதாகிய ஆகாய மார்க்கமாகவும் வந்தார்கள். வடக்கேயிருந்து வந்த படைகளே வட மாகாணங்கள் ஐந்தைப் பிடித்துக் கொண்டன. கடல் மார்க்கமாக வந்த படைகள் ஆகஸ்டு 13உ யிலிருந்து ஷாங்காய் நகரைத் தாக்கி வந்தன. ஷாங்காய் சீனாவின் பாரிஸ் என்று புகழ்ப்பெற்ற நகர். அங்கு சீனர்களுடைய எதிர்ப்பு




சீனாவை இப்படிச் சிதைக்க எண்ணியது ஜப்பான்

[பக். 217

மிகவும் பலமாக இருந்தது. மூன்று மாதம் பயங்கர மான பெரிய போராட்டங்கள் நடைபெற்ற பிறகே அந்த நகர் வீழ்ந்தது. 1904-1905 வருஷங்களில் ஜப்பான் ரஷ்யாவுடன் போர் செய்ததற்குப் பின்னால் இந்த ஷாங்காய்ப் போரில்தான் அதற்கு மாபெரும் நஷ்டங்கள் ஏற்பட்டன. இதிலிருந்தே சீனாவை ஜயிப்பது எளிதில்லை என்று ஜப்பானுக்குப் பட்டு விட்டது. தன் முழு வல்லமையையும் உபயோகித்து இடைவிடாமல் பல வருஷங்கள் போராட வேண்டி யிருக்கும் என்பதை அது ஓரளவு உணர்ந்து கொண்டது.

டிசம்பர் 7-ஆம் தேதி முதல் நான்கிங் தலைநகரின் அரண்கள் தாக்கப்பட்டன. ஒரு வாரத்தில் நகரம் ஜப்பானியர் கையில் சிக்கிவிட்டது. ஷாங்காயில் சீனர்கள் மட்டுக்கு மிஞ்சிய வீரத்துடன் விடாப் பிடியாக எதிர்த்ததற்குப் பழிவாங்கவேண்டும் என்ற வெறியுடன் ஜப்பானியர் இந்த நகரைத் துவம்சம் செய்தனர். ஒரு மாதகாலம் நகரைக் கொள்ளை யடித்தனர், ஸ்திரீகளைக் கற்பழித்தனர், பொது ஜனங்களை ஆயிரக்கணக்கில் படுகொலை செய்தனர். அவர்களுடைய கோரமான கொடிய செயல்களைக் கேட்டு உலகமே திடுக்கிட்டது. நான்கிங் வீழ்ச்சி யோடு சீனாவே வீழ்ந்துவிடும் என்று கருதப்பட்டது. ஜப்பானியர் சமாதான நிபந்தனைகளை வெளியிட்டனர். ஆனால் வீரம் மிகுந்த சேனாபதி சியாங் கே-ஷேக் கேவலமான அந்த நிபந்தனைகளை ஏறிட்டுக்கூடப் பாராமல், மேற்கொண்டு போரை நடத்த முற் பட்டார்.

சீனா பணிய மறுத்துவிட்டதால், ஜப்பான் ஆங்காங்கே கிடைத்த சில துரோகிகளை மட்டும் பொறுக்கிக்கொண்டு நான்கிங்கிலும் பெய்ப்பிங்கிலும் இரண்டு பொம்மை அரசாங்கங்களை நிறுவிவைத்தது. பின்னர் கடற்கரை ஓரமாகவுள்ள மற்றப் பிரதேசங்

களையும் அது ஒவ்வொன்ருகக் கைப்பற்றி வந்தது. 1938, அக்டோபருக்குள் சீனுவின் பிரதானத் துறை முகங்கள் பலவும் அதன் வசமாயின. பெய்ப்பிங், டீன்ட்ஸின், ஷாங்காய், நான்கிங், காண்டன், ஹாங்கோ ஆகிய ஆறு முக்கிய நகரங்களும் அதனிடம் சிக்கியிருந்தன. நாட்டின் ரயில் பாதைகளில் முக்கால் பகுதிக்கு மேலே எதிரி கைக்குப் போய் விட்டது. பெரிய யந்திரசாலைகளும் தொழிற்சாலைகளும் அதே கதியை அடைந்தன.

இந்த நிலைமை ஐரோப்பாவில் தொழில் மிகுந்த நாடு எதிலாகிலும் ஏற்பட்டிருந்தால், அந்நாடு அதோ கதியாகித் தீர்ந்துபோயிருக்கும். ஆனல் மிகப் பெரிய நாடாகிய சீனு இதைச் சாமர்த்தியமாகச் சமாளித்துக் கொண்டு, போரை நிறுத்தாமல் நடத்திவந்தது. சேனுபதி சியாங் பல வருஷங்கள் இடைவிடாமல் யுத்தம் நடத்த வேண்டியிருக்கும் என்பதை நன்ருக அறிந்திருந்தார். ஐரோப்பா யுத்தம் முடிந்து மேல் நாட்டு வல்லரசுகள் உதவிக்கு வரக்கூடும் என்று நம்பிக்கை அவருக்கு இருந்த போதிலும், சீனு தன் பலத்தையே நம்பி நீண்ட காலம் போராடவேண்டும் என்று அவர் தீர்மானித்தார். அதன்படி அரசாங்கமும் ஏற்பாடுகள் செய்து வந்தது.

நான்கிங், ஹாங்கோ நகர்கள் வீழ்ந்துவிட்ட பிறகு, யாங்ட்ஸி நதிக்கரையில் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் தள்ளியிருந்த சுங்கிங் அரசாங்கத் தலைநகராக அமைக்கப்பெற்றது. அங்கே இருந்து கொண்டுதான் சீனத் தலைவர் யுத்தத்தை நடத்திவந்தார். சுங்கிங் நகர் ஷெக்வான் மாகாணத்தில் இருக்கிறது. யாங்ட்ஸி நதி நகரின் நடுவே ஓடுகிறது. நதியின் இரு கரை களிலும் குன்றுகள் நிறைந்திருக்கின்றன. அவை களின் மேலே வீடுகளும், அரசாங்கக் காரியாலயங் களும் அமைந்திருக்கின்றன. சுங்கிங் சீனுவின் புராதன நாகரிகத்திற்கும் நவநாகரிகத்திற்கும் நிலைக்

களாக விளங்குகிறது. முக்கியமான அதிகாரிகள் பலரும் அங்கேயே வசிப்பதாலும், ஜப்பானிய ஆதிக்கத்திலிருந்த பிரதேசங்களிலிருந்து மாணவர்களும் உபாத்தியாயர்களும் அங்கு வந்து குடியிருப்பதாலும் அந்நகரில் நவீன முறையில் பல வசதிகளும் அமைந்திருக்கின்றன. அங்கே ஒரு சர்வ கலாசாலையும் உண்டு. அது யுத்த காலத் தலைநகராக விளங்கியதால், அடிக்கடி ஜப்பானிய விமானங்கள் அதன்மீது குண்டுகள் வீசுவது வழக்கம். விமானத் தாக்குதலின் போது ஜனங்களும் அதிகாரிகளும் பெரிய மலைக் குகைகளில் புகுந்து தங்கியிருப்பது வழக்கம். பகை விமானங்கள் ஜப்பானியப் பிரதேசங்களை விட்டுக் கிளம்பியவுடனேயே சுங்கிங் நகருக்குத் தகவல் தெரிவதற்காக நவீன யந்திர வசதிகள் எல்லாம் அமைக்கப்பட்டிருந்தன. அந்த விமானங்கள் எந்தத் திசையில் எந்த நகரங்களை நோக்கிச் சென்றன என்பதை அறிய சுங்கிங் ரஸ்தாக்களில் அமைக்கப்பட்டிருந்த சில கருவிகளைப் பார்த்தாலே போதும். இந் நகரம் மலைப்பிராந்தியத்தில் இருந்ததால், யுத்த முடிவுவரை குண்டு மழைகளுக்குத் தப்பிப் பிழைத்து விட்டது.

சீனா-ஜப்பான் போரில் அநேக முனைகளில் சீனர்கள் மகத்தான வெற்றிகளையும் பெற்றிருக்கிறார்கள். 1937, செப்டம்பர் மாதத்தில் ஷான்ஸி மாகாணத்தில் மஞ்சள் நதியருகே வந்து கொண்டிருந்த ஜப்பானியப் படைகளைச் சீனாவின் எட்டாவது படை எதிர்த்து வெற்றி பெற்றது. பின்னால் நடந்த போர்களுக்குச் சாங்ஷா யுத்தம் ஓர் எடுத்துக் காட்டாகும். சாங்ஷாவில் நான்கு முறை யுத்தம் நடந்தது: முதல் யுத்தம் 1939-லும், இரண்டாவது 1941-லும், மூன்றாவது 1942-லும், நான்காவது 1944-லும் நடந்தன. இரண்டாவது யுத்தம் செப்டம்பர் 17௳ ஆரம்பித்து 30௳ வரை

நடந்தது. ஜப்பானியப் படைகளில் 1,20,000 வீரர்கள் இருந்தனர். எனினும் அவர்கள் முறியடித்து விரட்டப் பட்டார்கள். மூன்றுவது யுத்தம் 1942, ஜனவரியில் முடிந்தது. ஜப்பான் பஸிபிக் யுத்தத்தை ஆரம்பித்து அப்பொழுது இரண்டு வாரங்கள் ஆகியிருந்தன. லட்சம் ஜப்பானியப் படை வீரர்கள் சாங்ஷாவைத் தாக்க அனுப்பப்பட்டனர். சீனப் படைவீரர்கள் அவர்களை வளைந்துகொண்டு தாக்கினர். ஜனவரி 4உ எதிரிகள் தோற்றுப் பின்வாங்கி ஓடினார்கள். 57,000 ஜப்பானியர் அந்த யுத்தத்தில் மடிந்தார்கள், 2,300 பேர் கைதி செய்யப்பட்டனர். தோற்று ஓடியவர்களையும் சீனப் படைகள் வேட்டையாடிக் கொண்டே சென்றன. சாங்ஷாவில் சீனர்கள் அடைந்த வெற்றி மிக முக்கியமானது. அதுவரை பஸிபிக்கில் ஜப்பான் ஒவ்வொரு நாடாக ஜயித்துக்கொண்டு வந்திருந்தது. நேச தேசங்களின் கையில் அது முதல் முறையாக அப்பொழுதுதான் தோல்வியுற்றது. சாங்ஷாவைச் சீனுவின் ஸ்டாலின்கிராட் என்றே சொல்லலாம். 1944-ஆம் வருஷம் இந்நகரத்தை மீண்டும் ஜப்பானியர் பிடித்துக் கொண்டனர். பெரிய தேசமானதால் சீனுவின் பல பாகங்களிலும் அங்குலம் அங்குலமாகப் போரிட்டுக் கொண்டுதான் ஜப்பான் முன்னேற முடிந்தது. இந்த மகாயுத்தத்தின் விரிவான சரித்திரம் முழுதும் வெளிவரும் காலத்தில் அது உலகத்தை ஸ்தம்பிக்கச் செய்யும்படி இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

1941-ஆம் வருடம் டிஸம்பர் 7உ ஞாயிற்றுக் கிழமையன்று காலையில் ஜப்பான் பஸிபிக் தீவுகளைத் தாக்க ஆரம்பித்ததிலிருந்து சீனுவின் போர் உலகப் போரோடு ஒன்று சேர்ந்துவிட்டது. அதுவரை அமெரிக்காவும் இங்கிலாந்தும் சீனுவுக்கு உதவி செய்யாதிருந்த பிழையை உணர ஆரம்பித்தன.

ஜெர்மனி ரஷ்யாவில் மாட்டிக்கொண்டு, வெளியேற முடியாமலும், வெற்றிபெற முடியாமலும் தவித்துக் கொண்டிருந்தது. அது போலவே கிழக்கே ஜப்பான் சீனவில் மாட்டிக்கொண்டது. உலகத்தில் முக்கிய மான பாஸிஸ்ட் வல்லரசுகளாக இருந்த ஜெர்மனி யையும் ஜப்பானையும் அடக்குவதற்கு ஜனநாயக நாடுகள் ஒன்று சேர்ந்து வேலை செய்திருந்தால் உலகப் போரின் உக்கிரம் குறைந்திருக்கும். சீனவில் ஜப்பான் சிக்கிக்கொண்டிருந்த போதிலும், திடீரென்று அது வேறு வெற்றிகளை நோக்கிக் கிளம்பிவிட்டது.

முதலில் ஜப்பான் ஹவாய்த் தீவில் பேர்ல் ஹார் பரைத் தாக்கி அங்கிருந்த அமெரிக்க யுத்தக் கப்பல்களை நீருள் ஆழ்த்திவிட்டது. தரையிலிருந்த விமானங்களை அழித்துவிட்டது. அமெரிக்காவுக்குச் சொந்தமான மிட்வே, வேக், குவாம் முதலிய தீவுகளும் தாக்கப்பட்டன. பிரெஞ்சு இந்தோ-சீன ஜப்பானின் ஆதிக்கத்திற்கு வந்தது. பிரான்ஸை விடப் பெரிய தேசமான தாய்லாந்து (ஸயாம்) ஐந்தரை மணி நேரத்தில் ஜப்பானின் கைக்கு வந்தது. (அங்கேயிருந்த 1,40,00,000—ஜனங்களில் 10—லட்சம் பேர் சீனர்கள்.) அடுத்தாற்போல், 500 மைல் நீள முள்ள மலேயாவை ஜப்பான் பற்றிக்கொண்டது. ஒரு வாரம் போர் செய்தபின், அது சிங்கப்பூரையும் பிடித்துக்கொண்டு, அதன் பெயரை ஷோனன் என்று மாற்றி வைத்தது. சிங்கப்பூர் ஆறு கோடிப் பவுன் செலவில் தயாரான கீழ்த்திசைக் கோட்டை என்று சொல்லப்பட்டு வந்தும், அது ஒரு வாரத் திற்கு மேல் ஜப்பானை எதிர்த்து நிற்க முடியவில்லை. பிறகு பர்மாவும், பிலிப்பைன் தீவும், கிழக்கிந்தியத் தீவுகளும் வரிசையாக ஜப்பானிடம் சரணடைந்தன.

ஜப்பானின் இந்தப் புதிய வெற்றிகளால் சீனவுக்கு இடையூறு அதிகமாயிற்று. பர்மாவி

விருந்து சீனவுக்கு ஒரு பெரிய ரஸ்தா அமைக்கப்பட்டு, யுத்த காலத்தில் அதன் வழியாக இந்தியாவிலிருந்து சாமான்கள் போய்க்கொண்டிருந்தன. பர்மா ஜப்பான் கைக்கு வந்ததும் இந்த ரஸ்தாவும் அடைக்கப்பட்டுவிட்டது.

பஸிபிக் பிரதேசத்தில் ஜப்பான் ஆக்கிரமித்துப் பிடித்துக்கொண்ட பிரதேசங்களின் விஸ்தீரணம் 15-லட்சம் சதுர மைல். இவைகளிலிருந்த ஜனத்தொகை 12-கோடி. மிட்வே தீவிலிருந்து இந்தியா வரையும், ஸைபீரியாவிலிருந்து ஆஸ்திரேலியா வரையும் பரந்திருந்த தீவுகளும் கடற்கரைகளும் ஜப்பான் வசமாகிவிட்டன. ஆஸ்திரேலியா மீதும் படையெடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அந்தச் சமயத்தில் அமெரிக்க விமானங்களும் ஆஸ்திரேலிய விமானங்களும் போரில் ஈடுபட்டு ஜப்பானின் பேராசையை நிறுத்தி வைத்தன. அமெரிக்க யுத்தக் கப்பல்களும் இடைவிடாது போராட முன்வந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக ஜப்பானை எதிர்ப்பதற்கு நேச நாடுகள் ஐக்கிய முன்னணி ஒன்றையும் அமைத்துக் கொண்டன. 1942, ஜனவரி 2உ சீன, அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, கானடா, ஆஸ்திரேலியா, நியூ ஜீலந்து முதலிய 26-நேச நாடுகள் ஜப்பானை எதிர்த்து ஒழிக்கும் போரில் ஒன்று சேர்ந்து உடன்படிக்கை செய்துகொண்டன. அதுவரை தனியே எதிர்த்து நின்ற சீனவுக்கு அளவற்ற பக்கபலம் சேர்ந்துவிட்டது. மார்ச் 19உ தளபதி மக் ஆர்தர் நேசப் படைகள் அனைத்திற்கும் சேனபதியாக நியமிக்கப் பெற்றார். ஒரே தலைமையில் அமெரிக்கர், சீனர், ஆஸ்திரேலியர், இந்தியர் முதலிய யாவரும் ஐக்கியப்பட்டுப் போரிடச் சந்தர்ப்பம் வாய்த்தது.

கடைசியாக 1942, நவம்பர் மாத மத்தியில் ஜப்பானின் ஆதிக்கத்திலிருந்த குடால்கனல் தீவை

அமெரிக்கர் தாக்க ஆரம்பித்தனர். அதிலிருந்தே கீழ்த்திசைப் போரின் கதியே மாற ஆரம்பித்து விட்டது. மறுவருஷம் பெப்ரவரி மாதம் 9உ ஜப்பானியர் அத்தீவைக் காலி செய்துவிட்டதாக அறிவித்தனர். அடுத்த மாத ஆரம்பத்தில் நேச விமானங்கள் 10 ஜப்பானிய யுத்தக் கப்பல்களையும், 12 வர்த்தகக் கப்பல்களையும், 63 விமானங்களையும், 15,000 போர் வீரர்களையும் பிஸ்மார்க் கடலில் நடந்த போரில் நாசப்படுத்தின. மார்ச் 10உ சீனுவிலிருந்த அமெரிக்கப் படைகள் தளபதி சென்னுல்டின் தலைமையில் அணிவகுத்து நிறுத்தப்பட்டன.

1943-இல் பஸிபிக் தீவுகளில் ரஸ்ஸல் தீவுகளும், அமெரிக்காவின் வடமேற்கிலுள்ள அட்டு, கிஸ்கா தீவுகளும் நேசவசமாயின. அந்த மாதத்திலேயே ஆஸ்திரேலிய தளங்களிலிருந்து அமெரிக்க விமானங்கள் 2,500 மைல் பறந்து சென்று கிழக்குப் போர்னியோவில் அமைந்திருந்த ஜப்பானிய எண்ணெய் நிலையங்களின்மீது குண்டுகள் வீசின. அவ்வருஷக் கடைசியில் மார்ஷல் தீவுகளில் மிகுந்த ராணுவ முஸ்தீபுகளுடன் விளங்கியவைகளைக் கப்பல்களில் கொண்டு செல்லப்பட்ட அமெரிக்க விமானங்கள் தாக்கிவந்தன.

1943-ஆம் வருஷத்திய முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்று கெய்ரோவில் கூடிய மூவர் மகாநாடு. இம் மகாநாடு நவம்பர் 22-முதல் 26-வரை நடந்தது. ஜனாதிபதி ரூஸ்வெல்ட், பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில், சீனச் சேனாபதி சியாங் கே-ஷேக் ஆகிய மூவரும் சந்தித்து, விவாதித்து, ராணுவ நடவடிக்கைகள் பற்றியும், ஜப்பானை நடத்த வேண்டிய முறை பற்றியும் முடிவு செய்து ஓர் அறிக்கை வெளியிட்டனர். 1914-ஆம் வருஷத்து முதல் உலக மகாயுத்தத்திற்குப் பிறகு ஜப்பான் பஸிபிக் பிராந்தியத்தில் அபகரித்துக் கொண்ட சகல தீவுகளையும் பறித்து விடவேண்டும்

என்றும், சீனாவிலிருந்து அது பறித்த மஞ்சூரியா, போர்மோஸா முதலிய எல்லாப் பிரதேசங்களும் மீண்டும் சீனக் குடியரசைச் சேரவேண்டும் என்றும், கொரியா நாடு நாளடைவில் சுதந்திரம் பெற வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருந்தது. இதன்படி ஜப்பான், ஏகாதிபத்திய வெறியை அடக்கிக்கொண்டு, தன் பூர்வ நிலையில் ஒடுங்கிக் கிடக்கவேண்டும் என்பதே பஸிபிக் போரின் லட்சியம் என்று தெளிவாக உலகத்திற்கு அறிவிக்கப் பட்டது.

பர்மாவில் ஜப்பானியர் ஆதிக்கம் ஏற்பட்டதால் நேச நாடுகளுக்குப் பல விதத்திலும் இடையூறுகள் நேர்ந்தன. அந்நாட்டின் வழியாகச் சீனாவுக்கு போர்க் கருவிகளும், உணவு முதலிய பொருள்களும் கொண்டு செல்லும் வழியான பர்மா ரஸ்தா அடைக்கப் பட்டது. பர்மாவின் வடபகுதி வழியாக இந்தியாவை நோக்கியும் ஜப்பானியப் படைகள் வருவதற்கு வசதி ஏற்பட்டது. ஜெர்மன் படைகள் இந்தியாவின் வடமேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வரக்கூடும் என்றும், மேற்கு நோக்கிச் சென்று அவைகளைச் சந்திக்கலாம் என்றும் ஜப்பானியர் கருதியிருந்தனர். ஆனால் இரண்டும் நடைபெறாமல் தடுக்கப்பட்டன.

இந்தியாவுக்கு வந்த ஜப்பானியப் படைகள் 1944, மார்ச் 22உ பர்மாவிலிருந்து இம்பால் நகரை நோக்கி வந்தன. அம்மாதக் கடைசியில் மணிபுரி சமஸ்தான வெளியில் ஏராளமான ஜப்பானி யத் துருப்புகள் வந்து நிறைந்தன. பிரிட்டிஷ் துருப்பு களும் இந்தியத் துருப்புகளும் எதிர்த்துப் போராடியதில், ஜூன் 20உ அஸ்ஸாம் எல்லையி லிருந்த சகல ஜப்பானியப் படைகளும் வெளியேறி விட்டன. பின்னரும் படையெடுத்து வந்த ஜப்பானியர் அக்டோபர் மாதம் 11உ இரண்டாம் முறையாக

இந்தியாவின் வடகிழக்கு எல்லையிலிருந்து விரட்டப் பட்டனர்.

இந்தியா வேறு பல வழிகளிலும் ஜப்பானை முறி யடிக்க நேச நாடுகளுக்கு உதவிபுரிந்து வந்தது. ஐரோப்பிய நேச நாடுகளுக்கு அமெரிக்கா பெரிய தொரு பண்டகசாலையாக விளங்கியதுபோல், பஸிபிக் போரில் ஈடுபட்ட நேச நாடுகளுக்கு இந்தியா விளங்கி வந்தது. நேசத் துருப்புகளுக்கு இந்நாடு சகல பொருள்களையும் கொடுத்துக் காத்துவந்ததோடு, இங்கே தங்கிப் போரை நடத்தவும் வசதியளித்தது. பர்மாவிலும் சீனாவிலும் போர் முனைகளில் யுத்தம் செய்துகொண்டிருந்த துருப்புகளுக்கு உணவும் தளவாடங்களும் இங்கிருந்து இடையறாமல் அனுப்பப் பட்டன.

பர்மாவிலும் பஸிபிக் தீவுகளிலும் 1944-இல் ஜப்பானியர் தற்காப்புக்காகப் போரிடும்படி நேர்ந் தாலும், சீனாவில் மட்டும் அவர்கள் சில சமயங்களில் மிக மூர்க்கமாகத் தாக்கிவந்தார்கள். ஜூலை முதல் தேதியிலிருந்து காண்டன் பகுதியிலிருந்து வட திசையில் படையெடுத்தார்கள். ஆகஸ்ட் 8-ல ஹூனான் மாகாணத்திலுள்ள ஹெங்யாங் அவர்கள் கைக்குப் போய்விட்டது. மத்திய சீனாவில் அமெரிக்க விமான தளமாக விளங்கிய லிங்லிங் அடுத்த மாதம் எதிரிகள் வசமாயிற்று. அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் பூகியென், ஹூனான், குவாங்ஸி, குவாங்டுங் ஆகிய நான்கு மாகாணங்களிலும் பிரமாதமான போர்கள் நடந்து வந்தன. கிழக்குக் கரையிலுள்ள பூசௌ நகரத்தையும் பகைவர் பிடித்துக் கொண்டனர்.

இம்பாலிலிருந்து ஜப்பானியர் விரட்டப்பட்ட பிறகு, பர்மாவில் அமெரிக்கப் படைகளும், சீன, இந்திய, பிரிட்டிஷ் படைகளும் படிப்படியாக முன்

னேறச் சந்தர்ப்பங்கள் வாய்த்தன. பர்மாவுக்குள் புகுவதற்கு வேண்டிய பாதைகள் சீர்திருத்தி அமைக்கப்பட்டன. விமானங்களின் மூலமாகவும் நேசப் படைகள் கொண்டு சேர்க்கப்பட்டன. மே மாதம் 17உ முதல் முற்றுகையிடப்பட்டு வந்த மிட்கியினு ஆகஸ்ட் 4உ அவைகளால் கைப்பற்றப்பட்டது. பின்னர் இந்தியத் துருப்புகள் வடமேற்குப் பர்மாவி லுள்ள டிடிம்மைப் பிடித்தன. சீனத் துருப்புகள் பாமோவைக் கைப்பற்றின.

பஸிபிக் கடலில் பல தீவுகளிலும் அமெரிக்க யுத்தக் கப்பல்கள் பீரங்கிப் பிரயோகம் செய்தும், விமானங்கள் குண்டுகள் வீசியும் வந்தன. ஒவ்வொரு தீவாக அமெரிக்கர் வசமாகி வந்தது. ஜப்பானிய யுத்தக் கப்பல்கள் பல சேதப்படுத்தப்பட்டதால் அதன் கடற்படையே அநேகமாகச் சீர்குலைந்து நின்றது. 1945 மத்தியில் பிலிப்பைன் தீவுகளைச் சுற்றிக் கடுமையான போர் நடந்தது. ஸெய்பான் குவாம் முதலிய தீவுகளும் மீட்கப்பட்டன. நேசக் கப்பல்கள் ஜாவா, சுமத்திரா, அந்தமான், நிகோபார் தீவுகளிலும் பீரங்கிப் பிரயோகம் செய்தன. சீனக் கரை யருகேயுள்ள போர்மோஸாவை அமெரிக்கர் தாக்கியதில் மட்டும் ஜப்பானியர் 396 விமானங்களை யும் 100 கப்பல்களையும் பலிகொடுக்க நேர்ந்தது. 1942-இல் ஜப்பானியரிடம் சிக்கிய சிங்கப்பூர் முதல் முறையாக நவம்பர் 5உ நேச விமானங்களால் தாக்கப்பட்டது. ஜப்பானியத் தலைநகரான டோகியோவும் அம்மாத இறுதியில் மூன்று முறை அமெரிக்க ராக்ஷச விமானங்களால் தாக்கப்பட்டது.

1945—ஆம்ஆண்டு முதல் மாதத்திலேயே சீனாவுக்குச் செல்லும் பர்மா ரஸ்தா திறக்கப்பட்டுவிட்டது. இந்தியத் துருப்புகளும், அமெரிக்க, பிரிட்டிஷ் துருப்புகளும் லிடோ ரஸ்தாவைச் சீர்திருத்தி அமைத்து

அதைப் பர்மா ரஸ்தாவோடு இணைத்துவைத்தன. எனவே பர்மா வழியாகச் சீனுவுக்கு ஏராளமான பொருள்களை மீண்டும் அனுப்ப முடிந்தது. பர்மாவில் நடந்த போராட்டங்களில் அக்யாப் ஜனவரி 5-உயிலும், மாண்டலே மார்ச் 20-உயிலும் பிடிக்கப்பட்டன. அந்நாட்டுப் பெரிய எண்ணெய்க் கிணறுகளும் நேசப் படைகளின் வசமாயின. மேமீ 4-உ நாட்டின் தலைநகரான ரங்கூனும் ஜப்பானியரிடமிருந்து மீட்கப்பட்டது.

அமெரிக்கப் படைகள் பிலிப்பைன் தீவுகளைச் சேர்ந்த லூஸானையும் வேறு சில தீவுகளையும் பிடித்துக் கொண்டன. பெப்ரவரி மீ 4-உ பிலிப்பைனின் தலைநகரான மணிலாவிலும் அவைகள் இறங்கி, சுமார் ஒரு மாத காலத்தில் அங்கிருந்த ஜப்பானியர் அனைவரையும் விரட்டி யடித்தன. ஜப்பானியத் தாயகமான தீவுகளுக்கு 375 மைல்களுக்குத் தெற்கேயுள்ள பெரிய தீவான ஆகினுவா மீது அமெரிக்கர் படையெடுத்து, 82 நாள் நீண்ட போராட்டத்திற்குப் பிறகு ஜூன் 21-உ அதில் ஆதிக்கம் பெற்றனர். போரில் 1, 01, 853 ஜப்பானியர் பலியாயினர் என்றும், 9, 498 பேர் கைதியாயினர் என்றும், அமெரிக்கரில் இறந்தோர் 1, 987 என்றும், காயமடைந்தோர் 34, 422 என்றும் அமெரிக்கக் கடற்படைச் சேனுபதி அட்மிரல் நிமிட்ஸ் அறிவித்திருக்கிருர்.

இடையில் ஜப்பானுடைய மாபெரும் யுத்தக் கப்பலான யாமாடோ அமெரிக்க விமானங்களால் மூழ்கடிக்கப்பட்டது. நாளடைவில் ஜப்பானியக் கடற்படையே முடமாகிவிட்டது; பற்பல தீவுகளைப் பாதுகாப்பதற்கும், ஜப்பானுக்கு வரவேண்டிய உணவுப் பொருள்கள் தளவாடங்களைக் கொண்டு சேர்ப்பதற்கும் அதற்கு வலிமையில்லாமற் போயிற்று. அமெரிக்க விமானங்களும், யுத்தக் கப்பல்களும், நீர்

மூழ்கிக் கப்பல்களும் அதற்கு ஓய்வொழிவு இல்லாமற் செய்து வந்தன. நாளுக்கு நாள் ஜப்பானைச் சுற்றிலும் முற்றுகை வலுத்து வந்தது. 500, 600 என்று அமெரிக்க ராக்ஷச விமானங்கள் ஜப்பானின் மீது பறந்து சென்று குண்டு மழை பொழிந்து வந்தன. ஜுலை 5-உயோடு பிலிப்பைன் தீவுகள் யாவும் நேச நாடுகள் வசமாகிவிட்டன என்று சேனாபதி மக் ஆர்தர் அறிவித்தார். இதன் பின்னர் அமெரிக்க யுத்தக் கப்பல்கள் நேரடியாக ஜப்பானின் முக்கியத் துறைமுகங்களைத் தாக்க ஆரம்பித்தன. ஆகஸ்ட் 2-உ சரித்திரத்திலேயே முதன் முறையாக 882 ராக்ஷச விமானங்கள் ஜப்பான் மீது குண்டுகள் வீசின.

இவ்வருஷத்தில் சீனாவில் போர் ஒரே நிலையாக இருக்கவில்லை. மே 11-உ சீனப் படைகள் பூசௌ நகரில் பிரவேசித்து ஒரு வாரத்தில் அதை விடுதலை செய்தன. அடுத்த மாதம் 2-உ நான்கிங் நகரம் பிடிக்கப்பட்டது. இடையில் ஏப்ரல் மாத இறுதியில் சியாங் கே-ஷேக் தாம் வகித்துவந்த சீனப் பிரதம மந்திரி ஸ்தானத்தை ராஜிநாமா செய்து, சேனாபதிப் பதவியையும், அரசாங்கத் தலைமைப் பதவியையும் மட்டும் வைத்துக்கொண்டார். டாக்டர் டி. வி. ஸூங் பிரதம மந்திரியாக நியமிக்கப் பெற்றார்.

ஜப்பானில் நெருக்கடி அதிகரித்து வந்ததால் பழைய மந்திரி சபை மாற்றி யமைக்கப்பட்டது. ஸுஜூகி புதிய பிரதமராக வந்தார். பின்னால் இவருடைய மந்திரி சபை சர்வாதிகாரம் வகித் திருந்தது. ரஷ்யா ஜப்பானுடன் செய்துகொண் டிருந்த நடுநிலைமை ஒப்பந்தத்தை ரத்துச் செய்தது. சர்வாதிகார ஆட்சி முறைக்கு உட்பட்டிருக்கும் ஸ்பெயின்கூட ஜப்பானுடைய உறவை அறுத்துக் கொண்டது.

ஏப்ரல் மீ 12-உ எதிர்பாராத நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் திடீரென்று மரண மடைந்தார். ஆயினும் அவருக்குப் பின்னால் பதவிக்கு வந்த ஜனாதிபதி ட்ரூமன் பூரண வெற்றி ஏற்படும் வரை ஜப்பானை எதிர்த்துப் போர் நடந்தே தீரும் என்பதை உடனேயே அறிவித்து விட்டார். பின்னால் உலக சமாதானப் பாதுகாப்பை நோக்க மாகக் கொண்டு அமெரிக்காவில் ஸான் பிரான் ஸிஸ்கோ நகரில் நேச நாடுகளின் மகாநாடு ஏப்ரல் 25உ கூடியது.

ஜெர்மனி மே-மீ 8உ நேச நாடுகளிடம் சரணடைந்து விட்டது. பிரிட்டனில் நடந்த பார்லி மென்டுத் தேர்தலில் தொழிற் கட்சியினர் அபரி மிதமான வெற்றி பெற்று, ஸ்ரீ அட்லி பிரதம மந்திரியாக வந்தார். அவரும், அமெரிக்க ஜனாதி பதியும், ஜெர்மனியில் பாட்ஸ்டாம் நகரில் சந்தித்துப் பேசினர். அவர்களும் சேனாபதி சியாங் கே-ஷேக்கும் சேர்ந்து கையொப்பமிட்டு ஜப்பானுக்கு முடிவான எச்சரிக்கை விடுத்தனர். நிபந்தனையின்றி அது உடனே சரணடைந்து விடவேண்டும் என்றும், தவறினால் நாடு முழுதுமே நாசமாக்கப்படும் என்றும் அவர்களுடைய அறிக்கை விளக்க மாக்கிவிட்டது. ஆயினும் ஜப்பான் பணிய மறுத்தது.

இதன் பிறகு ஓர் அமெரிக்க விமானம் ஆகஸ்ட் 6-உ யன்று பரமாணுக் குண்டு ஒன்றை ஜப்பானின் பிரதான நகரங்களில் ஒன்றான ஹிரோஷிமா மீது வீசியது. இந்தக் குண்டின் சக்தியைப்பற்றி உலகமே வியப்புற்று நிற்கிறது. ஒரு குண்டு ஒரு நகரத்தையே அநேகமாக அழித்துவிடக் கூடியதாம்! ஆயிரம் ராக்ஷச விமானங்களிலிருந்து வீசும் குண்டுகள் செய்யக்கூடிய நாசத்தை இந்த ஒரு குண்டே செய்து விடுகிறது. மனித அறிவு நாச வேலையில் உச்ச

நிலையை அநேகமாக அடைந்துவிட்டது என்பதை இக்குண்டு நிரூபிக்கிறது. இவ்வளவு பயங்கரமான இந்தக் குண்டு இரண்டாவது தடவையாக 8-உ நாகஸாகி என்ற துறைமுகப் பட்டினத்திலும் வீசப் பட்டது. எதற்கும் அஞ்சாத ஜப்பானியர் இந்தக் குண்டினால் கலவரம் அடைந்து கலங்கித் தவித் திருப்பர் என்பதில் ஆட்சேப மிருக்க முடியாது.

ஸோவியத் ரஷ்யாவும் ஆகஸ்ட் 9 உ ஜப்பான் மீது போர் தொடுத்தது. செஞ்சேனை மஞ்சூரியா மீது படையெடுத்து விட்டது. ஸ்டாலின்கிராடில் ஹிட்லரின் நாஜிப் படைகளை முறியடித்து நிர்மூல மாக்கிய அந்தச் சேனை மூவாயிரம் மைல் நீளமுள்ள யுத்த ரங்கத்தில் அணிவகுத்து அதிவேகமாக முன்னேறி வந்தது. மஞ்சூரியாவில் ஜப்பானியர் 40—டிவிஷன் படைகளை நிறுத்தி மிகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திருந்த போதிலும் ஸோவியத வீரர்களின் முன்னேற்றத்தை அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. சீனாவுக்கு யமபடர்களாக விளங்கிய அதே ஜப்பானியப் படைகளுக்குச் செஞ் சேனையினர் யமதூதர்களாக விளங்கினார்கள். மஞ்சூரியாவிலும் கொரியாவிலும் ஜப்பானியர் அமைத்திருந்த யுத்த தளவாடத் தொழிற்சாலைகள் எல்லாம் பறிக்கப்பட்டன. ஏ கா தி ப த் தி யப் பேராசைக்கு இரையாகிக் கொண்டிருந்த பிராந்தி யங்கள் விடுதலை யடைந்தன. சீனாவின் வட மாகாணங் களில் ஜப்பானியரை எதிர்த்துப் போரிட்டு வந்த புகழ்பெற்ற சீனக் கம்யூனிஸ்ட் படைகளும் வடக்கே யிருந்து வெற்றி முழக்கத்துடன் பிரவேசித்து வந்த ஸோவியத் படைகளும் சந்தித்து ஒன்றுகூடி விட்டன.

இங்கிலையில் ஆகஸ்ட் 14 உ செவ்வாயன்று ஜப்பானிய அரசாங்கம் நேச நாடுகளின் நிபந்தனைகளை



சீனாவை ‘ ஆபரேஷன் ’ செய்து ஜப்பான் குணப்படுத்தும் விதம்

[பக். 231

அப்படியே ஏற்றுக்கொண்டு சரணடைந்துவிட்டது. ஜப்பானியச் சக்கரவர்த்தி ஹிரோஹிடோ தம் படைகள் யாவும் போரை நிறுத்திவிடும்படி உத்தர விட்டார். இத்துடன் இரண்டாவது உலக மகா யுத்தம் முடிந்தது.

எட்டு வருஷத்திற்கு மேலாகத் தளராமல் யுத்தம் செய்து வந்த சீனு வெற்றிபெற்றது. எத்தனையோ காரணங்கள் ஒன்று சேர்ந்து சீனுவுக்கு இந்த வெற்றியைத் தேடிக் கொடுத்தன. எனினும், அந்நாடு ராக்ஷச வல்லமை பொருந்திய ஜப்பானைத் தன்னந் தனியே நின்றுவது எதிர்த்துப் போரிடவேண்டும் என்று ஆதிமுதல் கொண்டிருந்த உறுதியும், வீரமும், விடா முயற்சியுமே வெற்றிக்குரிய காரணங்களில் முதன்மையானவை. கோடிக் கணக்கான சீன மக்களின் உறுதியும், வீரமும், விடா முயற்சியும் இடையில் குலைந்து விடாமல் காத்து, மிகுந்த திறமை யுடன் சேனைகளுக்கும் அரசாங்கத்திற்கும் தலைமை வகித்து நடத்திவந்த பெருமை வெற்றி வீரரான சேனுபதி சியாங் கே-ஷேக்குக்கு உரியதாகும்.

யுத்தகாலத்தில் சீனர்கள் போர் முனைகளில் மட்டும் யுத்தம் செய்யவில்லை. தங்கள் விளை நிலங் களிலும், தொழிற்சாலைகளிலும், வீடுகளிலும்கூட யுத்தம் செய்து வந்தார்கள் என்றே சொல்லவேண்டும். அவர்களில் யுத்தத்தில் சம்பந்தப்படாதவரே இல்லை என்று சொல்லலாம். விவசாயமும் தொழில்களும் போரின் பகுதிகளாகவே கருதப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டன. நாடு முழுவதிலும் கூட்டுறவு சங்கங்களின் மூலம் தொழில்கள் அபரிமிதமாக வளர்க்கப்பட்டன. தேசத்தின் பொருளாதார நிலையை யுத்த காலத்திற்கு ஏற்றபடி செம்மையாக வைத்தல், கிராமப் புனருத்தாரணம், ரஸ்தாக்களும் ரயில்பாதை களும் அமைத்தல், யுத்தப் பிரச்னைகளைப்பற்றி ஜனங்

களிடையே பிரசாரம் செய்தல், ஜனங்களுக்கும போர்வீரர்களுக்கும் வைத்திய வசதிகள், விஞ்ஞான அபிவிருத்தி, முதியோர் கல்வி, இளைஞர் கல்வி, பெண்கள் முன்னேற்றம், போர்ப்பயிற்சி, கொரில்லாப் படைகளை நிறுவுதல், ஆக்கிரமிப்புப் பிரதேசங்களிலிருந்து ஓடிவரும் லட்சக் கணக்கான மக்களுக்கு வாழவழி செய்து கொடுத்தல், அநாதைக் குழந்தைகள் சம்ரக்ஷணை — ஆகிய எல்லாக் காரியங்களும் ஏக காலத்தில் மிகத் திறமையாக நடந்து வந்தன. சேனுபதியும் ஸ்ரீமதி சியாங் கே-ஷேக்கும் இந்த விஷயங்களில் கண்ணும் கருத்துமாக உழைத்துவந்ததால், மற்ற ஊழியர்களும் அவர்களைப் பின்பற்றிப் போட்டி போட்டு உழைத்து வந்தார்கள். முதல் அத்தியாயத்தில் சொன்னதுபோல், சீனர்கள், ஒரு கையால் செங்கல் அடுக்கிச் சாந்து பூசி, மற்றொரு கையால் வாளேந்திப் போர் செய்துவந்தார்கள்!

சீனுவின் யுத்தகால அமைப்பைப் பற்றியும், முன்னேற்றமான காரியங்களைப் பற்றியும் விவரிக்கும் அருமையான புத்தகங்கள் பல வெளி வந்திருக்கின்றன. ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளிலும் அவைகளைப் பற்றிய கட்டுரைகளும் செய்திகளும் வந்திருக்கின்றன. பத்திரிகை நிருபர்களும் அரசியல் தலைவர்களும் சீனுவை வாயாரப் புகழ்ந்து பாராட்டினுர்கள். இவர்களில் முக்கியமான சிலருடைய அபிப்பிராயங்கள் கீழே தொகுத்துக் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

சீனுவின் அநுபவத்தைப் பற்றி ஜாக் சென் கூறுவதாவது:

'பொதுஜன யுத்தத்தின் மூலமும், விரிவாகப் பரவிய கொரில்லாப் போராட்டத்தின் மூலமும், இழந்த பிரதேசங்களைப் பகைவர்கள் உபயோகித்துக்

கொள்ள முடியாமற் செய்து, அவைகளைத் திரும்ப ஜயித்துவிடலாம் என்பதைச் சீனு நிரூபித்திருக்கிறது.'

எட்கார் ஆன்ஸெல் மௌரர் சீனப் போரின் அடிப்படையான தத்துவத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்:

'சியாங்கை ஒரு பூஹ்ரர்* என்று அழைத்தாலும் சரி, ஒரே குடும்பம் ஆட்சி புரிந்து வருவது நாளடைவில் பழைய கர்நாடக முறையாய்த்தான் இருக்கும் என்று ஒப்புக்கொண்டாலும் சரி, சீனுவின் தற்காலப் பொருளாதார அமைப்பு பழைய நிலப் பிரபுக்கள் முறையைப் போன்றது என்றும், விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுத்தப்படுகிறார்கள் என்றும், சீன பாங்கர்கள் பேராசையுள்ள வெறும் லேவாதேவிக்காரர்கள் என்றும் வைத்துக்கொண்டாலும் சரிதான். இவை எல்லாம் எப்படி யிருந்த போதிலும், சீனு ஜப்பானை வென்றால், அந்த வெற்றி ஜனநாயகத்தின் வெற்றியே யாகும். அதன் மூலம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பது எளிதாகும்.'

ஜே. எம். டி. பிரிங்கிள் சீனு பிறநாடுகளுக்கு வழி காட்டியா யிருப்பதை எடுத்துக் காட்டுகிறார்:

'ஆசியா உலகத்தைக் காப்பாற்றிவிடும் என்பது நடக்க முடியாத காரியம் அன்று. பல நூற்றாண்டுகளாக ஏற்பட்ட சோம்பலை உதறித் தள்ளிவிட்டு, இந்தியாவும் சீனுவும் மறுபடியும் உலகிற்கு வழி காட்ட முடியும். இதற்கு இரண்டு நிபந்தனைகள் உண்டு. ஒன்று, சீனு சுதந்திர நாடாக விளங்கித் தன் வளர்ச்சிக்குத் தடை யில்லாமல் செய்துகொள்ள வேண்டும். சீனு புனர் ஜன்மம் எடுத்து வரும் முயற்சியில் அது தன் சொந்த இயற்கையை இழந்து மற்றொன்றைக் கைக்கொள்ளாமல் இருக்கவேண்டும் என்பது இரண்டாவது நிபந்தனை.'

---

* பூஹ்ரர் - ஜெர்மன் பாஷையில் தலைவர் என்று பொருள், இது ஹிட்லருக்குரிய பட்டமாக அமைந்து விட்டது.

டி. ஜே. இவான்ஸ், சீனு இங்கிலாந்து முதலிய நேச நாடுகளுடன் சேர்ந்திருப்பதன் காரணத்தை விளக்கியிருக்கிறுர் :

'ஜப்பானிலும், கொரியாவிலும், மஞ்சூரியாவிலும் ஜனநாயக அபிப்பிராயத்தின் கதி என்ன ஆயிற்று என்பதைச் சீன மக்கள் அறிவார்கள். ஜெனரல் டோஜோ*வைப் போன்றவர்களின் கையிலிருந்து சீனு எத்தகைய சுதந்திரத்தை எதிர்பார்க்க முடியும் என்பது அவர்களுக்குத் தெரியும். டோஜோ கூட்டத்தார் நான்கிங்கில் சீனப் பொம்மைகளை வைத்து அவைகளைக் கயிறுகளால் ஆட்டி வைத்து வருகிறுர்கள். அந்தப் பொம்மைகள் சீனக் கவுன்களை அணிந்திருந்தாலும் உள்ளே யிருப்பவை ஜப்பானியப் பட்டாளத்தின் காக்கி நிறச் சட்டைகள். அரசியல் கொள்ளைக் கூட்டத்தினரையும் ராணுவ ஆக்கிரமிப்புக் காரர்களையும் எதிர்ப்பதில் சீனப் பொது ஜனங்கள் ஆங்கில அமெரிக்கர்களுடன் ஒத்த அபிப்பிராயம் உடையவர்கள். சீனக் குடியரசு தோன்றியது முதல் அதற்கு எதிராக நின்று வருகிறவர்களைத் தோற்கடித்தால்தான் சீனுவுக்குச் சமாதானமும் சுபிட்சமும் ஏற்படும் என்பதை அவர்கள் அறிந்தே யிருக்கிறுர்கள்.'

சீனுவிடம் மிக்க அநுதாபம் கொண்டுள்ள அமெரிக்க ஆசிரியை பேர்ல் பக் சீன முன்னேற்றத்தைக் குறித்துக் கூறுவதாவது :

'தந்தையர்கள் கன்பூஷியஸின் தத்துவங்களையும் பழைய இலக்கியங்களையும் கற்றுவிட்டு, அவைகளை எதிர்த்துக் கிளம்பினுர்கள். ஆனுல் இளைஞர்கள் பற்பல புதிய சக்திகளால் தாக்கப்பட்டிருக்கிறுர்கள். அவர்கள் விஞ்ஞானம், கிறிஸ்தவம், நாஸ்திகம், இஷ்டம்போல் காதல் கொள்ளல், கம்யூனிஸம், மேல்

* டோஜோ - ஜப்பானியப் பிரதம மந்திரியா யிருந்தவர்.

நாட்டுத் தத்துவஞானம், நவீன ராணுவ ஆட்சி முறை ஆகியவைகளில் ஒவ்வொன்றிலும் கொஞ்சம் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். சாதாரண ஜனங்கள் கர்நாடக முறையில் ஆழ்ந்திருந்தாலும், அறிவாளிகள் ஒவ்வொரு கலைத் துறையிலும் அதிதீவிரமான பாகத்தைக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். மேடு பள்ளமான களிமண் ரஸ்தாவிலிருந்து அவர்கள் ஆகாய விமான சகாப்தத்திற்கு ஒரே தாண்டுதலாகத் தாண்டிச் சென்று விட்டார்கள்.'

வெண்டல் வில்கி சீனாவின் போர்த் திறமையைப் பற்றிக் கூறியுள்ள பாராட்டு :

'நான் சீனாவில் தங்கியிருந்த ஒவ்வொரு நாளும் சீனா ஐந்து (இப்பொழுது எட்டு) நீண்ட வருஷங்களுக்கு மேலாக ஜப்பானுடன் போர் புரிந்து வருகிறது என்பதை மறக்கவே முடியவில்லை. ஜப்பானிய வெடி குண்டு விமானங்கள் வந்ததும், சுங்கிங் நகரத்துக் குன்றுகளில் தோண்டியுள்ள குகைகளுக்குள்ளே நகரின் சர்வ ஜனங்களும் ஓடி ஒளிந்துகொள்வதில் அந்த உண்மையைக் கண்டேன். குண்டு வீச்சுக்கள் முடிந்ததும், சீனர்கள் அந்தக் குகைகளிலிருந்து சாமர்த்தியமாகவும் உறுதியுடனும் மீண்டும் மீண்டும் வெளி வந்து, பாழ்படுத்தப்பட்ட தங்கள் நகரத்தை மறுபடி கட்டுவதையும், திரும்பத் திரும்பப் போராடுவதையும் பார்த்த பொழுது, எனக்கு நீண்ட யுத்தத்தின் ஞாபகமே வந்தது.....ராணுவச் சீனா ஐக்கியப்பட்டிருக்கிறது; அதன் தலைவர்கள் பயிற்சி பெற்ற திறமையுள்ள தளபதிகள்; எதற்காகச் சண்டை போடுவது, எப்படிச் சண்டை போடுவது என்பதை அறிந்த திடமுள்ள மனிதர்களே அதனுடைய சேனைகளில் இருக்கிறார்கள்; அவர்களுக்கு நவீன யுத்தக் கருவிகள் குறைவாயிருந்தாலும் உறுதியில் குறைவில்லை. ரஷ்யாவைப் போலவே சீனா

விலும் இது பொதுமக்களின் பெரும் போர் என்பது உண்மை.'

இந்திய நாட்டின் அருந்தவப் புதல்வரான ஜவாஹர்லால் நேரு 1939-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் சீனாவுக்குப் போய்விட்டு வந்தவுடன் அந் நாட்டைப் பற்றி அருமையாக வர்ணித்தார். சீனாவை யாரும் நசுக்கிவிட முடியாது என்பதை அவர் தெளிவாகக் கூறியிருக்கிறார்:

'ஆகாயத்திலிருந்து (குண்டு மழையினால்) மரணம் பயமுறுத்திக் கொண்டிருந்த பொழுது சீன மக்கள் ஆச்சரியமான அமைதியுடன் நடந்துகொண்டதை நான் கவனித்தேன். யுத்தத்தின் பயங்கரமான நெருக்கடியை லட்சியம் செய்யாமல் நகரத்தின் வாழ்க்கை எப்பொழுதும் போல் நடந்து வந்ததைக் கண்டேன். தொழிற்சாலைகள், கோடைப் பள்ளிக் கூடங்கள், ராணுவக் கலாசாலைகள், வாலிபர் முகாம்கள் எல்லாவற்றையும் நான் பார்த்தேன். சர்வகலாசாலைகள் இருந்த இடங்களை விட்டு வேற்றூர்களில் மூங்கில் கூரைகளின் கீழே மாற்றி அமைக்கப்பட்டுப் புத்துயிரும் புது வலிமையும் பெற்று விளங்கியதையும் கண்டேன். கிராமக் கூட்டுறவு இயக்கமும் குடிசைத் தொழில்களும் வளர்ந்து வருவதைக் கண்டு நான் வியப்படைந்தேன். அறிவாளிகள், அரசியல் நிபுணர்கள், தளகர்த்தர்கள் ஆகிய புதிய சீனாவின் தலைவர்களைச் சந்தித்தேன். எல்லோருக்கும் மேலாகச் சீனாவின் தலை சிறந்த தலைவரும் சேனாபதியுமான ஜெனரலிஸ்ஸிமோ சியாங் கே-ஷேக்கையும் சந்தித்தேன். சீனாவின் ஐக்கியத்திற்கும், தன்னை விடுதலை செய்துகொள்ள அது கொண்டுள்ள உறுதிக்கும் அடையாளமாக அவர் விளங்குகிறார். சீன சமூகத்திற்கு இடைவிடாது உற்சாக மூட்டிவரும் அந்நாட்டு முதன்மையான

சீமாட்டியான ஸ்ரீமதி சியாங்கைச் சந்திக்கும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது.

'பெரிய மனிதர்களையும் ஸ்திரீகளையும் நான் சந்தித்தபோதிலும், சீன மக்களைப்பற்றி அறிந்து கொள்ளவும், அவர்களைப்பற்றிய சிந்தனைகளைத் தேக்கி வைத்துக் கொள்ளவும் நான் எப்பொழுதும் முயன்று வந்தேன். அவர்களைப் பற்றியும் அவர்களுடைய மகோன்னதமான கலைப் பண்பைப்பற்றியும் நான் ஏராளமாகப் படித்திருந்தேன். உண்மையை நேரில் பார்க்கவேண்டும் என்று எனக்கு ஆவல் உண்டு. அந்த உண்மை நான் எதிர்பார்த்தபடியே இருந்தது. சீனர்கள், ஞானமும் ஆழ்ந்த சிந்தனையுமுள்ளவர்கள். அவர்கள் தங்களுடைய பழைய கலைஞானத்தில் மூழ்கித் திளைத்திருந்தார்கள். அத்துடன் தற்கால நிலைமைகளுக்கு ஏற்றபடி வாழ்க்கையை மாற்றிக்கொள்ளக் கூடிய ஜீவசக்தியும திறனும் அவர்களிடம் இருந்தன. தெருவிலே நடமாடும் சாதாரண மனிதனுடைய முகத்திலும் பல்லாயிர வருஷங்களில் ஏற்பட்ட கலைப்பண்பின் முத்திரை விளங்கிக்கொண்டிருந்தது. இது ஓரளவு நான் எதிர்பார்த்ததுதான். ஆனால் என் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது புதிய சீனாவின் பேராற்றலேயாகும். ராணுவ நிலைமையைக் குறித்து அபிப்பிராயம் சொல்ல நான் அருகனல்லன். ஆனால், இவ்வளவு பேராற்றலும், உறுதியும், தொன்று தொட்டு வளர்ந்த திறமையும் கொண்டுள்ள சமூகத்தை யாரேனும் நசுக்கிவிட முடியும் என்று நான் கற்பனை கூடச் செய்துகொள்ள முடியாது.'

மேதாவியாகவும், இங்கிலாந்து அமெரிக்கா முதலிய வெளிநாடுகளிலும் பெரும்புகழ் பெற்ற எழுத்தாளராகவும் இருக்கும் சீன ஆசிரியர் லின் யு-டாங் யுத்தத்திற்குப் பின் ஆசியாவின் நிலையைப்

பற்றிச் சிந்திக்கத் தூண்டும் முறையில் அடிக்கடி எழுதி வருகிருர். அவருடைய கருத்து வருமாறு:

'சீஞ ஆசியாவின் கனவான். இந்தியா ஆசியாவின் சித்த புருஷன், ஜப்பான் ஆசியாவின் யுத்த வீரன்......

'ரஷ்யா, சீஞ, இந்தியா இம்மூன்றும் ஏகமாக ஐக்கியப்படுவது முடியாத காரியமில்லை. இது நடப்பதும் நடக்காததும் மேற்குப் பகுதியிலுள்ள ஜன நாயகங்களைப் பொறுத்திருக்கிறது. ஆனால் ஒரு விஷயம் எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. யுத்தத்திற்குப் பின் சீஞவும் இந்தியாவும் பெரிய தொழிற்சாலைகளின் மூலம் தொழில்களை வளர்க்கவும், சேனைகளை நவீன யந்திர சாதனங்களுடன் புதுப்பித்து அமைக்கவும் ஆரம்பிக்கும். வெளிநாட்டு நாணய மாற்றையும், வெளி வர்த்தகத்தையும் கண்டிப்பான ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டு, வெளியார்களிடம் கடன் வாங்காமலே, ரஷ்யா இவைகளைச் செய்து வந்திருக்கிறது. அதுவே வழிகாட்டியாக நிற்கும். சீஞவும் இந்தியாவும் தொழில்களையும் சேனைகளையும் நவீன மயமாக்குவதற்கு ரஷ்யா மாதிரியாக விளங்குவதோடு உபகரணங்களையும் அளிக்கும். இந்த யுத்தத்தில், இங்கிலாந்தையும் அமெரிக்காவையும் காட்டிலும் ரஷ்யாவே சீஞவுக்கு அதிக வசதிகளுடன் அதிகக் கடன்களைக் கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறது. சீஞவைத் தொழில் மயமாக்கவும், அதற்கு வேண்டிய டாங்கிகளையும் விமானங்களையும் தயாரிக்கவும் ரஷ்யா உதவி செய்யும். ஐந்து வருஷத் திட்டங்கள் என்ற பெயரால் பல திட்டங்கள் தயாரித்து, அவைகளை ரஷ்யாவில் நடத்தியதைப் போலவே வேகமாக நிறைவேற்றி, இந்தியாவையும் சீஞவையும் பதினைந்து வருஷங்களில் மாற்றி அமைத்துவிடக் கூடும் என்று பல வகையாலும் நம்பலாம். அமெரிக்காவும்




பேராசை பிடித்த ஜப்பான் சீனவை விழுங்க முயன்றது - முடியவில்லை.

[பக். 240

போராட முடியும். ஜப்பானியர்க்கு எதிராக மக்கள் எல்லா இடங்களிலும் தாக்குதல்களை ஆரம்பிக்க வேண்டும்.

'சீன யுத்தம் சாதாரணமாக இரண்டு தேசங்களுக்கு இடையே நடக்கும் போரைப் போன்றதன்று. இது புரட்சி யுத்தம்; தேசிய விடுதலைக்காக நடப்பது. இத்தகைய யுத்தம் குறுகிய அளவோடு நிற்காது. கால அளவு, இட விஸ்தீரணம் எல்லாவற்றையும் கடந்து நிற்கும். பணமோ, பொருளாதார வசதிக் குறைவோ, போக்குவரத்து வசதிக் குறைவோ, விஷக் காற்று, ஆயுதக் குறைவு, அளவற்ற தியாகம் முதலியவைகளோ இந்தப் போரைத் தடை செய்ய முடியாது. பூரண வெற்றியைத் தவிர இதற்கு வேறு எவ்வித முடிவும் கிடையாது.'

மற்றும் சேனுபதி கூறியுள்ள மூன்று வாக்கியங்களும் இங்கே குறிப்பிடத் தக்கவை:

'எந்தத் தேசங்கள் சீனுவின் தேசீயப் புரட்சியை ஆதரிக்கின்றனவோ அவைகளை நாங்கள் நண்பர்களாகக் கருதுவோம். புரட்சியின் முன்னேற்றத்தைத் தடுப்பவர்கள் சீன மக்களுடைய துவேஷத்தைத் தவிர வேறு எதையும் பெறமாட்டார்கள்.'

'சீனுவின் கதிமோட்சத்தைப் பெறும் பெரும் பணியைக் கோமின்டாங் ஏற்றுக்கொண்டிருக்கிறது. கோமின்டாங் நிலைத்திருந்தால் சீனு பிழைத்து விடும். நானும் ஜீவித்திருப்பேன். இல்லாவிட்டால் தேசத்திற்காகவும், கோமின்டாங் கட்சிக்காகவும் நான் உயிரைத் தியாகம் செய்துவிடுவேன்.'

'சீனுவின் தேசீயப் புரட்சி வெற்றியடைந்ததும், உலகப் புரட்சியின் வெற்றிக்கு நாம் அடிகோலியவர்களாவோம்.'

கடைசியாகச் சீனுவிலுள்ள ஸ்ரீமான் பொது ஜனத்தின் அபிப்பிராயத்தைக் குறிப்பிட வேண்டியது

அவசியம். சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுத வேண்டும்; அவரை வைத்துத்தானே யுத்தம் நடத்த வேண்டும்! அவருக்குச் சியாங் கே-ஷேக்கினிடம் அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது. சுங்கிங் நகரில் டோலி தூக்கும் ஒருவன் கூறியதிலிருந்து இதை உணர்ந்துகொள்ளலாம். படிப்பில்லாத அந்தக் குடியானவன் ஆசிரியர் லின் யூ-டாங்கிடம் சொன்னதாவது:

'எங்க தலைவரை ஜப்பான்காரங்க ஒருநாளும் வெல்ல முடியாது!'

1945, ஆகஸ்ட் மீ 14உ ஜப்பானின் சரணாகதி இந்த வாக்கியத்தை நிரூபித்து விட்டது.

## XV

### முடிவுரை

'நேச தேசங்களுக்குள்ளேயே சச்சரவு ஏற்படுவது இயற்கை என்பதை முதல் உலக யுத்தத்திலிருந்து நாம் அறிந்திருக்கிறோம். சமாதான மகாநாட்டைக் காட்டிலும் சண்டைக்குக் காரணமான இடம் வேறில்லை. இரண்டு விஷயங்களை வற்புறுத்துவதற்காக இதை நான் சொல்லுகிறேன். முதலாவது விஷயம்: (அரசியல் தலைவர்கள்) சிலர் குள்ள மனம் படைத்தவர்கள். இரண்டாவது விஷயம்: சென்ற பல வருஷ நிகழ்ச்சிகளும் இப்பொழுது பஸிபிக் அரங்கத்தில் நடக்கும் யுத்தமும் ஆசியாவின் கோடிக் கணக்கான மக்களின் உள்ளத்தில் எழுப்பியுள்ள விபரீதமான சந்தேகங்களின் தொகுதி. இரண்டாவது விஷயமே முக்கியமானது.'

— லின் யு-டாங்

---

சீனப் பசுவைப் பிடித்துவிட்டால் ஏராளமாகப் பால் கறந்து குடித்துப் பிள்ளை குட்டிகள் எல்லோருடனும் சுகமாக வாழலாம் என்று கருதி ஜப்பானியர் பெரும் போர் தொடுத்தனர். ஆனால் பசு கறந்தது

உழக்கு, உலைத்தது பல்லுப்போக! 'உடும்பு வேண்டாம், கையை விட்டாற்போதும்!' என்ற நிலைமைக்கு ஜப்பானியர் வந்துவிட்டார்கள். சீனாவின் எதிர்ப்பை அவர்கள் நிரந்தரமாகச் சமாளித்துக்கொண்டிருக்க முடியவில்லை.

எதிர்ப்பு என்றால் சாதாரண எதிர்ப்பா? சீனக் குழந்தைகள்கூட எதிரிகளின் நடமாட்டத்தைத் துப்பறிந்து சொல்லி வந்தன! பட்டிக் காட்டுப் பெண்கள்கூட, சாமர்த்தியமாக நடந்துகொண்டு, ஜப்பானியரைப் பிடித்துக்கொடுத்து வந்தனர். அநேக மாகாணங்களில், தாய்மார்களும் மாமியார்களுமான கிழவிகள், ஜப்பானியப் படை வீரர்கள் வந்து ஹிம்சிக்கும் பொழுது, கோடரிகளாலும், கசாப்பு வெட்டும் கத்திகளாலும் அவர்களுடைய தலைகளை வெட்டி உருட்டி விட்டார்களாம். ஜப்பானியரிடம் அநுதாபமுள்ள கணவர்களைச் சீன ஸ்திரீகள் விவாக ரத்துச் செய்து விலக்கி விட்டார்களாம். ஜப்பானியக் கொடியைக் கண்டால் பெண்டுகள் கூட்டமாகக் கூடிக் களிமண்ணையும் கட்டிகளையும் எறிந்து அதைத் தொலைத்து விடுவது வழக்கம். இத்தகைய சம்பவங்கள் ஆயிரக் கணக்கில் நடந்ததைப்பற்றி ஸ்ரீமதி சியாங் கே-ஷேக் ஒரு நூல் எழுதியிருக்கிறார். ஸ்திரீகள் குழந்தைகளின் நிலை இதுவானால், ஆடவர்கள் படைவீரர்களைப்பற்றிக் கேட்கவேண்டியதே இல்லை.

சீன தேசீய ஐக்கிய முன்னணியைப்பற்றி முன்னர் குறிப்பிட்டிருந்தோம். இந்த அணியிலுள்ள முக்கியமான கட்சிகள் இரண்டு: ஒன்று கோமின்டாங், மற்றது கம்யூனிஸ்ட் கட்சி. ஆதியில் இவை ஒன்றாகச் சேர்ந்து உழைத்து வந்தன. இடையில் பத்து வருஷ காலம் ஒன்றையொன்று வதைத்துப் போர் செய்து கொண்டிருந்தன. இதுவும் ஒரு விதத்தில் நன்மையாக முடிந்தது. பின்னால் ஜப்பா

னியருடன் சண்டை போடுவதற்கு இந்தப் போர்ப் பயிற்சி மிகவும் உபயோகமாக இருந்தது. 1936-க்குப் பின் மறுபடி இரு கட்சிகளும் ஐக்கியப் பட்டுவிட்டன. இந்த ஐக்கியத்தைப் பற்றி 'புனர் விவாகம்' என்று வேடிக்கையாகக் குறிப்பிடுவது வழக்கம். இனியேனும் இவைகளுக்குள் 'விவாக ரத்து' மறுபடி ஏற்படாமல் இருக்கவேண்டும். தேசத்தின் நிலைமையும், உலக நிலைமையும், இத்தனை வருஷங்களாகத் தோளோடு தோள் சேர்ந்து போராடியதில் ஏற்பட்ட நேசப்பான்மையும் மறுபடி பிளவுக்கு இடம் கொடுக்காமல் இருக்க வேண்டும்.

இந்நூலில் கம்யூனிஸ்டுகளைப் பற்றி அதிகம் எழுதுவதற்கில்லை. ஆரம்பம் முதல் அந்தம் வரை கோமின்டாங் மகா சபையின் சரித்திரத்தையே நாம் கவனிக்கவேண்டி யிருந்தது. கம்யூனிஸ்ட் கட்சி 1921-ஆம் வரு 13 அங்கத்தினர்களுடன் ஸ்தாபிக்கப் பட்டது. இப்பொழுது அதில் 12-லட்சம் அங்கத் தினர் இருக்கின்றனர். சீனாவின் வட பகுதியிலே பத்துக் கோடி மக்கள் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தின் பிரஜைகளாக வாழ்ந்து வருகின்றனர். 8,60,000 சிப்பாய்கள் அந்த அரசாங்கத்தின் செஞ்சேனையில் சேர்ந்து உழைத்து வருகிறார்கள்.

மா த்ஸே-துங் என்பவர் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக விளங்குகிறார். இவர் ஹூனன் மாகாணத்தில் செல்வம் மிகுந்த குடியானவர் குடும்பத்தில் 1893-ம் வரு தோன்றியவர். இவர் அறிவில் சிறந்தவர். ஆதலால், கட்சியின் தத்துவங்கள் கொள்கைகள் எல்லாம் இவராலேயே விளக்கப் படுகின்றன. மிகுந்த அடக்கமும், ஆற்றலும், உறுதி யும் கொண்டிருப்பதால் இவரை லெனினோடு ஒப்பிடு வது வழக்கமாக இருக்கிறது. சீனக் கம்யூனிஸ்ட் தலைவர்களில் இவரே முதன்மையானவர். உலகிற்

சிறந்த தலைவர்களில் ஒருவர் என்றும் இவர் புகழப்படுகிறார்.

சூ டே என்பவர் 8,60,000 சேனை வீரருள்ள கம்யூனிஸ்ட் படையான செஞ்சேனையின் சேனாபதி. இவர் யுன்னான் மாகாணத்தவர். இவர் கோமின்டாங் ராணுவத்தில் நெடுநாள் அநுபவம் பெற்றவர். ஐரோப்பாவில் யாத்திரை செய்து அங்குள்ள விஷயங்களை நேரில் அறிந்திருக்கிறார். கியாங்ஸி மாகாணத்திலிருந்து செஞ்சேனையை 7,000 மைல் செலுத்தி, வடமேற்கில் கொண்டு வந்து சேர்த்த வீரர் இவரே. எத்தனையோ முனைகளில் இவர் கோமின்டாங் படைகளை எதிர்த்துப் போரிட்டிருக்கிறார். எளிமையான வாழ்க்கையும், ஜனநாயக உணர்ச்சியும் கொண்டுள்ள இந்தச் சேனாபதியிடம் கம்யூனிஸ்ட் படை வீரர்கள் அந்தரங்க விசுவாசமும் பூர்ண நம்பிக்கையும் கொண்டிருக்கின்றனர்.

சௌ யென்-லே என்ற தலைவரும் குறிப்பிடத் தக்க புகழ் வாய்ந்தவர். சேனாபதி சியாங் சிறைப் பட்டிருந்தபொழுது இவர் நேரில் போய்ச் சந்தித்த விஷயம் முன்னால் குறிப்பிடப் பட்டிருக்கிறது. பரம்பரையாகக் கல்விமான்களாக இருந்த பெருங் குடியில் பிறந்தவர் இவர். இலக்கியத் துறையில் பெரும் புகழ் பெறத்தக்க ஆசிரியராகப் போயிருக்க வேண்டிய இவர், புரட்சி வெள்ளத்தில் இழுக்கப்பட்டு, அபூர்வமான தொண்டு செய்து வந்திருக்கிறார். 1925-ல் ஷாங்காயில் சியாங் கே-ஷேக் ஜயம் பெற்றதற்கு மூலகாரணம் இவருடைய உழைப்புத்தான் என்பதை முன்னால் குறிப்பிட் டிருக்கிறோம். பார்வைக்கு இவர் பிரமாதமானவராகத் தெரியாதாம். பார்த்தவுடன் கவர்ச்சி செய்யக்கூடியவர்கள் முதலில் சொல்லப்பட்ட இரு தலைவர்களுமே. இவர் ஆழ்ந்த சிந்தனையுள்ளவர், தடபுடல் எதுவும் இல்லாமல் கருமத்தில் கண்ணாயிருப்பவர்.

'சீனாவை நாங்கள் முதலிலேயே ஜயித்தாகி விட்டது; ஆனால் அது தன் தோல்வியை ஒப்புக் கொள்ளமாட்டேன் என்று சாதிக்கிறது!' என்று யுத்த ஆரம்பத்தில் ஜப்பானியத் தளகர்த்தர்கள் எக்களிப்புடன் சொல்லி வந்தார்கள். சீனாவை ஜப்பான் ஜயிக்கவில்லை, ஜயிக்கவும் முடியாது என்பது பின்னால் நிரூபணமாகிவிட்டது. இதற்கு அடிப்படையான காரணம் கோமின்டாங்-கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஐக்கிய முன்னணி. இதனால் தேசம் முழுதும் ஏகோபித்து எழுந்து போராட முடிந்தது. ஜப்பானின் படையெடுப்பு சீனா முழுவதையும் உலுக்கிவிட்டது. விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், உபாத்தியாயர்கள், படித்தவர்கள், பாமரர்கள், முதலாளிகள், வியாபாரிகள் யாவரிலும் யுத்தத்தில் ஈடுபடாதவரே இல்லை. இப்படி மக்கள் அனைவரும் ஒரு மனத்துடன் புரட்சிகரமான போரில் ஈடுபட்டிருந்ததால் ஜனநாயக உணர்ச்சியும், பிரஜைகளின் உரிமை உணர்ச்சியும் வளர்ந்துகொண்டே வருகின்றன. போர் முடிந்து விட்டதால் சீனா உலக முன்னணியில் நிற்கும் அந்தஸ்தைப் பெறுவதில் இனிமேல் சந்தேகம் இருக்க முடியாது.

தேசீய ஐக்கிய முன்னணியை எளிதில் சிதைக்க முடியாது என்பதைப்பற்றி மா த்ஸே-துங் வெகு அழகாகக் குறிப்பிட்டிருந்தார்: 'சென்ற ஒரு வியாழ வட்டத்தில் சீன மக்கள் அநேகம் பாடங்களைக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். அக்காலத்தில் அவர்கள் அநுபவித்த வெறுப்பையும், துன்பத்தையும், பொருளாதாரக் கஷ்டங்களையும் அவர்கள் மறக்காமல் இருக்கின்றனர். இவற்றிற்குக் காரணம் 1927-க்குப் பின் தேசீயப் புரட்சி முன்னணி பிளவு பட்டுப் போனதுதான். பத்து வருஷ உள்நாட்டுக் கலகம் அவர்களுக்கு ஞாபகத்தில் இருக்கிறது. இது

மறுபடி நேரும்படி சீன மக்கள் விட மாட்டார்கள். சமூகத்திலுள்ள ஒரு சிறு கூட்டத்தினர் தேசிய ஐக்கிய முன்னணியைச் சிதைக்கும்படி அவர்கள் விட்டுவிட மாட்டார்கள். எவர்களேனும் சிதைக்க முற்பட்டாலும், ஜனங்கள் அவர்களை ஆதரிக்க மாட்டார்கள். ஜனங்கள் ஐக்கிய முன்னணியைப் பாதுகாக்கவே போரிடுவார்கள். ஏனெனில் அதன் மூலமே தேசிய கதிமோட்சம் ஏற்படும் என்பது அவர்களுக்குத் தெரியும்.'

முக்கியமான மூலைகளில் எல்லாம் செஞ்சேனை போராடிப் புகழ் பெற்றிருக்கிறது. ஜப்பானியரின் ஆதிக்கத்திலிருந்த பிரதேசங்களில் நடந்த போராட்டங்களில் ஐந்தில் நாலு களங்களில் கம்யூனிஸ்ட் படைகளே கலந்து கொண்டன. லட்சக்கணக்கான குடியானவர்களுக்கு ஆயுதங்கள் கொடுத்து, போர்ப் பயிற்சி கொடுப்பதையும் கம்யூனிஸ்டுகள் இடைவிடாது நடத்தி வந்தார்கள். செகியாங் மாகாணத்தில் செஞ்சேனையை 'உலகத்தில் முதன்மையான படை' என்று சொல்லுவது வழக்கமாயிருக்கிறது. அங்கே ஜனங்கள், 'படையில் சேர்ந்தால் புதிய நாலாம் படையில் சேரவேண்டும்' என்று சொல்லுவது வழக்கம். இந்தப் படை செஞ்சேனையின் ஒரு பிரிவு. கம்யூனிஸ்டுகளின் எட்டாவது படையும், பதினெட்டாவது படையும் புரிந்துள்ள வீரச் செயல்கள் பல நாடுகளிலும் பாராட்டப்படுகின்றன.

கம்யூனிஸ்டுகளுடைய தலைநகர் யெனுன். சுங்கிங்குக்கு அடுத்தபடியாக இது முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. முதல் தலைநகரைப் போலவே இதுவும் குன்றுகளால் சூழப்பட்டிருக்கிறது. ஜப்பானிய விமானங்கள் குண்டு வீசும் பொழுது ஜனங்கள் ஓடி மறைந்து கொள்ள அந்தக் குன்றுகளில் நூற்றுக் கணக்கான குகைகள் இருக்கின்றன. யெனுன்

வாலிபத் தளபதியான சாங் ஸுயூ-லியாங்கிடமிருந்து கம்யூனிஸ்டுகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட நகரம்.

கம்யூனிஸ்ட் படைகளுக்கும் கோமின்டாங் படைகளுக்கும் இடையிடையே மனஸ்தாபங்கள் நேரிடுவது வழக்கமாயிருக்கிறது. இந்த யுத்தத்திலே யும் அடிக்கடி அவை நேர்ந்திருக்கின்றன. எனினும் இரு கட்சிகளும் மிகுந்த பொறுமையோடும் சகிப்புத் தன்மையோடும் பொதுவான லட்சியத்திற்காக விட்டுக் கொடுத்து வந்தன. கம்யூனிஸ்டுகளும் கோமின்டாங் அங்கத்தினர்களும் முன்னால் ஒருவரை யொருவர் ஏசியும் கண்டித்தும் வந்தனர். அந்தக் காலத்தில் அவர்களுக்குள் கலகம் நடந்து வந்தது. 'கலகத்திலே புகுகாதவன் நரகத்திலே போவான்' என்ற வேடிக்கைப் பழமொழிப்படி அவர்கள் பரஸ்பரம் தாக்கி வந்தார்கள். கம்யூனிஸ்டுகளையே அழித்துவிடவேண்டும் என்ற கொள்கையைக் கோமின்டாங் அரசாங்கம் முன்னால் பத்து வருஷ காலம் கடைப்பிடித்ததால் ஆயிரக்கணக்கான தீவிர வாதிகளும் மாணவர்களும் கொலை செய்யப்பட்டு அழிந்தார்கள்; லட்சக்கணக்கான புரட்சி மனப் பான்மை கொண்ட தொழிலாளர்களும் குடியானவர் களும் நசுக்கப்பட்டார்கள். ஆனால், இனிமேல் கம்யூ னிஸ்டுகளும் கோமின்டாங் கட்சியினரும் சேர்ந்து செய்ய வேண்டிய காரியங்கள் ஏராளமாக இருக் கின்றன. சீனா வெற்றி பெற்று விட்டதால், யுத்தத்தினால் அலங்கோலமாயுள்ள தேசம் முழுவதை யும் புனருத்தாரணம் செய்யவேண்டும். அகில சீனாவையும் தலைமை வகித்து நடத்தக்கூடிய திறம் படைத்தவர் சியாங் கே-ஷேக் ஒருவரே என்பதை இரு கட்சியார்களும் அறிவார்கள். கால, தேச, நிலைமைகளால் சியாங்கும் பெரிய மனமாற்றத்தை அடைந்திருப்பார். கம்யூனிஸ்டுகள் வெளிநாட்டுத்

தொடர்பு அதிகமாய் வைத்துக்கொண்டு வெளி நாட்டுக்காகவே அதிகமாக உழைப்பதாக இதுவரை எதிரிகள் புகார் சொல்லி வந்தார்கள். இதற்கும் இனிமேல் இடமில்லை. ரஷ்யா பஸிபிக் போரில் கலந்து கொண்டதாலேயே போர் உடனே நின்றது. ஐரோப்பாவைப் போலவே ஆசியாவிலும் அடிமைப் பட்ட பல நாடுகளுக்கும் ரஷ்யாவிடமே நம்பிக்கை அதிகமா யிருக்கிறது. இரண்டு கண்டங்களிலுமே ரஷ்யாவைப் புறக்கணிக்க முடியாதபடி அது தன் வல்லமையையும், சேவையையும் நிரூபித்திருக்கிறது. அத்தகைய ஸோவியத் ரஷ்யாவுடன் சீனப் பிரதம மந்திரி உடன்படிக்கை செய்துகொண்டிருப்பதே எதிர்காலத்திற்கு ஒரு நல்ல அறிகுறியாகும். சீனக் கம்யூனிஸ்டுகள், 'நாங்கள் மீன்கள், ஜனங்களே தண்ணீர்' என்று சொல்லுகிறார்கள். அந்த ஜனங் களின் நன்மைக்குத் தானே கோமின்டாங்கும் வேலை செய்கிறது! இத்தனை வருஷங்களாகக் கம்யூனிஸ்டுகள் சீன மக்களிடையே செய்துவந்த வேலைகளை மற்றக் கட்சியினரும் அறிவார்கள். 'ஜனங்களுக்குக் கம்யூனிஸம் என்பது ஒரு புதுக் கட்சியாகவோ, புதுக் கொள்கையாகவோ மட்டும் இருக்கவில்லை. அது புத்துயிராகவே இருக்கிறது' என்று பிரிங்கிள் என்ற ஆசிரியர் குறிப்பிடுகிறார். இவ்வளவு ஊக்கமும், உற்சாகமும், உறுதியும் கொண்டுள்ள கட்சியினரை வெறும் கலகக்காரர்கள் என்று இனியும் சொல்லிக்கொண்டிருப்பதில் பயனில்லை. அதனால் விபரீதமே விளையும். இருகட்சியினரும் ஏராளமான தவறுகள் செய்திருக்கலாம். இனி, பழையதை யெல்லாம் மறந்து, புதிய சீனவைப் படைப்பதில் எல்லோரும் ஐக்கியப்பட்டு நிற்பார்கள் என்று ஜப்பானைத் தவிர மற்ற உலக மெல்லாம் எதிர்பார்க்கிறது.

சீனுவில் சட்ட பூர்வமான ஜனநாயக அரசாங்கத்தை விரைவில் அமைக்கவேண்டும். யுத்தம் காரணமாகவும், ஜனங்களுக்கு ஜனநாயகத்தில் பயிற்சி கொடுக்க வேண்டியதற்காகவும் மக்களின் உரிமைகள் பலவும் இதுவரை கட்டுப்படுத்தப் பட்டிருந்தன. இனி உடனே அந்தக் கட்டுப்பாட்டை நீக்க வேண்டும். டாக்டர் ஸன் யாட்-ஸென் தமது உயிலில் குறித்திருந்தபடி புரட்சியின் லட்சியம் சீனுவில் சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் நிலை நாட்டுவது. எனவே அந்நாடு எந்த விதத்திலும் அந்நியருடைய ஆதிக்கத்திற்கு உட்படாமல் சுதந்திரமாயிருந்து ஜனநாயக அரசாங்கத்தை அமைக்க வேண்டும்; இதனுல்தான் மற்ற நாடுகளோடு சமத்துவமாயிருக்க முடியும். டாக்டர் ஸென் காலமாகி இருபது வருஷங்கள் கழிந்துவிட்டன. இன்னும் பூரண ஜனநாயக அரசாங்கம் ஏற்படாமலிருப்பது பரிதாபமான விஷயமே.

கோமின்டாங், கம்யூனிஸ்ட் கட்சி, இதர கட்சிகள், ஒரு கட்சியிலும் சேராதவர்கள் ஆகிய பலதிறப்பட்ட பிரதிநிதிகளும் தேசீய மகா சபையாக ஒன்றுகூடி ஜனநாயக அடிப்படையில் அரசியலமைப்பைத் தயாரிக்கவேண்டும். எக்காரணத்தையிட்டும் இனி ஒரு கட்சியின் சர்வாதிகாரம் நடைபெறவேண்டிய அவசியமில்லை. புரட்சிகரமான வகுப்பினர் அனைவரும் அதிகாரம் பெறவேண்டும். ஜப்பானிய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போரிட்ட சகல கட்சிகளும் எவ்விதத் தடையுமின்றி வேலை செய்ய அநுமதிக்கப்பட வேண்டும். கோமின்டாங் கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டும் ஜனநாயக லட்சியத்தைக் கொண்டவை. கம்யூனிஸ்ட் கட்சி சீனப் புரட்சி இரண்டு படிகளாகவே நிறைவேறும் என்றும், முதற் படியில் ஜனநாயக அரசியலும், இரண்டாவது படியில் அபேதவாத சமூக அமைப்பும்

ஏற்படும் என்றும் நம்புகிறது. ஆனால் முதற்படியில் அமைக்கப்படும் அரசாங்கமே இரண்டாவது படி தோன்றாதவாறு எதிர்க்கும் நிலையில் ஏற்படுவதற்கு அக் கட்சி ஒரு நாளும் இடம் கொடாது. கோமின் டாங் கட்சிக்கு டாக்டர் ஸன்னுடைய 'ஸான் மின் ஜூமயி' என்ற மூன்று தத்துவங்கள் அடிப்படையா யிருக்கின்றன. அதே அடிப்படையில் தாங்களும் சேர்ந்து உழைப்பதாகக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் அடிக்கடி உறுதி சொல்லி வந்திருக்கிறார்கள். ஸான் மின் ஜூமயிக்கும் கம்யூனிஸத்திற்கும் முக்கியமான சில வேற்றுமைகள் இருந்த போதிலும், சீனப் புரட்சியின் முதற்படி வெற்றி பெறுவதற்குக் கம்யூனிஸ்டுகள் ஒத்துழைக்கத் தயாரா யிருக்கிறார்கள், இதுவரை ஒத்துழைத்தும் வந்திருக்கிறார்கள். ஏனெனில் இந்த முதற்படியே அவர்களுடைய கருத்துப்படி இரண் டாவது நிலைக்குக் கொண்டு சேர்ப்பதாக இருக்கிறது. ஆகவே, வெளிநாட்டு ஏகாதிபத்திய வெறியர்க ளுடைய உதவிகளை நாடியும், உள் நாட்டு முதலாளிகள் அடங்கிய பிற்போக்குக் கும்பல்களின் வலையில் சிக்கியும், சீனத் தலைவர் சியாங் கே-ஷேக் கம்யூனிஸ்ட் கட்சியை நசுக்கும் வேலையில் இறங் காமல், அக்கட்சியுடன் நிரந்தரமான ஐக்கியம் ஏற்படும்படி செய்யவேண்டும். சீனாவின் சுபிட்சத் திற்கும், வலிமைக்கும், அமைதிக்கும் இதுவே ராஜ பாதையாகும்.

கோமின்டாங்—கம்யூனிஸ்ட் ஐக்கியத்தின் பேரில் அமைக்கப்படும் அரசாங்கம் துணிவுடன் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்ய முடியும். அரசாங்கம் ஜனநாயக முறையில் அமைவது போலவே பொருளாதார முறையும் ஜனநாயக முறையில் அமையவேண்டும். பாங்கிகள், ரயில் பாதைகள், விமானப் போக்குவரத்து, பெரிய ஆலைத் தொழில்கள், சுரங்கங்கள் முதலிய இனங்களை

அரசாங்கமே உடைமையாகக் கொண்டு நடத்தி வருவதற்கு ஸான் மின் ஜுயி தத்துவங்களின்படி ஏராளமாக இடமுண்டு. தேசிய மூலதனத்தின் பேரில் ஆதிக்கம் பெறவும், விளை நிலங்களைக் குடியானவர்களுக்குச் சமமாகப் பகிர்ந்து கொடுத்து விவசாயத்தைப் பன்மடங்கு விருத்தி செய்யவும் சீனு இன்னும் வெகுதூரம் முன்னேறினுல்தான் முடியும். சுருக்கமாய்ச் சொன்னுல், இன்னும் பல வருஷங்கள் அல்லும் பகலுமாக உழைத்து வந்தால்தான் சீனு புனருத்தாரணமாகி ஜனங்கள் சுபிட்சமடைந்து புதிய ஜனநாயகத்தின் பலன்களை நுகரமுடியும். சீனுவில் ஜனநாயகமும் சுதந்திரமும் நிலைபெற்றிருப்பதற்கு உலக சமாதானம் இன்றியமையாத அடிப்படை என்பது சொல்லத் தேவையில்லை.

இப்பொழுது முடிந்த யுத்தம் 'உலக யுத்தம்' என்று தினந்தோறும் பறைசாற்றப்பட்டது. ஆகவே இனிமேல் ஏற்படக் கூடிய சமாதானமும் 'உலக சமாதான'மாகவே இருக்கவேண்டும். ஒரு வேளை அப்படி ஏற்படாமற் போகுமோ என்று அநேகருக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. சந் தேகத்தின் காரணங்களை இந்த அத்தியாயத்தின் தலைப்பில் கொடுத்துள்ள மேற்கோளில் ஆசிரியர் லின் யு-டாங் குறிப்பிட்டிருக்கிறுர். குள்ள மனம் படைத்த சில தலைவர்களைப்பற்றி அவர் கூறுகிறுர். அவர் முக்கியமாகப் பிரிட்டிஷ் பிரதம மந்திரியா யிருந்த சர்ச்சிலையே கருதியிருப்பார். சர்ச்சில் பதவியை இழந்ததோடு, அவருடைய பிற்போக்குக் கும்பலும் கவிழ்ந்து விட்டது. பிரிட்டனில் தொழிற்கட்சியின் அரசாங்கம் ஏற்பட்டிருந்த போதிலும், வெளிநாட்டுக் கொள்கைகளில் அது பழைய பிற்போக்காளரான ஏகாதிபத்திய வெறியர் களின் போக்கிலிருந்து எவ்வளவு தூரம் விலகி நடக்கும் என்பது இனிமேல்தான் தெரியவேண்டும்.

உலகத்து நாடுகளின் விடுதலைக்காகக் கோடிக் கணக்கான மக்கள் யுத்தத்தில் உதிரத்தை ஆறுய்ப் பெருக்கி யிருக்கின்றனர். கோடிக்கணக்கான மக்கள் தாங்க முடியாத கஷ்டங்களைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு வந்தனர். இவ்வளவுக்கும் பின்னுல் இந்தியா சீனு போன்ற நாடுகள் அரசியலிலும் பொருளாதாரத்திலும் பரிபூரண சுதந்திரம் பெற வில்லை என்றுல், ஏகாதிபத்தியங்கள் நிலைத்தே நிற்கும் என்றுல், அடுத்த யுத்தத்தை அறைகூவி அழைப்ப தாகும். இது தேவரகசியம் அன்று, எல்லோரும் அறிந்த உண்மை. இந்தியா, சீனு போன்ற நாடு களின் எதிர்கால 'விதி' என்ன என்பதை உலக வல்லரசுகளில் முதன்மையாக நிற்கும் அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா ஆகியவை நாடும் நகரும் நன்கறிய விளம்பரம் செய்யவேண்டும். இல்லாவிட்டால் சமாதானம் வெறும் கானல் நீராகத்தான் இருக்கும்.

இனி உலகத்து நாடுகளுக்கு மூன்று வழிகளே உண்டு. முன்போல் தேசீயமே பிரதானம் என்று கருதித் தனித்திருந்து, தேசீயப் படைகளை வைத்துக் கொண்டு, குறுகிய தேசாபிமானத்தை மக்களுக்கு வெறியுண்டாகும்படி புகட்டி வரலாம். ஒவ்வொரு நாடும் கடைசியில் தன் சுதந்திரத்தை இழந்து பரிதவிக்க வேண்டியதே இதன் முடிவு என்பதை நாம் நாள்தோறும் பார்த்து வருகிறோம். தேசீயம் ஒரு காலத்தில் வளர்ச்சிக்குரிய வழியா யிருந்தது. இப்பொழுது உலகம் சுருங்கி விட்டது, தூரம் சமீபமாகிவிட்டது. ஒரு தேசத்தின் நிகழ்ச்சிகள் உடனே எல்லாத் தேசங்களையும் பாதிக்கின்றன. தனித்திருக்கும் நாட்டுக்குச் சாவைத் தவிர வேறில்லை. தேசீயத்தின் கடைசி எல்லையை ஜெர்மனியின் நாஜீயத்திலும், ஜப்பானின் பாஸிஸத் திலும் நாம் கண்டுவிட்டோம். இனி, தேசீயம் ஒரு சாபத்தீடே தவிர, உய்விக்கும் சித்தாந்தமாக இருக்க

முடியாது. அடிமை நாடுகள் சில தேசீயத்தால் சிறிது காலம் ஒற்றுமைப்பட்டு மேல் நிலைக்கு வரலாம். ஆனால், பெரிய சக்திகளின் ஆதிக்கம் வகைவிட்டு மற்ற நாடுகளுடன் சேர்ந்துகொள்ள வேண்டியிருக்கும். தேசீயம் என்றாலே ஜெர்மனிக்கு முதற் பலியாக வீழ்ந்த போலந்தின் ஞாபகம் வருகிறது. தளபதி பில்ஸுட்ஸ்கியின் தலைமையின் அந்நாடு மிகுந்த ஒற்றுமையும், வன்மையும், தேசீய எழுச்சியும் பெற்று விளங்கியது. அந்நாட்டுப் போர் வீரர்கள் வெளிநாடுகளில் படையெடுத்துப் போர் செய்யச் செல்லும் பொழுது, தங்கள் தாய்த் திருநாட்டின் மண்ணில் கொஞ்சம் எடுத்துத் தங்களுடைய பூட்ஸு-களுக்குள் போட்டுக் கொண்டு செல்வார்களாம். அந்நிய நாட்டில் போர்முனையில் இறக்க நேர்ந்தால், தங்கள் தாயகமாகிய புண்ணிய பூமியிலேயே இறப்பதாக இருக்கவேண்டும் என்பது அவர்கள் கருத்து. அவர்கள் பாதத்தடியில் போலந்தின் மண் இருப்பதால் அவர்கள் எப்பொழுதும் போலந்தில் இருப்பதாகவும், மடிய நேர்ந்தால் போலந்திலேயே மடிவதாகவும் கருதிக் கொள்வார்கள். இத்தகைய தேசாபிமான வீரர்களுடைய தாய்நாடு என்ன கதியடைந்தது என்பதை நாம் மறக்கவே முடி-யாது. இப்பொழுதோ அது யுத்தத்தில் வீழ்ந்துவிட்ட மற்ற நாடுகளைப் பற்றியும் கருதவேண்டி யிருக்கிறது. தேசீயம் வேண்டாம் என்றால் அடுத்த வழி ஏகாதிபத்தியம். ஒரு நாடு பல நாடுகளைப் பிடித்து ஏக ஆதிபத்தியம் செலுத்தி வருவதால் உலகத்திற்கு நேர்ந்துள்ள தீமைகளைக் கடல் தண்ணீரை மையாக வைத்து எழுதினாலும் அது காணாது.

தேசீயமும் ஏகாதிபத்தியமும் பயனில்லை. ஆதலால், உலகத்து நாடுகள் ஒன்றோடொன்று கூட்-டுறவு பெற்று, ஒன்றுக்கொன்று பாதுகாப்பாக நின்று வளரவேண்டும் என்ற ஒரு மார்க்கமே இருக்கிறது.